

நீங்காத
நினைவுகள்
முத்துலட்சுமி ராகவன்
நீங்காத நினைவுகள் * முத்துலட்சுமி ராகவன்
நீங்காத
நினைவுகள்
த்துலட்சுமி ராகவன்

# 1

ஒரு மரத்துப் பூக்களிலே

ஒருபூவே... நீ உதிர்ந்ததையே...

மலர்மனமே மறக்கவில்லை..

மறப்பதற்கும் விருப்பமில்லை..

– நீங்காத என் நினைவுகள் –

காலை வெயிலின் இதமான சூட்டில் அந்தப் பெரிய பள்ளிக்கூடத்தின் பரந்த மைதானத்தில் மாணவர்கள் வரிசையாக அணிவகுத்து நின்றனர். கொடிமரத்தின் அடியிலிருந்த மேடையில் பள்ளித் தலைமை ஆசிரியர் நின்று உரையாற்றிக் கொண்டிருந்தார். அவரது உரை

முடிந்ததும் தமிழ்த்தாய் வாழ்த்து ஆரம்பித்தது.. மைக்கில்.

''நீராரும் கடலுடுத்த

நிலமடந்தைக் கெழிலொழுகும்..' என்று கோரஸாகக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. பள்ளியின் மெயின் கேட்டருகே இருந்த வாட்ச்மேனைக் கடந்து உள்ளே செல்லப் போனாள் கஸ்தூரி.

''நில்லுங்கம்மா.. யார் நீங்க...'' வாட்ச்மேன் தடுத்தார்.

''நான் இந்த ஸ்கூலில் புதிதாக ஜாயின் பண்ணப் போகும் டீச்சர்.''

''அப்படிங்களாம்மா... பிரேயர் நடந்துக்கிட்டிருக்கு. அது முடிந்ததும் நீங்க உள்ளே போங்க... பிரேயருக்கு நடுவில் யார் போனாலும் ஹெட் மாஸ்டர் ஐயாவுக்குப் பிடிக்காது.''

''சரிப்பா... நான் வெயிட் பண்ணியே போகிறேன்.''

''அம்மா பெயர் என்ன?''

''கஸ்தூரி...''

''சொந்த ஊர் எதுங்கம்மா..?''

''காரைக்குடி...''

''அப்படிங்களா... பிரேயர் முடிந்துவிட்டது.. நீங்க உள்ளே போங்க...''

கஸ்தூரி வாட்ச்மேனிடம் சிறு புன்சிரிப்புடன் தலை அசைத்தவாறு அந்த மேல்நிலைப் பள்ளிக்குள் நடந்தாள்.

நீண்டு சென்ற வராண்டாவில் நடந்து.. அதன் மறு கோடியில் இருந்த தலைமை ஆசிரியரின் அறை



வாசலில் இருந்த பியூனிடம் தன் பெயரைச் சொல்லி அனுப்பி விட்டுக் காத்திருந்தாள்.

''ஹெச்.எம். சார்.. உங்களை வரச் சொல்கிறார் மேடம்.''

கஸ்தூரி... ஹெட்மாஸ்டர் பொன்னுரங்கத்தின் அறைக்குள் சென்றாள். மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டு அவளை அவர் ஊன்றிப் பார்த்தார். கஸ்தூரி அவர் முகம் பார்த்தாள்.

''சார்... நான் கஸ்தூரி...''

''ம்ம்.. தகவல் வந்தது...''

''சார்.. நான் இன்றைக்கே என் வேலையை ஆரம்பிக்கலாமா?''

''அதற்காகத்தானே வந்திருக்கிறீர்கள். ஆரம்பியுங்கள். வீடு எங்கே பார்த்திருக்கிறீர்கள்.''

''வ.உ.சி. நகரில்... இரண்டாம் தெருவில் வீடு பார்த்திருக்கிறார்கள். இன்றைக்கு காலையிலேயே வந்து விட்டோம்.''

''ஐ ஸீ... ரஞ்சன் வீட்டுக்கு.. எதிர் வீடு.''

''ஆமாம் சார்...''

''பார்த்து இருங்கம்மா.. ரஞ்சனின் அப்பா சோணாச்சலம் இந்த ஊரில் மட்டுமல்ல. புதுக்கோட்டை ஜில்லாவிலேயே பெயர் பெற்ற ஆள்? அவர் வீட்டுக்கு எதிர் வீடு...''

கஸ்தூரி.. அவரை நிமிர்ந்து பார்த்தாள்... அவளது பார்வையில் தெரிந்த கூர்மையில் அவரது பேச்சு நின்றது.

''என்னைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும் சார்.. எதையும் சந்திக்கும் துணிவு இல்லாமலா ஊர் விட்டு

ஊர் வந்திருக்கிறேன்? நான் என்னைப் பார்த்துக் கொள்வேன். டோன்ட் வொர்ரி...''

'நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன்.. கேட்டால் கேள்... கேட்காவிட்டால் போ.. எனக்கென்ன ஆச்சு..' என்ற பாவனையில் தோளைக் குலுக்கிக் கொண்டார்.

''நான் எந்த வகுப்பு எடுக்க வேண்டும் என்று சொல்ல முடியுமா?''

''இது என்னம்மா கேள்வி.. எம்.எஸ்ஸி பாட்டனி படித்துவிட்டு எம்.எட். முடித்திருக்கிறீர்கள். பிளஸ் ஒன்.. பிளஸ் டூவிற்கு பாட்டனி கிளாஸ் எடுக்க வேண்டும். நீங்கள் இப்போது டீச்சர்ஸ் ரெஸ்ட் ரூமிற்கு போய் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். நான் பியூனிடம்.. நீங்கள் எடுக்க வேண்டிய வகுப்புகளின் நேரம் பற்றிய சார்ட்டைக் கொடுத்து விடுகிறேன்..'' பேசிக் கொண்டே எதிரே நின்றிருந்தவளின் தோற்றத்தை எடை போட்டார் பொன்னுரங்கம்.

ஐந்தரை அடிக்கும் மேல் உயரம்... அளவான உடல் வாகு.. நீண்ட பின்னல்.. சந்தன நிறம்.. வட்ட வடிவ முகத்தில் நீண்ட கருவிழிகள். அதில் தெரிந்த தீட் சண்யம்.

பொன்னுரங்கம் அவளது பார்வையின் ஜ்வாலையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

'என்ன மாதிரியான பார்வை இது...? எதிரே இருப் பதை ஊடுருவி சுட்டெரிக்கும் அனல் பார்வை. இவளது அழகு தீயைப் போன்று பிரகாசிக்கிறது. அதன் ஆகர்ஷண சக்தியில் ஈர்க்கப்பட்டுக் கிட்டே நெருங்கினால் விளக் கின் ஜோதியில் விழுந்து கருகும் விட்டில் பூச்சிகளின்



நிலைமைதான் ஏற்படும்' என்று நினைத்துக் கொண்டார் அவர்.

''நான் போகலாமா சார்?''

'இன்னுமா இங்கே நிற்கிறாய்...' என்ற கேள்வியுடன் அவளைப் பார்த்தவர்.

''அப்போதே போகச் சொல்லி விட்டேனே மேடம்..'' என்றார்.

''ஏதோ யோசனையாய் இருந்தீர்கள்... அதனால் ஏதேனும் சொல்ல நினைக்கிறீர்களோ என்று வெயிட் பண்ணினேன்.''

'நினைப்பதையெல்லாம் உன்னிடம் சொல்ல முடியுமா' என்று அதையும் நினைத்துக் கொண்டவர்,

''ஒன்றும் இல்லை மேடம்.. யு கேன் கோ..'' என்றார்.

கஸ்தூரி... 'நீ என்ன நினைத்தாய் என்று எனக்குத் தெரி யும்' என்பது போல் ஒரு பார்வை பார்த்தபடி அறையை விட்டு வெளியேறினாள்.

'அப்பாடி...' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட பொன் னுரங்கம்.. பியூனை அழைத்தார்.

''மாணிக்கம்...''

''சார்...'' அவன் அவசரமாய் உள்ளே வந்தான்.

''அந்த அம்மாவிற்கு டீச்சர்ஸ் ரெஸ்ட் ரூமைக் காட்டு...''

''புதிதாய்ச் சேர்ந்த டீச்சரா சார்.''

''ஆமாம்.''

''பெயர் என்ன?''

''கஸ்தூரி...''

''எங்கே குடியிருக்கிறார்களாம்.?''

பொன்னுரங்கம் பியூனை முறைத்த முறைப்பில் அவன் கேள்விகளை நிறுத்திவிட்டு கஸ்தூரியின் பின்னால் ஓடினான்.

''மேடம்.. மேடம்..''

கஸ்தூரி நடந்து கொண்டே திரும்பி மாணிக்கத்தைப் பார்த்து புருவம் உயர்த்தினாள்.

'இந்தம்மா என்ன இந்த மாதிரி தெனாவெட்டாய் பார்க்குது. டீச்சரம்மா பார்வை போலவே இது பார்வை இல்லையே.. ஏதோ போலீஸ்காரி போல இல்ல முறைக்குது...'

''என்ன வேண்டும்..''

''நீங்கள் நிற்க வேண்டும்..''

''எதற்கு?''

''டீச்சர்ஸ் ரெஸ்ட் ரூம் இந்தப் பக்கம் இருக்கு. நீங்க அந்தப் பக்கம் போகிறீங்களே...''

''ஓ..''

கஸ்தூரி திரும்பி நடந்தாள். மாணிக்கம் அவளுடன் பேச்சுக் கொடுத்தவாறே தொடர்ந்தான்.

''என்ன பாடம் எடுக்கப் போறீங்க மேடம்.''

''பாட்டனி...''

''இன்றைக்குத்தான் சேர்ந்திருக்கிறீங்களா?''

''ஆமாம்.''

''இந்த ஊரா.. வெளியூரா?''

''வெளியூர்..''

''இங்கே எங்கே தங்கியிருக்கிறீர்கள்?''

''வீட்டில்..''



''வீடு எங்கே இருக்கிறது?''

மாணிக்கத்தின் கேள்விகளுக்கு ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிக் கொண்டே வந்தவள் கடைசிக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் முறைத்தாள்.

''இதுதான் டீச்சர்ஸ் ரெஸ்ட் ரூம்.. மேடம்..'' அவளது முறைப்பிலிருந்து தப்பிக்க வழி தேடியவன் கூறினான்.

'பிழைத்துப் போ..' என்ற பார்வையுடன் உள்ளே சென்றவளைக் கண்டதும் அங்கே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தவர்களின் பேச்சு நின்றது.

'யார் இவள்...?' என்ற கேள்வியுடன் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள மாணிக்கம் வாயெல்லாம் பல்லாக,

''இவங்கதான் புது பாட்டனி டீச்சர்'' என்று அறிமுகப்படுத்தி வைத்தான்.

''ஓ... வெல்கம் டீச்சர். இப்படி உட்காருங்க..'' என்றபடி எழுந்து இடம் கொடுத்தான் அந்த வாலிபன்.

''தேங்க்ஸ்..'' என்றபடி அமர்ந்து கொண்டாள் கஸ்தூரி.

''ஐ ஆம் ரமேஷ். மேத்ஸ் டீச்சர்.. இவங்க காருண்யா.. ஜியாகரபி டீச்சர்.. இவர் பவித்ரன் தமிழ் டீச்சர்.. அவங்க ரமீலா.. ஜுவாலஜி எடுக்கிறாங்க.. இவர் மார்ட்டின் இங்கிலீஷ் டீச்சர்.''

ரமேஷ் அறிமுகப்படுத்த கஸ்தூரி சின்னச் சிரிப்புடன் தலை அசைத்தாள்.

''என் பெயர் கஸ்தூரி...''

''புது பாட்டனி டீச்சர் வரப் போகிறதாகச் சொன்னாங்க. ஆனால் இவ்வளவு அழகான டீச்சர் வரப் போகிறாங்கன்னு சொல்லவில்லை...'' மார்ட்டின் கூறினான்.

மற்ற பெண் ஆசிரியைகளின் முகத்தில் லேசான பொறாமையின் சாயல் தோன்றியது. கஸ்தூரி அவர்களைப் பார்த்து நட்புடன் சிரித்தாள்.

''அழகு என்று முகத்தைப் பார்த்துச் சொல்லி விடுவதா... எல்லோரிடமும் அழகு இருக்கத்தான் செய்கிறது... அழகில்லாதவங்கன்னு யாருமே இல்லை.''

காருண்யாவின் முகமும்... ரமீலாவின் முகமும் மலர்ந்து விட்டது.

''நீங்க எந்த ஊர்?'' என்று காருண்யா வினவினாள்.

''காரைக்குடி...''

''கூடப் பிறந்தவங்க?''

''நான் ஒருத்திதான்...''

''காரைக்குடியென்றால்..? இப்போது எங்கே தங்கியிருக்கிறீர்கள்...?''

''இங்கே வீடு பார்த்து குடி வந்து விட்டோம்.''

''ஓஹோ. நீங்கள்.. அப்புறம் யார் யார் பேமிலியில் இருக்கிறாங்க?''

''நான்.. அப்பா.. அம்மா.''

''வீடு எங்கே?''

''வ.உ.சி. நகர்.. செகன்ட் ஸ்ட்ரீட்.''

''என்னது...?'' மிரண்டு போய் கேட்ட காருண்யா ரமேஷின் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் கவலைக் குறி தோன்றியது.

''என் டீச்சர், அவசரப்பட்டு அந்த ஏரியாவில் வீடு பார்த்தீங்க... நிதானமாய் வீடு பார்த்திருக்கலாமே...''

''ஏன்.. அந்த ஏரியாவுக்கு என்ன குறை?''



''நீங்கள் இவ்வளவு அழகாக... இளம் வயதாக இருப்பது தான் குறை...''

''புரியவில்லை சார்.''

''நீங்கள் முதலில் வேலையில் ஜாயின் பண்ணிவிட்டு நிதானமாக வீடு பார்த்திருக்கலாமே... முதலில் ஒரு ஊரைப் பற்றி விசாரித்துவிட்டு எந்த ஏரியா டீசன்டானது என்று தெரிந்து கொண்டு நீங்கள் வீடு பார்த்திருக்க வேண்டும். நீங்கள் என்னடாவென்றால் அபாயகரமான ஏரியாவில் முதலில் வீடு பார்த்துக் குடியேறிவிட்டு அப்புறமாய் வந்து ஜாயின் பண்ணுகிறீர்கள்.''

''அபாயகரமான ஏரியாவென்று எதை வைத்துச் சொல்கிறீர்கள்? அது வி.ஐ.பி.க்கள் இருக்கின்ற ஏரியா போல் இருக்கிறதே...''

''வி.ஐ.பி. இருக்கின்ற ஏரியாதான். அதுவும் உங்கள் தெருவிலேயே மிகப்பெரிய வி.ஐ.பி. ஒருவர் குடியிருக்கிறாரே.''

''யாரைச் சொல்கிறீர்கள்?''

''நீங்கள் அன்னவாசலுக்கு இன்றுதானே வந்திருக்கிறீர்கள். போகப் போக அவரைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.''

''போகப் போகத் தெரிந்து கொள்ளா விட்டால் என்ன.. இன்றைக்கே தெரிந்து கொள்கிறேனே.. நீங்கள் சொல்லுங்கள்.''

''வேறு யார்.. சோணாச்சலம்தான். அவரும்.. அவருடைய மகனும் இந்த அன்னவாசலுக்கே ஹீரோக்கள் ஆயிற்றே. அவர்கள் பெயரைக் கேட்டால் அழுத பிள்ளையும் வாய் மூடும்.''

''குழந்தையின் அழுகை நின்று விடுமா? அந்த அளவிற்கு நல்லவர்களா..?''

''கதையை மாற்றுகிறீர்களே... எதனால் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்?''

''அழுகிற குழந்தையை யார் சிரிக்க வைப்பார்கள்? நல்லவர்கள்தானே சிரிக்க வைக்க முடியும்?''

''சரியாப் போச்சு போங்க. அழுகிற குழந்தை வாய் மூடும்ன்னுதான் நான் சொன்னேன். அழுகிற குழந்தை சிரிக்கும்ன்னா சொன்னேன். அழுகிற குழந்தை கூட அவர்களைப் பார்த்து பயந்து போய் வாயைத் திறக்காமல் இறுக மூடிக்கும்ன்னு சொன்னேன்...''

மற்றவர்கள் சிரிக்க கஸ்தூரி சிரிக்கவில்லை... அவளது முகம் இறுகி... கல்லைப்போல் கடினமாக மாறியிருந்தது.

## 2

**பாரதத்தில் பல பாத்திரங்கள்**

**பார்த்தன் முதல் விகர்ணன் வரை...**

**என் ஆவியினில் நிறைந்ததுவோ**

**அந்த அர்ஜுனனின் மகன்தானே...**

**– நீங்காத என் நினைவுகள் –**

டவுன் பஸ்ஸில் கிராமத்து ஜனங்களின் கூட்டம் நிறைந்திருந்தது. வியர்வை வழியும் முகத்துடன்.. மக்கள் வெள்ளத்தின் மத்தியில்.. வெப்பக் காற்றை சுவாசித்தபடி



வந்த கண்டக்டர்.. அவளிடம் டிக்கெட் வாங்கச் சொன்னார்.

''வ.உ.சி. நகர்...''

''இந்த பஸ் அந்த ஏரியாவுக்குள் போகாதுங்க...''

''தெரியும் சார்.. நான் எங்கே இறங்க வேண்டுமோ.. அந்த ஸ்டாப்பில் என்னை இறக்கி விட்டு விடுங்கள்.''

''அக்சயா தியேட்டர் ஸ்டாப்பில் இறங்கிக்கங்க. அங்கேயிருந்து கொஞ்ச தூரம் நடக்க வேண்டும்.''

''சரி...''

''டிக்கெட்.. டிக்கெட்..'' என்றபடி கண்டக்டர் நகர்ந்து விட்டார்... அன்னவாசலுக்கு அருகிலிருக்கும் கிராமத்திற்கு போகும் பஸ் அது... வ.உ.சி. நகருக்குப் போக இந்த பஸ்ஸில் ஏறிக் கொள்ள வேண்டும் என்று பள்ளியில் கூறியிருந்ததால்... இவள் இந்த பஸ்ஸில் ஏறியிருந்தாள். காலையில் ஆட்டோவில் வந்ததுபோல். இப்போதும் ஆட்டோவிலேயே திரும்பிப் போயிருக்கலாம்.

''ஆனால்.. அது சரி வராது..' அவள் மனதிற்குள் கூறிக் கொண்டாள்.

'நடக்க வேண்டும்.. பஸ் நிறுத்தத்தில் இறங்கி நடக்க வேண்டும். நான்கு பேர் பார்வையில் பட வேண்டும். தினமும் இவ்வழியில் போய் வந்தால் 'யாரிவள்' என்ற கேள்வி எழுந்து என்னைப் பற்றி விசாரிக்கத் தோன்றும்.. அதுதான் எனக்கு வேண்டும்.'

கஸ்தூரி இறங்க வேண்டிய நிறுத்தம் வந்தது. இறங்கி நடந்தாள்... தெருமுனை காபி ஷாப்பில் இவளைப் பார்த்துக் கொண்டே காபியை ஆற்றினான் ஷாப் ஓனர்.. கஸ்தூரி கண்டு கொள்ளாமல் நடந்தாள்... அவளது வீடு

இருந்த தெருவில் திரும்பியபோது தெருமுனை வீட்டுக் காம்பவுண்டிற்குள் இருந்து சாலையை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வயதான அம்மாள் ஒருத்தி அவளைப் பார்த்து சிநேகிதமாய் சிரித்தாள். பதிலுக்கு அவளை விட அகலமாய் புன்னகைத்தாள் கஸ்தூரி.

'அக்கம் பக்கம் இருப்பவர்களிடம் பழகிக் கொள்ள வேண்டும்.'

இவளது சிரிப்பைக் கண்ட அந்த அம்மாள் கேட்டைத் திறந்து கொண்டு வெளியில் வந்தாள்.

''ஏண்டிம்மா.. நீதான் அந்தண்டை வீட்டிற்குப் புதிதாய் குடி வந்திருக்கும் பெண்ணா?'' என்று விசாரித்தாள்.

'எந்தாண்டை வீடு..' என்று கேட்காமல்,

''ஆமாம் பாட்டி..'' என்றாள் கஸ்தூரி சமர்த்தாக.

''இன்னைக்கு காலம்பரதான் வந்திருக்கீங்க போல இருக்கே...''

''ஆமாம் பாட்டி...''

''நன்னா ஆமாம் போடுகிறாய்.. காலையில் குடி வந்தவா கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க மாட்டாளோ.. இந்த வேகாத வெயிலில் எங்கே போய் விட்டு வருகிறாய்...? பார்.. முகமெல்லாம் வெயிலில் வதங்கிப் போன கத்தரிக்காய் மாதிரி சூம்பிப் போய் கெடக்கிறது.''

'இவளுக்கு நான் வெயிலில் வாடி வருவதில் இவ்வளவு வருத்தமாக்கும்... இந்த மாமிக்கு நான் எங்கே போய் விட்டு வருகிறேன் என்று தெரிய வேண்டும். அதற்குத்தான் இந்தக் கரிசனம்..' கஸ்தூரிக்கு சிரிப்பு வந்தது.

''என்ன செய்கிறது பாட்டி... வேலைக்குன்னு வந்து விட்டால் வெயிலைப் பார்த்தால் முடியுமா. இல்லை



மழையைப் பார்த்தால் முடியுமா? வேலைக்குப் போய்த் தானே ஆக வேண்டும்.''

பாட்டியின் கண்கள் மின்னின. இவள் வேலைக்குப் போகும் பெண்ணா..? என்ன வேலைக்குப் போகிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளா விட்டால் அவளது தலை வெடித்து விடுமே...

எனவே தன் தலையைக் காப்பாற்றிக் கொள்ளும் உத்தேசத்தோடு,

''எங்கே வேலை பார்க்கிறாய்?'' என்று வினவினாள்.

''வீனஸ் மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி ஸ்கூலில் பாட்டனி டீச்சராக வேலை பார்க்கிறேன் பாட்டி...''

''ஓஹோ.. உன்கூட இருக்கிறவாதான் உன் தோப்பனாரும்.. உன் அம்மாவுமா?''

''ஆமாம் பாட்டி...''

''திரும்பவும் ஆமாம் போட ஆரம்பித்து விட்டாயா? உன்கூடப் பிறந்தவா எத்தனை பேர்...''

''நான் ஒருத்திதான் பாட்டி...''

''ஒற்றைப் பெண்ணாய் பிறந்தவளா.. ஐயோ பாவம்.''

'இதில் பாவப்பட என்ன இருக்கிறது...' என்ற யோசனையுடன்,

''நான் வருகிறேன் பாட்டி..'' என்று கிளம்பினாள் கஸ்தூரி.

''வெறும் பாட்டியில்லையடி பெண்ணே... காமுப் பாட்டி. இந்த ஏரியாவில் காமுப்பாட்டி யாருன்னு கேட்டால் பிறந்த குழந்தை கூட அடையாளம் காட்டும்.''

'அது சரி.. பிறந்த குழந்தைக்கு அதன் அம்மாவையே அடையாளம் தெரியாது..' என்று நினைத்துக் கொண்டாள் கஸ்தூரி.

'இந்த ஏரியாவில் உள்ள குழந்தைகள் பாவம்.. பாட்டியை அடையாளம் காட்டவும்.. சோணாச்சலத்தைப் பார்த்து அழுகையை நிறுத்தி வாய் மூடவுமாக மிகவும் கஷ்டப்படுகிறதுகள்..' தலையை ஆட்டி காமுவிடம் விடை பெற்றுக் கொண்ட கஸ்தூரி வீட்டை நோக்கி நடையைக் கட்டினாள்.

பிரம்மாண்டமாய் அந்தத் தெருவின் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை கட்டப்பட்டிருந்த விஸ்தீரமான பங்களா தெருவின் ஒரு பக்கம் இருக்க.. மறுபக்கம் மற்ற வீடுகள் வரிசையாக கட்டப்பட்டிருந்தன. அந்த பங்களாவின் பெரிய நுழைவாயிலுக்கு எதிராக இருக்கும் படி மிகச் சரியாக கட்டப்பட்டிருந்த வீட்டின் காம்பவுண்டு கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள் கஸ்தூரி.

வாசல் அழைப்பு மணியை அழுத்தவும் கதவைத் திறந்த கோதண்டராமன்.. ''வேலை முடிந்து விட்டதாம்மா...?'' என்று விசாரித்தார்.

''வேலை முடியாமலா வீட்டுக்கு வருவாங்க... ஒரு தகப்பன் கேட்பதுபோலக் கேளுங்க...'' என்று கடிந்து கொண்டபடி காபியுடன் வந்த கிருஷ்ணவேணி காபியை கஸ்தூரியிடம் நீட்டி,

''குடிம்மா...'' என்றாள்.

''இப்ப நான் என்ன கேட்டு விட்டேன்னு என் மேல் கோபப்படறே...''

''கஸ்தூரிக்கு நீங்கள் அப்பா.. நான் அம்மா.. அதை ஞாபகப்படுத்துகிறேன்.''

''அடேங்கப்பா... நீ சொல்லாவிட்டால் எனக்குத் தெரியாது பாரு...''



''தெரிந்தது போல் எனக்குத் தெரியவில்லை.''

''உன் கண் பார்வை சரியில்லை போல.. அதனால் தான் உனக்குத் தெரியவில்லை.''

''என் கண் பார்வைக்கு என்ன குறைச்சல்.. இப்பவும் அரிசியில் கல் பொறுக்குவது நானாக்கும்...''

''அதுதான் மதியச் சாப்பாட்டில் அவ்வளவு கல் இருந்ததா?''

''இதோ பாருங்கள்.. நான் ஒன்றும் உங்கள் வீட்டுச் சமையல்காரியில்லை. நான் யார் தெரியுமா?''

''அம்மா..'' என்று அதட்டி அவர்களது வாக்குவாதத்தை அடக்கினாள் கஸ்தூரி.

''என்னையாம்மா கூப்பிட்ட?''

''நீங்கள்தானே என்னுடைய அம்மா... உங்களைக் கூப்பிடாமல் வேறு யாரை நான் இங்கே அம்மா என்று கூப்பிடுவேன்? அப்பாவைச் சொல்லிவிட்டு நீங்கள் மறந்து விட்டீர்களா?''

''அப்படிச் சொல்லும்மா.''

கோதண்டராமன் வெற்றிச் சிரிப்பு சிரிக்க. கிருஷ்ணவேணி உஷ்ணமாய் அவரை முறைத்தாள். அவளது முறைப்பை அலட்சியம் செய்தவர்.

''வேலை எப்படி இருந்ததும்மா...'' என்று விசாரித்தார்.

''ம்ம்.. பரவாயில்லை.. ஹெச்.எம்.மிற்கு தகவல் வந்திருக்கிறது. அவர் நல்ல முறையில் என்னை ரிஸீவ் பண்ணினார். கூட வேலை பார்க்கும் டீச்சர்களும் நன்றாகவே பழகுகிறார்கள். என்ன ஒன்று.. எல்லோருமே இந்த ஏரியாவில் வீடு பிடித்திருக்கிறோம் என்று சொன்னதும்.. அங்கேயா.. என்று அலறுகிறார்கள்.''

கோதண்டராமன் மௌனமாக கிருஷ்ணவேணியைப் பார்த்தார். கிருஷ்ணவேணி சுவரில் ஏறிக் கொண்டிருந்த பல்லியைப் பார்த்தாள். கஸ்தூரி தொடர்ந்து சொன்னாள்.

''எந்த ஏரியாவில் குடியிருந்தால் என்ன என்று தைரியமாகச் சொல்லிவிட்டு வந்தேன்.''

''சரியாகத்தான் சொல்லியிருக்கிறாய்ம்மா. போய் குளித்து டிரஸ் மாற்றிக் கொண்டு வா... நான் போய் டிபன் ரெடி பண்ணுகிறேன்...'' கிருஷ்ணவேணி எழுந்து கொண்டாள்.

''அதையாவது வாயில் வைக்கும்படி பண்ணு...'' என்று கோதண்டராமன் கூற மீண்டும் உஷ்ணமானாள்.

''நான் கஸ்தூரிக்காக ஊர் விட்டு ஊர் வந்திருக்கிறேன். உங்களுக்குச் சமைத்துப் போட வரவில்லை...''

''அடடா.. திரும்பவும் சண்டையா? ஏன்ம்மா வேண்டுமானால்.. வீட்டில் சமையலுக்கும்.. மேல் வேலைக்கும் ஆள் போட்டு விடலாமா?''

கஸ்தூரி வினவவும் கிருஷ்ணவேணியின் முகத்தில் தீவிரம் வந்தது.. அவள் வேண்டாமென்று தலையை ஆட்டினாள்.

''ஏன்ம்மா?''

''வேண்டாம்மா.. வேலைக்கு ஆள் வைத்துக் கொள்வது தவறு.. வீட்டு விஷயம் வெளியே போகும்.. அது நல்லதிற்கில்லை...''

''நீங்கள் சிரமப்படுவது போல் தெரிகிறதே...''

''சிரமத்தைப் பார்த்தால் முடியுமா? இவர் மட்டும் கொஞ்சம் நாக்கை வளர்த்துக் கொள்ளாமல் இருந்தால் போதும்.''



''நான் என்னம்மா சொல்லி விட்டேன். ஒரு ரசம் வைத்தாலும் கூட எனக்கு அது போதும். ஆனால் அது மணக்க.. மணக்க.. இருக்க வேண்டாமா?''

''கேட்டாயாம்மா.. இதுதான் இவருக்கும் எனக்கும் இருக்கிற பிரச்னை. எனக்கு வேலை செய்வது சிரமமாக இல்லை. இவருக்கு வடித்துக் கொட்டுவதுதான் சிரமமாக இருக்கிறது...''

''அப்பா.. என்ன இது? அம்மாவை இப்படியா புலம்ப வைப்பது? அவங்க அறியாத ஊருக்கு யாரை நம்பி வந்திருக்கிறாங்க? நம் இருவரையும் நம்பித்தானே வந்திருக்காங்க. நீங்கள் கொஞ்சம் சாப்பாடு விசயத்தில் அட்ஜஸ்ட் பண்ணிப் போகக்கூடாதா?''

''அட்ஜஸ்ட் பண்ணுவது சிரமம் அம்மா.. அதற்குப் பதில் வேறு ஒரு காரியம் பண்ணுகிறேன்.''

''என்ன பண்ணப் போகிறீங்க?''

''பேசாமல் நானே சமைத்து விடப் போகிறேன். நான் நல்லாச் சமைப்பேன்னு உங்கள் இரண்டு பேருக்குமே தெரியும் இல்லையா? எதற்கு வீணாய் உணக்கையாய் செய்து போடுன்னு கிருஷ்ணவேணியிடம் மல்லுக்கு நிற்க வேண்டும்? நானே உணக்கையாய் சமையல் செய்து கிருஷ்ணவேணிக்குப் போட்டு விடுகிறேன். பிரச்னை தீர்ந்தது.''

பெரிய உள்நாட்டுப் பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டு விட்டதைப் போல் கோதண்டராமன் கூற,

''அப்பாடா.. எனக்குக் கவலை விட்டது.. சமைக்கிற வேலையை இவர் பார்த்துக்கிட்டால் வீட்டு வேலைகளையெல்லாம் நான் நொடிப் பொழுதில் ஊதித் தள்ளி விடுவேன். காய்கறி நறுக்குவதிலிருந்து எல்லா

வேலைகளையும் செய்து கொடுக்கிறேன். இவரை அடுப்பில் மட்டும் வைத்து இறக்கச் சொல்லும்மா..'' என்று சொல்லி விட்டாள்.

''என்னவோ செய்யுங்கள்..'' என்று சிரித்தபடி மாடியேறிய கஸ்தூரி.. அவளது படுக்கையறைக்குள் நுழைந்தாள். அழகான பெரிய படுக்கையறை.. அறையின் மையத்தில் கட்டில்.. அருகே மேஜை நாற்காலி.. டிரஸ்ஸிங் டேபிள்.. அறையை ஒட்டி பால்கனி.

பால்கனிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று நின்றாள் கஸ்தூரி. எதிர் வீடு இப்போது மிக நன்றாகத் தெரிந்தது. அந்த வீட்டின் பிரம்மாண்டத்தையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த பிரம்மாண்டத்தைப் பார்த்தா எல்லோரும் அச்சப்படுகிறார்கள்? என்ற கேள்வி நெஞ்சில் எழ.. அறைக்குள செல்லத் திரும்பினாள். அதே நேரம் எதிர் வீட்டின் போர்டிகோவில் காரில் ஏறப் போன அந்த நெடியவனும் அவளைப் பார்த்தான்.

தலைப் பின்னலை பிரித்து விட்டிருந்ததால் தோகை போல் கருங்கூந்தல் தொங்க... மாலை வெயிலின் அந்திச் சிகப்பு நிறம் மேனியில் பட்டுத் தெறிக்க அலட்சியமாய் நின்றிருந்த அவளின் தோற்றம் கண்டவன்.. காரில் ஏறாமல் நிதானித்தான். ஒரு நிமிடம் நின்று அவளையே பார்த்தான். அவன் பார்ப்பதை அறிந்த கஸ்தூரி. உள்ளே செல்லாமல் வேறு எங்கோ வேடிக்கை பார்ப்பது போல் அசைவற்று நின்று விட்டாள்.

அவன் காரில் ஏறிச் சென்று விட்டான். அறைக்குள் வந்த கஸ்தூரியின் மனம் திருப்தியில் ஆழ்ந்தது. முதல்



அடியை வெற்றிகரமாய் எடுத்து வைத்து விட்ட நிறைவுடன் கண்களை மூடிக் கொண்டாள். மூடிய கண்களுக்குள் தனசேகரன் வந்தான்...

''யார்.. யார்.. சினிமா பார்க்கணும்னு ஆசைப்படறீங்க...''

சிறுவயது தனசேகரன் குரலுக்கு இவளும் மற்றவர்களும் கை தூக்குவார்கள்.. எல்லோரையும் அறைக்குள் அமர வைத்து அறையின் மூலையில் மெல்லிய வெள்ளை நிறத் துணியைக் கட்டுவான். அறையின் ஜன்னல்களை அடைத்து அறையை இருட்டாக்குவான். மெல்லிய வெள்ளைத் துணியின் பின்னால் அமர்ந்து கொண்டு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பான். பாட நோட்டின் கனத்த அட்டையில் வெட்டப்பட்ட கதாநாயகன்... கதாநாயகி... கிளி மூக்கு வில்லன்... நகைச்சுவை பபூன்.. உருவங்கள் திரையில் உலா வரும்... அவனே கதை வசனம் எழுதி உருவாக்கிய நிழல் படம்.. அந்தத் திரையில் அரங்கேறும்.. அவர்கள் எல்லோரும் திறந்த வாய் மூடாமல் விழி அகலப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

## 3

அபிமன்யு அழிந்த கதை...

அடிமனத்தின் சோகக் கதை..

அபிமன்யுவின் மறுபிறவியோ...

நீ அழிந்ததுவும் அவன் போலே...

– நீங்காத என் நினைவுகள் –

தனசேகரன்..!

அந்தச் சின்னஞ்சிறு வயதிலும் யுக்தி பல உருவாக்கிய அவன் இன்று உயிரோடு இருந்திருந்தால் ஒரு நவயுக சிற்பியாகவல்லவா இருப்பான்? சின்னஞ்சிறு வயதில் பொம்மலாட்டத்தைப் பற்றி அறியாத சூழலில் அவன் எப்படித் திரையில் ஒரு கதையை உருவாக்கிக் காண்பித்தான்?

கஸ்தூரியின் மூடிய விழிகளில் இருந்து கண்ணீர் சுரந்து கொண்டிருந்தது. அப்படியே கட்டிலில் சுருண்டு படுத்து விட்டாள். கண்ணீர் விட்டபடி தூங்கி விட்டாள். ஈரக்கையின் ஸ்பரிசம் பட்டுக் கண் விழித்தவள் எதிரே கிருஷ்ணவேணியைக் கண்டதும்,

''என்னம்மா...?'' என்றாள்.

''கன்னத்திலே கண்ணீர் கோடு தெரியுதே.. அழுதியாம்மா..''

''ம்ம்ம்..''

''அண்ணனின் நினைவு வந்து விட்டதா?''

''ம்ம்ம்...''

''போனவனையே நினைத்துப் புலம்பாமல் ஆக வேண்டியதைக் கவனிம்மா...''

''ம்ம்ம்...''

''சரி... எழுந்து வா... சாப்பிடலாம்.''

கஸ்தூரி.. குளித்து உடை மாற்றிக் கொண்டு கீழே இறங்கிப் போனாள். டைனிங் டேபிளில் அமர்ந்தாள்.

''ஏம்மா சோர்வாய் தெரியறே...'' கோதண்டராமன் வினவினார்.



''தனசேகரனை நினைச்சுக்கிச்சு...'' கிருஷ்ணவேணி மெல்லிய குரலில் கூற அங்கு சற்று நேரம் மௌனம் நிலவியது...

''கடமையைச் செய்ன்னு கீதையிலே சொல்லியிருக்கார் கிருஷ்ணன். நாம் கடமையைச் செய்வோம். நிச்சயம் பலன் கிடைக்கும். நீ போனவனை நினைத்துக் கலங்காமல்.. வேலையை கண்ணும் கருத்துமாய் பார். எல்லாம் நன்மையாகவே முடியும்.''

''நானும் அதைத்தான் சொன்னேன்.''

''நீ.. புத்தி சொன்னாய்.. இதை என்னை நம்பச் சொல்கிறாயா?''

''நம்பினால் நம்புங்கள். நம்பாவிட்டால் போங்கள். எனக்கென்ன வந்தது...'' கிருஷ்ணவேணி தோள்பட்டையில் முகவாயை இடித்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

''நானும் நிறைய இடங்களில் பார்த்து விட்டேன்ம்மா.. இந்தப் பெண்கள் கோபம் வந்தால் முகவாயை தோள்பட்டையில் இடித்துக் கொள்கிறார்களே.. அது ஏன்..? எனக்கு விளங்கவே மாட்டேன் என்கிறது.''

''விளங்காததை விட்டு விடுங்கள் அப்பா.. இதற்கு விளக்கம் என்னவென்று யோசிப்பதை விட ஆயிரம் முக்கியமான வேலைகள் நமக்கு இருக்கின்றன. நாம் அதைப் பார்ப்போம்...'' என்றபடி கஸ்தூரி கை கழுவ எழுந்து சென்றாள்.

இரவில் உறக்கத்தில் கனவு வந்தது.. கனவில் மிகப் பெரிய போர்க்களம் விரிந்தது. ஒருபுறம் பீஷ்மருடன் துரியோதனன். அவனது மைத்துனன் ஜெயத்ரதன்

போன்றவர்கள் இருந்தார்கள். மறுபுறம் பாண்டவர் சேனையில் அர்ஜுனன்.. அவனருகே அவன் மகன் அபிமன்யு.. அர்ஜுனனின் தேரை ஓட்டிய அபிமன்யுவின் தாய் மாமன் கிருஷ்ணன் முதலானோர் திரண்டிருந்தனர். நாற்புறமும் புகை சூழ.. நடுவே போர்க்களத்தில் சக்கர வியுகம் வகுக்கப்பட்டிருந்தது... சக்கர வியூகத்தை வகுத்தது துரியோதனன் சேனை... அர்ஜுனன் போர்க்களத்தை விட்டு விலகிச் செல்கிறான். துரியோதனனின் சக்கரவியூகத்தை உடைத்து உள்ளே போய் வெளியே வரத் தெரிந்தவன் அவன் ஒருவன்தான். பாண்டவர் படை திணறுகிறது. சக்கர வியூகத்தை உடைக்க மட்டும் தெரிந்த அபிமன்யுவை அழைக்கிறார் தருமர்.

"ஆணையிடுங்கள் பெரியப்பா.." என்கிறான் அபிமன்யு.

"சக்கரவியூகத்தை உடைத்து உள்ளே செல்..." தருமரிடமிருந்து ஆணை வருகின்றது.

"செய்கிறேன் பெரியப்பா. ஆனால் எனக்கு அதை உடைக்க மட்டும்தான் தெரியும்.." என்கிறான் அபிமன்யு.

"நீ உடைத்துச் செல்லும் பாதையில் எங்கள் படை பின் தொடர்ந்து வரும்.." வாக்களிக்கிறார் தருமர்.

அபிமன்யு சக்கர வியூகத்தை தயங்காமல் உடைத்து முன்னேறுகிறான். அவன் உருவாக்கிய பாதையில் பாண்டவர் சேனை பின் தொடரும் முன் துரியோதனனின் மைத்துனன் ஜெயத்ரதன் தன் படைகளுடன் வந்து அந்தப் பாதையை அடைத்து விடுகிறான். பாண்டவர் சேனை பின் தொடர முடியாமல் போக பகைவரின் மத்தியில் தன்னந்தனியனாக சின்னஞ்சிறு அபிமன்யு மாட்டிக் கொள்கிறான். மாண்டு போகிறான்.



திரும்பி வரும் அர்ஜுனன்.. ஜெயத்ரதனை மறுநாள் சூரிய அஸ்தமனத்திற்குள் அழிப்பேன் என்று சபதம் புரிகின்றான்.. எடுத்த சபதத்தை நிறைவேற்றுகிறான்...

கஸ்தூரி... உடல் முறுக்கி முகம் இறுகி அழுது புலம்பினாள். "அண்ணா.. அபிமன்யு அண்ணா..."

படக்கென்று விழிப்பு வந்து எழுந்து அமர்ந்தாள். அறையில் பேன் ஓடிக் கொண்டிருந்தது. திறந்திருந்த ஜன்னல் வழி காற்று சிலுசிலுவென்று வந்தது. ஆனால் அவள் மேனியெங்கும் வியர்வை பொங்கி வழிந்து நைட்டியை நனைத்திருந்தது.

எழுந்து குளியலறைக்குள் சென்று.. அந்த நள்ளிரவில் குளித்தாள். வியர்வையின் கசகசப்பு மாற வெளியில் வந்தாள். கட்டிலில் படுத்தாள். தூக்கம் வரவில்லை. அபிமன்யுவின் நினைவு வந்தது.

அர்ஜுனனின் மகன். கிருஷ்ணனின் அன்புத் தங்கை சுபத்திரையின் புதல்வன்... மிகச்சிறந்த வீரன்.. தாய் மாமனாய் கிருஷ்ணனைப் பெற்ற பாக்கியசாலி.. உத்திரையின் அன்புக் காதலன்.. அவனது முடிவுதான் எவ்வளவு துயரம் நிறைந்ததாக அமைந்து விட்டது.

கமலாவின் நினைவு வந்தது. தனசேகரனின் காதலி... அவனை உருகி.. உருகிக் காதலித்தவள்.

'கஸ்தூரி... உன் அண்ணனின் மனம் என்ன கல்லா இல்லை இரும்பா? என் நினைவே அவருக்கு வராதா..?'

அந்தக் கல்மனம் கொண்டவனின் மரணச் செய்தி கேட்டுத் துடிதுடித்துப் போனவளின் மனம் கல்லாக இருக்கவில்லை...

கஸ்தூரியின் முகம் மீண்டும் கண்ணீரில் நனைந்தது.

'கமலா... உன் மனம் இவ்வளவு மென்மையானதா..?' கஸ்தூரி மனதிற்குள் வினவினாள்.

தூக்கமில்லாத இரவு ஒரு வழியாக விடிந்தது.. மனதை பாறாங்கல்லாய் சோகம் அழுத்த கஸ்தூரி பள்ளிக்குக் கிளம்பினாள்.

பள்ளிக்குள் நுழையும் போது எதிரே வந்த பவித்ரன் புன்னகைத்தான்,

''காலை வணக்கம் கஸ்தூரி.''

''காலை வணக்கம் சார்.''

''பரவாயில்லையே.. நான் காலை வணக்கம் என்று சொன்னால் இங்கு வேலை செய்யும் மற்றவர்கள் குட்மார்னிங் என்றுதான் பதில் சொல்லுவார்கள். நீங்கள் என் தமிழை மதித்து.. தமிழில் காலை வணக்கம் சொல்கிறீர்களே.. நன்றி..''

''தமிழ் உங்களுக்கு மட்டும் சொந்தமா பவித்ரன் சார்? நம் தாய் மொழி அது. நம் உயிரினும் மேலானது. என் தாயை நான் நேசிப்பதற்கு நீங்கள் ஏன் நன்றி சொல்ல வேண்டும்?''

பவித்ரனின் முகம் கஸ்தூரியின் பதில் கேட்டுக் கனிந்தது.

''வந்தனம் அம்மா.. உங்கள் தமிழ் பற்று என்னை மெய் சிலிர்க்க வைக்கிறது.. வாழ்த்துக்கள்.''

''ம்ம்.. இதற்கு நான் கட்டாயம் நன்றி சொல்ல வேண்டும் நன்றி.''

பரந்த மைதானத்தைக் கடந்து பள்ளியின் வராண்டாவில் ஏறி ஹெட்மாஸ்டரின் அறைக்குள் நுழைந்தாள்.

''குட்மார்னிங் சார்.''



''குட்மார்னிங் கஸ்தூரி...'' என்றபடி அவளைப் பார்த்தார் பொன்னுரங்கம்.

சிவந்த நிறத்தில் காஞ்சிக் காட்டன் புடவையை உடுத்தியிருந்தாள். நெற்றியில் பொட்டிற்கு மேலே திருநீறு போல் குங்குமத்தை தீற்றியிருந்தாள்.

'கையில் சூலாயுதம் மட்டும்தான் இல்லை... அப்படியே அம்மனின் அவதாரம்தான்...' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட பொன்னுரங்கம்.

'ஏன் இந்த அழகிய பெண்ணைப் பார்த்தால் ரம்பை... ஊர்வசி... மேனகை என்று யாரும் நினைவில் வர மாட்டேன் என்கிறார்கள்..? நினைவில் வருவதெல்லாம் காளியின் தோற்றம் தான்... இதற்குக் காரணம் இருக்கிறதா?' என்றும் தனக்குள் வினவிக் கொண்டார்.

'ஏன் உனக்கு அந்தக் காரணம் தெரியாதா..?' என்று அவர் மனம் எதிர் கேள்வி கேட்க.. மனதை அடக்க முயன்றவராய் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்து மேஜை மேலிருந்த கம்ப்யூட்டரை நோண்டினார்.

வருகைப் பதிவேட்டில் கையெழுத்து போட்டு விட்டு நிமிர்ந்த கஸ்தூரி... அவரது எண்ணவோட்டத்தை அறிந்தது போல் மர்மப் புன்முறுவல் பூத்தாள்.

'இது வேறா...? இந்தச் சிரிப்புக்கு என்ன அர்த்தம்..' பொன்னுரங்கம் குழம்பிக் கொண்டிருக்கையில் அறையை விட்டு வெளியேறினாள்.

''ஹாய் கஸ்தூரி.''

''ஹலோ மார்ட்டின் சார்.''

''இன்றைக்கு வெற்றிகரமான இரண்டாவது நாள் இல்லையா?''

''யெஸ்..''

''எப்படி பீல் பண்ணுகிறீர்கள்?''

''எதைக் கேட்கிறீர்கள்?''

''இந்த ஸ்கூலில் வொர்க் பண்ணுவதைப் பற்றி.. எங்களுடன் கலந்து பழகுவதைப் பற்றி.. இந்தச் சூழலைப் பற்றி...''

''ஒரே நாளில் எப்படிச் சொல்ல முடியும்?''

''ஏன் சொல்ல முடியாது..? ஒரே நாளில் யு ஆர் ஸோ நைஸ்ன்னு நான் சொல்லவில்லையா?''

''ஊஹூம்..? அழகான பெண்கள் நைஸ் ஆகத்தான் இருப்பார்கள்.. என்ன கஸ்தூரி நான் சொல்வது சரியா..'' என்று கேட்டவாறு காருண்யா அருகில் வர மார்ட்டின்,

''அப்புறம் பார்க்கிறேன்..'' என்று கூறிவிட்டு அங்கிருந்து பறந்தான்.

''ஏன் இப்படி ஓடுகிறார்..?''

''அவரது வண்டவாளத்தை தண்டவாளத்தில் ஏற்றி விடுவேனென்ற பயம்தான்.. வேறு என்ன?''

''ஏன்.. என்ன விஷயம்?''

''வேறு ஒன்றுமில்லை.. உங்களிடம் இன்றைக்கு பேசிய டயலாக்கைத்தான் நான் இந்த ஸ்கூலில் ஜாயின் பண்ணியபோது என்னிடம் சொன்னார்... அதற்கு முன்னால் ரமீலா ஜாயின் பண்ணியபோது அவளிடமும் சொன்னாராம்.''

''ஈஸிட்?''

''யெஸ்... ஆள் கொஞ்சம் மன்மதன்... அம்பு விட்டுப் பார்ப்பார் உஷாராய் இருங்கள்.'' கஸ்தூரி பதில் சொல்லாமல் சிரித்தபடி.. வகுப்பு எடுக்க வகுப்பறைக்குள் நுழைந்தாள்.



மதிய உணவின்போது மற்ற ஆசிரியைகள் இரண்டிரண்டு பேர்களாய் பிரிந்து சாப்பிட்டுக் கொண்டிருக்க கஸ்தூரி காருண்யாவின் அருகில் போய் அமர்ந்து கொண்டாள்.

ரமீலாவிடம் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்த காருண்யா கஸ்தூரியைப் பார்த்துப் புன்னகைத்தாள்... பதிலுக்கு சிரித்த கஸ்தூரி.. மெல்ல அவர்களது பேச்சு வட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டாள்.

''யார் உனக்கு இதைச் சொன்னது...?'' ரமீலா வினவ,

''வேறு யார் மார்ட்டின்தான்..'' என்றாள் காருண்யா.

''இவருக்கு மட்டும் எப்படி மற்றவர்கள் பேசுவது உடனுக்குடன் தெரிந்து விடுகிறது...'' என்று ரமீலா ஆச்சரியப்பட்டாள்.

''இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது... நாம் போகும் வழியில் யாராவது கூடிப் பேசிக் கொண்டிருந்தால்.. நாம் பாட்டுக்கு.. நமக்கென்ன என்று கடந்து போவோம். அவர் அப்படியில்லை. காதைக் கழட்டி பேசுகிறவர்களின் மத்தியில் வீசி விடுவார். அது எல்லாவற்றையும் கிரகித்துக் கொண்டு வந்து அவர் காதில் ஒட்டிக் கொள்ளும்...'' என்றாள் காருண்யா.

''காதை கழட்டி எறிவதா?'' கஸ்தூரி புரியாமல் கேட்டாள்.

''இவங்க என்ன ரமீலா.. இப்படி ஒரு டியூப் லைட்டா இருக்காங்க.. ஒட்டுக் கேட்பதைத்தான் அப்படிச் சொன்னேன்..'' காருண்யா விளக்கினாள்.

கஸ்தூரிக்கு உண்மையிலேயே சிரிப்பு வந்து விட்டது.

''என்ன ஒரு வார்த்தைப் பிரயோகம்.''

''ஹலோ.. இப்படி இலக்கியமாய் பேசினால் எங்களுக்குப் புரியாது. ஜனரஞ்சகமாய் பேசுங்க...''

''வேறு எப்படிப் பேசுவது காருண்யா.. என்னை வா.. போவென்று ஜன ரஞ்சகமாய் பேசாமல்... வாங்க.. போங்க என்று உயர்த்திப் பேசினால் நான் இப்படித்தான் பேசுவேன்.''

அன்று மாலைக்குள் அவர்கள் மூவரும் தோழிகள் ஆனார்கள். கஸ்தூரி வீடு திரும்பும்போது.. அவளின் பின்னாலேயே ஒரு கார் தொடர்ந்து வந்தது. அதை எதிர் பார்த்தது போல் கஸ்தூரியின் இதழ்களில் புன்னகை வந்தது.

## 4

அபிமன்யு அண்ணன்தான் – அன்று
அகப்பட்டே மாண்டு விட்டான்...
நானும் சபதம் செய்யவில்லை – ஏனெனில்
காண்பதெல்லாம் ஜெயத்ரதன்கள்...
– நீங்காத என் நினைவுகள் –

கஸ்தூரி தன் நடையை மெதுவாக்கினாள். ஓரக் கண்ணால் கார் தன்னைத் தொடர்கிறதா என்று கவனித்தாள். கார் தொடர்ந்தது. அன்ன நடை போட்டு நடந்து கொண்டிருந்தவள் வேண்டுமென்றே கையிலிருந்த



புத்தகங்களில் ஒன்றை நழுவ விட்டாள். அவள் பின்னால் காரின் ஓசை நின்று கார் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. கனத்த காலடி அவளைத் தொடர்ந்து.. நெருங்கி வந்தது.

''ஹலோ...''

தெருவில் ஆள் நடமாட்டம் அதிகமில்லாத பணக் காரர்கள் வாழும் பகுதி அது. கஸ்தூரி நின்று திரும்பினாள்.. முதல் நாள் அவள் போர்டிகோவில் பார்த்த அந்த நெடியவன் கையில் புத்தகத்துடன் நின்றான். அவன் முகத்தை ஒயிலாக நிமிர்ந்து பார்த்தவள் திகைத்தாள். இவன் அவன் இல்லையே.. ரஞ்சனென்று நினைத்து வலையை வீசினால் இவன் யாரோ ஒரு புதியவன் வந்து நிற்கிறானே.

முதல் நாள் போர்டிகோவில் நின்றது இவன்தானா... தூரம் அதிகம்... மாலை மயங்கிய கருக்கல் வேளை... முகம் சரியாகத் தெரியாமல்.. ரஞ்சனின் வீட்டிற்குள் நிற்பவன் ரஞ்சனாகத்தான் இருப்பான் என்று தப்புக் கணக்கு போட்டு விட்டாளே..

முகத்தில் இயல்பான கடினம் மீண்டு வர அவள்.

''என்ன?''வென்று வினவினாள்.

''இந்தப் புத்தகம் உங்களுடையதுதானே...'' அவன் விழிகள் ஆர்வமாய் அவளது முகத்தில் மொய்த்தன.

''ஆமாம்..'' அவள் அலுப்புடன் பதில் கூறினாள்.

''இதை நழுவ விட்டு விட்டுப் போகிறீர்களே...''

''ஓ... தேங்க்ஸ்...''

அவள் புத்தகத்தை வாங்க கை நீட்டினாள். அவன் புத்தகத்தைக் கொடுக்காமல் அதன் முகப்பு அட்டையைப் பார்த்தான்.

''ப்ளஸ் டூ பாட்டனி புக்... நீங்கள் நிச்சயம் ப்ளஸ் டூ மாணவியாக இருக்க முடியாது. அப்புறம் இந்த புக்கை ஏன் வைத்திருக்கிறீர்கள்...''

'இதற்கு உனக்கு நான் கட்டாயம் பதில் சொல்ல வேண்டுமா?' அவள் பதில் சொல்லாமல் அவனை முறைத்தாள்.

அவளது பார்வை உணர்த்திய செய்தி புரிந்தும்.. புரியாதவன் போல் அவன் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினான். முதல் பக்கத்தில் அவளது பெயர் எழுதப்பட்டு.. அதன் கீழே பாட்டனி டீச்சர்.. வீனஸ் மெட்ரிகுலேசன் ஹையர் செகண்டரி ஸ்கூல் என்று எழுதப்பட்டிருந்தது.

''ஓ.. நீங்கள் பாட்டனி டீச்சரா..?''

'இது உனக்குத் தெரிந்து எனக்கு ஆகப் போவதென்ன? நான் அவன் பார்க்க வேண்டுமென்று தானே என் விலாசத்தை எழுதி வைத்தேன்...' எரிச்சலுடன் பல்லைக் கடித்தவள்.

''புத்தகத்தைக் கொடுங்கள் சார்..'' என்றாள்.

''சாரா..? ஓ.. நீங்கள் டீச்சரில்லையா.. அதனால் எல்லோரையும் சார் என்றுதானே அழைப்பீர்கள்..? பட் என் பெயர் சாரில்லை... சந்தோஷ்... சென்னையில் கம்ப்யூட்டர் கம்பெனி ஒன்று நடத்துகிறேன். சோனா கம்ப்யூட்டர்ஸ் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே...''

''இல்லை... நான் கேள்விப்பட்டதில்லை...''

''இப்போது கேள்விப்பட்டு விட்டீர்கள்தானே...''

''சார்.. என் புக்கைக் கொடுங்கள்.. உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு எனக்கு என்ன ஆகப் போகிறது?

''எவ்வளவோ ஆகலாம்.. அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்து விடாதீர்கள்..''



''சார் ப்ளீஸ்... என் புக்கை கொடுத்தால் நான் போய்க்
கொண்டே இருப்பேன்.. ஐ ஆம் ஸோ டயர்டு...''

''போகலாம்.. போகலாம்.. கஸ்தூரி.. எவ்வளவு
அழகான பெயர் பார்த்தீர்களா.... பொருத்தமான பெயர்.''

''பெயரில் என்ன பொருத்தம் வந்தது?''

''பின்னே இல்லையா? கஸ்தூரி மஞ்சள் என்பார்கள்..
நீங்கள் அப்படியே பறித்த மஞ்சளின் நிறத்தில் இருக்
கிறீர்கள். கஸ்தூரி மான்குட்டி என்பார்கள்.. உங்கள்
கண்கள் அப்படியே மான்குட்டியின் கண்கள் போலவே
மருண்டு பார்க்கின்றன.. இன்னும்...''

''போதும்.. போதும்.. உங்கள் பெயர் சந்தோஷ் என்பதால் நீங்கள் சந்தோசமானவராக இருக்கலாம். உங்களைப் போலவே மற்றவர்களும் சந்தோசமாக இருப்பார்கள் என்று நினைப்பது தவறு.''

''ஏன்.. நீங்கள் வருத்தமாக இருக்கிறீர்களா? என்னால் உங்களுக்கு ஏதும் உதவி தேவைப்பட்டால் கேளுங்கள்... செய்கிறேன்...''

என்னவோ நீண்ட நாள் பழகியவனைப் போல அவன் பேச.. கஸ்தூரி அவனை ஏற இறங்கப் பார்த்தாள். அவளது பார்வையைக் கண்ட சந்தோஷின் கண்கள் மின்னின.

''எனக்கு மிகப் பெரிய உதவி ஒன்று வேண்டுமே...''

''கேளுங்கள்.''

''இல்லை.. உங்களால் அதைச் செய்ய முடியுமா?''

''முடியாது என்பது இந்த சந்தோஷின் அகராதியிலேயே இல்லை.''

''டெபனிட்லி..?''

''யெஸ்.. டெபனிட்லி.''

''அப்படியென்றால் உங்கள் கையிலிருக்கும் புத்தகத்தை என்னிடம் கொடுத்து விட்டு நடையைக் கட்டுகிறீர்களா?''

அவன் அசடு வழிவான் என்று அவள் எதிர்பார்த்தாள். அவனோ சலனமில்லாத முகத்துடன் அவளிடம் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்தான்.

''வேறு எதுவுமே என்னிடம் கேட்கத் தோன்றவில்லையா?'' அவன் ஒரு மாதிரியான குரலில் வினவ,

'உன்னிடம் போய் நான் என்ன கேட்கப் போகிறேன்..' என்று எரிச்சல்பட்டவளின் மண்டைக்குள் மணியடித்தது.

'ஆஹா... இவன் சோனாச்சலத்தின் வீட்டுக்குள் இருந்தல்லவா வெளியே போனான். இவன் வாயைக் கிளறினால் அவர்கள் வீட்டைப் பற்றித் துப்புக் கிடைக்குமே...'

உற்சாகத்துடன் அவள் தலை நிமிர்ந்தாள். அவளது திடீர் உற்சாகத்தை மனதிற்குள் குறித்துக் கொண்டவன் புருவம் உயர்த்தினான்.

''என்ன விஷயம்?''

'எப்படி ஆரம்பிப்பது... ம்ம்...' மின்னலென மனதிற்குள் வழி தோன்ற,

''உங்களை நேற்று மாலை நான் பார்த்ததாய் எனக்கொரு ஞாபகம்...'' என்றாள் கஸ்தூரி.

அவன் விழிகளில் புரியாத ஓர் செய்தி தோன்றியது.

''எனக்குக் கூட உங்களை போன ஜென்மத்தில் பார்த்தாய் ஞாபகம்.''



இவன் சரியான மன்மதன்... அவள் மீண்டும் எரிச்சலுற்றாள். காரியம் ஆக வேண்டுமே. எனவே வீரியம் பார்க்காமல்...

''மறு பிறவி கதைகள் நிறைய படித்திருப்பீர்கள் போல இருக்கிறது. எனக்கு ஜென்மங்கள் மீதெல்லாம் நம்பிக்கையே இல்லை...'' என்றாள்.

''எனக்கும் ஏழேழு பிறவிகளும் இணை பிரியாமல் தொடர்ந்து வரும் பந்தங்களின் மீது நம்பிக்கை நேற்று மாலை வரை இல்லாமல் இருந்தது... நேற்று மாலை உங்களைப் பார்த்தவுடன் அதில் நம்பிக்கை வந்து விட்டது...''

'இவன் என்ன இப்படி மொக்கை போடுகிறான்?' என்ற அலுப்புடன் கஸ்தூரி.

''உஷ்.. அப்பாடா.. தாங்க முடியவில்லை..'' என்றாள்.

''எதைத் தாங்க முடியவில்லை..'' அவன் ஒன்றும் அறியாதவன் போல் நமட்டுச் சிரிப்பு சிரித்தபடி.

''எதைத் தாங்க முடியவில்லை'' என்று கேட்டான்.

'நீ போடும் மொக்கையைத்தான்..' என்று சொல்ல முடியாதவளாய்.

''இந்த வெயிலைத்தான் தாங்க முடியவில்லை..'' என்றாள்.

''வெயிலா..?'' அவன் வினோதமாக அவளைப் பார்த்தான். மாலை மணி ஆறைத் தொட்டுக் கொண்டிருந்தது... அவர்கள் நின்று கொண்டிருந்த பெரிய மகிழம்பூ மரத்துக்கடியில் காற்று சிலுசிலுவென வீசிக் கொண்டிருந்தது. எங்கேயோ மழை பெய்வதை உணர்த்தும் ஈரக் காற்று மேனியை வருடிச் சென்றது. மண் வாசம் நாசியைத் தொட்டது.

இந்தச் சூழ்நிலையில் இவள் வெயிலைத் தாங்க முடியவில்லை என்றால் அவன் வினோதமாகப் பார்க்க மாட்டானா?

''வெயில் வெளியில் இல்லை... உங்கள் மனதில் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்...'' அவன் நிதான மாய் கூறினான்.

அவனது வார்த்தைகள் அவள் மனக் கதவைத் தட்ட... அக்கினியை மனதில் பொத்தி வைத்திருந்தவள்.. சட் டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். முதல் முறையாய் அவனது விழியோடு அவள் விழி கலந்தது.

ஆறடி உயரத்தில்.. மாநிறத்தில் கம்பீரமான தோற்றத் துடன் இருந்தான். அவனது அருகாமை முதல் முறை யாய் அவளை தான் பெண்ணென்று உணர வைத்தது. அவன் மென்மையாகப் புன்னகைத்தான்.

''நீங்கள் எதிர்வீட்டில் இருந்தீர்களே...'' அவள் கேட்டு விட்டாள்.

''ஆமாம்.. அது என் மாமாவின் வீடு.''

''ஓ.. மாமா என்றால்...?''

''உங்களுக்கு அவரைத் தெரியாதா... சோணாச்சலம் என்றால் இந்த வட்டாரத்தில் எல்லோருக்குமே தெரியுமே...''

''நான் வெளியூர்... முந்தா நாள் தான் உங்கள் மாமா வீட்டிற்கு எதிர் வீட்டில் குடி வந்தோம்.''

''நான் கூட நேற்றுத்தான் வந்தேன்... ஒரு பிஸினெஸ் விஷயமாய் என் மாமா மகன் ரஞ்சனுடன் பேச வேண்டி யிருந்தது... அந்தப் பேச்சு வார்த்தையின் போது என் மாமாவும் இருக்க வேண்டியது அவசியம் என்பதால் நேரே கிளம்பி வந்து விட்டேன்...''



''ஏன்...?''

''ஏனென்றால் ரஞ்சன் விளையாட்டுப் பிள்ளை.. ஸ்டடி மைன்டாக இருக்க மாட்டான். மாமா அப்படியில்லை. வார்த்தை மாற மாட்டார். அனுபவசாலி. இதுவரை அவரது அனுமானம் தவறியதில்லை.''

கஸ்தூரியின் முகம் பயங்கரமாய் மாறியது...

'இரை தேடும் கழுகின் குறி தப்பாதுதான்... அதுவும் பிணம் தின்னும் கழுகு...'

அவளது முகமாற்றத்தைக் கவனித்த சந்தோஷ் துணுக் குற்றான்.

''ஏன் கஸ்தூரி...''

''ம்ம்... ஒன்றுமில்லை...''

''என்னிடம் கூடச் சொல்லக் கூடாதா?''

''உங்களிடம் கூடவா?''

அவள் வியப்புட கேட்டாள். இவன் யாரென்று இவன் சற்று முன் சொன்ன பின்புதான் கஸ்தூரிக்கே தெரியும். இவன் என்னவோ இவனே சொன்னது போல் ஏழேழு ஜென்மங்களாய் தெரிந்தவன் போல் உறவாடுகிறானே...

அவனோ அவளது கேள்வியைக் கேட்டுச் சற்றுக் கூட அலட்டிக் கொள்ளவில்லை.

''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள் கஸ்தூரி. எனக்கு என் னவோ உங்களைப் பார்த்தால் வேற்று ஆள் போலத் தோன்றவில்லை...''

''எனக்கு உள் ஆள் போலத் தோன்றவில்லை...''

''ம்ம்ம்... தன்னைப் போல் பிறரையும் நினைக்க வேண் டும் என்ற கொள்கையுடையவன் நான்.. என்னைப்

போலவே நீங்களும் நினைப்பீர்கள் என்று நினைத்து விட்டேன்.''

''இனிமேல் அப்படி நினைக்காதீர்கள்.''

''முயற்சி செய்கிறேன்.''

''சோணாச்சலம் உங்களது மாமா என்றால்...?''

''என் அம்மாவின் ஒன்றுவிட்ட அண்ணன்... அதாவது என் அம்மாவிற்கு பெரியப்பா மகன்...''

அவன் விழிகளில் சிரிப்பு இருந்தது. 'வேற்றாளையா இப்படிக் குடைந்து விசாரிக்கிறாய்?' என்ற கேள்வி இருந்தது. அவள் அதைக் கண்டு கொள்ளவில்லை.

''உங்கள் பிஸினெஸிற்கும்.. இவர்களுக்கும் என்ன சம்பந்தம்?''

''நானும் ரஞ்சனும் பார்ட்னராக இன்னொரு கம்பெனி ஆரம்பிக்கப் போகிறோம்.. அதுதான் விசயம்.''

''முடிவு பண்ணி விட்டீர்களா..?''

''இன்னும் இல்லை...''

''ஏன்..?''

''ம்ம்.. உடனே முடிவு செய்யாமல் இன்னும் ஒரு வாரம் இங்கே தங்கியிருந்து முடிவு செய்யலாமே என்ற எண்ணம்தான் காரணம்.''

அவன் விழிகள், 'உனக்காகத்தான் நான் இங்கே தங்கப் போகிறேன்...' என்ற செய்தியைச் சொல்லின. கஸ்தூரி மனம் படபடத்தது. ஏனோ.. அவன் ஒரு செய்தியை உறுதி பண்ணிக் கொள்ள விரும்பினாள்.

''முந்தா நாள் கிளம்பி வரும்போது இங்கு ஒரு வாரம் தங்கி முடிவெடுக்கும் திட்டத்தோடுதான் கிளம்பி வந்தீர்களா?''



அவன் தன் இரு கைகளையும் பேன்ட் பாக்கெட்டில் நுழைத்துக் கொண்டான். அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான். அவள் முகத்தில் எதையோ கண்டு கொண்ட புன்முறுவல் அவன் முகத்தில் மலர்ந்தது. இதுவரை இல்லாத சொந்தம் அவன் விழிகளில் தோன்றியது.

## 5

அரும்பாகி உதிர்ந்த மலர் – எனைத்

துரும்பாக்கிப் போனதடி...

உறவினையே வெறுத்து மனம் – கடும்

இரும்பாக ஆனதடி...

– நீங்காத என் நினைவுகள் –

மகிழம்பூவின் வாசம் கமழ்ந்து கொண்டிருந்தது. இதமான அந்த வாசனையை விட அவள் கேட்ட கேள்வி அவனை மயக்கியது. அந்தக் கேள்வி உணர்த்தும் செய்தி அவன் மனம் உணர்ந்தது. மெல்லிய புன்முறுவலுடன்.

''கட்டாயம் சொல்லத்தான் வேண்டுமா?'' என்று இதமாகக் கேட்டான். அவன் கேட்ட விதம் அவளை பாதித்தது. இதற்கு முன் இதுபோல் எவரும் அவள் மனதை பாதித்ததில்லை. தெருமுனையில் இஸ்திரி வண்டிக்காரன் எப்.எம்.ரேடியோவில் பாட்டுக் கேட்டுக் கொண்டே துணிகளை தேய்த்துக் கொண்டிருந்தான்...

அந்தக் குளுமையான பின் மாலை நேரத்தில் காற்றில் மிதந்து வந்தது பாடல்.

'யாரது...?

சொல்லாமல் நெஞ்சள்ளிப் போவது...

நாளாத பெண்மை வாடுமே... பாடுமே...'

வாணி ஜெயராமின் குரல் குழைந்து பாடியது... அந்தப் பாடல் கஸ்தூரியின் நெஞ்சத்தைக் கிள்ளியது... அவளது அடிமனம் அவளை அதட்டியது.

'நீ வந்த வேலையென்ன...? இப்போது மயங்கி நிற்கும் கோலமென்ன...?' என்று கேள்வி கேட்டது.

அடிமனதின் அதட்டலில் சுரணை வரப் பெற்றவள் மீண்டும் கடினத்தைக் கொண்டு வர முயன்றவளாய்... அவள் தீனமாய் கூறினாள்.

''சொல்வதும்.. சொல்லாததும்.. உங்கள் விருப்பம்.''

''நான் உங்கள் விருப்பத்தைக் கேட்டேன்...''

அவள் சட்டென்று அவனது முகம் பார்த்தாள். அதில் உல்லாசம் நிரம்பியிருந்தது.

இவனது கேள்விக்கு என்ன பதில் சொல்வது? 'விருப்பமா' என்று கேட்கிறானே... விருப்பம்தான் என்றால் அதற்கு என்ன பொருள் கொள்வான்.

''என்ன பதிலைக் காணோம்.''

''நான் போக வேண்டும். எனக்கு நேரமாகி விட்டது...''

அவள் நடக்க ஆரம்பித்தாள். அவனும் கூட நடந்தான்.

''ஏன் என்னுடன் நடந்து வருகிறீர்கள்?''

''உங்களது கேள்விக்குப் பதில் சொல்லாமல் அனுப்ப எனக்கு விருப்பம் இல்லை.''



'அப்படியென்றால் சொல்லித் தொலை..' என்று நினைத்தவளாய் அவள் மௌனமாக நடந்தாள்.

''கஸ்தூரி... நான் வந்த வேலையை நான் நினைத்திருந்தால் நேற்றே முடித்து விட்டு... நேற்று இரவே ஊர் திரும்பியிருக்கலாம். ஆனால் எனக்கு அதில் விருப்பமில்லை... எனக்கு வேறு ஒன்றின் மேல் புதிதாய் விருப்பம் வந்து விட்டது. அதனால் முடிந்து விட்ட பேச்சு வார்த்தையில் சில கொக்கிகளைப் போட்டு வைத்திருக்கிறேன். அதைத் தெளிவு படுத்திக் கொள்ளவென்று காரணம் காட்டி மேலும் ஒரு வாரம் இங்கு தங்கப் போகிறேன். இந்த முடிவை நேற்று இரவுதான் நான் எடுத்தேன்...''

அவள் நடை நின்றது... அசைவற்று தலை குனிந்து நின்றிருந்தவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். வெட்கத்தையும். நாணத்தையும் எதிர்பார்த்து அவள் முகத்தைப் பார்த்தவன் திடுக்கிட்டான். அவள் விழிகள் கலங்கிச் சிவந்திருந்தன. முகத்தில் துயரம் அப்பி இருந்தது.

''என்ன ஆச்சு கஸ்தூரி...''

''நத்திங்... மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறீர்களா?''

'இப்போது போய் ஏனிந்த பழமொழியைச் சொல்கிறாள்...' அவன் முகத்தில் குழப்பம் நிலவியது.

''கேட்டிருக்கிறேன் கஸ்தூரி...''

''கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா.. கண்களுக்கு சொந்தமில்லையென்ற பாடல் ஒன்றைக் கேட்டிருக்கிறீர்களா?''

''கேட்டிருக்கிறேன் கஸ்தூரி.''

''பாலைவனத்தில் கானல் நீரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நீர் இருப்பது போல் தெரியும்... அருகே போய் பார்த்தால் நீர் இருக்காது...''

''கேள்விப் பட்டிருக்கிறேன் கஸ்தூரி...''

''இது எல்லாவற்றையும் தெரிந்திருக்கும் நீங்கள் வீணாய் மனதை அலை பாய விடாதீர்கள்.. வெளித் தோற்றத்தை வைத்து யாரையும் எடை போடாதீர்கள். பேசாமல் ஊருக்குக் கிளம்பிப் போய்விடுங்கள்...''

கஸ்தூரி விடுவிடென்று நடந்தாள். தூரத்திலேயே அவள் சந்தோஷுடன் பேசிக் கொண்டு வந்ததைப் பார்த்து விட்ட காமுப் பாட்டி அவளது வீட்டு வாசலிலேயே மடக்கினாள்.

''யாரு கஸ்தூரியா வருவது?''

'அதுதான் தெரிகின்றதே.. அப்புறம் ஏன் கேட்கிறாய்?'

''நான்தான் பாட்டி...''

''அது யாருடிம்மா.. அந்தப் பிள்ளையாண்டான்.. ரொம்ப நேரமாய் உன்கூடப் பேசிக்கிட்டு இருந்தானே...''

'பார்த்து விட்டாயா... இந்த வயதிலும் இவ்வளவு தெளிவான பார்வையா?'

''அவர் ரஞ்சனுடைய சொந்தக்காரர் பாட்டி...''

''ரஞ்சனுடைய சொந்தக்காரனா.. ரஞ்சனை உனக்குத் தெரியுமா?''

'இந்தப் பாட்டியின் வாய் ஒரு மைக்செட்.. எக்குத் தப்பாய் சொல்லி வைத்தால் என்ன..?'

''எதிர் வீடுதானே பாட்டி... தெரியாமல் போகுமா?''

''வந்து முழுதாய் இருண்டு நாட்கள் கூட ஆகவில்லை.. அதற்குள் எதிர் வீட்டுக்காரனோடு சிநேகிதமாகி விட்டாயா?''



கஸ்தூரி எதிர்பார்த்தது போலவே காமுப்பாட்டி பேச... தனது அடையாளப் புன்முறுவலான மர்மப் புன்முறுவலை உதிர்த்தபடி கஸ்தூரி வீடு நோக்கிப் போனாள்.

''ஏம்மா லேட்...'' கோதண்டராமன் வினவினார்.

''காரணமாகத்தான்... எதிர் வீட்டுக்கு வந்திருக்கும் அவர்களின் சொந்தக்காரன் ஒருவனுடன் பேசிக் கொண்டு வந்தேன்...''

கோதண்டராமனும்.. கிருஷ்ணவேணியும் அவசரமாய் அவள் அருகே வந்து நின்றார்கள்.

''ஏதேனும் தகவல் கிடைத்ததா?''

''இல்லை.. ஆக்சுவலா... இவனை அந்த ரஞ்சன்னு நினைத்துத் தான் நான் பேசிப் பார்க்கலாமென்று நின்றேன். ஆனால் இவன் சென்னையில் இருந்து வந்திருக்கிறான். ரொம்ப நல்லவனாக வேறு இருந்து தொலைக்கிறான்.''

''அவன் எப்படி இருந்தால் நமக்கென்னம்மா வந்தது?'' கிருஷ்ணவேணி இயல்பாய் கூறினாள்.

'அப்படி விட்டேற்றியாய் சொல்லிவிட்டுப் போக என்னால் முடியவில்லையே...' அவள் மனம் வருந்தியது.

இரவில் பால்கனியில் நின்று எதிர் வீட்டைப் பார்த்த போது சந்தோஷ் பால்கனியில் நின்று கொண்டிருந்தான். அவளைப் பார்த்ததும் கை அசைத்தான். அவள் பதிலுக்கு கை அசைக்காமல் உள்ளே போகத் திரும்பினாள். அந்தச் சமயம் பார்த்து வேறொரு இளைஞன் ஒருவன் சந்தோஷின் அருகில் வந்து நிற்க... கஸ்தூரியின் உடல் விறைத்தது.

'இவன்.. இவன்.. ரஞ்சன்...'

கணநேரத்தில் கஸ்தூரி.. சுறுசுறுப்பானாள். உள்ளே போகத் திரும்பியவள் பால்கனியின் கைப்பிடியில் வந்து

சாய்ந்து நின்று கொண்டாள். சந்தோஷைப் பார்த்து கை அசைக்க வேறு செய்தாள். அவள் எதிர்பார்த்தது போலவே ரஞ்சன் அவளைக் கவனித்து விட்டான். அருகிலிருந்த சந்தோஷிடம் வினவினான்.

''யாருடா... அது?''

''அடுத்த வீட்டுப் பெண்...''

''எதிர் வீட்டுப் பெண்ணுன்னு சொல்லு.. இவள் எப்போது வந்தாள்? அந்த வீடு காலியாக இருந்ததே...''

''இவள் அப்பா அம்மாவுடன் குடி வந்து இரண்டு நாட்களாகி விட்டதாம்.''

''அதற்குள் உனக்கு வலை வீசி விட்டாளா? பப்ளிக்காய் கையை அசைத்து கூப்பிடுகிறாளே...''

சந்தோஷ் அருவெறுப்படைந்தான்...

''அடச்சீ... உன் வாயில் நல்ல வார்த்தைகளே வராதா? ஏண்டா இப்படிச் சாக்கடையாகவே நினைக்கிறாய்?''

''சும்மா நிறுத்துடா... இவளுகளையெல்லாம் எனக்குத் தெரியாதா?''

''ஸ்டாப் இட் ரஞ்சன்... நீ பார்த்துப் பழகிய பெண்களுடன் கஸ்தூரியை ஒப்பிடாதே...''

''கஸ்தூரிதான் அவள் பெயரா? பாருடா.. நாம் நிற்பது தெரிந்தும் பால்கனியில் வந்து நின்று போஸ் கொடுக்கிறாளே.. இவளைப் போய் எவளுடனும் ஒப்பிடக் கூடாது என்கிறாயே...''

''டேய்.. அவள் எனக்காக வந்து நிற்கிறாள். நமக்காக இல்லை.. புரிகிறதா இடத்தைக் காலி பண்ணு.''

''உனக்காகவா...? நீ சைவப் பட்சியாயிற்றே.. கல்யாணம் பண்ணிக்காமல் எந்தப் பெண்ணையும் கை



தொட மாட்டேன்னு விரதம் இருக்கிறவனாச்சே.. உன் விரதம் பறந்து விட்டதா?''

''பறக்கவெல்லாம் இல்லை. நான் இவளைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்.''

''உனக்குப் பைத்தியம்.. கியித்தியம் பிடித்து விடவில்லையே...''

'ரஞ்சன் சந்தோஷைப் பார்த்து ஒரு மாதிரியான குரலில் வினவிவிட்டு.. எதிர் வீட்டு பால்கனியில் விளக்கையும் போட்டு விட்டு விளக்கின் ஒளியில் நிற்கும் கஸ்தூரியைப் பார்த்தான்.

''ஆள் என்னவோ டக்கராகத்தான் இருக்கிறாள். ஆனால் பார்த்த உடனே அமரக் காதல் கொள்ளும் அளவிற்கு இவளிடம் அப்படி என்னதான் இருக்கிறது...?''

''ரஞ்சன் நீ உள்ளே போ...''

''ஹ... இது என் வீடு.. மறந்து விட்டதா?''

''எதிர் வீட்டில் நிற்பவள் என் காதலி...''

''அதனால் என்ன வந்தது?''

''நீ அவளை மரியாதையாய் பார்க்கவுமில்லை. அவளைப் பற்றி மரியாதையாய் பேசவுமில்லை...''

''ஸோ... வாட்? முந்தா நாள் தான் வந்தாய்... நேற்றுத்தான் அவளைப் பார்த்தாய்... இன்றுதான் அவளோடு பேசினாய்... இப்போது அவளைக் காதலிக்கிறேனென்று பினாத்துகிறாய்... சரி... காதலித்து தொலைத்து விட்டுப்போ என்று விட்டு விடலாமென்றால்.. கல்யாணமே பண்ணப் போகிறேன் என்கிறாய்... இது உனக்கே ரொம்ப ஓவராகத் தெரியவில்லையா?''

"அது என்னடா.. காதலித்தால் ஒன்றுமில்லையென் கிறாய்.. கல்யாணம் பண்ணிக் கொள்வது ஓவரென்கிறாய்..."

"இதோ பாருடா... நம்ம வயதில் பார்க்கிற பெண்களையெல்லாம் காதலித்துப் பார்த்தால் என்ன... என்றுதான் தோன்றும்... தோன்றினால் கொஞ்ச நாள் காதலித்து விட்டு.. காரியம் முடிந்ததும் கை கழுவி விட வேண்டும்.. அதை விட்டு விட்டு.. நொய்யல் மாதிரி கல்யாணம்... காட்சின்னு பினாத்தக் கூடாது."

"உன்னிடம் நான் இது பற்றி அட்வைஸ் கேட்டேனா?"

"நீ கேட்காவிட்டால்... சொல்ல வேண்டியது என் கடமையில்லையா...? உன் கல்யாணம் ஏற்கனவே முடிவான ஒன்று... என் சித்தப்பா மகளுக்கு யார் பதில் சொல்வது...?"

"அதனால்...?"

"பிடித்திருந்தால் பழகு... காதல்ன்னு கூடச் சொல்லி விட்டுப் போ... கல்யாணம் என்ற ஒன்றை என் சித்தப்பா மகளுடன்தான் நீ பண்ணியாக வேண்டும்..."

"அதைச் சொல்ல நீ யார்?"

"உன் நலம் விரும்பி.. உனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணிற்கு ஒன்றுவிட்ட அண்ணன்..."

"ரஞ்சன்.. தேவையில்லாத விசயங்களில் நீ மூக்கை நுழைக்காதே.. உன் சித்தப்பா மகளை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள சம்மதிக்கவேயில்லை."

"உன் அம்மா சம்மதித்து விட்டார்களே..."

"அப்போ.. அவங்களையே உன் தங்கையின் கழுத்தில் தாலி கட்டச் சொல்... என்னை விட்டு விடு..."

ரஞ்சன் கடகடவென்று சிரித்தான். சந்தோஷின் அருகே வந்து அவனது தோளை அணைத்துக் கொண்டான்.



"எதற்காக இவ்வளவு கோபப்படுகிறாய்...? சீமாவுக்கு என்ன குறை? கோடிக்கணக்கில் சொத்து... அவளைக் கட்டிக் கொள்ளக் கசக்கிறதா?"

"ஏய்ய்... போடா... உன் தங்கை எப்படியிருப்பாள். உன்னைப் போல்தானே இருப்பாள்?"

"இருந்தால் என்ன?"

"அடச்சீ... போடா..."

சந்தோஷ் எதிர் வீட்டைப் பார்த்தான். தலைப் பின்னலை முன்னால் போட்டுக் கொண்டு நகத்தைக் கடித்தவாறு இவர்கள் பேசுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் கஸ்தூரி...

'இவன் கண்ணில் போய் பட்டு விட்டாளே...' சந்தோஷ் சங்கடப்பட்ட அதே நேரத்தில் ரஞ்சனின் கண்களில் தான் பட்டு விட்டோம் என்று மகிழ்ச்சி அடைந்தாள் கஸ்தூரி.

இரை தேடிய பெண் சிங்கம்... இரையைக் கண்டதும் குறி பார்க்க ஆரம்பித்தது.

## 6

அண்ணா... நீ இருந்திருந்தால்
அடைக்கலமே கொடுத்திருப்பாய்...
கண்ணை இமை காப்பதுபோல்
கனிவுடனே என்னைக் காத்திருப்பாய்
– நீங்காத என் நினைவுகள் –

காலை வெயில் பட்டு பூச்செடிகள் தூக்கத்திலிருந்து விழித்து சோம்பல் முறித்து சிலுசிலுப்பாய் காற்றில் ஆடிக் கொண்டிருந்தன. தோட்டத்து இளம் வெயிலில் நின்று பூச்செடிகளுக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருப் பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் சோணாச்சலம்.

"குட்மார்னிங் அப்பா."

'ரஞ்சன் எழுந்து விட்டானா...?' திரும்பப் பார்த்தார். கையில் காபிக் கோப்பையுடன் அருகே வந்தான் அவன்.

"இது நீதானா? எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது."

"ஏன் அப்பா?"

"உன் கையில் சன் ரைஸ் காபி... இது ஓர் ஆச்சர்யம்."

"இன்னொன்று..."

"இவ்வளவு சீக்கிரம் நீ எழுந்து விட்டாயா?"

"இன்றைக்கு சன்ரைஸ் காபியுடன்.. சன்ரைஸை பார்த்து விட வேண்டுமென்று சீக்கிரமாய் எழுந்து விட்டேன்..."

ரஞ்சனின் பார்வை எதிர் வீட்டின் மேல் படிந்தது... மாடிப் பால்கனியில் கஸ்தூரி தோன்றுகிறாளா என்று பார்வையிட்டபடி சோணாச்சலத்திடம் பேசினான் அவன். மகனின் பார்வை போன திக்கைக் கவனித்த சோணாச்சலத்தின் நெற்றியில் சிந்தனைக் கோடு விழுந்தது. ரஞ்சன் காரணமில்லாமல் அங்கே பார்க்க மாட்டான். அப்போது கஸ்தூரி மாடி பால்கனிக்கு வந்தாள். முதல் நாள் இரவு அவளைச் சரி வரப் பார்க்க முடியாத ரஞ்சன் இப்போது கவனமாய் பார்த்தான். நைட்டியில் சாதாரணமாய் தூங்கி எழுந்த தோற்றத்தில் இத்தனைப் பொழிவா?



"யாருடா அந்தப் பெண்..." சோணாச்சலம் விசாரித்தார்.

"கஸ்தூரியாம்..." ரஞ்சன் அவளைப் பார்த்தபடி கூறி னான்.

"கஸ்தூரியாம்னா...? உனக்கு அவள் பெயரை வேறு யாரோ சொல்லியிருக்கிறார்கள் என்று அர்த்த மாகிறது. யார் அது?..." சோணாச்சலம் தீவிரமான முக பாவத்துடன் கேட்டார்.

சோணாச்சலத்தின் கூரிய அறிவைக் கண்டு எப் போதும் போலவே இப்போதும் வியந்தான் ரஞ்சன்.

"எப்படிப்பா... இப்படி யோசிக்கிறீர்கள்?"

"மூளையை உபயோகப்படுத்தித்தான்..."

"அப்போ.. எனக்கு மூளையில்லையா?"

"நான் அப்படிச் சொன்னேனா?"

"ஒகே... இந்த மேட்டரை விட்டு விடுவோம். எதிர் வீட்டு மாடி பால்கனி பேபியின் பெயர் கஸ்தூரியென்று சொன்னது உங்கள் அன்பு மருமகன்."

"யார் சந்தோஷா?"

"அவன்தானே உங்களுடைய மதிப்பிற்கும்... மரி யாதைக்கும் உரிய மருமகன்?"

"அவன் பெண்களையெல்லாம் கவனிக்க மாட்டானே..."

சோணாச்சலம் யோசனையுடன் கூறினார்... அவரது வார்த்தைகளில் 'நீதான் பெண்களின் பின்னால் அலை கிற பெண் பித்துப் பிடித்தவன்...' என்ற மறை பொருள் ஒலித்தது.

ரஞ்சன் அதை உணராமல் இல்லை.. உணர்ந்ததால் ரோசப் படவும் இல்லை.

'ஹ... இல்லாததையா சொல்லுகிறார்.. இவள் எப்படி என் கண்ணில் சிக்காமல் சந்தோஷின் கண்களில் சிக்கினாள்..?' என்றே அவன் யோசித்தான்.

மகனின் யோசனை வாய்ந்த முகத்தைக் கண்ட சோணாச்சலம் திரும்பி எதிர் வீட்டுப் பெண்ணை பரிதாபத்துடன் பார்த்தார்.

'பாவம்.. யார் பெற்ற பெண்ணோ? இவன் பார்வையில் பட்டுத் தொலைத்திருக்கிறதே.. இவளுக்கு குடியிருக்க இந்த ஊரில் வேறு வீடா இல்லை? இருந்திருந்து.. என் வீட்டிற்கு எதிர் வீட்டில் குடி வந்திருக்கிறதே..'

சோணாச்சலத்தால் வேறு என்ன செய்ய முடியும்? பாவம் என்று பரிதாபப்படத்தான் முடியும்... அவரும் என்னவெல்லாமோ செய்து பார்த்து விட்டார்.. எப்படியெப்படியோ சொல்லிப் பார்த்து விட்டார்... ரஞ்சன் திருந்துவதாக இல்லை... அவனை திருத்தும் தீவிரமான முயற்சியில் அவர் இறங்கியபோது,

''அப்பா... எல்லோரும் நேர் வழியில் போவதில்லை. நான் என்ன இப்போது கொலைகளையா பண்ணுகிறேன்?'' என்று பட்டென்று சொல்லிவிட்டான்...

சட்ட விரோதமான செயல்களையே தொழிலாகக் கொண்டு அதற்கு தடையாக வருபவர்களையும்... தனது எதிரிகளையும் கொன்று குவிக்கும் சோணாச்சலம் தன் திருவாயை மூடிக் கொண்டார். அதன் பின் மகனின் நடவடிக்கைகளில் அவர் தலையிடுவதில்லை.

அந்தத் தெருவில் குடியிருந்தவர்கள் தங்கள் வீட்டிலிருக்கும் பெண் பிள்ளைகள் வளர்ந்து விட்டால் சொந்த வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு அவர்கள் வாடகை



வீட்டிற்கு குடி போய் விடுவது வழக்கமாகி விட்டது... இப்போது கஸ்தூரி குடி வந்திருக்கும் எதிர் வீட்டின் சொந்தக்காரர்.. மகள் பத்து வயதைத் தாண்டியதும்.. வேறு ஒரு ஏரியாவில் வீடு வாடகைக்கு பிடித்து குடி போனவர்தான்.. ரஞ்சனின் பெண் மோகம் அவ்வளவு பிரசித்தி பெற்றது.

இது எதுவும் தெரியாமல் எதிர் வீட்டிற்கு குடி வந்து விட்டாளென்று கஸ்தூரியின் மேல் பரிதாபப்பட்டார் சோணாச்சலம். ஆனால் அவருக்குத் தெரியாது. ரஞ்சனின் பெண் மோகத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்த பின்னால் தான் அவன் வீட்டிற்கு எதிர் வீட்டில் குடி வர கஸ்தூரி முடிவு செய்தாள் என்பது.

மகனின் கண்ணில் பட்டு விட்டாளே என்று கவலைப் படும் சோணாச்சலத்திற்கு தெரியாது. எதிர் வீட்டிற்கு கஸ்தூரி குடி வந்ததின் நோக்கமே அவனின் கண்ணில் பட வேண்டும் என்பதுதான் என்பது.

ஆடு புலி ஆட்டத்தின் ஆடாக அவளைக் கற்பனை பண்ணிப் பார்த்து, பரிதாபப்படும் சோணாச்சலம் அறிய மாட்டார். கஸ்தூரி 'ஆடு' இல்லை.. 'பெண் சிங்கம்' என்பதை.

''அப்பா... சந்தோஷ்தான் எதிர் வீட்டுப் பெண்ணைப் பற்றிச் சொன்னான். அவள் பெயர் கஸ்தூரியென்று மட்டும் அவன் சொல்லவில்லை... அவளைக் காதலிப்பதாகவும் சொன்னான்...'' ரஞ்சன் விஷமமாகக் கூறினான்.

''என்ன...?'' அதிர்ச்சியுடன் கேட்டார் சோணாச்சலம்.

''ஆமாம்ப்பா... அவனுக்கு உங்க தம்பி மகள் சீமாவைப் பிடிக்கவில்லையாம்.. எதிர் வீட்டுப் பைங்கிளியைத் தான் பிடிக்கிறதாம்.''

''இதை எப்போது உன்னிடம் சொன்னான்?''

''நேற்று ராத்திரி...''

''அப்படியா.. எனக்கு இது தெரியாதே...'' சோணாச்சலம் யோசனையுடன் எதிர் வீட்டுப் பால்கனியைப் பார்த்தார்.

கஸ்தூரி ஏதோ உலவுகிறவள் போல பால்கனியில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள்.

''என்னப்பா பார்க்கிறீர்கள்? பால்கனி பேபி ஏன் நடைபோடுகிறது என்றா? நம் வீட்டு மாடி பால்கனியில் சந்தோஷ் நின்று கொண்டிருப்பான்?''

ரஞ்சன் அலட்சியமாய் கூறினான். சோணாச்சலம் இயல்பாய் நடப்பது போல் கேட்டருகே நடந்து சென்று அண்ணாந்து பார்த்தார். சந்தோஷ் நின்று கொண்டிருந்தான்.

''எப்படிடா இவ்வளவு கரெக்டா கண்டு பிடித்தாய்?''

''நேற்று ராத்திரியும் இப்படித்தான்.. பால்கனியில் நின்று எதிர்வீட்டை முறைத்துக் கொண்டிருந்தான். இவன் ஏன் இப்படி எதிர் வீட்டின் மேல் மந்திரம் போட்டுக் கொண்டிருக்கிறான்னு நோட் பண்ணினால் கொஞ்ச நேரத்தில் எதிர் வீட்டு பால்கனியில் இவள் காட்சி தருகிறாள்.''

''இது சும்மா வயசுக் கோளாறு. போகப் போக சரியாப் போயிடும்.''

''அப்படியா...? நீங்கள் தான் சந்தோஷ் ஒரு முடிவெடுத்தால் அதை மாற்றிக் கொள்ள மாட்டான்னு சொல்வீங்க...''

''ரஞ்சன்.. இப்போதைக்கு விட்டுப் பிடிக்கலாம்.. நீ வா சொல்கிறேன். ஆமாம்.. இந்தப் பெண் என்ன செய்கிறாளாம்?''



''டீச்சராக வேலை பார்க்கிறாளாம்.''

''எந்த ஸ்கூல்?''

''வீனஸ் மெட்ரிகுலேசன் ஹையர் செகண்டரி ஸ்கூல்...''

டைனிங் டேபிளில் சாப்பிட அமர்ந்தபோது சந்தோஷ் செல்போனில் பேசிக் கொண்டே அங்கே வந்தான்.

''யெஸ்.. பிரபா.. நான் வர ஒன் வீக்காகும்.. நீ கம்பெனியைப் பார்த்துக் கொள்.. எதுவும் இம்பார்டன்ட் மேட்டரென்றால் இம்மீடியட்டாய் எனக்குக் கால் பண்ணு... ஓகே?''

பேசி முடித்தவன் சோணாச்சலத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சாப்பிட அமர்ந்தான். அவனது டெலிபோன் உரையாடலைக் கேட்ட சோணாச்சலத்தின் பார்வையும்.. ரஞ்சனின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

சோணாச்சலம் ஒன்றும் அறியாதவர் போல் வினவினார்.

''யார் கூட போனில் பேசிக் கொண்டிருந்தாய் சந்தோஷ்?''

''என் கம்பெனி மேனேஜருடன் பேசிக் கொண்டிருந்தேன் மாமா.''

''ஒன் வீக் இங்கே தங்கப் போகிறாயா?''

''ஆமாம்.''

''நீ இங்கே எத்தனை நாள் வேண்டுமானாலும் தங்கலாம். இது உன் வீடு போல... ஆனால் தலைக்கு மேல் வேலையை வைத்துக் கொண்டு. நீ இங்கு நாட்களை வேஸ்ட் பண்ணுவது அவ்வளவு சரியில்லையென்று எனக்குத் தோன்றுகிறது...''

''வேலை எப்போதும் இருக்கத்தான் செய்யும் மாமா. அதற்காக.. நாம் நமக்கா

"உண்மைதான். உன்னுடைய வாழ்க்கை நீ வாழ் கிறாய்... ஆனால் நீ ஓய்வெடுக்க இந்த அன்னவாசல் தான் தோதான ஊரா? இந்த வெயில் காலத்தில் எல் லோரும் ஊட்டி.. கொடைக்கானல்.. மூணாறுன்னு ஓடிக் கிட்டு இருக்காங்க.. நீ என்னடாவென்றால்.. இந்த அன்ன வாசலில் ஒரு வாரத்தை வீணாக்கப் போகிறேன்னு சொல்கிறாய்..."

"உறவுக்காரங்க வீட்டை விடவா ஊட்டி குளிர்ச்சி யாக இருக்கும்?"

"அதுசரி.. இதுவே பெண்கள் இல்லாத வீடு.. இங்கே உன்னைக் கவனிக்க யார் இருக்கிறார்கள்?"

"அது ஒரு குறையே இல்லை மாமா... நீங்களும் ரஞ்சனும் இருக்கும் வீட்டில் நான் இருக்க மாட்டேனா... தவிரவும் எனக்கு நானும் ரஞ்சனும் ஆரம்பிக்கப் போகும் பிஸினெஸ்ஸில் இன்னும் சில விஷயங்கள் தெளிவாக வேண்டும்."

சோணாச்சலம் உஷார் ஆனார். அவருக்கு ரஞ்சன்.. சந்தோஷுடன் சேர்ந்து கம்பெனி ஆரம்பிக்க வேண்டும். அதுதான் மிகவும் முக்கியம்... சந்தோஷின் சொந்த வாழ்க் கையில் அவன் யாரைத் திருமணம் செய்து கொண்டாலும் அதைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. ரஞ்சனின் எதிர்காலம் குறித்து அவர் மிகுந்த கவலையில் இருந்தார்.

சந்தோஷ் சோணாச்சலத்தின் ஒன்றுவிட்ட தங்கை ஜெயந்தியின் மகன்.. சோணாச்சலத்தின் சொத்தில் நூறில் ஒரு பங்கு கூட இல்லாத ஜெயந்தியின் கணவர் சந் தானம்.. இன்று வெளிநாட்டுக் காரில் பவனி வருகிறார் என்றால் அதற்குக் காரணம் சந்தோஷ்... அவனுடைய புத்திக் கூர்மை.



சந்தோஷின் வயதுதான் ரஞ்சனுக்கும்... ஆனால் ரஞ்சன் இன்னும் சோணாச்சலத்தின் மகன் என்ற முறை யிலேயே புதுக்கோட்டை வட்டாரத்தில் அறியப்பட... சந்தோஷ் உலக அளவில் வியாபாரத்தை விருத்தி செய்து மிகச் சீக்கிரத்தில் சென்னையில் உள்ள முதல் தரமான கம்ப்யூட்டர் நிறுவனங்களின் வரிசை பட்டியலில் தன்னுடைய கம்ப்யூட்டர் நிறுவனத்தையும் கொண்டு வந்திருந்தான்.

அவனுடைய அசுர வளர்ச்சியில் ஆச்சர்யப்பட்டுப் போனார் சோணாச்சலம். அவருடைய உறவு வட்டாரத் தில் ரஞ்சனை விட சந்தோஷிற்கே மதிப்பும் மரியாதை யும் அதிகம் கிடைத்தது... திருமண மார்க்கெட்டில் சந்தோஷ் முதல் தர மாப்பிள்ளையாக நிற்க... ரஞ்சனுக்கு பெண்ணை வலை போட்டுத் தேட வேண்டிய கட் டாயத்துக்கு ஆளான சோணாச்சலம்... மகனுடைய அடையாளத்தை மாற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந் தார்.

ரஞ்சனைச் சுற்றியுள்ள தாதா இமேஜை உடைக்க வேண்டுமானால்.. அவன் சோணாச்சலத்தின் அருகே யிருந்து விலகியிருக்க வேண்டும். தான் போகும் பாதை யிலேயே அவனும் வருவதை சோணாச்சலம் விரும்ப வில்லை. தன்னுடைய தொழில் தன்னோடு போகட் டும். மகன் மற்றவர்கள் மதிக்கும் அளவிற்கு மாறட்டும் என்று நினைத்தார். அதன் விளைவாகத்தான் அவர் சந்தோஷிடம் அந்த வேண்டுகோளை வைத்தார்.

"ரஞ்சன் உருப்படுவது உன் கையில்தான் இருக்கிறது சந்தோஷ். நீ மனம் வைத்தால் அவனது எதிர்காலம் நன்றாக இருக்கும்."

''ஆனால் மாமா... ரஞ்சன் விளையாட்டுப் பிள்ளை. அவனுடைய லீலா வினோதங்களை அவன் உங்கள் ஊரிலேயே விட்டு விட்டு வர வேண்டும். இங்கு வந் தால்... எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அவன் உடன் பிறந்தளாக நினைக்க வேண்டும். அது அவனால் முடியாத காரியம். அவனுடைய போக்கில் விடுவது என்னால் முடியாத காரியம். சொந்தம் வேறு. பிஸினெஸ் வேறு. நான் பிஸினெஸ்ஸில் இதுவரை நல்ல பெயரை வாங்கி வந்திருக்கிறேன். அதை உங்கள் மகன் கெடுத்து விடுவான். ஐ ஆம் ஸாரி..''

சந்தோஷ் தீவிரமாக மறுத்தான்.

சந்தோஷ் பிடிகொடுக்க மறுக்கவும்.. சோணாச்சலம் தங்கையிடம் சரணடைந்தார். ஜெயந்தி மகனிடம் பேசினாள்.

''ஏன் சந்தோஷ்.. ரஞ்சனுக்கு ஒரு பிஸினெஸ் ஆரம் பித்துக் கொடுக்க வேண்டுமென்று அண்ணன் ஆசைப் படுகிறார். அது உன் மேற்பார்வையில் இருந்தால் அவன் சீக்கிரம் முன்னுக்கு வந்து விடுவான்னு நினைக்கிறார். நீ ஏன் தட்டிக்கழிக்கிறாய்?''

''அம்மா.. இதில் நீங்கள் தலையிடாதீர்கள். உங்களுக் குப் புரியாது.''

''எல்லாம் எனக்கும் புரியும். ரஞ்சன் தாயில்லாப் பிள்ளை.. என் அண்ணன் வேறு அடாவடிக்காரர்.. அவர் வளர்ப்பு சரியில்லை. இனியாவது சரியாக மாட்டானான்னு தவிக் கிறார். நீ உதவி பண்ணக் கூடாதா?''

சந்தோஷ் தந்தையின் முகத்தைப் பார்த்தான். சந்தானம் மகனின் உதவிக்கு வந்தார்.

''ஜெயந்தி.. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?''

''என் அண்ணன் மகனுக்கு ஐம்பது வயதா ஆகிறது?''



''ஆனால் ஐந்து வயது முடிந்து விட்டதே...''

''சகவாச தோசம்.. கெட்டழிந்து விட்டான்...''

''அவனுடைய சகவாசம் நம்பிள்ளைக்கு தேவையா?''

''என்னங்க நீங்களும் அவனைப் போலவே புரியாமல் பேசறீங்க... நாளைக்கு நாம் அவங்க வீட்டில்தான் பெண் கட்டப் போகிறோம்...''

சந்தோஷ் சேரைத் தள்ளி விட்டு எழுந்தான்.

''என்னது.. நீங்க என்னம்மா சொல்றீங்க. அந்த சீமாவைப் போய் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வதா... நெவர்.''

''இதோ பாருடா... நான் வாக்குக் கொடுத்து விட் டேன்...''

''யாரைக் கேட்டு வாக்குக் கொடுத்தீங்க?''

''என் மகன் என் பேச்சைக் கேட்பான் என்ற நம்பிக் கையில்தான் வாக்குக் கொடுத்தேன்.''

''அம்மா.. நீங்க என் வாழ்க்கையோடு விளையாடப் பார்க்காதீங்க. நான் ஒரு நாளும் அந்தச் சீமாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்...''

தாய்க்கும் மகனுக்கும் சொற்போர் ஆரம்பித்தது. இறுதி யில் சந்தானம் தலையிட்டு இருவருக்கும் சமரசம் செய்து வைத்தார்.

## 7

**பொய்யான உறவுகளை...**

**புண்படுத்தும் மனிதர்களை...**

**தட்டிக் கேட்டிருப்பாய்...**

**தண்டனையும் கொடுத்திருப்பாய்...**

**– நீங்காத என் நினைவுகள் –**

''ஜெயந்தி.. நீ செய்ததும் தப்புத்தானே... என்னை யும் சந்தோஷையும் கேட்காமல் நீயாக எப்படி அவ னுடைய கல்யாணத்தை முடிவு பண்ணலாம்?''

''எனக்கு அந்த உரிமையில்லையா?''

''நீ காட்டுவது உரிமையில்லை. சர்வாதிகாரம்.''

''நீங்கள் மட்டும் உங்களுடைய நண்பரின் மகளை.. நம் மகனுக்குப் பேசவில்லையா...?''

''தவறாகப் பழி போடாதே... அவன் பெண் கொடுக்க ஆசைப்பட்டான். நான் வீட்டிற்கு வந்து உன்னிடம் விசயத்தைச் சொன்னேன். சந்தோஷிடம் அவனுடைய விருப்பத்தைக் கேட்டேன். நான் அவனுக்கு வாக்குக் கொடுக்கவில்லை... உனக்கு விருப்பமில்லை. சந்தோஷ் இப்போது கல்யாணம் வேண்டாமென்றான். நான் அவனுக்குத் தகவல் கொடுத்து விட்டேன். நீ அப்படிச் செய்திருக்கிறாயா?''

''அது உங்கள் நண்பரின் மகள்.. இது என் அண்ண னின் மகள்.''

''உன் கூடப் பிறந்த அண்ணனா?''

''பெற்றால்தான் பிள்ளையா? கூடப் பிறந்தால்தான் உடன்பிறப்பா?''

''என்டி.. அதிகமாய் சினிமா பார்க்காதேன்னு சொன் னால் கேட்கிறாயா? வெறும் சினிமாப் பட டைட்டில் களைச் சொல்லி என் உயிரை வாங்குகிறாயே...''

''இதோ பாருங்கள்.. சீமாவுக்கு என்ன குறைச்சல்? அழகில்லையா? படிப்பில்லையா? சொத்தில்லையா? கோடிக் கணக்கான சொத்துடன் பெண் வரும்போது எந்த மடையனாவது கட்டிக் கொள்ள மாட்டேன்னு சொல்வானா...?''



சந்தானம் கோபமாய் மனைவியைப் பார்த்தார். சந் தோஷோ,

''இந்த மடையன் மாட்டேன் என்று சொல்லுவான்'' என்றான்.

''கேட்டுக்கடி... நாங்கள் மடையர்கள்தான்... நீ இந்த மடையர்களுடன் இருப்பதானால் இரு. இல்லாவிட்டால் உன் புத்திசாலி அண்ணன்மார்கள் வீட்டிற்குப் போய் பிழைப்பை நடத்து... மடையன்களாம். உன் பெரியப்பா மகன்களின் கதை எனக்குத் தெரியாதா? மூத்தவன் சோணாச் சலம் கடத்தல்.. கொலைன்னு அலைந்து சொத்து சேர்த் திருக்கிறான். இளையவன் வேதாச்சலம் ஊரை அடித்து உலையில் போட்டு சொத்து சம்பாதித்து வைத்திருக் கிறான். இவனுக வீட்டில் பெண் எடுக்கலைன்னா நான் மடையனா? அந்தப் பெண்ணைக் கட்ட மாட்டேன்னு சொன்னால் என் மகன் மடையனா?''

சந்தானம் கொதித்துப் போய் வார்த்தைகளைக் கொட்ட ஜெயந்தி சுதாரித்துக் கொண்டாள்.

'இது ஏது வம்பாப் போச்சு.. சந்தடி சாக்கில் இந்த மனுசன் பிள்ளையை தன் பக்கம் இழுக்கப் பார்க்கிறாரே... கூடாது.. முதலில் அப்பா மகன் கூட்டணியை உடைக் கணும். மற்றதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.'

''இப்போ நான் என்ன சொல்லி விட்டேன்னு அப்பா வும் பிள்ளையும் தாம் தூம்னு குதிக்கிறீங்க...? நான் ஒரு காரியம் முடிக்கிறேன்னு என் அண்ணனுக்கு வாக்குக் கொடுத்தேன். அது முடியாதுன்னு ஆகிப் போச்சு. அப்போ அவர் கேட்கிற இன்னொரு காரியத்தையாவது செய்து கொடுக்கலாமில்லையா?''

''இவள் என்னடா சொல்கிறாள்?''

''இதுக்கு விளக்கத்தை பிள்ளைகிட்டத்தான் கேட்கணுமா? என்னிடம் கேட்டால் ஆகாதா? நான் சொல்ல மாட்டேனா?''

'ஆஹா.. இவள் சரஸத்தை ஆரம்பித்து விட்டாள்... சந்தானம் விழுந்து விடாதே. உஷாராய் இரு. இது உன் மகனின் வாழ்க்கைப் பிரச்சனை... இவள் கவிழ்க்கப் பார்க்கிறாள். கவிழ்ந்து விடாதே...'

சந்தானம் எதற்கும் இருக்கட்டுமேன்னு மனைவியின் முகத்தைப் பார்க்காமல் வேறு திக்கைப் பார்த்துக் கொண்டே பேசினார்.

''சரி... சரி.. சொல்லு.''

''அதை என் முகத்தைப் பார்த்துச் சொல்லக்கூடாதா?''

''இத்தனை வருசமாய் பார்த்த முகம்தானே... புது முகத்தையா பொருத்திக் கொண்டு வந்திருக்கிறாய்? சொல்லு.''

சந்தானம் சலிப்பாய் கூற சந்தோஷ் வாய் விட்டுச் சிரித்தான். ஜெயந்திக்கு ரோஷம் வந்து விட்டது. கணவனின் உதவி இனி கிடைக்காது என்று புரிந்து கொண்டவளாய் வெடுவெடுத்தாள்.

''எல்லாம் உங்களுக்கு இந்த முகமே போதும்.''

''நான் போதாதென்று சொன்னேனா?''

அவரின் இந்தப் பதிலில் அவளது கோபம் பறந்து விட்டது... எனவே தன்மையாகப் பேசினாள்.

''சின்ன அண்ணன் வீட்டில் பெண் கட்ட முடியவில்லை. பெரிய அண்ணன் மகனையாவது திருத்தும் பொறுப்பை எடுத்துக் கொள்ளலாமே.''



''இதை அவனின் சின்ன வயதிலேயே உன் அண்ணன் செய்திருக்க வேண்டும் ஜெயந்தி. இப்போது தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கப் பார்க்கிறார். இது சரி வருமா?''

''சரி வரும்ங்கிற நம்பிக்கையில்தானே நம்மிடம் உதவி கேட்கிறார்? செய்து கொடுத்தால்தான் என்ன?''

சந்தானம் மகனைப் பார்த்தார்.

''என்னப்பா?''

''சந்தோஷ்.. உன் அம்மா சொல்வதும் சரிதானே.. நம்மால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்துதான் பார்ப்போமே...''

''ரஞ்சன் ஒரு ரோக் அப்பா...''

''நீ ஜென்டில்மேன்தானே.''

''என் நிறுவனத்தில் வேலை பார்க்கும் பெண்களுக்கு மதிப்பும்.. மரியாதையும் பாதிக்கப்படாமலிருக்க வேண்டும் அப்பா...''

''ம்ம்... அப்படியானால்.. மெஜாரிட்டி ஷேரை உன் பெயரில் வைத்துக் கொள். கம்பெனியின் பொறுப்பு உன்னிடம் இருக்கட்டும்... ரஞ்சன் கல்யாணம் பண்ணி குழந்தை குட்டின்னு செட்டிலான பின்னால் அவனது நடவடிக்கையில் திருப்தி இருந்தால் அவனிடம் கம்பெனியை ஒப்படை. இல்லாவிட்டால் வட்டியோடு அவர்களது பணத்தைக் கொடுத்து செட்டில் பண்ணி வெளியே அனுப்பு...''

''ம்... நீங்கள் சொல்வதும் சரிதான்.''

சந்தோஷ் ஒரு வழியாக சம்மதிக்க ஜெயந்தி சோணாச்சலத்திடம் இந்தத் தகவலைத் தெரிவித்தாள்.

"அண்ணா.. இப்போதைக்கு சந்தோஷ் இந்த அளவு இறங்கி வந்ததே பெரிய விஷயம். சீமாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதைப் பற்றி நான் எந்த உறுதியும் கொடுக்க முடியாது... அது போல ரஞ்சன் திருந்தா விட்டால் கம்பெனியை அவன் பெயருக்கு சந்தோஷ் மாற்ற மாட்டான்..."

சோணாச்சலம் இது குறித்து யோசித்தார். சந்தோஷின் சந்தேகமும் பயமும் நியாயமானது என்று அவருக்கு மிக நன்றாகத் தெரியும். அவர் பெற்ற பிள்ளை உள்ளூரிலேயே புகுந்து விளையாடுபவன். சென்னை மாநகரத்தில் அவனை விட்டால்.. என்ன செய்வான் என்று அவருக்குத் தெரியாதா? எனவே.. ஒரு வகையில் சந்தோஷின் இந்த நிபந்தனைகளை அவர் மிகச் சந்தோசமாக ஏற்றுக் கொண்டார்.

ஆனால்.. ரஞ்சன் அதை மனதிற்குள் மிகக் கடுமையாக எதிர்த்தான். அவனுக்கு சென்னைக்குச் செல்வதில் விருப்பமில்லை. காலையில் எழுந்ததும் குளித்து முடித்து.. இட்லியையும் கோழி வறுவலையும் ஒரு பிடி பிடித்து விட்டு, கூலிங்கிளாஸ், கழுத்தில் சைக்கிள் செயின் போல் தடிமனான மைனர் செயின், கையில் பட்டையான பிரேஸ்லெட்.. வாயில் சிகரெட்டுடன் ஒரு டாடா சுமோவில் பத்து கையாள்களை ஏற்றிக் கொண்டு அன்ன வாசலையும்.. புதுக்கோட்டையையும் சுற்றி வருவதில் கிடைக்கும் திரில்... சென்னையில் கிடைத்து விடுமா? அதுவும் கண்ணில் படும் பெண்களையெல்லாம் வேட்டையாடுவதில் ஏற்படும் குஷி... அதைப் போய் விட்டு விட வேண்டுமாம். அப்போதுதான் மதிப்பும் மரியாதையும் கிடைக்குமாம். யாருக்கு வேண்டும் அந்த மதிப்பும்



மரியாதையும்..? ரஞ்சனுக்கு வேண்டியது பயம்..
அவனிடம் மற்றவர்கள் காட்டும் பயம்...
"கடையிலே என்னடா வச்சிருக்கே..?"
டாடா சுமோவில் போய் ஏதாவது ஒரு பெட்டிக்கடை
வாசலில் திமுதிமுவென்று இறங்கி விசாரிப்பான். அந்தப்
பெட்டிக் கடைக்காரன் குலை நடுங்கிப் போவான்.
"ஐயா.. உங்களை மாதிரி பெரிய மனுசங்க வாங்குவது
போல இங்கு எதுவும் இல்லைங்கய்யா..."
"அப்போ... இவனைப் போல சின்ன மனுசங்க
வாங்குவது மாதிரி எதையாவது வைத்திருக்கிறாயா?"
'ரஞ்சன் தன் கையாள்களில் ஒருவனைக் காண்பித்துக்
கேட்பான். மற்றவர்கள் அவன் ஏதோ ஜோக் சொல்லி
விட்டதைப் போல 'ஹோ... ஹோ'வென்று சிரிப்பார்கள்.
பெட்டிக் கடைக்காரனின் மேல் பரிதாபப்பட்டு யாரா
வது பேச வந்தால்... விவரம் தெரிந்தவர்கள் உதவிக்கு
வருபவர்களை தடுப்பார்கள்.

"ஏய்... வாயை வைத்துக்கொண்டு சும்மாயிரு. வம்பை விலைக்கு வாங்காதே... அது யார் தெரியுமா? சோணாச்சலத்தின் மகன்... ரஞ்சன்."

"ரஞ்சனா..."

கேள்வி கேட்பவரின் விழி பயத்தில் விரியும்.. அந்தப் பயம் தான் ரஞ்சனுக்கு வேண்டும்... அடாவடியாய் வாழ்ந்து பழகியவனை அமைதியாய் வாழச் சொன்னால் அவன் ஏற்றுக் கொள்வானா? பூச்சாண்டி முகத்துடன் புதுக்கோட்டை வட்டாரத்தில் வாழ்பவனை சென்னை நகரின் ஜனக் கூட்டத்தில் அவன் யாரென்று முகமறியாதவர்களின் மத்தியில் வாழச் சொன்னால் எப்படி..?

அதுவும் நல்லவனாக வாழவேண்டுமாம்..? யாருக்கு வேண்டும் அப்படிப்பட்ட வாழ்க்கை?

வேட்டை நாயாய் துரத்திப் பழகியவனை திடீரென்று வெள்ளாடாய் மாறச் சொன்னால் எப்படி? அவன் சோணாச்சலத்திடம் போர்க்கொடி தூக்கினான்.

"அப்பா.. என்னால் சென்னைக்கெல்லாம் போக முடியாது..."

"ஏன்...?"

"எனக்குப் பிடிக்கவில்லை..."

"நீ இப்படிக் கெட்டழிவது எனக்குப் பிடிக்கவில்லை..."

"உங்கள் மகன் வேறு எப்படி இருப்பான்?"

அலட்சியமான பதில்.. ஆனால் தெளிவான பதில்.. இந்த அலட்சியத்தை வேறு யாரும் காட்டி விட முடியாது. காட்டிவிட்டு சோணாச்சலத்திடமிருந்து தப்பிவிட முடியாது. ஆனால் இவன் மகனாகப் போய் விட்டானே.

"ரஞ்சன்.. நீயும் சந்தோஷும்.. நம் உறவுக்காரர்களின் வீட்டு விசேஷம் எதற்காவது போய் விட்டு வாருங்கள். அங்கே சந்தோஷிற்கு கிடைக்கும் மதிப்பும்.. மரியாதையும் உனக்குக் கிடைக்காது."

"இது உங்கள் கற்பனை அப்பா."

"நான் சொல்வது கற்பனையல்ல நிஜம். இது உனக்கே தெரியும்."

அது ரஞ்சனுக்கும் தெரியும். நிறைய முறை இது போல் நிகழ்ந்திருக்கிறது. ரஞ்சனின் சக்தி எதுவும் சந்தோஷின் முன் எடுபடவில்லை. அவனுடன் பேசிப் பழக உறவினர்கள் ஆர்வம் காட்டினார்கள். அவன் எங்கே போனாலும் இளம் பெண்களின் கூட்டம் அவனையே சுற்றிச் சுற்றி வந்தது. எல்லாவற்றையும் தாங்கிக் கொண்ட



ரஞ்சனுக்கு இதை மட்டும் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. இது போன்ற சில நிகழ்வுகளுக்குப் பின்னர் அவன் சந்தோஷுடன் சேர்ந்து உறவினர் வீட்டு விசேஷங்களுக்குப் போவதில்லை. அவன் ஒரு இடத்திற்கு வருவது தெரிந்தாலே இவன் அங்கே போவதைத் தவிர்த்து விடுவான்.

இப்போது அவனுடன் சேர்ந்து இவன் கம்பெனி ஆரம்பிக்க வேண்டுமாம். அதற்கு அவன் தான் முதலாளியாக இருப்பானாம். இவனது நடவடிக்கைகளில் திருப்தி வந்து.. இவன் பெண்டாட்டி பிள்ளைகளென்று ஆன பின்னால்.. அவனாய் மனது வைத்து முதலாளி பதவியை விட்டுக் கொடுத்தாலும் கொடுப்பானாம். இல்லாவிட்டால் இல்லையாம். இந்த ரஞ்சனை என்னவென்று நினைத்தார்கள். இவன் தலைவனாக இருந்து பழகியவன்.. இந்தப் புதுக்கோட்டை வட்டாரத்தை விட்டு அவன் அகல மாட்டான். அதுவும் சந்தோஷிற்கு அடங்கி அவனிடம் கை கட்டி சேவகம் பண்ணமாட்டான்.

ரஞ்சன் முடிவெடுத்து விட்டான்.. அதன்படி சந்தோஷின் மரியாதையான நற்பெயருக்கு களங்கம் விளைவிக்க முடிவு செய்தான்.

# 8

நீ போன பின்னாலே – மனம்
உன்நிழல் தேடும் தன்னாலே...
நீயின்றி போனதினால் – நான்
நிழலின்றிப் போனேனே...
– நீங்காத என் நினைவுகள் –

சந்தோஷ் வருவதற்கு முன்னால் ரஞ்சன் வேறு ஒரு திட்டம் வைத்திருந்தான். அதன்படி அவனுக்கு குளிர் பான பாட்டிலில் விஸ்கியை ஊற்றிக் குடுத்து விட வேண்டும். அதை சோணாச்சலம் பார்க்க வேண்டும். அப்போது அவரிடம் கேட்க வேண்டும்.

''ஏன் அப்பா.. இவன் குடிக்க மாட்டானென்று சொன் னீர்களே.. இப்போது பார்த்தால் இவன் என்னைவிட மொடாக்குடியனாக இருக்கிறானே.''

இது ஒன்றும் பெரிய விளைவை ஏற்படுத்தா விட் டாலும்.. சந்தோஷின் தூய்மையான தோற்றத்தின் மீது ஓர் களங்கத்தை உண்டாக்கி விடலாம்... அடுத்து இன்னும் சில திட்டங்களும் வைத்திருந்தான்.

ஆனால் அவனே எதிர்பார்க்காமல் சந்தோஷின் மீது சோணாச்சலத்திற்கு இருந்த நற்பெயரைக் குலைக்க சந்தோஷே வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து விட்டான்.

சாப்பிடும்போது சோணாச்சலத்தின் வாயை அடைக் கும் வகையில் சந்தோஷ் பேசி விட சோணாச்சலம் பின் வாங்கினார். அவருக்கு ரஞ்சன் உருப்படுவது மட்டும் தான் முக்கியம். சந்தோஷ் யாரைக் காதலித்தால் அவருக்கு என்ன வந்தது?

''ரஞ்சனுடன் நீ ஆரம்பிக்கப் போகும் பிஸினெஸ் சம்பந்தமாக நீ என்ன வேண்டுமானாலும் கேட்டுத் தெளிவு படுத்திக் கொள். இங்கே எத்தனை நாள் வேண்டு மானாலும் இரு... உன் வாழ்க்கை.. உன் விருப்பம். இதில் மற்றவர் தலையிட என்ன இருக்கிறது? ஆனால் சந்தோஷ் எது எப்படியானாலும் நீ ரஞ்சனுடன் கூட்டாக பிஸி னெஸ் பண்ணித்தான் ஆக வேண்டும். அதில் மட்டும் மாற்றம் செய்யவிடாதே.''



சந்தோஷ் நிதானமாகச் சாப்பிட்டுக் கொண்டே ரஞ் சனை அடிக்கண்ணால் பார்த்தான்.

'போட்டுக் கொடுத்தாயே.. இப்போது என்னவாயிற்று?'

ரஞ்சனின் முகம் மாறியது. ஆனால் இவனை வெளிப் படையாய் எதிர்த்துக் கொள்ளவும் முடியாது.. இவனை எந்த வகையிலாவது பாதிப்படையச் செய்ய வேண் டுமே. என்ன செய்யலாம்?

ரஞ்சனின் மனக் கண்ணில் கஸ்தூரி தோன்றினாள். முதல் நாளே அவளது அழகைக் கண்டு கிறங்கிப் போய் விட்டான் ரஞ்சன். ஆனால் சந்தோஷ் அவளைத் தன் னுடைய காதலியென்று கூறியதும் பின் வாங்கி விட் டான். அதே சமயம் அவளைக் கள்ளப் பார்வை பார்த்து வைத்தான். அப்போதுதான் அவளும் இவனை அதே கள்ளப் பார்வை பார்ப்பது தெரிந்தது.

'என்னடா இது.. இவனானால் அவளை இவனுடைய காதலி என்கிறான்.. அவளானால் என்னைப் பார்க்கிறாள். என்ன நடக்கிறது இங்கே...'

ஒருவேளை நான்தான் அவளைச் சரியாய் எடை போடவில்லையோ என்ற எண்ணத்துடன் காலையில் எழுந்ததும்... மாடிக்குப் போகாமல் வாசல் பக்கம் வந்தான்... அவனது கணிப்பு சரியாக இருந்தது. கஸ்தூரி.. மாடிப் பால்கனியில் இருந்த சந்தோஷை விட்டு தோட்டத்தில் நின்று கொண்டிருந்த ரஞ்சனையே பார்த்தாள்.

ரஞ்சன் மனதிற்குள் விசிலடித்துக் கொண்டான்.

'வகையாய் உனக்கு இருக்குடா மச்சான்... காதலிக் கிறாயா? அவள் உன்னை விட்டு விட்டு என்னைக்

காதலித்தால் உன் முகத்தை எங்கே கொண்டு போ வைத்துக் கொள்வாய்?'

ரஞ்சன் சந்தோஷை தோற்கடிக்க விரும்பினான்.

'பார்.. உன் காதலியென்று சொன்னாயே... இவள் எ காதலி...' என்று வெற்றிக்கொடி நாட்ட விழைந்தான்.

எங்கேயும் சந்தோஷ்.. எதைச் சொன்னாலும் சந்தோஷ் என்று சந்தோஷின் புகழ் பாடும் அப்பாவின் முன்னா 'அவன் விரும்புகின்ற பெண்.. அவனை விட்டு விட்டு என்னைத்தான் விரும்புகிறது...' என்று சொல்ல ஆசைப் பட்டான்.

முதன் முறையாக காமமாக இல்லாமல்... காதலாய் ஒரு பெண்ணைப் பார்க்க அவன் முடிவு செய்தபோது.. கஸ்தூரி அவள் வீட்டில் செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்.

''நான் முடிவு செய்து விட்டேன். இனி என் முடிவில் மாற்றமில்லை.''

கஸ்தூரி பஸ் ஸ்டாப்பில் இறங்கி அன்ன நடை நடந்து பள்ளியை நோக்கிச் சென்றாள். நிதானமாய் நடக்க வேண்டும் என்பதற்காகவே சீக்கிரமாய் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள். வீட்டிலிருந்து பஸ் ஸ்டாப் வரை யாரும் பின் தொடர்ந்து வரவில்லை.

'ஏன்...?' என்ற யோசனையுடன் பஸ் ஏறி ஸ்டாப்பில் இறங்கிச் சென்றபோது டாடா சுமோ ஒன்று அவளைப் பின் தொடர்ந்தது. அவளது நடை மெதுவானது.. டாடா சுமோவிலிருந்து இறங்கிய ரஞ்சன் அவளை நோக்கி வந்தான்.

அவனைப் பாராதது போல் பார்த்த கஸ்தூரியால் முதல் நாள் பார்த்த சந்தோஷின் தோற்றத்துடன்



இவனை ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடிய வில்லை.

சந்தோஷ் ஆறடி உயரத்தில் இருந்தான். ரஞ்சனோ அவனை விட உயரம் குறைவாய் கஸ்தூரியின் உயரத் திலே இருந்தான். சந்தோஷின் முகத்தில் ஓர் கண்டிப் பும்.. நிமிர்வும்.. கம்பீரமும் ததும்பியது.. ரஞ்சனின் முகத்தில் 'நான் போக்கிரி' என்று எழுதி ஒட்டியிருந்தது போல் கள்ளத்தனம் வழிந்தது. சந்தோஷின் முகம் எடுப்பான தடித்த மீசையுடன் தினமும் ஷேவ் செய்யப் பட்டு வழவழப்புடன் இருந்தது. ரஞ்சனின் முகத்தில் மீசையும் தாடியும் அடர்ந்திருந்தது. சந்தோஷிற்கு கூரிய விழிகள்... ரஞ்சனுக்கோ குடிப் பழக்கத்தால் சிவந்திருக் கும் போதை ததும்பிய விழிகள்.. சந்தோஷ் கஸ்தூரி யுடன் பேசிய நேரம் முழுவதும் அவனது முகத்தைப் பார்த்துத்தான் பேசினான். ரஞ்சனோ அவளை நேராகப் பார்த்த ஓர் நிமிடத்திற்குள் அவள் உடல் முழுவதும் பார்வையால் மேய்ந்தான்.

கஸ்தூரிக்குள் அருவெறுப்பு குமிழிட்டது.

'என்ன மாதிரியான பார்வை... இவனுடன் சிரித்துப் பேசி உறவாட வேண்டும்... சே...'

அவள் மனதில் வெறுப்புடன் நினைத்துக் கொண்ட போது தனசேகரனின் முகம் நினைவிற்கு வந்தது.

'இவனை உறவாடித்தான் பழி வாங்க வேண்டும்.'

கஸ்தூரி... ரஞ்சனை ஆர்வமாய் பார்ப்பது போல் பார்த்து வைத்தாள். ரஞ்சனின் மனம் துள்ளியது.

'என்னடா இது.. நான் இவளுக்குத் தூண்டில் போட வந்தால்... அம்மிணி எனக்குத் தூண்டில் போடுகிறாளே...'

அவளது பார்வைக்கு பதில் பார்வையாய் அவளை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டே அருகில் வந்தான் ரஞ்சன்.

"நீதான் கஸ்தூரியா..."

எடுத்த எடுப்பிலேயே 'நீ' என்று அழைக்கிறான். இவனைப் போன்ற அயோக்கியன்கள் பெண்களுக்கு மரியாதை கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பதே தவறு.. பார்க்கும் பார்வையிலேயே துகிலுரிப்பவன் 'நீ' என்று சொல்லாமல்.. 'நீங்கள்' என்றா சொல்வான்?

கஸ்தூரி மயக்கும் புன்முறுவலுடன் பதில் சொன்னாள்.

"ஆமாம். நீங்கள் யார்?"

"இதுதானே வேண்டாம் என்கிறது... என்னை யார்ன்னு தெரியாமலா அந்தப் பார்வை பார்த்தாய்?"

'எந்தப் பார்வை...?' என்று கஸ்தூரி கேட்கவில்லை.. பார்த்தவளுக்குத் தெரியாதா... அது எப்படிப்பட்ட பார்வை என்பது.

"யாரென்று தெரிந்து கொண்டுதான் பார்க்க வேண்டுமா? எனக்குப் பிடித்திருந்தது. பார்த்தேன்..."

ரஞ்சன் ஆச்சர்யப்பட்டுப் போனான். இவளென்ன இப்படித் தேங்காய் உடைத்தது போல் விசயத்தைப் போட்டு உடைக்கிறாள்.

"பிடித்திருந்ததா..? யாரை.. என்னையா?"

"இதிலென்ன இவ்வளவு ஆச்சர்யம் வேண்டியிருக்கிறது..? உங்களைத்தான் சொன்னேன்..."

"சந்தோஷ் வேறு மாதிரி சொல்கிறானே..."

"யாது அந்த சந்தோஷ்."



'அட்ரா சக்கை... இவள் இப்படிக் கேட்டதை மட்டும் சந்தோஷ் நேரில் கேட்டிருக்க வேண்டும்... தேவதாஸ் போல மாறி விடுவான்.'

"சந்தோஷ்... என் அத்தை மகன்.. எங்கள் வீட்டிற்கு விருந்தாளியாய் வந்திருக்கிறான். நேற்றுக் கூட என்னுடன் மாடி பால்கனியில் நின்று கொண்டிருந்தானே..."

"ஓ... அவரா... அவரை எனக்கு அவ்வளவாகத் தெரியாது. நேற்று நான் ஸ்கூல் விட்டு வந்து கொண்டிருந்தேன்... என் புக் கீழே விழுந்து விட்டது. அவர் அதை எடுத்துக் கொடுத்தார். நான் வாங்கிக் கொண்டு போய் விட்டேன். அவ்வளவுதான்..."

"அவ்வளவுதானா?" ரஞ்சனின் குரலில் வியப்பு இருந்தது.

'இதற்காகவா அவ்வளவு உருகிக் கொண்டிருந்தான். மடையன்.'

"எனக்கு ஸ்கூலுக்கு நேரமாகி விட்டது. நான் போய் வரட்டுமா?" குழைவான குரலில் கேட்டாள் கஸ்தூரி.

"அதற்குள்ளாகவா போகிறேன் என்கிறாய்..." ரஞ்சனின் குரலில் ஏமாற்றம் தொனித்தது.

அதை கஸ்தூரி இனம் கண்டு கொண்டாள். தூண்டிலில் மீன் சிக்கி விட்டது... மனதிற்குள் உற்சாகமய் உணர்ந்தாள்.

"ஸ்கூலுக்குப் போக வேண்டுமே..."

"எனக்கு உன்னுடன் பேச வேண்டுமே..."

"ம்ம்.. அதற்கு நான் என்ன செய்வது?"

"இன்றைக்கு சாயந்திரம் சந்திக்கலாமா?"

கஸ்தூரி உண்மையிலேயே தயங்கினாள். இவன் என்ன உடனே இப்படிக் கேட்கிறான்.. அது சரி... இவனைப் போன்ற ஆண்கள் இப்படித்தானே கேட்பார்கள்.

''ஈவினிங்... அக்ஷயா தியேட்டர் ஸ்டாப்பில் இறங்கி வீட்டுக்குப் போவேன்.. அங்கே பேசலாம்.''

''வேண்டாம்.. அங்கே சந்தோஷ் காத்துக் கொண்டிருப் பான்.''

''ஓ...'' கஸ்தூரியின் இதயம் வலித்தது.

அவன் காத்துக் கொண்டிருப்பான். இவளுக்காக தன் வேலைகளை விட்டு விட்டு இந்த ஊரில் ஒரு வாரம் தங்கியிருக்கிறவன். இவளது பார்வையை மான் குட்டி யின் பார்வையென்று வர்ணித்தவன். ஒரு பூவைப் போல் இவளைப் பார்த்தவன்... இவள் பூவல்ல புயல்.. என் பதை அறியாமல் இவளுக்காகக் காத்துக் கொண்டிருப் பான்.

''ம்ம்... வேறு எங்கே சந்திப்பது?'' கஸ்தூரி யோசித் தாள்.

''சினிமா தியேட்டருக்கு வருகிறாயா?''

கஸ்தூரி இப்போது உண்மையிலேயே முகம் சுளித் தாள். அவள் அவனைத் தூண்டில் போட்டுப் பிடிக்க நினைப்பது அவனை அழிப்பதற்காக... அவள் அழிவதற் காக அல்ல...

''மிஸ்டர் ரஞ்சன்... இனியொரு முறை இப்படி என் னிடம் கேட்காதீர்கள். எனக்கு இது பிடிக்காது...'' கடுமை யான முக பாவத்துடன் கூறினாள் கஸ்தூரி.

''நீதானே என்னைப் பிடித்திருக்கிறது என்றாய்...''



''பிடித்திருந்தால்..? நீங்கள் கூப்பிடும் இடங்களுக்கு வந்து விடுவேனா? நான் அப்படிப்பட்ட பெண் அல்ல. மைன்ட் இட்.''

அவளுடைய கடுமை கண்டு ரஞ்சன் பதறிப் போனான். இருந்திருந்து இவனைப் பார்த்து ஒருத்தி பிடித்திருக்கிறது என்று சொல்லி இருக்கிறாள். சும்மா வும் இல்லை... சந்தோஷைப் போன்ற ஒருவனின் அன்பை மறுத்து இவனிடம் முகம் கொடுத்துப் பேசிக் கொண்டிருக்கிறாள். அவள் கோபப்படும்படி விடுவதா?

'ஊஹூம்.. இவள் மூட் அவுட் ஆகக்கூடாது...' அவசரமாய் யோசித்தவன்.

''இதற்கு ஏன் இவ்வளவு கோபப்படுகிறாய் கஸ்தூரி. பழக்கதோசம்.. கேட்டு விட்டேன். நீ வேண்டாமென்று சொன்னால் வற்புறுத்தவா போகிறேன்? நீ எங்கே சந்திக் கலாம் என்று சொல்கிறாயோ.. அங்கே சந்திக்கலாம்.'' என்று கூறினான்.

அவனது பரபரப்பையும் பதற்றத்தையும் கண்டு கஸ்தூரிக்கு திருப்தியாக இருந்தது. இவன் அவளது பிடிக்குள் வந்து விட்டான்... 'ஓர் பார்வைக்கு இவ்வளவு சக்தியா?' அவளுக்கு சிரிப்பு வந்தது. எவ்வளவு பெரிய அயோக்கியனாக இருந்தாலும் உண்மையான அன்புக்கு கட்டுப்பட்டு விடுகிறார்களே... இது ஓர் ஆச்சர்யம்தான்.

''உங்கள் செல் நம்பர் என்ன?'' கஸ்தூரி கேட்டாள்.

''இதோ...'' ரஞ்சன் பரபரப்பாய் கூறினான்.

''நான் மதியத்திற்கு மேல் போன் பண்ணுகிறேன்...''

''கட்டாயம் பண்ணுவாயில்லையா?''

'அதற்காகத்தான் இந்த அன்னவாசலுக்கு வந்திருக் கிறேன்' அவள் பதில் சொல்லாமல் மர்மப் புன்னகையை உதிர்த்தாள்.

# 9

சுண்ணாம்பும் வெண்ணையுமாய்

சும்மா ஏய்ப்பவரும்..

உள்ளனரே இவ்வுலகில்..

உற்றவனே அறியாயோ..?

– நீங்காத என் நினைவுகள் –

வருகைப் பதிவேட்டில் கையொப்பம் போடும்போது பொன்னுரங்கம் லேசாகச் செருமினார். கஸ்தூரி விழி உயர்த்திப் பார்த்தாள்.

''ஸ்கூலுக்கு வரும் வழியில் ரஞ்சனுடன் பேசிக் கொண்டிருந்தீர்கள் போல...?'' கேள்வியாய் பேசினார்.

''ஆமாம் சார்...''

''நான் சொல்கிறேனென்று தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள்.''

''நீங்கள் சொல்வதை தவறாகவும் நினைத்துக் கொள் ளவும் மாட்டேன். அதே சமயம் கேட்டுக் கொள்ளவும் மாட்டேன்...''

''இப்படிச் சொன்னால் எப்படிம்மா?''

''வேறு எப்படிச் சொல்லச் சொல்கிறீர்கள்?''

''நான் சொல்வது உங்கள் நன்மைக்காகம்மா...''

''தீமை நடந்து முடிந்து விட்டது... இனி நான் என் நன்மையை நினைக்கவும் முடியாது. அடுத்தவர்களுக்கு நன்மை செய்யவும் முடியாது.''



''நீங்கள் வாழ வேண்டிய வயதில் இருக்கிறீர்கள்...''

''அப்படியா...?'' உதடுகள் துடிக்க பொன்னுரங் கத்தைப் பார்த்தாள் கஸ்தூரி. கண்கள் கலங்கிய அதே சமயம் அதிலிருந்து அனல் பொறி பறக்கக் கேட்டாள்.

''நான் மட்டுமா வாழ வேண்டிய வயதில் இருக் கிறேன்? என் அண்ணன் செத்தானே... அவனுக்கு வாழ வேண்டிய வயதில்லையா? அவனை நினைத்து நினைத்து மருகி... ஒரு பிடி தூக்க மாத்திரையில் ஒரேயடியாய் ஒருத்தி உறங்கிப் போனாளே... அவளுக்கு வாழ வேண் டிய வயதில்லையா? அவர்கள் வாழாத வாழ்க்கையை நான் அவசியம் வாழ வேண்டுமா?''

''கஸ்தூரி...'' பொன்னுரங்கம் இரக்கத்துடன் அவளைப் பார்த்தார்.

''உன் வேதனை எனக்குப் புரிகிறதம்மா.. செத்தவர் களுக்கு துன்பம் ஒரே நாளில்.. ஆனால் அவர்களை நினைத்து.. நினைத்து வேதனைப் படுகிறவர்களுக்கு துன்பம் வாழ்நாள் முழுவதும்... உன் அண்ணன் நல்ல சாவு செத்திருந்தால் உன் மனம் ஆறியிருக்கும். அநியாய மாய் செத்துப் போனது உன் மனதை வாள் கொண்டு அறுப்பது போல் அறுத்துக் கொண்டுதான் இருக்கும்...''

''புரிகிறது இல்லையா...? புரிந்துமா என் வேலையில் தலையிடுகிறீர்கள்? நான் கடமையாற்ற வந்திருக்கிறேன் சார்.. என் கடமையைச் செய்ய விடுங்கள்.. என் வழியில் குறுக்கே வராதீர்கள்.''

தீப்பிழம்பாய் அறையை விட்டு வெளியேறினாள் கஸ்தூரி... ஓர் அக்கினியின் வார்ப்பு போல... மகாளியின் அவதாரம் போல... நினைத்ததை நடத்தி முடிக்கத் துடிக் கும் அவளின் துடிப்பு பொன்னுரங்கத்திற்குப் புரிந்தது.

ஆனால் அவள் வேரோடு பிடுங்க நினைப்பது சாதாரண விருட்சமில்லை. மாமலை.. என்பதையும் அவர் புரிந்து வைத்திருந்ததால் மனம் கலங்கினார்.

அந்தப் பகையாளி சோணாச்சலம் சாதாரண மனிதனல்ல... ஒருமுறை அவர்களின் பள்ளி முன்னாலேயே பட்டப் பகலில் ஒருவனை வெட்டிச் சாய்த்தார்கள். அதைச் செய்தது சோணாச்சலத்தின் ஆட்கள் தான். இதை ஊரே அறியும்.. போலீஸும் அறியும். ஆனால் சாட்சியில்லை என்று கேஸ் மூடப்பட்டது. சோணாச்சலத்தை எதிர்க்க ஒருவன் நினைத்தாலே அவன் மண்ணோடு மண்ணாகி விடுவான்... அப்படியிருக்கையில் ஒரு பெண்ணால் சோணாச்சலத்தை அழிக்க முடியுமா?

'ஆனால் இவள் சாதாரணப் பெண்ணா?' பொன்னுரங்கத்தின் மனம் எண்ணமிட்டது.

அவளது நடையும்.. நிமிர்வும்.. எதையும் திட்டமிட்டு இறங்கும் மனோபாவமும்... இறங்கிய பின் அதில் நிலைத்து நிற்கும் மனோ திடமும்.. ஜ்வலிக்கும் கண்களும்...அவளா தோற்பாள்?

கஸ்தூரி வேக நடையுடன் அவரது அறையை விட்டு வெளியேறி பள்ளி மைதானத்திற்குள் இறங்கிய போது எதிரே வந்த ரமேஷ் புன்னகைத்தான். அந்தப் புன்னகையின் பின் அவன் எதையோ பேச விரும்பும் விருப்பம் தெரிந்தது.

''குட் மார்னிங் சார்..'' என்று பேச்சை ஆரம்பித்து வைத்தான் கஸ்தூரி.

''குட்மார்னிங் கஸ்தூரி... சற்று முன் நீங்கள் ரஞ்சனுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்'' என்றான் ரமேஷ்.



'இந்த ஊரில்தான் செய்தி எப்படி உடனுக்குடன் பரவி விடுகிறது...' வியந்து கொண்டாள் கஸ்தூரி.

''ஆமாம்.. பேசிக் கொண்டிருந்தேன்...''

அடுத்து எப்படிப் பேச்சைத் தொடர்வது என்று அவன் குழம்பினான்... இவள் ரஞ்சனுடன் பேசிக் கொண்டிருந்ததை இயல்பாய் ஒத்துக் கொள்கிறாளே.

''இல்லை.. வந்து... ரஞ்சனை உங்களுக்குத் தெரியுமா?''

''ம்ம்.. அவர் வீட்டிற்கு எதிர் வீட்டில்தானே நான் குடியிருக்கிறேன். தெரியாமல் போகுமா?''

''இல்லை.. தெருவில் நின்று பேசும் அளவிற்கு பழக்கமா?''

''ஆமாம்...''

'என்னடா இது. இவள் எதற்கெடுத்தாலும் ஆமாம் போடுகிறாளே..' என்று நினைத்துக் கொண்டவன் தாங்க முடியாமல் கேட்டு விட்டான்.

''கஸ்தூரி.. நீங்கள் இந்த ஊருக்கு வந்து மூன்று நாட்கள் தானே ஆகிறது. அதற்குள் ஒருவரை இவர் இப்படித்தான்னு தெரிந்து கொள்ள முடியுமா?''

''நீங்கள் வெறும் மூன்று நாட்கள்தானேன்னு ஈஸியாய் சொல்கிறீர்கள். நான் அதையே எழுபத்தி இரண்டு மணி நேரங்கள்ன்னு பெரிதாய் நினைக்கிறேன். இதுதான் நம் இருவரின் எண்ண வோட்டத்திற்கு இடையேயுள்ள வித்தியாசம். அத்தோடு.. நீங்கள் என்னைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா?''

அவளின் இந்தக் கேள்வியில் திகைத்துப் போனான் ரமேஷ். ஏன் இப்படிக் கேட்கிறாள்.?

''உங்களைத் தெரியாமல் என்ன? நீங்கள் கஸ்தூரி. ாட்டனி டீச்சர்.. இந்த ஊருக்குப் புதுசாக வந்திருக் கிறீர்கள்.''

''ஊஹூம்..?''

அவளது வழக்கமான மர்மப் புன்முறுவலை அவன் மேல் வீசிவிட்டு நகர்ந்தாள் கஸ்தூரி. அவள் செல்வ தையே பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான் ரமேஷ்... மேகவர்ணக் காட்டன் புடவையில் ஒரு தென் றலைப் போல் அவன் மனதைத் தொட்டு விட்டு சென்று கொண்டிருந்தாள் அவள்...

'வெறும் கல் தூணிற்கு சேலை கட்டியிருந்தாலே அந்த ரஞ்சன் சும்மா விட மாட்டான்... இவளோ கொடி போன்றவள். இவளைப் போன்ற அழகியைக் கண்டவன் எப்படி சும்மா விடுவான்? ஊர் விட்டு ஊர் வந்து இந்தப் பெண் ஆபத்தைத் தேடிப் போய் வலிய மாட்டிக் கொள் கிறாளே...' ரமேஷ் பெருமூச்சுடன் நகர கஸ்தூரி மன திற்குள் சொல்லிக் கொண்டாள்.

'ரஞ்சன் யாரென்பதை நீயறிவாய் நண்பனே... நான் யாரென்பதை நீ அறிவாயா? நான் எதற்காக ஊர் விட்டு ஊர் வந்திருக்கிறேன் என்பதை நீ அறிவாயா? அவ னுடன் நான் பழகுவதால் ஆபத்து வரப் போவது எனக்கா.. இல்லை அவனுக்கா.. என்பதையும் நீ அறிவாயா? அறிந்தும் அறியாமல்... புரிந்தும் புரியாமல் ஏன் வீணா கக் கலங்குகிறாய்.. எதை நீ அறிந்திருப்பதாய் நினைக் கிறாயோ.. அது உண்மையில்லை. எதை நீ தெரிந்து வைத்திருப்பதாய் நினைக்கிறாயோ.. அதுவும் உண்மை யில்லை.. உண்மை வேறு.. பொய் தோற்றத்தைப் பார்த்து இப்போதே எந்த ஒரு முடிவிற்கும் வந்து விடாதே...'



''ஹலோ கஸ்தூரி.. காலையிலேயே என்ன பலத்த யோசனை? உங்களைப் போன்ற அழகான பெண்கள் இவ்வளவு அதிகம் யோசிக்கவே கூடாதே...'' எதிரில் வந்த மார்ட்டின் கலகலப்பாய் கூறினான்.

''அதாவது.. பெண்கள் யோசிக்கவே கூடாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். இது என்ன சார் அநியாயம்?''

''இப்போது நீங்கள்தான் எனக்கு அநியாயம் பண்ணு கிறீர்கள்... நான் அழகான பெண்கள் அதிகம் யோசிக்கக் கூடாது என்றில்லையா சொன்னேன். நீங்கள் பிளேட் டையே திருப்பிப் போட்டால் எப்படி?''

''இரண்டும் ஒன்றுதானே...''

''இல்லையே... இரண்டும் வேறு வேறு.''

''எப்படி?''

''நீங்கள் அழகையும்... அதிகத்தையும் விட்டு விட் டீர்கள்.''

''அதனால் என்ன அர்த்தம் மாறிவிட்டது?''

கஸ்தூரி வினவிக் கொண்டிருக்கையில் ரமீலா அங்கு வந்தாள்.

''என்ன கஸ்தூரி... இன்றைக்கு பர்ஸ்ட் பீரியட் ப்ளஸ் டூ கிளாஸ் எடுக்கப் போக வேண்டாமா? இங்கே நின்று கொண்டு சாருடன் வார்த்தை வளர்த்துக் கொண்டிருந் தால் எப்படி?''

''நான் வார்த்தை வளர்க்கவில்லை ரமீலா...''

''அந்த வேலையை மார்ட்டின் சார் பார்த்துக் கொள் வார். ஒரு வார்த்தைக்கு ஒன்பது அர்த்தங்கள் சொல்லி தோரணம் கட்டி விடுவார். பேச்சை முடிக்க விடாமல் வளர்ப்பதில் மன்னன்.. நாம்தான் நேரமானால் கழன்று கொள்ள வேண்டும்.''

''என்ன இது ரமீலா.. புதிதாய் வந்திருக்கும் டீச்சரிடம் இப்படித்தான் என்னுடைய பிரதாபங்களை அவிழ்த்து விட்டு பயமுறுத்துவதா? இது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா?''

''இந்தக் கோடையிலே குற்றால அருவியில் குளிப்பது போல் குளுகுளுவென்று இருக்கிறது. வா கஸ்தூரி.''

மார்ட்டின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கச் சென்று விட்டான்... கஸ்தூரி தன் வகுப்பறைக்கு நகர்ந்தாள்.

மதிய உணவு இடைவேளையில் தன் செல் போனை எடுத்து ரஞ்சனின் நம்பரை அழுத்தினாள். அவன் அப் போது சந்தோஷுடன் பேசிக் கொண்டிருந்தான். செல்லில் புதிய நம்பர் வர இயல்பாகப் பேசினான்.

''ஹலோ...''

''நான் கஸ்தூரி பேசுகிறேன்.''

ரஞ்சனின் முகம் மலர்ந்து விட்டது. எதிரேயிருந்த சந்தோஷை எகத்தாளமாய் பார்த்தபடி.. அறையை விட்டு வெளியே போனான்.

''சொல்லு.. எங்கே சந்திக்கலாம்?''

''இங்கே குகைக்குள் ஓவியங்கள் இருக்கிறதாமே.''

''ஆமாம்.''

''அங்கே மலையடிவாரத்தில் ஒரு பார்க் இருக்கிறதாமே...''

''ம்ம்...''

''அங்கே சந்திக்கலாம்.''

''எத்தனை மணிக்கு உன்னை நான் பிக்அப் பண்ணிக் கொள்ள?''



''பிக்அப் பண்ணிக் கொள்வதா?''

''ஆமாம். என்னுடைய டாடா சுமோவில் போகலாம்.''

'இவனுடன் தனியாக காருக்குள் மாட்டிக் கொள்வதா? கூடாது... எட்ட நின்றே பழக வேண்டும்.'

''இல்லை... யாராவது பார்த்தால் தவறாக நினைப்பார்கள்.''

''அதனால் நமக்கென்ன நஷ்டம்?''

''உங்களுக்கு ஒன்றுமில்லை. எனக்குத்தான் நஷ்டம்.''

''அப்போது நீ எப்படி அங்கு வருவாய்?''

''அது என் கவலை...''

''பார்த்தாயா... நீ வேறு.. நான் வேறுன்னு பிரித்துப் பேசுகிறாயே.''

'நீயும் நானும் வேறு வேறுதான்டா.. மாங்காய் மடையா..' என்று பல்லைக் கடித்துக் கொண்டவள்,

''நாம் ஈவினிங் பேசிக் கொள்ளலாமே..'' என்றாள்.

''நீ சொன்னால் சரிதான். நீ வந்தாலே போதும் எனக்கு...''

அவன் போதையுடன் போனை அணைத்தான். மீண்டும் அறைக்குள் சென்றான். சந்தோஷ் அவனுக்காக காத்திருந்தான்.

''போனில் யார் ரஞ்சன்?''

''என்னுடைய காதலி...''

''வாட்..?'' சந்தோஷ் வியப்பாக அவனைப் பார்த்தான்.

''ஏன்.. எனக்குக் காதலி இருக்கக்கூடாதா?'' ரஞ்சன் ரோஷமாகக் கேட்டான்.

''ஏன்டா.. சூரியன் மேற்கே உதிக்கிறதுன்னு சொல். நம்புகிறேன். பகலில் நிலவு தோன்றுகிறதுன்னு சொல்.

கேட்டுக் கொள்கிறேன். வெள்ளைக் காக்காய் மல் லாக்கப் பறக்குதுன்னு சொல். ஆவென்று வாயைப் பிளந்து கொள்கிறேன். உனக்கெல்லாம் ஒரு காதலி இருக்கிறாள்ன்னு மட்டும் சொல்லாதே... காதலிப்பதற்கு அடிப்படைத் தகுதியே பெண்களை மதிக்க வேண்டும் என்பதுதான். நீ அவர்களை அழிப்பவன்.. உனக்கெல் லாம் ஒரு காதலியா? நெவர்...''

சந்தோஷ் ரஞ்சனின் மனப்போக்கை அறியாமல் அவனை உசுப்பி விட்டுக் கொண்டிருந்தான்.

## 10

வாழ்க்கையென்னும் வானத்திலே – அண்ணன்

வட்டமிட்ட வெந்நிலவே...

இன்று நானமுகப் பார்த்துவிட்டு – அவன்

சென்று நாளாகி விட்டதேடி...

– நீங்காத என் நினைவுகள் –

''சந்தோஷ் அதிகமாய் பேசாதே. சில சமயம் நாம் எதிர்பாராதது கூட நடந்து விடும். அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையோடு பேசுகிறாயே... பெண்களின் மனப்போக்கை யாராலும் கணிக்க முடியாது. அவர்கள் யாரை விரும்புகிறார்கள்ன்னு கண்டுபிடிக்கவும் முடியாது.''

சந்தோஷ் இன்னும் வியப்பானான்.

''டேய்... இப்போது நீதான் ஓவர் கான்பிடன்ஸோடு பேசுகிறாய். என்ன மாயம் நிகழ்ந்து விட்டது?''



''மாயம்தான் சந்தோஷ்.''

''அதை என்னிடம் சொல்லேன்.''

''சொல்கிறேன் சந்தோஷ்... உன்னிடம் அதைச் சொல்லத்தானே நானும் காத்திருக்கிறேன். அதை உன் னிடம் சொல்லும் நாள் சீக்கிரம் வரத்தான் போகிறது. அன்றைக்கு இருக்கிறதுடா மச்சான் உனக்கு வான வேடிக்கை... அன்றைக்கு நான் கொளுத்திப் போடப் போகிற அணுகுண்டு வெடிக்கும்போது அதன் சத்தத்தைக் கேட்டே நீ அரண்டு போவாய்...''

''நீ விடும் வானவேடிக்கையைப் பார்த்து நான் அரண்டு போவேனா? ஹா... ஹா... டேய் ரஞ்சன் ஜோக்கடிக்காதே... எனக்குச் சிரிப்பாய் வருகிறது...''

''சிரி சந்தோஷ்... நன்றாகச் சிரி... இப்போதே சிரித்து முடித்துக் கொள். அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கை எனக்கு இருக்கிறதா இல்லை உனக்கு இருக்கிறதா என்று ஒரு நாள் தெரியவரும்... அந்த நாளில் உன் தன்னம் பிக்கை நொறுங்கிப் போய் நீ நிற்க வேண்டும். அதை என் மனம் குளிர நான் பார்க்க வேண்டும்...''

சந்தோஷ் இதற்கும் சிரித்தான்.

''டேய் உனக்குக் காதல் வந்திருக்கிறதோ இல் லையோ.. வெட்டி வீரம் நிறைய வந்திருக்கிறது. பன்ச் டயலாக்கை அள்ளி விடுகிறாயே.. நீ மட்டும் ஆக்ஷன் ஹீரோக்களுக்கு டயலாக் எழுதப் போனேன்னு வை. அவங்க படமெல்லாம் பிச்சுக்கிட்டு ஓடும்...''

''ஓடும் ஓடும்.. ஒரு நாள் ஓடத்தானே போகிறது...''

''புரியாமல் பேச எங்கு கற்றுக் கொண்டாயோ.. எதுவோ காதல் என்றாயே... அது செய்த மாயமா? அது

சரி... உனக்குக் காதல் என்றால் என்னவென்று தெரியுமா?''

''எனக்குத் தெரிந்து ஆகப் போவதென்ன? உனக்கில்லை தெரிய வேண்டும்? ஓர் நாள் அதை நான் தெரிய வைப்பேன்.''

''என்னடா இது. அறிஞர் அண்ணாவின் பேமஸ் கதையான 'ஓர் இரவு' போல... இன்றைக்கு எதற்கெடுத்தாலும் நீ 'ஓர் நாள் ஓர் நாள்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறாய். அந்த ஓர் நாள் வரும்போது வரட்டும். நீ இப்போது சாப்பிட வா. பசி வயிற்றைக் கிள்ளுகிறது... ஆமாம். உன் நெஞ்சத்தை இந்த அளவுக்கு கிள்ளிய பெண் குல திலகம் யாருடா?''

''ஏன் கேட்கிறாய்?''

''இல்லை.. உன்னைப் போய் காதலித்திருக்கிறாளே.. அவளின் அழகு திருமுகத்தை ஓர் முறை பார்க்க வேண்டுமென்ற ஆசைதான். வேறு என்ன?... ஹா... ஹா...''

ரஞ்சனின் முகம் கருத்தது.. இவன் எவ்வளவு மட்டமாக ரஞ்சனை எடை போட்டு வைத்திருக்கிறான்.

''ஓர் நாள் அந்த அழகு திருமுகத்தை உனக்குக் காட்டத்தான் போகிறேன். அன்றைக்கு நீ நெஞ்சைப் பிடித்துக் கொண்டு நிற்கும் காட்சியைக் காணத்தானே நானும் காத்திருக்கிறேன்.''

''திரும்பவும் 'ஓர் நாளா..' வாடா வா.''

அவர்கள் சாப்பிடும் போது வழக்கத்திற்கு மாறாக ரஞ்சன் சிந்தனையுடன் இருக்க சோணாச்சலம் புருவம் உயர்த்தினார்.

''ரஞ்சன்.. ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?''



''ஒன்றுமில்லைப்பா.. நானும்.. சந்தோஷும் ஆரம்பிக்கப் போகும் கம்பெனியைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.''

''என்னடா ஆச்சரியம் இது சென்னைக்குப் போக மாட்டேனென்று பிடிவாதம் பிடித்தாய்.. இன்றைக்கு அதில் ஆர்வம் காட்டுகிறாய்.''

''அவன் இந்த ஆச்சர்யத்தை மட்டுமல்ல.. இன்னும் நிறைய ஆச்சரியங்களைக் கொடுக்கிறான் மாமா..'' சந்தோஷ் ரஞ்சனைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அதைக் கண்ட சோணாச்சலத்தின் நெற்றியில் கோடுகள் விழுந்தன.

''என்ன அது..?''

சந்தோஷ்.. 'செல்லவா..?' என்று பார்வையால் ஜாடை செய்தான். ரஞ்சன் வேண்டாமென்ற பாவனையில் தலையை அசைத்தான். 'பிழைத்துப் போ...' என்று ஒற்றைக் கையால் ஆசிர்வதித்தவன்.

''வேறு என்ன மாமா? எல்லாம் கம்பெனியைப் பற்றித்தான். எது.. எப்படி.. எதனால்ன்னு கேள்வி மேல் கேள்வி கேட்கிறான். நானே அசந்து போய் நிற்கிறேன்னா பாருங்களேன்.'' என்று கூறினான்.

''நிஜமாகவா சந்தோஷ்.''

''நிஜம்தான் மாமா...''

''என்னவோ... இவன் உருப்படுவது உன் கையில்தான் இருக்கிறது. நீ ஒரு வாரம் தங்குவதிலேயே என் பிள்ளையை இந்த அளவிற்கு மாற்றி விட்டாயே... இன்னும் உன்னுடன் அவன் வருடக் கணக்கில் பிஸினெஸ் செய்தால் அவன் எங்கோ போய் விடுவான்...''

எந்த நேரத்தில் சோணாச்சலம் இந்த வார்த்தைகளைச் சொன்னாரோ.. அதே நேரத்தில் ரஞ்சன் எங்கே போக வேண்டும்... அவனை எப்படி வழியனுப்பி வைக்க வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டு கஸ்தூரி ஆசிரியர்களின் ஓய்வு அறையில் அமர்ந்திருந்தாள்.

மாலையானதும் சந்தோஷ் புத்துணர்வுடன் காரில் ஏறப் போனான். அதே புத்துணர்வுடன் ரஞ்சன் தன் டாடா சுமோவில் ஏறப் போனான். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்ன சந்தோஷ்.. இந்த அன்னவாசலில் உனக்கு யாரைத் தெரியும்? வெளியே கிளம்பி விட்டாயே.''

''எனக்கு யாரைத் தெரியும்... நான் யாரைப் பார்க்கப் போகிறேன்னு உனக்குத் தெரியாதா?''

''தெரியாமல்தானே கேட்கிறேன்?''

''என் காதலியைப் பார்க்கப் போகிறேன்...''

''கட்டாயம் பார்த்து விடுவாயில்லையா...''

''ஏன்டா.. உனக்கு என்ன ஆச்சு? அவள் ஸ்கூல் விட்டு வருகிற நேரம்டா.. நான் போய் காத்திருக்க வேண்டும்...''

''எவ்வளவு நேரம் காத்திருப்பாய்... இரவு முழுவதுமா?''

''அதை உன் போன்ற ஆட்கள் செய்வார்கள். நான் பத்தே நிமிடத்தில் அவளைப் பார்த்துப் பேசி.. என் காதலைச் சொல்லி விடுவேன்.''

''இன்னும் உன் காதலை நீ சொல்லவில்லையா.. கிழிந்தது போ...''

''அதெல்லாம் எதுவும் கிழியாது... நீ உன் காதல் கிழியாமல் பார்த்துக் கொள். என் காதல் இரும்புக்கோட்டை... உன் காதல் தான் நைந்த துணி...''



ரஞ்சன் சந்தோஷை

**'உனது மலர் கொடியிலே**

**எனது மலர் மடியிலே**

**உனது நிலா விண்ணிலே**

**எனது நிலா கண்ணிலே...'**

என்பது போல் ஓர் பரிதாபப் பார்வை பார்த்துக் கொண்டு தன் வண்டியில் ஏறினான்.

''சந்தோஷ்.. நான் ஒரு ஜோசியம் சொல்லட்டுமா?''

''என்ன...?''

''இன்று நீ அவளைப் பார்க்க முடியாது... பார்க்க மாட்டாய்...''

சந்தோஷின் பதிலை எதிர்பாராமல் ரஞ்சன் தன் வண்டியைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

'இன்றைக்கு இவன் நிறைய உளருகிறான்..' என்ற நினைவுடன் சந்தோஷ் காரை எடுத்துக்கொண்டு போய்... முதல் நாள் அவனும் கஸ்தூரியும் நின்று பேசிக் கொண்டிருந்த மகிழம்பூ மரத்தின் அடியினில் நிறுத்தி னான்.

டேப்பில் பாடல்களை மெல்லிய சத்தத்தில் ஒலிக்க விட்டு விட்டு... சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

''என்னைக் காணவில்லையே நேற்றோடு...

எங்கும் தேடிப் பார்க்கிறேன் காற்றோடு...

உயிர் ஓடிப்போனதே உன்னோடு...

அன்பே....

நான் நிழலில்லாதவன் தெரியாதா...

என் நிழலும் நீயென்று புரியாதா...''

பாடலின் அர்த்தத்தில் மனம் உருக.. கஸ்தூரிக்காக அவன் காத்துக் கொண்டிருந்தபோது... கஸ்தூரி ஓர் ஆட்டோவில் ஏறி ரஞ்சனைத் தேடிப் போய்க் கொண் டிருந்தாள்.

சித்தன்ன வாசல் சிற்பக் கோவிலின் அருமை தெரி யாத ரஞ்சன் அந்தப் பூங்காவில் நின்று கொண்டிருந் தான். அவன் மனத்தில் அலையடித்துக் கொண்டிருந்தது. சந்தோஷ் அவனை ஏளனமாகப் பேசிய வார்த்தைகள் அவன் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன.

'உனக்கெல்லாம் ஓர் காதலியா..? ஹா.. ஹா..'

சந்தோஷின் சிரிப்பொலி அவன் காதுகளில் கேட்டது.. ரஞ்சன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

'இருக்கிறாள் சந்தோஷ். எனக்கும் ஒரு காதலி இருக் கிறாள். அவள் யார் தெரியுமா? நீ காதலிப்பவள். உன்னை விட்டு என்னைக் காதலிக்கிறாள். நீ இப்போது யாருக் காக காத்துக் கொண்டிருக்கிறாயோ.. அவள் உன்னைப் பார்க்க விரும்பாமல்.. என்னைப் பார்க்க என்னைத் தேடி வந்து கொண்டிருக்கிறாள். எனக்காக... என்னைப் பார்ப்ப தற்காக... என்னைக் காதலிப்பதற்காக.. ஒரு பெண் இருக்கிறாள். அவள் நீ விரும்பும் பெண்...'

ரஞ்சன் கஸ்தூரியை சந்தோஷ் காதலித்த ஒரே கார ணத்திற்காக... வெறி பிடித்தது போல் காதலிக்க ஆரம் பித்தான்.

'இதோ பார்... இவள் தான் என் காதலி...' என்று சந் தோஷிடம் அவளைக் காட்டி வெற்றிப் பறை கொட்டும் நாள் சீக்கிரம் வரவேண்டும் என்று துடித்தான்.



பூங்காவின் வாசலில் டாடா சுமோவின் மேல் சாய்ந்து கொண்டிருந்த ரஞ்சனைப் பார்த்தவாறு ஆட்டோவி லிருந்து இறங்கினாள் கஸ்தூரி.

''வந்து ரொம்ப நேரமாகி விட்டதா?'' என்று அவனைப் பார்த்து வினவினாள்.

அவள் கேட்ட விதம் ரஞ்சனுக்குப் பிடித்துப் போய் விட்டது. அவளையே வைத்த கண் வாங்காமல் ஆர்வ மாய் பார்த்தபடி,

''நேரமானால் என்ன?''

''உங்களைக் காக்க வைத்து விட்டேனா?''

''காத்திருந்தால்தான் என்ன? காதலில் காத்திருப் பதும் சுகம்தானே...''

'காதலா... இவனுக்கா.. என்மீதா... அதுவும் காதலில் காத்திருப்பதைப் பற்றி இவன் கூறுகிறானே... வேதாளம் வேதம் ஓதுகிறது. பெண்களை காமுறுபவன் காதலைப் பற்றிக் கவிதையாய் பேசுகிறான். இவன் இதைச் சொல்ல நான் கேட்டுக் கொண்டிருக்க நேருவதும்.. என் நேரம் தான்...'

கஸ்தூரியின் மௌனத்தை 'நாணம்' என்று தவறாகப் பொருள் கற்பித்துக் கொண்டான் ரஞ்சன்.

''என்னிடம் என்ன வெட்கம் கஸ்தூரி...'' என்று இத மாக வினவினான்.

'கடவுளே...' என்று கடவுளை துணைக்கு அழைத்த கஸ்தூரி...

''உள்ளே போய் பேசலாமே...'' என்று கூறியவாறு நடக்க ஆரம்பித்து விட்டாள்.

''அதுவும் சரிதான்.. இங்கே நின்று பேசிக் கொண் டிருந்தால் வருகிறவர்கள்.. போகிறவர்கள் எல்லாம் ஒரு

மாதிரி பார்ப்பார்கள்... ஏற்கனவே நீ வெட்கப்பட்டுக் கொண்டிருக்கிறாய்.''

எத்தனை முறைதான் கடவுளை அழைப்பது... அவருக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும். விட்டு விடலாமென்று முடிவு பண்ணிய கஸ்தூரி... கடவுளை அழைப்பதை விட்டு.. அங்கே இருந்த சிமெண்ட் பெஞ்சில் காலார அமர்ந்து கொண்டாள். அவளருகே நெருக்கமாய் ரஞ்சன் அமர... அவசரமாய் விலகி அமர்ந்தாள் கஸ்தூரி.

''ஏன் கஸ்தூரி... நான் தானே...'' அவன் உரிமையாய் கேட்டான்.

''ப்ளீஸ்...'' அவள் முகம் கோபத்தில் சிவக்க பதில் கூறினாள்.

அவளது கோபச் சிவப்பை... நாணச் சிவப்பு என்று நினைத்துக் கொண்டு அவன் கர்வமாகச் சிரித்துக் கொண்டான்.

'சந்தோஷ்... உன் காதலி... என்னைப் பார்த்து முகம் சிவக்கிறாள். என் முகம் பார்த்துப் பேச அவ்வளவு வெட்கப்படுகிறாள். இந்தக் கண் கொள்ளாக் காட்சியை நீ காணாமல் போய் விட்டாயே...' அவனது ஆண்மை வெற்றிப் பெருமிதம் கொண்டது.

## 11

நன்னந் தனிமையிலே – நெஞ்சம்
தாளாத துயருடனே...
அன்னன் முகம் தேடுகின்றேன் – இறைவா
ஆறுதலைத் தாராயோ...
– நீங்காத என் நினைவுகள் –



ரஞ்சன் கஸ்தூரியைக் கூர்ந்து கவனித்தான். அவளது உயரமும்.. நிறமும்.. அழகான முகத்தோற்றமும் இந்த அன்னவாசலில் அவன் பார்க்கக் கிடைக்காதவை.

'எங்கிருந்து வந்தாள் இவள்..?' என்ற எண்ணம் தோன்ற அவன் ''உன் சொந்த ஊர் எது கஸ்தூரி?'' என்று கேட்டான்.

''காரைக்குடி...''

''அத்தையும்... மாமாவும் என்ன செய்கிறாங்க...?''

''அத்தையும்... மாமாவுமா?''

கஸ்தூரி குழப்பத்துடன் அவனை நோக்கினாள். அவனோ கண்களைச் சிமிட்டிச் சிரித்தான்.

''உன் அம்மாவும்.. அப்பாவும்.. என் அத்தையும்... மாமாவும்தான்.''

'ஓஹோ... இவன் அப்படிப் போகிறானா?'

''ஒன்றும் செய்யவில்லை. வீட்டில் இருக்கிறார்கள். அப்பாவுக்கு காரைக்குடியில் வியாபாரம் உண்டு. அதை பார்ட்னரின் பொறுப்பில் விட்டு மாதம் இவ்வளவு கொடுத்துவிடு என்று சொல்லிவிட்டு என்னுடன் வந்து விட்டார்.''

''அதை ஏன் இவ்வளவு கவலையாகச் சொல்கிறாய்? இந்த கங்கு கரையில்லாத சொத்தெல்லாம் எனக்குத் தான்.. என் மாமனார்.. அவருடைய பெண்ணைக் கொடுத்தால் மட்டும் போதும். காலம் பூராவும் காலை ஆட்டிக் கொண்டு சாப்பிடலாம்.''

'உன் பாவப்பட்ட சொத்து யாருக்கு வேண்டும்...' என்ற எரிச்சலுடன்,

''உங்கள் பணத்திற்காக நான் உங்களுடன் பழகவில்லை ரஞ்சன். என் நோக்கமே வேறு...'' என்று கூறினாள் கஸ்தூரி.

ரஞ்சன் அவள் முகத்தைக் காதலுடன் நோக்கினான்.

'இவள் எனக்காக என்னைக் காதலிக்கிறாள்...'

''கஸ்தூரி.. என்னை அந்த அளவுக்கு உனக்குப் பிடித்திருக்கிறதா?''

''ஆமாம்...''

''என்னிடம் உன்னைக் கவரும்படி அப்படி என்ன இருக்கிறது கஸ்தூரி... நீயோ பணத்தைப் பெரிதாக நினைக்காதவள்...''

'உன் உயிர் இருக்கிறது...' என்று மனதிற்குள் கூறிக் கொண்ட கஸ்தூரி...

''எத்தனையோ இருக்கிறது..'' என்று சொன்னாள்.

''கஸ்தூரி...'' என்று உருகி விட்டான் ரஞ்சன்.

அவன் முகத்தைப் பார்க்க சகிக்காமல் கஸ்தூரி முகம் திருப்பிக் கொண்டாள். மீண்டும் அதை வெட்கமென்று பொருள் கொண்ட ரஞ்சன் உற்சாகமாய் விசில் அடித்து வைத்தான்.

''இது என்ன பழக்கம்?''

''எது?''

''விசிலடிப்பது...''

''உனக்குப் பிடிக்காதா?''

''பிடிக்காது.''

''உனக்குப் பிடிக்காததை இனிமேல் செய்ய மாட்டேன்.''



''நிஜமாகவா?''

''நிஜமாத்தான்.''

''ஏன்...?''

''இது என்ன கேள்வி கஸ்தூரி. நான் உன்னை காதலிக்கிறேன்.''

'ஹா.. கடைசியில் இவன் இதைச் சொல்லியே விட்டான். தூண்டிலில் மீன் சிக்கி விட்டது. இனி நினைத்ததை செயல்படுத்தி விடலாம். காதல் கதாநாயகி வேடத்தை கவனமாகத் தொடர வேண்டும்...' மனதிற்குள் முடிவெடுத்த கஸ்தூரி.. குழைவான குரலில் பேச ஆரம்பித்தாள்.

''நான் உங்கள் அளவுக்கு வசதியில்லாதவள் ரஞ்சன்...''

''நீ என் வசதிக்காக என்னை விரும்பவில்லையெனும் போது நான் மட்டும் வசதியை நினைப்பேனா கஸ்தூரி...''

'நீ விரும்பினாலும்.. உன்னைப் போன்ற பொறுக்கியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள போக்கிடம் இல்லாதவள் கூட விரும்ப மாட்டாள்..' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட கஸ்தூரி.. மையலுடன் புன்னகைத்தாள்.

''நீங்கள் ரொம்ப ஹேண்ட்சம் ரஞ்சன்.. உங்கள் அழகுக்கு நான் இணை ஆவேனா...''

அவனுடைய சிவந்த விழிகளையும்.. தாடி மண்டிய முகத்தையும் ஓர் வினாடிக்கு மேல் பார்க்க முடியாமல் விழிகளை கஸ்தூரி தாழ்த்திக் கொண்டாள்.

''என் முகத்தைப் பார்க்க அவ்வளவு வெட்கமா கஸ்தூரி.''

'கொடுமையே' என்று விதியை நொந்து கொண்டு தலையை மேலும் கீழுமாய் ஆட்டி வைத்தாள் கஸ்தூரி.

''உன்னைப் போன்ற அழகி கிடைக்க நான்தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். கஸ்தூரி.''

''இருந்தாலும்.. இன்று காலையில்தான் பார்த்துக் கொண்டோம்... அதற்குள்...''

''ஏன்.. முந்தா நாள் சாயங்காலம்.. நேற்று காலை.. இதையெல்லாம் மறந்து விட்டாயா?.. நீ பார்த்த பார்வை... அப்படியே என்னைப் பந்தாடி விட்டதே...''

''இருந்தாலும்.. இவ்வளவு அவசரம் வேண்டாம் ரஞ்சன்.''

''ஆனால் நீ எனக்கு வேண்டும் கஸ்தூரி...''

அவனது பார்வையில் உடல் கூசிப் போனாள் கஸ்தூரி...

'அதுதானே பார்த்தேன்... வேங்கை என்னடா.. வெள்ளாடு வேடம் போடுகிறது என்று... உன் புத்தி உன்னை விட்டுப் போகுமா?'

''நான் எங்கே போகப் போகிறேன் ரஞ்சன்.. உங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில்தானே இருக்கிறேன்.''

''என் வீட்டிற்கு எப்போது வருவாய்?''

''வரும்போது வருவேன்.''

''அதுதான் எப்போது..?''

''நான் குறிக்க வேண்டாமா?''

இரு பொருள்பட அவள் கூறினாள். அதில் ஒரு பொருளை மட்டும் புரிந்து கொண்ட ரஞ்சன்.

''நான் என் அப்பாவிடம் இன்றைக்கே பேசுகிறேன்...'' என்றான்.

''வேண்டாம்.. வேண்டாம்..'' அவசரமாய் தடுத்தாள் கஸ்தூரி.



''ஏன்..?''

'ஏனா.. உன்னைவிட உன் அப்பன் கோடி மடங்கு புத்திசாலி... அவனுக்கு உடம்பெல்லாம் மூளை... நீ என்னைக் காதலிக்கிறேனென்று சொல்லிய அடுத்த வினாடியே என்னைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விடுவான்... நான் யாரென்பதையும் கண்டு பிடித்து விடுவான்... அதன்பின் என் அண்ணனை அனுப்பிய இடத்திற்கே என்னையும் அனுப்பி வைத்து விடுவான். அண்ணனிடம் போவதில் தயக்கமில்லை. ஆனால் பகை முடிக்காமல் போவதா?'

மனதின் எண்ணங்களை மறைத்த வண்ணம் பேசினாள் கஸ்தூரி.

''என்ன ரஞ்சன் இது? எதற்கெடுத்தாலும் வேகம் தானா? உங்கள் அப்பாவிடம் நீங்கள் விசயத்தை சொன்ன அடுத்த நிமிடமே என் வீட்டிற்கு பெண் கேட்டு வருவார்... கல்யாணத்தை பேசி முடிப்பார்...''

''காலா காலத்தில் கல்யாணம் நடந்தால் நல்லதுதானே கஸ்தூரி.''

''யாருக்கு நல்லது..?'' என்று பல்லைக் கடித்த கஸ்தூரி.

''அதன் பின் உங்களைப் பார்த்துப் பேச என் வீட்டில் விட மாட்டார்கள். எல்லாம் கல்யாணத்திற்கு அப்புறம் தான் என்று சொல்லி விடுவார்கள்...'' என்றாள்.

''அதனால் என்ன... நான் சொன்னால் என் அப்பா நாளைக்குக் காலையிலேயே நம் கல்யாணத்தை நடத்தி வைப்பார்...''

'கல்யாணத்திற்கு பெண் கிடைக்காமல் அலைகிறீர்கள் போல...'

''எப்படி முடியும் ரஞ்சன். இன்றைக்கு தமிழ் மாத தேதி என்ன ஆனி முப்பத்தி ஒன்று...''

''அதற்கென்ன...?''

''விடிந்தால் ஆடி பிறந்து விடும்...''

''பிறக்கட்டுமே...''

''ஆடியில் போய் யாராவது கல்யாணம் செய்து கொள்வார்களா?''

''நாங்கள்.. அதையெல்லாம் பார்க்க மாட்டோம் கஸ்தூரி.''

'உங்களுக்குத்தான் பெண் கிடைத்தால் போதுமே..'

''என் அப்பாவும் அம்மாவும் பார்ப்பார்கள்...''

''அதற்காக...''

''இன்னும் ஒரு மாதம் நாம் காதலிப்போமே.. அதன் பின் உங்கள் அப்பாவிடம் சொல்லிவிட்டுக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமே...''

ரஞ்சன் கள் குடித்த நரி போல் போதையுடன் அவளைப் பார்த்து ஈயென்று சிரித்தான்.. அவனது சகிக்க மாட்டாத அந்தச் சிரிப்பைக் காணச் சகிக்க முடியாதவளாய் கஸ்தூரி பரிதாபமாய் ஓர் பார்வை பார்த்தாள்... அவன் அதை ஏக்கப் பார்வையென்று தப்பர்த்தம் கண்டு பிடித்துக் கொண்டு பரவசப்பட்டுப் போனான்.

''எனக்கும் உன்னைப் போல் ஏக்கம் இருக்கத்தான் செய்கிறது. அதனால் என்ன... கல்யாணத்திற்கு முன் ஆசை தீர காதலித்து விட்டு அதன் பின் நிதானமாய் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமே.''



'ஆசை தீரக் காதலிப்பதா... உன் ஆசையைத் தீர்ப்பதற்கு வேறு ஆளைப்பார்... நான் தீர்க்க நினைக்கும் கணக்கே வேறு...'

''போகலாமா...'' கஸ்தூரி எழுந்து கொண்டாள்.

''அதற்குள்ளாகவா...'' ரஞ்சன் ஏக்கத்துடன் அவளது கரம் பற்றினான்.

''ப்ளீஸ்...'' அவள் கையை உருவிக் கொண்டாள்.

''கையைக் கூடத் தொடக்கூடாதா...''

''ரஞ்சன்.. எனக்கென்று சில பழக்கங்கள் இருக்கின்றன...''

ரஞ்சன் அவளைத் தலை முதல் கால் வரை பார்த்தான். மிக மிகக் கண்ணியமான தோற்றம். இப்படிப்பட்ட பெண் தன்னைப் போய் விரும்புகிறாளா என்று அவனுக்கு சந்தேகம் வந்து விட்டது.

''கஸ்தூரி.. நான் ஒன்று கேட்பேன். நீ கோபித்துக் கொள்ளக்கூடாது.''

'என் கோபத்தைக் கண்டு இவனுக்குப் பயமா?' கஸ்தூரி சிரித்தாள்.

''என்ன பீடிகையெல்லாம் பலமாக இருக்கிறதே.''

''இல்லை.. நீ கோபித்துக் கொள்வாயோன்னு...''

''உங்களிடம் போய் நான் கோபித்துக் கொள்வேனா..?''

''நீ நிஜமாகவே என்னைக் காதலிக்கிறாயா?''

''இல்லை.. பொய்யாய் காதலிக்கிறேன்..'' அவள் விளையாட்டாய் சொல்வது போல் சிணுங்கலான குரலில் உண்மையைக் கூறினாள்.

''இன்னும் என்னால் நம்ப முடியவில்லை...''

"எனக்கும்தான் நம்ப முடியவில்லை."

"எதை...?"

"நீங்கள் என் காதலை ஏற்றுக் கொண்டதை..."

ரஞ்சன் ஐஸ் கட்டி மழையில் நனைந்தான். அவளுடைய முகத்தை பார்த்துக் கொண்டே இருந்தால் போதுமென்று தோன்ற.. முகத்தைப் பார்த்துக் கொண்டே அமர்ந்து இருந்தான்.

இமை கொட்டாமல் கண் விரிய பார்த்துக் கொண்டிருந்தவனின் முன்னால் லேசாக சொடுக்குப் போட்டாள் கஸ்தூரி.

"ஹலோ.. மிஸ்டர் மன்மதன் சார்.. இருட்டப் போகிறது.. நான் கிளம்ப வேண்டும்.. போய் வரட்டுமா?"

"என் வண்டியிலேயே வரக்கூடாதா?"

"எனக்கென்று சில கொள்கைகள் வைத்திருக்கிறேனே.."

"எப்போதுதான் என்னோடு காரில் வருவாய்?"

"நம் கல்யாணத்திற்குப் பிறகு... ஆமாம். கேட்க வேண்டுமென்று நினைத்தேன். உங்கள் வீட்டில்தான் ஒன்றிற்குப் பத்து கார்கள் நிற்கின்றதே.. அப்புறமேன் இந்த டாடா சுமோவிலேயே சுற்றுகிறீர்கள்?"

"அதுவா கஸ்தூரி.. பத்துப் பனிரெண்டு அடியாட்களுடன் டாடா சுமோவில் போய் பந்தாவாய் இறங்கியே பழக்கமாகி விட்டது. திடீரென்று மாற்றிக்க முடியவில்லை..."

ரஞ்சன் அசடு வழிந்தான். 'எவ்வளவு இலகுவாக ரௌடி வாழ்க்கையைப் பேசுகிறான்' என்று நினைத்துக் கொண்டாள் கஸ்தூரி... அவளது மௌனத்தை வேறு விதமாக அர்த்தம் கொண்டான் ரஞ்சன்.



# 12

தொழிலாளர் தினம் வரும் மே மாதம் - நீ
தொய்ந்து சரிந்ததும் அந்த மே மாதம்
விடுமுறை நாட்கள் வரும் மே மாதம் - நீ
வீழ்ந்து கிடந்ததும் அந்த மே மாதம்
- தீராத என் நினைவுகள் -

"ஏன் கஸ்தூரி.. நான் டாடா சுமோவில் வருவது உனக்குப் பிடிக்கவில்லையா? முகம் உம்மென்று ஆகிவிட்டதே.." ரஞ்சன் மென்மையாய் வினவினான்.

"டாடா சுமோ அருமையான வண்டி.. ஆனால் அதை யூஸ் பண்ணுவதற்கு நீங்கள் சொல்லும் காரணம்தான் பிடிக்கவில்லை."

"காரில் மற்ற ஆட்களை ஏற்ற முடியாது கஸ்தூரி..."

"நல்லவேளை... நாம் மீட் பண்ணும்போது பத்து அடியாட்களைக் கூட்டிக்கொண்டு வந்து நம்மைச் சுற்றி நிற்க வைத்துக் கொண்டு நீங்கள் காதல் பேசவில்லை..."

கஸ்தூரி அவனைக் காதலிப்பதாய் நடிப்பதற்குக் காரணமே அவனைத் தனிமைப் படுத்திச் சந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான்... அவளது யுக்தி பலித்தது.

"நீ வேற... நான் கிளம்பும் போது எப்போதும் போல பத்துப் பேர் என்னுடன் கிளம்பத்தான் செய்தார்கள். எல்லோரையும் பஸ் ஸ்டாண்ட் பக்கம் இறக்கி விட்டு விட்டு நான் மட்டும் எஸ்கேப் ஆகி வந்தேன்."

"இனி இதை அவாய்ட் பண்ணுங்கள் ரஞ்சன். நீங்கள் என்னைப் பார்க்க வருவதாக இருந்தால் காரில் தனியாகத்தான் வர வேண்டும்.. திடீரென்று உங்களோடு ஒரு டிரைவ் போக வேண்டுமென்று எனக்கு ஆசை வந்தால்.. என்ன செய்வீர்கள்?"

கஸ்தூரி சாதுர்யமாகப் பேசினாள். அவளது அனுமானம் சரியாக இருந்தது... ரஞ்சன் பரபரத்தான்...

"அடடா... இன்றைக்கே காரில் வராமல் போய்விட்டேனே..."

"மண்டையில் ஏதும் மசாலா இருந்திருந்தால் இப்படிச் செய்திருக்க மாட்டீர்கள்..."

ரஞ்சனின் முகம் வதங்கிய கத்தரிக்காய் போல் ஆனது. இனி அவன் ஒரு போதும் கஸ்தூரியைச் சந்திக்க வரும்போது ஆள் துணையோடு வர மாட்டான்.. கஸ்தூரிக்கு அதுதானே வேண்டும்.

கஸ்தூரி ஆட்டோ பிடித்து வீட்டுக்குச் செல்ல... ரஞ்சன் தன் டாடா சுமோவில் பின் தொடர்ந்தான். அக்சயா தியேட்டர் தாண்டி மகிழம்பூ மரத்தை ஆட்டோ நெருங்கியபோது கஸ்தூரி துணுக்குற்றாள்.

'அது... அது... சந்தோஷுடைய கார் அல்லவா...?'

அவளது யூகத்தை உறுதிப்படுத்துவதுபோல் சந்தோஷ் கார் மீது சாய்ந்து கொண்டு... ஆட்டோ வரும் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கஸ்தூரி உள்ளே நகர்ந்து அமர்ந்து இருளில் தன் முகத்தை மறைத்துக் கொண்டாள். சேலைத் தலைப்பை வேறு இழுத்துப் போர்த்திக் கொண்டாள். முகம் தெரியாத இருள் போர்வைக்குள் அவள் பதுங்கியிருக்க... ஆட்டோவின் ஒளி வெள்ளத்தில் சந்தோஷ் தெரிந்தான்.



அதே... கம்பீரமான ஆண்மை ததும்பும் தோற்றம். இவளுக்காகத்தான் அவன் காத்துக் கொண்டிருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது.. கஸ்தூரியின் மனம் வலித்தது.

'ஏன் எனக்காகக் காத்திருக்கிறாய்...? நான் இந்த ஊருக்கு வந்தது உன்னைப் பார்ப்பதற்காக இல்லை. என் உடன் பிறந்தவனின் ஆத்மாவிற்கு சாந்தி அளிப்பதற்காக.. நான் போகும் பாதையில் கற்களும்.. முட்களும் நிறைந்திருக்க.. நீ ஏன் அதில் மலர் தூவப் பார்க்கிறாய்...? நான் வன்மையுடன் வந்திருக்கிறேன். எனக்கு மென்மையை பரிச்சயம் செய்து வைக்க நீ முனையாதே...'

அவனைத் தாண்டி ஆட்டோ விரைந்தது. அதில் கஸ்தூரி போய்க் கொண்டிருக்கிறாள் என்பதை அறியாதவனாய் அவன் காத்துக் கொண்டிருந்தான்.

ரஞ்சனின் டாடா சுமோவின் ஒளி வெளிச்ச வட்டத்தில் சந்தோஷ் விழுக.. அவன் திருப்தியாய் வாய் விட்டுச் சிரித்தான்.

'என்னடா மச்சான்.. கஸ்தூரிக்காக காத்துக் கொண்டிருக்கிறாயா? அவள் என்னுடன் காதல் பேசிவிட்டுப் போய் விட்டாள். நீ அது தெரியாமல் கால் கடுக்க... தெருவைக் காவல் காக்கிறாய்...'

ரஞ்சன் வன்மத்துடன் சந்தோஷின் அருகே காரை நிறுத்தினான்.

"சந்தோஷ்..." என்றவாறு வண்டியின் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான்.

"ம்ம்.. என்னடா?"

''இங்கே என்ன செய்கிறாய்?''

''காற்று வாங்குகிறேன்...''

''நீ காற்றைத்தான் வாங்க முடியும்.. காதலை வாங்க முடியாது.''

சந்தோஷின் முகம் மாறியது... புருவங்கள் சுருங்க, ''நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''இல்லை.. கிட்டாத பழத்திற்கு ஒருவன் கொட்டாவி விட்டானாம்.''

''யார் கிட்டாத பழம்? யார் கொட்டாவி விட்டது?''

''நான் என்னவோ தோன்றியதைச் சொன்னேன்...''

''நீ காரணமில்லாமல் சொல்லவில்லை...''

''என்ன காரணம்கிறதை நீயே கண்டுபிடியேன்.. நீதான் மகா புத்திசாலியாயிற்றே... முடிந்தால் கண்டு பிடி...''

சந்தோஷின் மனதிற்குள் மணியடித்தது.

'அப்படியும் இருக்குமா.. இவன் காமுகன்.. பெண் பித்தன். இவன் கண்ணில் கஸ்தூரி பட்டு விட்டாள்... இவன் எதுவும் அவளிடம் வாலாட்டி... அவள் ஊரை விட்டுப் போக முடிவு செய்து விட்டாளோ.'

சந்தோஷின் முகம் பயங்கரமாக மாறியது. அப்படி மட்டும் ரஞ்சனால் கஸ்தூரிக்கு ஆபத்து எதுவும் வந்திருந்தால்.. இந்த சந்தோஷ் அவனைச் சும்மா விட மாட்டான்.

ரஞ்சனின் சட்டையைப் பிடித்தான் சந்தோஷ். ரஞ்சன் இறங்கும்போது வண்டியின் விளக்குகளை அணைத்து விட்டு இறங்கியிருந்ததால் அவர்கள் இருட்டுக்குள் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.



''சந்தோஷ்... சட்டையை விடு...''

''நீ என் கஸ்தூரியிடம் வாலாட்டினாயா...?''

''சந்தோஷ்... இது என் ஊர்.. என் ஏரியா.. சட்டையிலிருந்து கையை எடு...''

''நீ கஸ்தூரியிடம் ஏதோ பேசியிருக்கிறாய்...''

''சந்தோஷ் கையை எடு...''

''டேய்... நீ இந்த ஊருக்கு வேண்டுமானால் பெரிய ரௌடியாக இருக்கலாம். எனக்கு இல்லை.. சொல் கஸ்தூரியை என்ன செய்தாய்?''

சந்தோஷின் கை இறுக ஆரம்பிக்க ரஞ்சனுக்கு மூச்சுத் திணறியது.

''சொல்லுடா...என் கஸ்தூரியிடம் என்ன பேசினாய்?''

ரஞ்சனுக்கு வெறி வந்தது... அவன் திணறியபடி பேசினான்.

''அவள் ஒன்றும் உன் கஸ்தூரியில்லை... என் கஸ்தூரி.''

''டேய்ய்ய்...''

''சந்தோஷ். இவ்வளவு நேரமும் யாருக்காகக் காத்திருந்தாயோ. அவள் இந்நேரம் வரை என்னுடன் தான் பேசிக் கொண்டிருந்தாள்...''

''ரஞ்சன்.. உன்னைக் கொலையே பண்ணி விடுவேன்.''

''உண்மையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் என்னைக் கொல்லப் போகிறாயா? சரி.. கொன்று விடு.. ஆனால்.. கஸ்தூரி நல்ல பெண். நீ என்னைக் கொன்றாலும் என் நினைவாகத்தான் வாழ்வாள். உனக்குக் கிடைக்க மாட்டாள். அதைத் தெரிந்து கொள்...''

'இவன் எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்கிறான். அதுவும்.. நேற்று வரை கஸ்தூரியை மரியாதையில்

லாமல் பேசியவன்.. இன்று அவளைப் பற்றி நல்ல விதமாகப் பேசுகிறானே.'

சந்தோஷின் பிடி தளர்ந்தது. ரஞ்சன் ஆசுவாச மூச்சுக்களை விட்டுத் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டான்.

"உன்னை என்னவோ பெரிய மாவீரன் என்று அப்பா சொல்கிறாரே.. இவ்வளவுதானா நீ... காதல் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத கோழையாடா நீ..?"

"ரஞ்சன்.. மீண்டும் எனக்கு வெறியேற்றாதே..."

"ஹ... திருத்துடா... இதைப் பார். இதைப் பார்த்து விட்டுப் பேசு..."

ரஞ்சன் தன் செல்போனை ஆன் செய்தான். அதன் திரையில் கஸ்தூரியும்... ரஞ்சனும் பூங்காவில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தது பதிவாகி இருந்தது.

"பார்.. நன்றாகப் பார்.. நேரமும் தேதியும் இருக்கிறதே.. எந்த நாள்..? இந்த நாள்...! என்ன நேரம்? சாயந்திரம் ஆறு மணி. நான் பொய் சொன்னதாகச் சொன்னாயே... நீ இப்படிச் சொல்வாய் என்று தெரிந்துதான் நான் போட்டோ பிடித்து வைத்தேன். இன்னும் நானும் அவளும் பேசிக் கொண்டிருந்ததையும் ரிகார்டு பண்ணியிருக்கிறேன்.. கேட்கிறாயா?"

ரஞ்சன்.. செல்போனின் ஸ்விட்சை ஆன் செய்ய.. கஸ்தூரியின் குரல் தெளிவாக ஒலித்தது.

"இன்னும் ஒரு மாதம் நாம் காதலிப்போமே... அதன் பின் உங்கள் அப்பாவிடம் சொல்லிவிட்டுக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமே..."

சந்தோஷ் அதிர்ச்சியில் உறைந்து போனான். அவன் வாய் முணுமுணுத்தது.



"என்னால் இதை நம்ப முடியவில்லையே..."

"அதற்குக் காரணம் உனது அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை..."

"அவள் உன்னைப் போய் எப்படிக் காதலித்தாள்?"

"இந்த வட்டாரத்திலேயே நான் பெரிய ஆள். பணக்காரன். ஆள்... அம்பு.. படை பலம்.. செல்வாக்கு மிகுந்தவன்.. கண்ணுக்கு முன்னாலிருக்கும் செல்வாக்கை விட்டுவிட்டு கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் உன் செல்வாக்கையா அவள் பெரிதாக நினைப்பாள் அவள் வீட்டிற்கு முன்னாலேயே என் வீடு.. தெருவின் இந்த கோடியில் ஆரம்பித்து.. அந்தக் கோடியில் முடிவது... அவள் வீட்டு மாடியிலிருந்து பார்த்தால் என் வீட்டிற்குள் இருக்கும் டென்னிஸ் கோர்ட்... நீச்சல் குளம்... பெரிய தோட்டம்... வரிசையாய் நிற்கும் கார்கள்... என்று எல்லாமே தெரியும்... இதை விட்டு உன்னை ஏறெடுத்துப் பார்க்க அவளென்ன முட்டாளா... நேற்றுப் பார்த்தாள். இன்று காலையில் என்னைப் பிடித்திருக்கிறது என்றாள்.. சாயந்திரம் காதலைச் சொல்லி கல்யாணம் வரை போய் விட்டாள். அவள் என் மேல் அவ்வளவு ஆசை வைத்திருக்கிறாள். உன்னைத் திரும்பிக்கூட பார்க்க மாட்டாள் கஸ்தூரி.. என் கஸ்தூரி.. நீ அவளை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது."

ரஞ்சன் வெற்றிக் கொடியை நாட்டி விட்டான்... சந்தோஷின் இதயத்தில் வலி உற்பத்தியானது... கஸ்தூரி இப்படிப்பட்டவளா? ரஞ்சனைப் போய் அவள் விரும்பியிருக்கிறாளே...

மறுநாள் காலையில்... கஸ்தூரி வகுப்பு முடிந்து... ஆசிரியர்களின் ஓய்வறையை நோக்கிச் சென்றபோது... பியூன் மாணிக்கம் அவளைத் தேடி வந்தான்.

''மேடம் உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்திருக்கிறார்.''

''யாரது...''

''தெரியவில்லை...''

''எங்கே இருக்கிறார்..?''

''அதோ அங்கே...''

மாணிக்கம் காட்டிய திசையில்.. பூச்செடிகளின் ஓரமாக நின்று கொண்டிருந்தான் சந்தோஷ்... கஸ்தூரியின் இதயத்தில் யாரோ டிரம் வாசித்தார்கள். அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

'இவன் ஏன் இங்கு வந்தான்?' கால்கள் பின்ன அவனருகில் சென்றாள் கஸ்தூரி.

அவன் எதுவும் பேசாமல் அவளைத் துளைக்கும் பார்வை பார்த்தபடி அசையாமல் நின்றான்... அவனது பார்வையைச் சந்திக்க முடியாமல் தவித்த கஸ்தூரி... வேறு திக்கில் பார்த்துக் கொண்டு,

''என்ன விசயமாய் என்னைப் பார்க்க வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''கடைசியில் நீ இவ்வளவுதானா?'' அவன் நிதானமாகக் கேட்டான்.

அவனது கேள்வியின் அர்த்தம் புரிந்தவளுக்கு மனம் உடைந்தது... இது கொடுமை... மனம் விரும்பும் மனிதனிடமிருந்து மிக மோசமான விமரிசனங்களைக் கேட்பது...

''எதைச் சொல்கிறீர்கள்?'' அவள் புரியாதவள் போல் கேட்டாள்.

''நடிக்கக் கூடத் தெரியுமா உனக்கு? அது சரி... இப்படிப்பட்டக் காரியத்தைச் செய்யத் துணிந்த உனக்கு நடிக்க மட்டும் தெரியாமல் போகுமா?'' அவன் கொதிப்புடன் கேட்டான்.

''மிஸ்டர் சந்தோஷ்.. நீங்கள் எல்லை மீறிப் பேசுகிறீர்கள்..'' அவள் திடத்தை வரவழைத்துக் கொண்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''எல்லைகளைப் பற்றிக் கூட உனக்குத் தெரியுமா..?''

''திஸ் இஸ் தி லிமிட்.''

''யாருக்கு அணை போடுகிறாய்? உன்னைக் கண்டவுடன் காதல் கொண்டு... உனக்காக எனக்குப் பிடிக்காதவர்களின் வீட்டில் ஒரு வாரம் தங்கியிருக்க முடிவு செய்து.. உன்னிடம் கண்ணியமாய் காதல் சொல்வதற்காக நேற்று மாலை முழுவதும் பைத்தியக்காரன் போல் தெரு முனையில் காத்திருந்தேனே... எனக்கா அணை போடுகிறாய்? எனக்கு அணை போட்டு விட்டு... சமுதாயத்தை சீரழித்துக் கொண்டிருக்கும் கயமை நிறைந்தவனிடம் காதல் பேசியிருக்கிறாய்.. இதுதானா நீ.'

அவன் புழுவைப் பார்ப்பது போல் அவளைப் பார்த்தான்... அவனது பார்வையே அவளை அருவெருப்புடன் பார்த்தது... அவனது முகத்திலிருந்த கடுமை அவளைத் தீயாகச் சுட்டது.

# 13

**ஊமை மனம் கொண்ட மயில் – கண்ட**

**உறவெல்லாம் பொய் வேசம்...**

**அண்ணன் துணையினை வேண்டி நின்றேன் – எந்தன்**

**துன்பம் தீர்க்க மாட்டாயோ...**

**– நீங்காத என் நினைவுகள் –**

கஸ்தூரி பரிதவித்தாள். இப்படிப்பட்ட வார்த்தைகளை அவளைப் பார்த்து ஒருவன் பேசக் காது கொடுத்துக் கேட் கும் நாள் வரும் என்று ஒரு போதும் அவள் நினைத்த தில்லை. இன்று நடப்பது. அவளது நெஞ்சத்தை துடிக்கச் செய்தது... அவள் துடிப்புடன் நிமிர்ந்தாள். அவளது நேர்மை கொதித்தது.

''மிஸ்டர் சந்தோஷ்.. நீங்கள் என் மேல் காதல் கொண்டால்.. அது உங்கள் விசயம்.. எனக்கு அதில் அக்கறையில்லை... அதே போல் நான் ரஞ்சன் மேல் காதல் கொண்டால் அது என் சொந்த விசயம்.. நீங்கள் யார் அதைக் கேட்க?''

''நான் யாரா...? நான் உனக்கு யாருமேயில்லையா?''

''நிச்சயமாய் இல்லை... உங்கள் மனதில் நீங்களாகக் கட்டிய கற்பனைக் கோட்டைத் தகர்ந்தால் அதற்கு நானா பொறுப்பு? ரஞ்சனைப் பற்றி இவ்வளவு மோசமாக விமரி சனம் செய்யும் நீங்கள். அவர் வீட்டில் தானே விருந் தாளியாய் தங்கியிருக்கிறீர்கள்? இப்படிப்பட்ட அயோக் கியனின் உறவு எதற்கு என்று அவரது உறவை தூக்கி எறிந்து விடவில்லையே...''

''நீ பேச்சை மாற்றப் பார்க்கிறாய்...''

''இல்லை... சரியாகத்தான் பேசுகிறேன். உங்களுக்குத் தெரிந்த ஒருவன் தவறு செய்தால் ஒன்று திருத்த வேண்டும்... அவன் திருத்த முடியாத பிறவியென்றால் தண்டிக்க வேண்டும். இரண்டையும் விட்டு விட்டு என்னிடம் மோதினால் என்ன அர்த்தம்...?''

''கஸ்தூரி... என்னை விட எந்த வகையில் அவன் உயர்த்தி?''



''அதை உங்களிடம் நான் சொல்ல வேண்டிய அவ சியமில்லை...''

''நான் சொல்லவா? அவனுடைய பணம்... வீடு... கார்கள்... சொத்துக்கள். இவைதானே உன்னை அந்தக் கேடு கெட்டவனிடம் ஈர்த்திருக்கிறது...?''

கஸ்தூரி வாய் விட்டுச் சிரித்தாள்... கண்ணில் நீர் வரும் வரை சிரித்தாள்.

''என்னைப் பற்றிய உயர்வான மதிப்பீட்டிற்கு நன்றி...''

''இந்தப் பணத்திற்காகவா அவன் பின்னால் போகி றாய்?''

''சந்தோஷ்.. வார்த்தைகளை யோசித்துப் பேசுங்கள்...''

''இதைவிட அதிகப் பணம் என்னிடம் இருக்கிறது...''

''ஹா... பணத்தைக் காட்டி ஒரு பெண்ணிடம் காதலை யாசிக்கும் அளவிற்கு உங்கள் தரம் இறங்கி விட்டதா? இவ்வளவு தானா நீங்கள்?''

''என்னடி சொன்னாய்?'' சந்தோஷ் அடிக்குரலில் உறுமி னான்.

''உன் தரம் இறங்கியிருக்கும் போது.. என் தரமும் இறங் காதா...? பணத்தைப் பார்த்து நீ கயவன் ஒருவன் பின் னால் போகும்போது.. நான் அந்தப் பணத்தைக் காட்டி உன்னை மயக்க நினைக்கக் கூடாதா...''

''ஸ்டாப் இட் சந்தோஷ்... பணத்திற்காக விலை போகி றவள் நானில்லை.''

''வேறு எதற்காக அவன் பின்னால் போகிறாய்?''

''அதை உங்களிடம் சொல்ல வேண்டிய அவசிய மில்லை.''

''ஏனில்லை... நான் உன் முகத்தை. களங்கமில்லாத நிலவு முகம் என்று நம்பியவன்... உன் குணத்தை அப்பழுக்கு இல்லாத பத்தரை மாற்றுத் தங்கம் என்று எடை போட்டவன். உன் காலடியில் என் காதலைப் போட்டு மிதிக்கிறாய். நான் காரணம் கேட்கக் கூடாதா?''

கஸ்தூரி சிலையாக நின்றாள். இன்னும் சற்று நேரத்தில் பள்ளியின் வேலை நேரம் முடிந்து விடும். மணியோசை கேட்டு மாணவ.. மாணவிகள் வெளியே வந்து விடுவார்கள். இவள் சந்தோஷுடன் பேசிக் கொண்டிருப்பதை பார்த்து விடுவார்கள்.. அதைத் தவிர்க்க வேண்டும்.

கஸ்தூரி மனதை கல்லாக்கிக் கொண்டாள்.

''எனக்கு உங்கள் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. அதுவே ரஞ்சனின் முகமென்றால் பிடிக்கிறது...'' என்றாள்.

''ஹூம்...? அதை என் முகத்தைப் பார்த்துச் சொல்...''

''அந்த முகத்தைப் பார்க்கத்தான் பிடிக்கவில்லை என்றேனே...''

கஸ்தூரி விரைவாக அந்த இடத்தை விட்டு அகன்றாள்... அவளது நடையின் வேகத்தில்... அவளது நீண்ட பின்னல் இப்படியும்.. அப்படியுமாய் ஆடியது.

போகிறவளையே பார்த்துக் கொண்டிருந்த சந்தோஷ் விழி சிவக்க வீட்டிற்குத் திரும்பினான். திரும்பிய வேகத்தில் சென்னைக்குக் கிளம்பினான்.

சோணாச்சலத்தின் முகத்தில் கேள்விக்குறி தோன்றியது.

''இன்னும் ஒரு வாரம் இங்கே தங்கியிருப்பேனென்று சொன்னாயேப்பா?''



''சென்னையில் ஒரு முக்கியமான புராஜெக்ட் ஆரம்பிக்கப் போகிறோம் மாமா.. அதற்கான ஒப்பந்தத்தில் நான் கையெழுத்திட வேண்டியிருக்கிறது.''

சோணாச்சலத்தின் சந்தேகம் பறந்து விட்டது. சந்தோஷ் தொழிலில் காட்டும் அக்கறையும் ஈடுபாடும் அவருக்குத் தெரியும்.

''எதிர் வீட்டுப் பெண்ணையும்.. உன்னையும் பற்றி ரஞ்சன் ஏதோ கூறினானே...''

''அவனாகக் கற்பனை பண்ணிக் கொண்டு எதையாவது உளறியிருப்பான்... எனக்குக் கல்யாணத்தில் எல்லாம் இன்ட்ரெஸ்ட் இல்லை மாமா.''

சோணாச்சலம் மதிப்புக் கலந்த பார்வை ஒன்றை பார்த்தார்.

''அதுதானே பார்த்தேன். உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா?''

''ஆக்சுவலா.. நான் சித்தன்ன வாசல் சிற்ப ஓவியங்களைப் பார்க்கத்தான் இங்கே இருக்க நினைத்தேன்...''

''ச்சு... வெளியூர்காரன்... உனக்குத் தெரியும் அந்த கோவிலின் மதிப்பு... ரஞ்சனுக்குத் தெரிகின்றதா?''

அவ்வளவு நேரம் வரை அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தபடி சோபாவில் சரிந்து டீப்பாயின் மேல் கால்களைத் தூக்கிப் போட்டுக் கொண்டு டி.வி.யின் சேனல்களை மாற்றிக் கொண்டிருந்த ரஞ்சன் அலட்சியமாய் சிரித்தான்...

''ஓவியத்தின் மதிப்பு அவனுக்குத் தெரிந்து அவ இக்கு ஆகப் போவதென்ன? சிற்ப ஓவியம் என்னைச் சேர்ந்தது அப்பா. அது எனக்கு மட்டும்தான் சொந்தம்.''

சந்தோஷ் தன் சிவந்த விழிகளால் ரஞ்சனை உறுத்துப் பார்த்தான். சோணாச்சலம் மகனை அதட்டினார்.

''என்னடா உளருகிறாய்...?''

''அது சரி.. நான் பேசினால் உங்களுக்கும் உங்கள் மருமகனுக்கும் உளறலாகத்தான் தெரியும்.. என் பேச்சையும் காது கொடுத்துக் கேட்டு ரசிக்க எனக்கென்றும் ஆள் இருக்கிறது அப்பா...''

சந்தோஷின் ஆத்திரம் அலை புரண்டது.. சோணாச்சலத்திற்கு மகன் சந்தோஷிடம் வம்பிழுப்பது புரிந்தது.

''ரஞ்சன்.. சந்தோஷிடம் என்ன பகடி பேசுகிறாய்?''

''பகடிதானே பேசுகிறேன். ஏதோ அவனுடன் கபடி விளையாடுவது போல் என்னைக் கண்டிக்க வருகிறீங்களே.''

''நீ அவனிடம் இப்போது என்ன சொன்னாய்..?''

''அப்பா.. இது என் சொந்த ஊர். சொந்த ஜில்லா. அவன் சென்னைவாசி. சித்தன்னவாசல் அற்புதம் எனக்குத்தானே சொந்தம்? அவன் வெறும் பார்வையாளன் தானே...''

''நீ இதைத்தான் சொன்னாயா?''

''வேறு எதைச் சொன்னேன்? சந்தேகமிருந்தால் உங்கள் மருமகனிடமே கேட்டுக் கொள்ள வேண்டியது தானே. என்டா.. நான் வேறு எதுவும் சொன்னேனா? நீயே உன் மாமாவிடம் சொல்...''

சந்தோஷ் மீண்டும் ரஞ்சனை முறைத்தான். ரஞ்சனின் விழிகள்.. வெற்றி எக்களிப்புடன் சந்தோஷின் முறைப்பைச் சந்தித்தன.



''இவன் இப்படித்தான். சில நேரம் இவன் பேசுவது யாருக்குமே புரியாது. விட்டுத் தள்ளு சந்தோஷ்.. நீ ஊருக்குக் கிளம்பு... அடுத்து எப்போது வருவாய்?''

''என் கல்யாணத்திற்கு வருவான். இல்லையா சந்தோஷ்...''

நடக்கப் போவதை அறியாமல் சந்தோஷின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள.. வார்த்தைகளை விட்டான் ரஞ்சன். அவன் எதிர்பார்த்தது போலவே சந்தோஷின் முகம் பயங்கரமானது.

''ஏன் சந்தோஷ் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாய்? நான் தாலி கட்டப் போகும் அந்தக் கண் கொள்ளாக் காட்சியினை நீயும் பார்க்க வேண்டாமா?''

சோணாச்சலம் மட்டும் பக்கத்தில் இருந்திருக்காவிட்டால் சந்தோஷிற்கு வந்த கோபத்திற்கு ரஞ்சனின் குடலை உருவி மாலை போட்டிருப்பான். தகப்பன் பக்கத்தில் இருந்ததால் ரஞ்சன் தப்பித்தான்.

''ஏன்டா.. உன் கல்யாணத்திற்கு அவன் வராமல் இருப்பானா? மாப்பிள்ளைத் தோழனே அவன்தானே...''

சோணாச்சலம் யதார்த்தமாய் கூற சந்தோஷின் மனக்கண்ணில் ரஞ்சனும்.. கஸ்தூரியும் மாலையும் கழுத்துமாய் நிற்கும் காட்சி தோன்றியது...

அதைத் தாள மாட்டாதவன் சட்டென்று பெட்டியை எடுத்துக் கொண்டு வீட்டுப் படியில் இறங்கினான். போர்டிகோவிலிருந்த அவனது காரைத் திறந்து பெட்டியை பின் சீட்டில் விசிறியவன்.

''நான் வருகிறேன் மாமா...'' என்று சொல்லிவிட்டு வண்டியை புயல் வேகத்தில் கிளப்பினான்.

''ஏன் இப்படி வண்டியை ஓட்டுகிறான்? அவன் எப்போதுமே நிதானம் தவற மாட்டானே... பேய் துரத்துவது போல் ஓடுகிறானே...''

''பேய்தான் துரத்துகிறதோ... என்னவோ...''

ரஞ்சன் வெற்றிச் சிரிப்புடன் மாடிப்படியேறினான்.

சோணாச்சலம் தாடையைத் தடவியபடி மகனை யோசனையாய் பார்த்தார்.

''என்னப்பா...?''

''ஒன்றுமில்லை... இந்த எதிர் வீட்டுப் பெண்ணைப் பற்றியும்... அவனைப் பற்றியும்.. நீ சொன்னது உண்மைதானா?''

''பாதி உண்மை.''

''என்னடா சொல்கிறாய்?''

''இவன்தான் அந்தப் பெண்ணை சைட் அடித்தான். அந்தப் பெண் இவனை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.. போடான்னு சொல்லி விட்டதாம்...''

''நம்ம சந்தோஷையா அந்தப் பெண் வேண்டா மென்று சொல்லி விட்டது?''

''நம்ம சந்தோஷில்லை... உங்கள் சந்தோஷ்.. அந் என்ன.. சந்தோஷையா..? என்று வாயைப் பிளக்கிறீர் கள்.. அவன் என்ன பெரிய இவனா? அவன் கேட்டால். ஒரு பெண் உடனே சரியென்று சொல்லி விடுவாளா?''

''இதற்கு நீயேண்டா.. இவ்வளவு கோபப்படுகிறாய்?''

''சும்மா அவனையே தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினால் கோபம் வராதா?''

ரஞ்சன் விடுவிடென்று மாடிப் படிகளில் தாவியேறி னான். அவன் மனம் நிறைந்திருந்தது. இனி ஒரு போதும்



சந்தோஷ்.. ரஞ்சனுடன் கூட்டாகத் தொழில் ஆரம்பிக்க மாட் டான். அவனை வெற்றி கொண்டதற்கு அடையாளமாய் ரஞ்சன் கஸ்தூரியுடன் வாழப் போகிறான். சந்தோஷ் வாழ்நாள் முழுவதும் மரண வலியுடன் துடிக்கப் போகி றான்.

'கல்யாணத்திற்குப் பின்னால் சென்னைக்கு.. ஜெயந்தி அத்தையின் வீட்டிற்கு விருந்து சாப்பிடச் செல்ல வேண் டும். அங்கே ஒரு வாரம் தங்க வேண்டும்.

''சந்தோஷ்... இவள்தான் என் மனைவி கஸ்தூரி...'' என்று ஒன்றும் அறியாதவன் போல் அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும்.

அவன் துடித்துப் போவதைப் பார்த்து ரசிக்க வேண் டும். பாருடா.. நன்றாகப் பார்... இவள் உன் காதலி யில்லை. என் காதலி.. என் மனைவியென்ற உரிமை யுடன் சந்தோஷின் கண் முன்னே கஸ்தூரியின் தோளில் கை போட்டு அணைத்துக் கொள்ள வேண்டும்.

அப்போது அவன் முகம் எப்படி மாறும்..? சற்று முன் அதி பயங்கரமாய் மாறியதே அப்படி மாறும்...'

அறைக் கதவுகளை மூடிவிட்டு ஏ.ஸி.யை ஆன் செய்து விட்டுப் படுக்கையில் விழுந்த ரஞ்சன் வாய்க்கு மேல் கைகளைக் குவித்தபடி கூவினான்.

''சந்தோஷ்... உன்னை ஜெயித்து விட்டேன்...''

இது மன்னர் காலத்தில் இருந்து ஆண்களுக்கு ஏற்பட்டிருக்கும் மனோபாவம்... சுயம்வரத்தில் போட்டி போட்டு.. மற்ற அரசர்களின் முன்னிலையில்,

'பார்.. நீங்கள் எல்லோரும் வந்து கலந்து கொண் டீர்களே... இந்தப் பெண். என்னைத்தான் தேர்ந்தெடுத்து

இருக்கிறாள்..' என்று கர்வத்துடன் அந்த ராஜகுமாரி சூட்டும் மணமாலையை கழுத்தில் ஏந்திக் கொண்டு அந்தப் பெண்ணைக் காதலுடன் பார்க்காமல் மற்றவர்களை வெற்றிப் பார்வை பார்ப்பார்கள்.

பின் வந்த காலங்களில்... 'ஊர் எல்லையில் இருக்கும் பாறாங்கல்லை தூக்குபவனைத்தான் மணம் முடிப்பேன். நான் வளர்க்கும் முரட்டுக் காளை மாட்டை அடக்கியவர்களைத்தான் மணம் முடிப்பேன்.' என்று பெண்கள் நிபந்தனை விதிக்க.. மற்றவர்களுடன் போட்டி போட்டு ஜெயித்து அந்தப் பெண்ணின் மணமாலையை ஏற்று.. மற்றவர்களைப் பெருமையுடன் பார்ப்பார்கள்.

இப்போதும் அதே மனோபாவம் சிலரிடம் உண்டு. நண்பனின் காதலுக்கு தூது சென்று நண்பனின் காதலியையே தன் காதலி ஆக்கிக் கொள்பவர்கள். அந்த நண்பனைப் பார்க்கும் பார்வையில் வெற்றிச் செய்தி இருக்கும்.

'பார்... உன் காதலி.. இப்போது என் காதலி ஆகி விட்டாள்.'

## 14

என்று தணியும் என்துயரம்?

என்று மறையும் என் சோகம்?

அன்று தொட்டு இன்று வரை

அடி மனதில் மூளும் அனல்...

– நீங்காத என் நினைவுகள் –



ஒருவனை வெற்றி கொள்ள அவனுக்குச் சொந்தமான மண்ணைக் கைப்பற்ற வேண்டும். இல்லையென்றால் பெண்ணைக் கைப்பற்ற வேண்டும்.. மண்ணைப்போல்.. பெண்ணையும் நினைப்பது... அவளையும் ஓர் சொத்தாக பாவிப்பது... அவளுக்கென்றும் ஒரு மனம் இருக்கிறது என்று நினையாமல் இருப்பது.. இன்றும் எங்கோ ஓர் மூலையில் நடந்து கொண்டு தானே இருக்கிறது?

வருடம்தோறும்.. பத்து வயது.. பனிரெண்டு வயது சிறுமிகளை மணம் செய்து கொண்டு விமானம் ஏறும் துபாய் ஷேக்குகளைப் பற்றியும் அவர்களை கணிசமான தொகைக்கு விற்பவர்களைப் பற்றியும் இன்னும் நாம் செய்தித் தாள்களில் படித்துக் கொண்டுதானே இருக்கிறோம்?

அடிமை வியாபாரம் ஒழிந்து விட்டது... பெண்ணடிமை ஒழிந்து விட்டதா?.. இல்லை.. அது ஒழியவில்லை.

கஸ்தூரியின் மனதில் வேறு ஓர் கணக்கு இருந்தது. அவள் ரஞ்சனுக்குத் தூண்டில் போடவே அவனது வீட்டிற்கு எதிர் வீட்டிற்கு வந்தாள். அவனுடன் தன்னை சம்பந்தப்படுத்தி தெருவில் உள்ளவர்கள் பேசினால்.. அவனது கவனம் தன் பக்கம் திரும்பி.

'யாரிந்தப் பெண்.. ஏன் என்னைத் தெரியுமென்று சொன்னாள்?' என்று யோசித்து.. அவளைத் தேடி வருவான்.. என்ற எதிர்பார்ப்பில் காமுப்பாட்டியிடம் வலியப் பேசிப் பழகினாள். தனக்கும்.. ரஞ்சனுக்கும் சிநேகிதம் உண்டு என்று சொன்னாள்.

ஆனால்.. கஸ்தூரியே எதிர்பாராத விதமாக சந்தோஷின் தயவால் ரஞ்சனின் கண் பார்வையில் விழுந்து

விட்டாள். தன்னிடம் வந்து பேசிய ரஞ்சனை தன் காதலைச் சொல்லி விழுகவும் வைத்து விட்டாள்.

கஸ்தூரி... மிக அற்புதமான அழகி... சிறந்த நற்குணங்கள் கொண்ட பெண். படிப்பில் முதல் மாணவி... பல்கலைக் கழகத்தில் தங்கப் பதக்கம் வாங்கியவள்.. மிகப் புத்திசாலி. நன்றாகப் பாடுவாள். பரத நாட்டியம் தெரியும்.

இத்தனை திறமைகளில்... இத்தனை அம்சங்களில்... எந்தத் திறமை ரஞ்சனைக் கவர்ந்தது? எந்த அம்சம் அவள் பக்கம் அவனை ஈர்த்தது? இது எதுவுமே ரஞ்சனின் கண்ணிலும்.. கருத்திலும்.. பதியவில்லை... அவனுக்குத் தெரிந்ததெல்லாம்.. அவள் சந்தோஷின் காதலி. அவளைத் தட்டிப் பறித்தால் சந்தோஷ் வேதனைப் படுவான் என்பது மட்டுமே.

கழுதைக்கு கற்பூரத்தின் வாசனை தெரியாது... குப்பையைக் கிளரும் கோழிக்கு வைரத்தின் மதிப்பும் தெரியாது. ரஞ்சனுக்கும் கஸ்தூரியின் அருமை தெரியாது. அவள் மட்டும் சந்தோஷின் காதலியாக இல்லாமல் இருந்திருந்தால்.. ரஞ்சன் அவளை வேட்டையாடவே நினைத்திருப்பான். விரும்பியிருக்க மாட்டான். கணநேரம் அவளைத் தொட்டு விட்டு கைகழுவ நினைத்திருப்பான். காலம் முழுவதும் அவளுடன் கல்யாண பந்தத்தில் வாழ நினைத்திருக்க மாட்டான்... சந்தோஷ் விரும்பிய பெண் அவனை விரும்பாமல் ரஞ்சனைப் பிடித்திருக்கிறது என்று சொல்லி விட்டாள்.. அது சந்தோஷை வெற்றி கொள்ளும் வெற்றிச் செய்தி... அந்த வெற்றியைத் தனக்குத் தந்த கஸ்தூரியை அவன் கொண்டாடினான். அதனாலேயே... மற்ற பெண்களிடம் காட்டாத மரியாதையை அவளிடம் காட்டினான். அவளுடைய வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டான்.



கஸ்தூரி.. மாலையில் பள்ளி விட்டுத் திரும்பி வந்த போது மகிழம்பூ மரம் கண்ணில் பட்டது. நெகிழ்வாக அதன் கீழே நின்றாள். இந்த மர நிழலில் ஆண்மை ததும்பும் தோற்றமுள்ள கம்பீரமான கண்ணியவான் ஒருவனை அவளுக்கு அறிமுகப்படுத்தியது. அவனும் அவளை நேசித்தான். ஆனால்...?

கஸ்தூரியின் கண்கள் கலங்கின. அவள் இமைகளைக் கொட்டிக் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

'பொறு மனமே.. பொறு.. அலை பாயாதே... வினை முடிக்க இந்த அன்னவாசலை மிதித்தவள் நான். என் மனதில் வேறு எண்ணங்களுக்கு இடமில்லை... நீ அலை பாய்ந்து ஆகப் போவது ஒன்றுமில்லை...'

பெருமூச்சுடன் மகிழம்பூ மரத்தைத் தொட்டுப் பார்த்து விட்டுத் திரும்பியவள் அதிர்ந்து போனாள்.

இரு கைகளையும் மடித்து முன்னால் கட்டிக் கொண்டு கால்களை சற்று அழுத்தி ஊன்றி அவளையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான் சந்தோஷ்.

கஸ்தூரி பிடிபட்டு விட்டது போல் விழித்தாள். இவனது கார் இல்லாததால்.. இவன் இங்கு இருக்க மாட்டானென்று நினைத்தது தப்பாகி விட்டதே...

''ஏன் இங்கு வந்தாய்...?''

''இது என்ன கேள்வி.. இது தெருவில் நிற்கும் மரம்.. நிழல் வேண்டும் எல்லோரும் இங்கு வரலாம்...''

''இது இனிய மாலை நேரம். இப்போதுகூட உனக்கு நிழல் தேவைப்படுகிறதென்றால்.. நான் அன்று சொன்னதுபோல.. உங்கள் மனதில் வெயில் அடித்துக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.''

''என் மன வெம்மையைப் பற்றி நீங்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமில்லை... நீங்கள் உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போய் விடுங்கள்.''

''என்னைத் துரத்துவதிலேயே குறியாக இருக்கிறாய். எது எப்படியோ.. நான் உன்மேல் ஆசை வைத்து விட்டேன். உனக்குத்தான் என் முகம் பிடிக்கவில்லை. எனக்கு உன் முகத்தை மட்டுமல்ல. உன்னையே மிகவும் பிடிக்கிறது... அதனால்...''

''அதனால்...?''

''உன் ஆசையை நிறைவேற்றத் தீர்மானித்து விட்டேன்... இந்த ஊரை விட்டுப் போகிறேன். போவதற்கு முன் உன்னிடம் சொல்லிக் கொண்டு போக வேண்டுமென்ற ஆசை... அதனால்தான் காரை அந்தப் பக்கம் கண் மறைவாக நிறுத்திவிட்டு.. நானும் மறைந்து நின்றிருந்தேன். அம்மையார்தான் என் காரைப் பார்த்தால் ஆட்டோவில் ஒளிந்து கொண்டு... முந்தானைச் சேலையால் தலைக்கு முக்காடு போட்டுக் கொண்டு ஓடி விடுவீர்களே. அதனால்தான்.. நானும் மறைந்திருந்து பார்க்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டது...''

கஸ்தூரி விக்கித்துப் போனாள். இருட்டுக்குள் எப்படி அவனைக் கண்டு பிடித்தான்?

''பார்த்து விட்டீர்களா?''

''ம்ம்... பார்த்து விட்டேன். நீயாக இருக்காது என்று நினைத்தேன்... ஆனால் ரஞ்சன் வந்து சொன்ன பின்னால்...''

அவன் பேச்சை நிறுத்திவிட்டு அவளையே இமைக்காமல் பார்த்தான். அவனது பார்வை அவளை ஆயிரம்



கேள்விகள் கேட்டது... அவனது பார்வையின் வேகம் தாங்க முடியாமல் அவள் தலை குனிந்தாள்.

'என்னை அப்படிப் பார்க்காதே... நான் ஒரு பாவமும் அறியாதவள். பாவிகளைத் தண்டிக்கவே வந்தேன். நான் செய்வது கடமை... காதல் அல்ல...'

அவனுடைய உதடுகள் துடித்தது. ஒரு பார்வையைத் தாங்க முடியாத கொடி போன்ற இவளா.. ரஞ்சனின் பிடிக்குள் சிக்கியிருக்கிறாள்...?

''கஸ்தூரி...'' மென்மையாக அழைத்தான்.

''போய் விடுங்கள்..'' அழுகையை அடக்கிக் கொண்டு.. அதை அவன் பார்த்து விடாமலிருக்க முகத்தைத் திருப்பிக் கொண்டு அவள் பதில் சொன்னாள்.

அவன் முகம் கடுத்தது.

''போய் விடு.. போய் விடு.. போய் விடு.. ஏன் இப்படியே ஜெபிக்கிறாய்? உன் மனதில் என்னதான் புதைந்து கிடக்கிறது.. அதை என்னிடம் சொல்... உன் பிரச்னையை நான் தீர்த்து வைக்கிறேன்.''

''அதை நான் தான் தீர்க்க வேண்டும்.''

''அப்படி யார் சொன்னது...?''

''என் கடமை சொல்லியிருக்கிறது...''

''புரியவில்லை...''

''புரியவேண்டுமென்ற அவசியமில்லை...''

''ரஞ்சனிடம் ஏன் பயப்படுகிறாய்?''

''ரஞ்சனிடம் நான் பயப்படுகிறேனா.. ஹ... அவன் தான். என்னிடம் பயப்பட வேண்டும்...''

''நீ சொல்வதன் அர்த்தம் என்ன?''

''தெரிய வேண்டுமென்ற அவசியமில்லை...''

அவன் எப்படிக் கேட்டாலும் பதில் கொடுக்காத அவளை அலுப்புடன் பார்த்தான். இவள் மனம் விட்டுப் பேசினால் எதையாவது செய்யலாம். மனக்கதவை இறுக்கி மூடிக் கொண்டிருக்கிறவளை என்ன செய்வது?

அவளை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தான். அவள் அவசரமாய் பின் வாங்கினாள். அவன் நின்று விட்டான்.

''இதுதான் உன் முடிவா?''

''ஆமாம்...''

''நீ ரஞ்சனிடம் பழகுவதை நிறுத்த மாட்டாய்?''

''நிறுத்த மாட்டேன்...''

''கஸ்தூரி... அவனுடைய அப்பா கூட உன்னை என்னுடைய காதலியாகத்தான் நினைக்கிறார். இது தெரியுமா உனக்கு?''

''என்ன...?''

விழிகளை அகல விரித்தாள் கஸ்தூரி. அவள் மனதிற்குள் எச்சரிக்கை மணி ஒலித்தது.

சோணாச்சலத்தின் பார்வை வட்டத்திற்குள் கஸ்தூரி வந்து விட்டாளா? அவன் ரஞ்சனைக் காதலித்தாலும்.. சந்தோஷைக் காதலித்தாலும்.. அவர் குடும்பத்தைச் சேர்ந்தவனைக் காதலிக்கிறாள். அவர் அவளைப் பற்றிய விசாரணையை ஆரம்பித்து விடுவது நிச்சயம். இனி செயல்பட வேண்டியது தான். அடையாளம் அறியப்படு முன் நினைத்ததை முடிக்க வேண்டும்.

சந்தோஷ் அங்கு நின்று கொண்டிருப்பதையே மறந்தவளாய் கஸ்தூரி நடக்க ஆரம்பித்து விட்டாள்.

''கஸ்தூரி...'' சந்தோஷின் அழைப்பு அவளைத் தடுத்தது. நின்று திரும்பிப் பார்த்தாள்.



''போய் வருகிறேன்...'' என்றான் சந்தோஷ்.

''ம்ம்...'' என்றாள் கஸ்தூரி.

''மீண்டும் நாம் சந்திப்போமா?''

''நான் உயிருடன் இருந்தால் சந்திக்கலாம்.''

அவள் விரைந்து விட்டாள். சந்தோஷின் காதுகளில் அவள் பேசிய வார்த்தைகள் ரீங்காரமிட்டன. அவன் சிலை போல் நின்று கொண்டிருந்தான்.

'இவளுக்கு அவர்களின் குணம் தெரிந்திருக்கிறது.. தெரிந்தும் ஏன் தீயில் குதிக்கிறாள்..? விளக்கைத் தேடி விட்டில் பூச்சிகள் சென்று விழலாம்.. இவள் விட்டில் பூச்சியல்லவே... கஸ்தூரி... நீ புதை குழியில் இறங்குவதைத் தெரிந்தும் தடுக்க வகையில்லாமல் நிற்கிறேனே..'

சந்தோஷ் காரில் ஏறிப் போய் விட்டான்.

கஸ்தூரி வீட்டுப் படியேறியதும்.. அவசரமாய் வீட்டுக் கதவைச் சாத்திவிட்டு கதவிடுக்கில் பார்த்தாள். யாரோ இரண்டு பேர் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

'யார் இவர்கள்?'

''என்னம்மா...?'' கோதண்டராமனின் அழைப்பைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தவள்,

''நம் வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பவர்கள் யார்?'' என்று விசாரித்தாள்.

''அவர்கள் நம் வீட்டு வாசலில் நிற்கவில்லையே... எதிர் வீட்டு வாசலில்தானே நிற்கிறார்கள்?''

''இத்தனை நாளாய் இவர்கள் இல்லையே...''

''அட.. ஆமாம்... கிருஷ்ணவேணி.. இதை கவனித்தாயா?''

''கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். நீ என்ன சொல்ல வரேம்மா.''

''நாம் கண்காணிக்கப் படுகிறோம்.''

''ம்ம்.. இந்தத் தடியன்கள் நேற்றெல்லாம் இல்லையே... இன்றைக்கு மதியமிருந்து தான் நிற்கிறார்கள். இப்போது என்ன செய்யலாம்?''

''அலர்ட்டாக இருங்கள். அம்மா.. நீங்களும் அப்பாவும் சாமான்களையெல்லாம் பேக் பண்ணி விடுங்கள். நாம் எப்போது வேண்டுமானாலும் கிளம்ப வேண்டியிருக்கும்...''

''வேலையை முடித்து விட்டுத்தானே போவோம்?''

''முடிக்காமல் போவதா?''

''அதுதானே பார்த்தேன்.''

கஸ்தூரி... மாடியேறி அறைக்குள் நுழைந்து ஜன்னல் கதவை லேசாகத் திறந்து எதிர் வீட்டைப் பார்த்தாள். சோணாச்சலம் தோட்டத்தில் நின்று கொண்டு யார் கூடவோ போனில் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவரின் விழிகள் தன் வீட்டின் மேல் பதிந்திருப்பதைக் கண்டாள் கஸ்தூரி... தூங்கிய புலி விழித்து விட்டதா?'

## 15

நீ சென்றபோது மனதில் பற்றிய நெருப்பு
இன்று வரை அணையவில்லை...
அண்ணா! நீயேன் மறைந்தாய்?
ஆவிதுடிக்க ஏன் உயிர் துறந்தாய்?
– நீங்காத என் நினைவுகள் –



சோணாச்சலத்திற்கு 'ஆயிரம் கண்ணுடையான்' என்ற பட்டப் பெயர் ஒன்று உண்டு. அவர் அறியாமல் எவரும் அன்னவாசலில் கால் வைத்துவிட முடியாது... ஆனால் கஸ்தூரி கால் வைத்து விட்டாள். அவரது வீட்டிற்கு எதிர் வீட்டிலேயே குடியும் வந்து விட்டாள். அவளைப் பற்றி ரஞ்சன் கூறியபோதே அவருக்கு யோசனையாகத்தான் இருந்தது. அவள் யார்... எவர்... என்று விசாரிக்க வேண்டும் என்ற நினைவு வந்தபோது சந்தோஷ் ரஞ்சனுடன் ஆரம்பிக்கப் போகும் தொழில் பற்றி முழு மனதாய் சம்மதம் சொல்லாமல் இழுத்தான். மகனைப் பற்றிய கவலையில் கஸ்தூரியைப் பற்றி விசாரிக்க மறந்து விட்டார் சோணாச்சலம்.

ஆனால் எப்போது சந்தோஷிற்கு ரஞ்சன் மேல் கோபம் வந்ததோ.. அப்போதே சோணாச்சலத்திற்கு பொறி தட்டிவிட்டது. சந்தோஷைப் பார்த்து ரஞ்சன் பேசிய வார்த்தைகள் எல்லாமே... மறை பொருளை உள்ளடக்கிப் பொடி வைத்துப் பேசப்பட்டது போல் சோணாச்சலத்திற்குத் தோன்றியது.. ரஞ்சனின் வெற்றிச் சிரிப்பும் சந்தோஷின் தோற்றுப் போன முகபாவமும் அவருக்கு எதையோ உணர்த்த.. மகனின் வாயைக் கிளறினார். அவனும் கஸ்தூரி சந்தோஷின் காதலை நிராகரித்து விட்டதாகச் சொல்ல.. அவருக்குக் கணப் பொழுதில் எல்லாம் விளங்கி விட்டது.

'இது எப்படிச் சாத்தியமாகும்? சந்தோஷ் விரும்பிய பெண் சந்தோஷை மறுத்து விட்டாளா..? ரஞ்சனுக்கு சந்தோஷின் மேல் பொறாமை உண்டு. கோபம் உண்டு. ஆனால் இன்றைக்கு அவன் சந்தோஷை வம்பிழுத்தது வெற்றி பெற்ற எக்களிப்பினால் தானே...'

சோணாச்சலம் சிந்தனையுடன் தோட்டத்தில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்தார். ரஞ்சன் பேசிய வார்த்தைகளை கோர்வையாக நினைத்துப் பார்த்தார்.

'சித்தன்ன வாசல் ஓவியங்கள்.. எனக்கு மட்டும் சொந்தம் அப்பா.'

'நான் பேசுவதைக் கேட்க.. எனக்கென்று ஒரு ஆள் இருக்கிறது...'

'இவன்தான் அந்தப் பெண்ணை சைட் அடித்தான்.. அந்தப் பெண் இவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. போடான்னு சொல்லி விட்டதாம்.'

'அவன் என்ன பெரிய இவனா..?'

'என் கல்யாணத்திற்கு வருவாய்... இல்லையா சந்தோஷ்..'

ஏன் ரஞ்சன் சந்தோஷைச் சீண்டினான்? எப்படி எதிர் வீட்டுப் பெண் சந்தோஷை வேண்டாமென்று சொன்ன செய்தி ரஞ்சனுக்குத் தெரிய வந்தது? கல்யாணத்தைப் பற்றியே சிந்திக்காத ரஞ்சன்... கண்டபடி அலையும் ரஞ்சன்... கல்யாண பந்தத்தை மதிக்காத ரஞ்சன். எப்படி கல்யாணத்தைப் பற்றிப் பேசினான்? இவனுக்கு மாப்பிள்ளை தோழனாக இருக்கச் சொன்னதும் சந்தோஷ் ஏன் பேய் துரத்துவது போல் காரைக் கிளப்பிக் கொண்டு போனான்?

'பேய்தான் துரத்துகிறதோ.. என்னவோ...'

ரஞ்சனின் வார்த்தைகள் காதில் எதிரொலித்தன. அவனது ஓட்டத்தைப் பார்த்து இவனுக்கு ஏன் அவ்வளவு சந்தோசம்? சந்தோஷைத் துரத்திய பேய் யார்..? ரஞ்சனா..?

சோணாச்சலத்தின் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. இதுவரை இல்லாத மாற்றம் ரஞ்சனிடம் தோன்றியிருந்ததை அவர் கவனித்தார்...



இரண்டு நாட்களாக.. அவன் சிகரெட்.. குடி.. இரண்டையும் தொடவில்லை. பத்து பேர் புடைசூழ டாடா சுமோவில் வலம் வருபவன். காரை எடுத்துக் கொண்டு.. தனியே வெளியே போய் வந்தான். அலட்சியமாய் உடை உடுத்திக் கொள்பவன். மடிப்புக் கலையாத உடைகளை அணிந்தான்.

இது போன்ற மாற்றங்கள் ரஞ்சனிடம் ஏற்பட வேண்டுமென்று தான் சோணாச்சலம் தவமிருந்தார். ஆனால் வருடக் கணக்காக அவர் புத்தி சொல்லியும் வராத மாற்றங்கள். இரண்டே நாளில் அவனிடம் வந்தது எப்படி...?

இதன் சூட்சுமத்தை அறியா விட்டால் அவர் சோணாச்சலமாக இருக்க முடியாது... அவரின் மன சஞ்சலத்திற்கு மற்றொரு காரணமும் இருந்தது...

அது கஸ்தூரி வேலை பார்த்த பள்ளி... அதன் தாளாளர் வீட்டுக்கு வெளி மாநிலத்தில் இருந்து விருந்தாளியாக வந்த பெண்ணிடம் ரஞ்சன் விளையாடி விட்டான். பாவம் அந்தப் பெண்... அவள் இப்போது சித்தப் பிரமை பிடித்து சிகிச்சையில் இருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தார் சோணாச்சலம். குடும்ப கௌரவத்தைக் கருத்தில் கொண்டு தாளாளர் போலீசுக்குப் போகாமல் விட்டு விட்டார். ஆனால் சோணாச்சலத்தை நேரில் பார்த்து சண்டை போட்டு விட்டுத்தான் போனார்.

''டேய்.. அப்பனும்.. மகனும் ஆடுகிற ஆட்டத்திற்கு ஒரு முடிவு வராதுன்னு கனவு காணாதீங்கடா. உங்களுக்கும் ஒரு நாள் அழிவு வரும். அதை நான் பார்க்கத்தான் போகிறேன். என் வயித்தெரிச்சல் உங்களை சும்மா விடாதுடா.''

சோணாச்சலத்தின் அடியாட்கள் பொங்கி எழ.. சோணாச்சலம் ஓர் பார்வையில் அவர்களை அடக்கி விட்டார்.. வந்திருப்பது பெரிய ஆள். அரசியல் பின்புலம் உள்ளவர். அதிகார வட்டத்தில் செல்வாக்கு வாய்ந்தவர். அவருடைய பள்ளியில் படித்த மாணவர்கள் பலர் இன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாகவும் ஐ.பி.எஸ். அதிகாரிகளாகவும் நாடு முழுவதும் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவரிடம் மோதுவது சோணாச்சலத்திற்கு ஆபத்து. 'இருந்திருந்து... இவர் வீட்டுக்கு வந்த பெண்ணையா... இவன் கை வைக்க வேண்டும்...'

அன்றுதான் சோணாச்சலம் ரஞ்சனை சென்னைக்கு அனுப்பிவிட முடிவு செய்தார். அந்தப் பள்ளியில் வேலை பார்க்கும் டீச்சர்.. இவருடைய வீட்டிற்கு எதிர் வீட்டிற்கே குடி வருகிறாள். அவள் வந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. அவருடைய மகனிடம் தலைகீழான மாற்றங்கள் தென்படுகின்றன. இது நல்லதிற்கான அறிகுறியா? இல்லை தீமைக்கான அறிகுறியா?

சோணாச்சலம் போனில் கஸ்தூரியின் பயோ டேட்டா என்னவென்று அறியும்படி உத்தரவிட்டார். எதிர் வீட்டைக் கண்காணிக்க இரண்டு அடியாட்களைப் போட்டார்.

கஸ்தூரியின் செல் போன் ஒலித்தது. மறுமுனையில் பொன்னுரங்கம் பேசினார்.

''உங்களுடைய பயோ டேட்டாவைத் தேடி ஸ்கூலுக்குள் ஆள் வந்து விட்டது கஸ்தூரி...''

''யார் வந்திருப்பது...?''

''நம் ஸ்கூல் பியூன் மாணிக்கத்தை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். முடியாது என்று சொன்னால் கொன்றே விடுவார்களாம். மாணிக்கம் சரியென்று சொல்லி.. அவர்கள் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு வந்து.. என் காலில் விழுந்து எல்லாவற்றையும் சொல்லி அழுகிறான்...''



''நீங்கள் என்ன சொன்னீர்கள்.''

''இவன் மாட்டேனென்று சொன்னால் இவனுக்கும் கஷ்டம். அவர்களும் வேறு ஆளை அனுப்பி வைப்பார்கள். அதனால் சரியென்று ஒத்துக் கொள்.. என்று சொல்லியிருக்கிறேன்.''

''தட்ஸ் குட் சார்.. இப்போது பீரோ பூட்டியிருக்கிறது. நாளைக்குள் எடுத்துக் கொண்டு வந்து தருகிறேன்னு சொல்லச் சொல்லுங்கள்.''

''நாளைக்குள் என்றால்...?''

''நாளைக்கு சாயந்திரம்...''

''சோணாச்சலம் கைக்கு உன் பயோடேட்டா போய் விட்டால். அவன் ஒரு நொடியில் உண்மையைக் கண்டு பிடித்து விடுவானே கஸ்தூரி.''

''அதற்குள்.. நான் வந்த வேலையை முடித்து விடுவேன்.''

''கஸ்தூரி...''

''ஆமாம் சார். நாளைக்கு சாயங்காலம். இந்த அன்ன வாசல் சுதந்திரக் காற்றை சுவாசிக்கப் போகிறது...''

''முடியுமா கஸ்தூரி...''

''முடிய வேண்டும்.''

கஸ்தூரி போனை அணைத்து விட்டாள். கோதண்டராமன் கவலையுடன் அவளைப் பார்க்க.. சிரித்தாள்.

''போனில் பேசிக் கொண்டிருந்ததை கேட்டுக் கொண்டிருந்தீர்கள் இல்லையா?''

''நாளைக்கு சாயங்காலத்திற்குள் நாம் வீட்டைக் காலி பண்ண வேண்டும்.''

''அது முடியாது என்று நினைக்கிறேன்...''

''ஏன் கஸ்தூரி..?''

''எதிர் வீட்டுத் தடியன்கள் தூங்காமல் காவல் நிற்பதைப் பார்த்தால் நாம் வீட்டைக் காலி பண்ண முடியாது... என்று தோன்றுகிறது...''

''வேறு என்ன செய்வது?''

''உடுத்தியிருக்கும் துணியோடு வெளியேறி விட வேண்டியதுதான். இங்கே எதுவும் அதிக விலையுள்ள.. சாமான்கள் மாட்டியிருக்கிறதா?''

''துணிகள் அதிகம் கொண்டு வரவில்லை... நகைகள் போட்டிருப்பதுதான். பணத்தை நாம் கையில் எடுத்துக் கொள்ளலாம். சாமான்கள் நம்முடையவை இல்லை...'' என்றாள் கிருஷ்ணவேணி.

''இதன் சொந்தக்காரர் இந்த சாமான்கள் போனால் கவலைப்பட்டுக் கொள்ள மாட்டார்.'' என்ற கஸ்தூரி.

''அப்பா... கையில் இருக்கும் பணத்தை மூன்றாகப் பிரியுங்கள். நாம் மூவரும் ஆளுக்கு கொஞ்சம் பணம் வைத்துக் கொள்வது நல்லது... நாளைக்கு காலையில் நான் ஸ்கூலுக்குப் போவது போல் வீட்டை விட்டு வெளியேறி விடுவேன். அம்மா கோவிலுக்குப் போவது போல் வெளியேறட்டும்... நீங்கள் காய்கறி வாங்க மார்க்கெட் போவது போல் வெளியேறி விடுங்கள்..'' என்று கோதண்டராமனிடம் கூறினாள்.

''எங்களையும் பாலோ பண்ணினால்..?'' கோதண்டராமன் கேட்டார்.



''நான் தகவல் கொடுத்து விடுகிறேன். உங்கள் இரண்டு பேருக்குமே தனித்தனியே கார்கள் வரும். கோவிலும் சரி.. மார்க்கெட்டும் சரி... ஜன சந்தடியுள்ள இடங்கள். நீங்கள் உங்களை பாலோ பண்ணுகிறவர்களின் கண்களில் மிளகாய் பொடியை தூவி விட்டு தப்பித்து விட வேண்டும்...'' என்று கஸ்தூரி கூறினாள்.

''நாம் மூவரும் எங்கே சந்திப்பது?'' கிருஷ்ணவேணி வினவினாள்.

''நாம் ஆளுக்கொரு திசையில்.. தனித்தனி கார்களில் பயணிக்கப் போகிறோம். ஆண்டவன் அருளால் நாம் மூவரும் உயிருடன் மீண்டால்... புறப்பட்ட இடத்தில் சந்திக்கலாம்..'' கஸ்தூரி முகத்தில் யோசனையுடன் கூறினாள்.

கிருஷ்ணவேணியும்.. கோதண்டராமனும் சன்னக் குரலில் பேசிக் கொண்டிருக்க.. கஸ்தூரி மாடியேறினாள். விளக்கைப் போடாமல் இருளில் கட்டிலில் அமர்ந்து செல்போனை உயிர்ப்பித்தாள்.

''கஸ்தூரி...'' மறுமுனையில் ரஞ்சனின் குரல் கேட்டது.

''தூங்கி விட்டீர்களா..?'' கஸ்தூரி குழைவான குரலில் கேட்டாள்.

''தூக்கம் எப்படி வரும்? நீ தூங்கவில்லையா...?''

''என்னவென்று தெரியவில்லை. எனக்கும் தூக்கும் வரவில்லை.''

''என் ஞாபகமா?'' ரஞ்சன் சிரித்தான்.

'உன் ஞாபகம் வந்தால் உறக்கம் எப்படி வரும்? கெட்ட கனவுகள்தான் வரும்..' என்று பல்லைக் கடித்துக் கொண்ட கஸ்தூரி...

''ஆமாம்..'' என்று கூறினாள்.

''நான் வேண்டுமானால் உன் ரூமிற்கு வரவா?''

''பார்த்தீர்களா? உங்கள் வேலையைக் காட்டுகிறீர்களே...''

''ஏய்.. உடனே கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்றால் வேண்டாம் என்கிறாய்... தனியே சந்திக்கலாம் என்றால் என் வேலையைக் காட்டுகிறேன் என்கிறாய்.. நான் என்னதான் பண்ணுவது?''

''ரஞ்சன்.. எனக்கும் உங்களைத் தனியே சந்திக்க வேண்டுமென்று ஆசையாகத்தான் இருக்கிறது...''

''எங்கே சந்திக்கலாம்.. எப்போது சந்திக்கலாம்.''

''நாளைக்குச் சந்திக்கலாமா?''

''நிஜமாகவா சொல்கிறாய்?''

''நிஜமாகத்தான் சொல்கிறேன். ஆனால் நாம் சந்திக்கும் இடத்தில் ஆட்களின் தொந்தரவு இருக்கக் கூடாது...''

''மலைக்குப் போகலாமா?''

''ம்ம்.. போகலாமே...''

''நாளைக்கு சாயங்காலம் போவதென்றால் நீ பயந்து விடுவாய்.''

''சாயங்காலம் ஏன் போக வேண்டும்..? காலையிலேயே போகலாம்.''

''உன் ஸ்கூல் என்ன ஆவது?''

''லீவ் போட்டு விடுகிறேன்.''

''இது என்ன கஸ்தூரி.. ஆச்சரியமாக இருக்கிறது. என்னவோ டி.வி. விளம்பரத்தில் வருவதுபோல் 'கண்ணா லட்டு திங்க ஆசையா' என்று அள்ளி வீசுகிறாயே.. நிஜமாகவே என்னுடன் தனியாய் மலையேறி வருவாயா?''



''வருவேன்...''

''காலையில் எப்படி நீ அங்கு வருவாய்.. மலை கொஞ்சம் தூரத்தில் இருக்கிறது. ஆட்டோவில் வர முடியாது.''

''ஏன் உங்கள் காரில் கூட்டிப் போக மாட்டீர்களா...''

''என்னடா இது... 'கண்ணா.. இரண்டாவது லட்டு திங்க ஆசையா' என்று கேட்கிறாய்? தெருமுனையில் காத்திருக்கவா..?''

''வேண்டாம். பஸ் ஸ்டாப் அருகே ஏறிக் கொள்கிறேன்.''

''அங்கே ஆட்கள் இருப்பார்களே...''

''அதுதான் எனக்கு வேண்டும்...'' கஸ்தூரி செல்லை அணைத்தாள்.

## 16

பகலில் தோன்றும் நிலவானாய்...
பார்வைக்கு எட்டாக் கனியானாய்...
எழுத்துக்கள் இல்லாத கதையானாய்...
எங்கோ எனைவிட்டுப் போய் விட்டாய்...
– நீங்காத என் நினைவுகள் –

கஸ்தூரி மிகத் தெளிவாகத் திட்டமிட்டாள். அழகாக வலை விரித்தாள். வாழ்நாள் பூராவும் பெண்களையும்..

அவர்களைக் காப்பாற்ற வந்தவர்களையும், தட்டிக் கேட்ட வர்களையும் வேட்டையாடிப் பழக்கப்பட்ட ரஞ்சன் தானாக வலையில் சிக்கினான்.

''ரஞ்சன்.. நீங்கள் எப்போதும் வரும் உங்கள் அப்பாவின் கார்களில் ஒன்றில் வராமல் வேறு கார்களில் வர முடியுமா?''

''ஏன்டா..?''

''உங்கள் வீட்டுக் கார்கள் என்றால் உங்கள் ஆட்களில் யாராவது ஒருவர் அதைப் பார்த்துவிட்டு உங்கள் அப்பாவிற்கு தகவல் சொல்லுவார்கள். அப்புறம் தேவை யில்லாமல் பிரச்னை வரும்.''

ரஞ்சன் யோசித்தான். அது உண்மையென்று அவனுக் குப் பட்டது. சந்தோஷ் காதலிக்கும் பெண்ணை தான் காதலிப்பது உடனடியாக அப்பாவிற்குத் தெரியக்கூடாது என்று நினைத்தான். சந்தோஷின் மேல் தன் அப்பா விற்கு இருந்த மதிப்பும்.. வாத்சல்யமும் அவனுக்குத் தெரியும்.

''நீ சொல்வதும் சரிதான். நான் வேறு காரில் வருகிறேன்.''

''அதை உங்கள் வீட்டிற்குத் தெரியாமல் எப்படிச் செய்வீர்கள்?''

''அதை நான் பார்த்துக் கொள்கிறேன்...''

''ஓகே.. அப்போது நாளை நாம் மலையேறப் போகி றோம்...''

''ஆமாம்..''

கஸ்தூரி செல்லை அணைத்து விட்டு இருட்டில் எழுந்து லேசாக பால்கனிக் கதவைத் திறந்து பார்த் தாள்.



எதிர் வீட்டு வாசலில் இருந்த வாட்ச்மேனுக்கு அருகில் இரண்டு சேர்களைப் போட்டுக் கொண்டு அந்த தடியன்கள் அமர்ந்து இருந்தார்கள். பேச்சு பேச்சாக இருக்க அவர்களது பார்வை கஸ்தூரியின் வீட்டின் மேல் பதிந்து இருந்தது.

'சோணாச்சலத்தின் டிரெயினிங் என்றால் சும்மாவா?'

கஸ்தூரி மனதிற்குள் மெச்சிக் கொண்டு பால்கனிக் கதவை மூடினாள்.

'இவன் மட்டும் மிலிடிரியில் இருந்திருந்தால்.. பெரிய போர் வீரனாக வந்திருப்பான். இவனது புத்தி சாலித்தனத்தை சட்ட விரோதமான செயல்களுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான்.'

கஸ்தூரி படுத்துக் கண் மூடினாள். எதிர் வீட்டு வாசலில் தூக்கம் வராமலிருக்க எப்.எம். கேட்கும் வாட்ச்மேனின் ரேடியோவிலிருந்து வந்த பாடல் சத்தம் காற்றோடு கலந்து கஸ்தூரியின் காதுகளில் நுழைந்தது.

''கண்ணின் மணியாக தங்கை நலமாக
காணும் உறவல்லவா...?
பொன்னைக் கொடுத்தேனும் பூவைக்கொடுத்தேனும்
போற்றும் உறவல்லவா...?
தானாட மறந்தாலும்
சதையாடும் என்பார்கள்..
தானாத பாசத்தில்
'...அண்ணா...' என்றழைப்பார்கள்.
எங்கே இருந்தாலும் உன்னை மறவாத
உள்ளம் இதுவல்லவோ... அண்ணா...!
உள்ளம் இதுவல்லவோ...''

பி.சுசீலாவின் தேன் குரலில் சோகம் கலந்து பாடிக் கொண்டிருந்தார். கஸ்தூரி கட்டிலில் எழுந்து அமர்ந்தாள். பாடலில் கரைந்தவளாய் கண்ணீர் வடிய சிலையாய் அமர்ந்திருந்தாள்.

''கோவில் விளக்கொன்று..

கூடப் பிறப்பென்று...

பாடும் குரல் கேட்குது... அண்ணா..

பாடும் குரல் கேட்குது...''

கஸ்தூரியின் மனதில் தனசேகரனின் முகம் தோன்றியது.

''அண்ணா...''

''என்ன கஸ்தூரி...?''

''ஒன்றுமில்லை.. சும்மா.. சும்மாதான் கூப்பிட்டுப் பார்த்தேன்...''

''என்னவோ நான் கைநழுவிப் போய்விடப் போவது போல் கூப்பிட்டுப் பார்க்கிறாயே. நான் உன்னருகிலே தானே இருக்கிறேன்?''

இல்லையே... இன்று அவன் அருகில் இல்லையே... கை நழுவிப் போய் விட்டானே... கஸ்தூரி... கண்ணீர் விட்டபடியே தூங்கி விட்டாள்.

அதிகாலையில் பறவையின் ஒலியில் எழுந்தவள். லேசாக பால்கனிக் கதவைத் திறந்து பார்த்தாள். எதிர் வீட்டு வாசலில் கடோத்கஜன்கள் இரண்டு பேரும் அசையாமல் அமர்ந்திருந்தார்கள். கதவை இறுக மூடி விட்டுக் குளித்து உடை மாற்றிக் கீழே இறங்கி வந்தாள். மற்ற இருவரும் தயாராக இருந்தனர்.



''சாப்பிடுவோமா?''

''ம்ம்...''

அதிகப் பேச்சில்லாமல் சாப்பாடு முடிந்தது. பணத்தைப் பிரித்து மூவரும் ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துக் கொண்டனர்.

''அம்மா.. தேங்காய் பழக் கூடையை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்குள் முக்கியமாய் எடுத்துப் போக வேண்டியதை மறைவாக வைத்துக் கொள்ளுங்கள். அப்பா.. நீங்கள் காய்கறிப் பையை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்புறம் அப்பா.. நீங்கள் கடைசியாக வெளியேறுவது நல்லது. செல்போனை மறந்து விடாதீர்கள். உங்களுக்கான காரின் அருகே போகும் போது மற்றவர்களின் பார்வையில் படாமல் ஏறிக் கொள்ளுங்கள்.''

மூவரும் எழுந்தார்கள். கஸ்தூரி கை நீட்ட.. மற்ற இருவரும் அவள் கரத்தின் மேல் தங்கள் கரங்களை வைத்தார்கள். மூவரும் ஒரே குரலில் கூறினார்கள்.

''எடுத்த காரியத்தை முடிப்போம்... எது வந்தாலும் ஜெயிப்போம்... கடமையே முக்கியம்.. ஜெய்ஹிந்த்.''

மூவரும் பிரிந்தார்கள். கஸ்தூரி தோளில் ஹேண்ட் பேகுடன்.. கையில் நோட் புக்குடன் இறங்கித் தெருவில் நடந்தாள். வாசலில் நின்றிருந்த கடோத்கஜன்களில் ஒருவன் சிறிது இடைவெளி விட்டு அவளைத் தொடர்ந்தான். தெருமுனை வீட்டு வாசலில் வழக்கம் போல் காமுப் பாட்டி நிற்க கஸ்தூரி சிநேகிதமாய் அவளைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்னடியம்மா.. இவ்வளவு சீக்கிரமாய் வேலைக்குக் கிளம்பிட்டாய். இன்னும் நாழியாகவில்லையே...''

''அம்மா கோவிலுக்குப் போகனும்னாங்க. அப்பா மார்க்கெட்டுக்குக் கிளம்பினார். சரி... நாம் ஸ்கூலுக்கு சீக்கிரம் போய் விடலாமென்று நினைத்துக் கிளம்பி விட்டேன்.''

''அதுக்காக இவ்வளவு சீக்கிரம் யாராவது போவாளோ. ஆத்துக்குள் வந்து ஒரு கப் காபி குடிச்சுட்டுப் போயேன்...''

மாறுவேடம் போட மறைவிடம் தேடிக் கொண்டிருந் தவளின் மனதில் சந்தோசம் முகிழ்ந்தது.

''பேஷா.. வருகிறேன் பாட்டி...''

''உள்ளே வாடியம்மா...''

காமுப்பாட்டி கொடுத்த காபியை குடித்துவிட்டு எழுந்த கஸ்தூரி... தயங்கி பாட்டியைப் பார்த்தாள்.

''என்னடியம்மா வேணும்?''

''ஒண்ணுமில்லை பாட்டி... பாத்ரூம் எங்கே...''

''தோ... அங்கேயிருக்கு.. போவதற்கு முன்னால சித்த ஒரு விசயத்தை கேட்டு விட்டுப் போ... அந்த ரஞ்சன் கூடவெல்லாம் பழக்கம் வச்சுக்காதேம்மா.. குடும்ப பொம்பளைகள் பேசுகிற அளவுக்கு அவன் கௌரவ மானவன் இல்லை. காசு பணமெல்லாம் அநியாய வழியில் வந்தது. அதை வைத்து எல்லாம் மனுஷாளை எடை போடக்கூடாதும்மா. நீ அசலூர்காரி... சூது வாதில்லாதவள்.. நான் பெரிய மனுஷி சொல்றேன் கேட் டுக்க...''

'நான் சூதும்.. வாதும் நிறைந்தவள் பாட்டி.. வாது புரியத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்..' கஸ்தூரி மனதிற்குள் சொல்லிக் கொண்டு வெளியே அப்பாவி யாய் புன்னகை புரிந்தாள்.



''அதற்கென்ன பாட்டி.. நீங்க பெரியவங்க.. நீங்க சொன்னால் சரியாகத்தான் இருக்கும். இனி ஜாக்கிரதை யாய் இருக்கிறேன்.''

கஸ்தூரி பாத்ரூமிற்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள். ஹேண்ட் பேகிலிருந்த நரைத்த முடி விக்கை எடுத்து வெளியில் வைத்தாள். பின்னலை சுருட்டிக் கொண்டையிட்டவள். நரைத்த தலை விக்கை பொருத்திக் கொண்டாள். உடுத்தியிருந்த சேலையை அவிழ்த்தாள். அது இரு பக்கமும் வேறு வேறு வண்ணங் களும்.. வேறு டிசைன்களும் உள்ள சேலை.. அதன் உள் பக்கத்தை வெளிப்பக்கமாக வைத்து.. அம்மாமி போல் சேலையைக் கட்டி இழுத்துச் செருகினாள். மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டாள். காதணி களில் இருந்து கை வளையல்கள் வரை மாற்றிப் புதிதாக கைப்பையில் வைத்திருந்ததை போட்டுக் கொண்டாள். கண்ணாடியில் பார்த்தாள். நரைத்த முடியைக் கொண்டை போட்ட அறுபது வயது பாட்டி ஒருத்தி தெரிந்தாள். இழுத்துச் செருகிய சேலையுடன் ஹேண்ட் பேக்கில் இருந்த பிளாஸ்டிக் பையை வெளியே எடுத்துப் பிரித்து அதற்குள் ஹேண்ட் பேகை போட்டுக் கொண்டு முழு வதுமாக அடையாளம் மாறியவள் மெல்ல பாத்ரூமி லிருந்து எட்டிப் பார்த்தாள். காமுப்பாட்டி காலி காபி தம்ளர்களுடன் சமையலறை நோக்கிப் போவது தெரிந்தது. விருட்டென்று வெளியேறி வாசல்படி இறங் கினாள்.

எதிரே இருந்த வீட்டின் வாசலில் பராக்கு பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்த கடோத்கஜனை இயல் பாகக் கடந்து சென்றாள். காமுப் பாட்டியின் வீட்டி

லிருந்து யாரோ ஒரு பாட்டி போகிறாள் என்ற எண்ணத்துடன் அவன் கஸ்தூரியை விட்டு விட்டு காமுப் பாட்டியின் வீட்டு வாசலை பார்த்துக் கொண்டிருந்தான்.

பஸ் ஸ்டாப் அருகே சென்றதும் கஸ்தூரி செல் போனை எடுத்துப் பேசினாள்.

''எங்கே இருக்கிறீர்கள்?''

''நீ எங்கே இருக்கிறாய்?''

''இங்கேதான்.. நீங்கள் கார் நம்பரைச் சொல்லுங்கள்.''

ரஞ்சன் சொல்லிய கார் அருகேதான் நின்று கொண்டிருந்தது... இயல்பாய் செல்போனை அணைத்தவள், கார் கதவைத் திறந்து அவனருகே அமர்ந்தாள்.

மூடியிருந்த கார் கண்ணாடிக் கதவுகளின் உள்ளே கஸ்தூரியைப் பார்த்த ரஞ்சன் திகைத்தான்.

''ஏய்... கிழவி.. யார் நீ...''

''ரஞ்சன் நான்தான் கஸ்தூரி.. காரைக் கிளப்புங்கள்...''

''கஸ்தூரி, நீயா.. இது என்ன வேஷம்?''

''வேறு என்ன செய்வது? உங்கள் அப்பா காலையில் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை மிரட்டினார்.''

''அப்பாவா.. உன் வீட்டிற்கா.. என்னால் நம்ப முடியவில்லையே.. நான் காலையிலேயே சீக்கிரமாய் கிளம்பி விட்டேன். கார் மாற்றி.. என் பிரண்டின் வீட்டிலிருந்த அவனின் காரை எடுத்துக் கொண்டு வர நேரமாகி விட்டது.''

''உங்களை பாலோ பண்ணி யாரும் வரவில்லையா?''

''வந்தான்.. நான் என் பிரண்டின் வீட்டிற்குள் காரை விட்டு விட்டு அவன் காரில் எஸ்கேப் ஆகி விட்டேன். அவன் என் பிரண்ட் வீட்டு வாசலில் நிற்கிறான்.''



''தட்ஸ் குட். என்னையும் பாலோ பண்ணினார்கள். நான் காமுப்பாட்டியின் வீட்டிற்குள் போய் மாறு வேடம் போட்டுக் கொண்டு எஸ்கேப் ஆகி விட்டேன்...''

''ஏன் அப்பா இப்படிச் செய்கிறார்? நான் அவரிடம் நம் காதலைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டும் கஸ்தூரி...''

''நல்லவேளை... சொல்லவில்லை.''

''ஏன்?''

''காலையில் எங்கள் வீட்டிற்கு வந்து எதற்கு சத்தம் போட்டார் என்று நினைக்கிறீர்கள்? நான் உங்கள் வீட்டிற்கு வந்திருந்த விருந்தாளி ஒருவனை ஏமாற்றி விட்டேனாம்...''

''யாரை சந்தோஷையா...?''

''ஆமாம்.. அந்தப் பெயரைத்தான் சொன்னார். அவன் யாரென்றே எனக்குத் தெரியாது ரஞ்சன்... அவன் நல்லவனாம். நான் அவனைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமாம். துப்பாக்கியைக் காட்டி மிரட்டுகிறார் ரஞ்சன்...''

கஸ்தூரி பேசிக் கொண்டே மூக்குக் கண்ணாடியையும்... விக்கையும் கழற்றினாள். பின்னலை அவிழ்த்து விட்டு... தலையைச் சரி செய்து கொண்டாள். கடைக் கண்ணால் ரஞ்சனின் முகத்தைப் பார்த்தாள். அது பயங்கரமாக மாறியிருந்தது.

'அப்பா... அப்படியா சொன்னார்...? நிச்சயம் சொல்லியிருப்பார். அவருக்கு எப்போதுமே என்னை விட சந்தோஷ்தானே உசத்தி... அதற்காக தன் மகனின் காதலியிடம் வந்து சந்தோஷை மணக்கச் சொல்லலாமா...?'

ரஞ்சன் பற்களைக் கடித்துக் கொண்டான்.

# 17

நேற்றுப் போல் இருக்கிறது...

நீ இறந்து கிடந்த தினம்...

காற்றுப் போன பலூன்போலே...

கலங்கிப் போனேன் அந்த நாளில்...

– நீங்காத என் நினைவுகள் –

கஸ்தூரி வீட்டை விட்டு வெளியேறிய சற்று நேரத்தில் கிருஷ்ணவேணி.. தலை குளித்து... முடியை விரிய விட்டு.. கூந்தலின் நுனியில் சிறு கோடாலி முடிச்சிட்டு.. நெற்றியில் குங்குமத்துடனும்.. கையில் பூஜைக் கூடையுடனும்.. பட்டுப் புடவையுடுத்தி மங்கள கரமாய் வெளியில் வந்தாள். அவள் தெருவில் இறங்கி நடக்க ஆரம்பிக்க வாசலில் நின்றிருந்த மற்றொருவன் அவளைத் தொடர்ந்தான். அதைக் கவனிக்காதவள் போல் கஸ்தூரி... கோவிலின் உள்ளே சென்று விட்டாள். கோவில் வாசலில் அவன் காத்திருந்தான்.

கிருஷ்ணவேணியின் செல்போன் ஒலித்தது.

''என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்.''

''சாமி கும்பிட்டுக் கொண்டிருக்கிறேன்...''

''கோவிலின் இன்னொரு வாசல் வழியே வெளியே வந்து விடுங்கள். கார் அங்குதான் நிற்கிறது...''

''சரி...''

கிருஷ்ணவேணி கோவிலின் பக்க வாசல் வழியே வெளியேறினாள். கார் நின்று கொண்டிருக்க அருகே



சென்று அவசரமாய் ஏறி உள்ளே அமர்ந்தாள். கார் கிளம்பியது.

கஸ்தூரி மெதுவான குரலில் பாட.. ரஞ்சன் உற்சாக மானான். உல்லாசமாய் கஸ்தூரியை பார்த்துக் கொண்டே காரை ஓட்டினான்.

''என் மனது ஒன்றுதான்..

உன் மீது ஞாபகம்...

வான் நிலவு ஒன்றுதான்.''

''நிஜமாகவே நான் கொடுத்து வைத்தவன் தான் கஸ்தூரி. உன் மனதில் நான் மட்டும்தான்... இது ஏன் அப்பாவிற்குப் புரியவில்லை...''

''அவர் உங்களைப் பற்றி நல்ல விதமாகச் சொல்ல வில்லை ரஞ்சன்.''

''அவர் அப்படித்தான் கஸ்தூரி.. எப்போதுமே.. சந் தோஷைத்தான் உயர்த்தியாக நினைப்பார்.. பேசுவார்...''

''நீங்கள் பாவம்தான் ரஞ்சன்...''

பாவத்தின் மொத்த உருவமான அவனைப் பார்த்து பல்லைக் கடித்துக் கொண்டே கஸ்தூரி கூறினாள்..

அதே நேரம்.. கோதண்டராமன் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு... காய்கறி வாங்கக் கொண்டு போன பையை கக்கத்தில் மடித்து வைத்துக் கொண்டு தெரு வில் இறங்கி.. விச்ராந்தியாய் கால் வீசி நடந்தார்.. சோணாச்சலத்தின் வீட்டிலிருந்து ஒருவன் வெளிப்பட்டு அவரைப் பின் தொடர ஆரம்பித்தான்.. அதைக் கண்டும் காணாதவர் போல் நடந்த கோதண்டராமன் எதிரே வந்தவரைப் பார்த்துப் புன்னகைத்தார்..

''என்ன கோதண்டராமன் சார்.. காலையிலே ஜாலியாய் கால் வீசி நடக்கிறீங்க...?''

''காய்கறி வாங்கப் போகிறேன் ஓய்.. பொண்ணு ஸ்கூலுக்குப் போயிட்டா.. பெண்டாட்டி கோவிலுக்குப் போயிட்டா... நாம மட்டும் சும்மா வீட்டைக் காவல் காக்கிறதான்னு காய்கறி வாங்கக் கிளம்பிட்டேன்..''

''உமக்கென்ன... ஜாலிதான்.. ஜமாயும்..''

கோதண்டராமன் மார்க்கெட்டிற்குள் சென்று ஜனத் திரளில் கலக்க.. தொடர்ந்து வந்தவன் மார்க்கெட் வாசலில் நின்று கொண்டான்.

'உள்ளே போன பெரிசு.. இந்த வழியாகத்தானே வரணும்..'

ஆனால் பெரிசு மார்க்கெட்டின் மறு கோடியிலிருந்த காரில் ஏறித் தப்பித்து விட்டது.. அதை அறியாமல் அவன் அங்கே கால் கடுக்க நின்றான்.

கஸ்தூரியும்.. ரஞ்சனும் சென்ற கார் மலையடிவாரத்தில் நின்றது.. கஸ்தூரி இறங்கி மலையை அண்ணாந்து பார்த்தாள்...

மந்திரி மகன் திரைப்படத்தில் வில்லன் தன் மனைவியை மலையுச்சியிலிருந்து தள்ளி விடத் தீர்மானித்து

வாராய்... நீ வாராய்...

போகுமிடம் வெகுதூரமில்லை...

நீ வாராய்... என்று பாடிக் கொண்டே அழைத்துக் கொண்டு போனது கஸ்தூரிக்கு நினைவு வந்தது. இப்போது ரஞ்சனைப் பார்த்து 'வாராய்...' என்று பாடினால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்த்துக் கொண்டே அவனுடன் மலையேற ஆரம்பித்தாள்..



''நீங்கள் இங்கே அடிக்கடி வருவீர்களா ரஞ்சன்...''

''ம்ம்.. நிறைய முறை வந்திருக்கிறேன்...''

''எதற்காக...?''

ரஞ்சனின் முகம் மாறியது... என்ன சொல்வது.. கொலை செய்ய.. பெண்களின் கற்பைச் சூறையாடவென்று வந்திருக்கிறேன் என்று சொல்வதா..?

''இப்போது அது எதற்கு கஸ்தூரி...?''

''எதற்கா...? அதற்காகத் தானே இத்தனை தூரம் வந்து இந்த மலையுச்சியில் நிற்கிறேன்...'' கஸ்தூரியின் குரல் மாறியிருந்தது...

''என்ன சொல்கிறாய் கஸ்தூரி...?'' ரஞ்சன் புரியாமல் வினவினான்.

''இங்குதானே... மாதவி என்ற பெண்ணைக் கதறக் கதறக் கொன்றாய்...?'' கஸ்தூரியின் குரலில் மரியாதை மறைந்திருந்தது.

''கஸ்தூரி...'' ரஞ்சன் அதிர்ச்சியுடன் கூவினான்.

''இங்குதானே... மாதவியின் கொலையைப் பற்றி விசாரிக்க வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் தனசேகரனைக் கொன்றாய்?''

ரஞ்சனின் மனதில் எச்சரிக்கை மணியொலித்தது.. அவன் முகம் மாறியது...

''யார்... நீ...''

''நானா... நான் உன் உயிரை எடுக்க வந்த காளி... அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் தனசேகரனின் தங்கை... பத்மாவதி...''

''நீ கஸ்தூரி என்றது...?''

"பொய்..."

"நீ ஸ்கூல் டீச்சர் என்றது...?"

"பொய்..."

"என்னைக் காதலிக்கிறேன் என்றது...?" ரஞ்சனின் குரலில் ஏமாந்த ஆக்ரோஷம் இருந்தது...

கஸ்தூரி நிதானமாக தன் இடுப்பில் செருகியிருந்த துப்பாக்கியை எடுத்தாள்.. அவனைக் குறி பார்த்தவாறு

"பொய்..." என்று சொன்னவள்... சுட்டாள்...

ரஞ்சனின் குண்டடிபட்ட உடல் மலையிலிருந்து உருண்டு கீழே சாலையை நோக்கி விரைந்தது.

கஸ்தூரி என்ற பத்மாவதி... அமைதியாக வானத்தை அண்ணாந்து பார்த்தாள்... எங்கோ... காற்றில் கலந்து நின்ற தனசேகரனின் ஆத்மாவிடம் கூறினாள்...

"முடித்து விட்டேன்... பகை முடித்து விட்டேன்.. நீ விட்டுச் சென்ற பணியை நான் நிறைவேற்றி விட்டேன்... நிம்மதியாக இரு..."

மலை இறங்கியவள்... சாலைக்கு வந்ததும் ஒரு கார் அவளருகே வந்து நின்றது.. கார் கதவு திறந்தது.. அதன் டிரைவர் சீட்டிலிருந்தவன் வினவினான்..

"என்ன ஆனது?"

"முடித்து விட்டேன்..."

"கிரேட்.. யு டிட் இட்..."

"இட் இஸ் மை டியுட்டி..."

"வெல்.. காரில் ஏறுங்கள்..."

கார் சென்னையை நோக்கிப் பறந்தது... சற்று நேரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக... கோதண்டராமன் வந்த



காரும்.. கிருஷ்ணவேணி வந்த காரும் அவர்கள் சென்ற காரைத் தொடர்ந்தன.

காமுப்பாட்டியின் வீட்டின் முன் கால் கடுக்க நின்று கொண்டிருந்தவனைக் கவனித்த காமுப்பாட்டி அவனை அருகே அழைத்தாள்...

"யாருப்பா நீ..."

"ஒன்னுமில்லை பாட்டி... இந்த டீச்சரம்மா உங்க வீட்டுக்குள்ள வந்ததே... அது எங்கே...?"

"அவள் அப்பவே போயிட்டாள் போல.. எங்க ஆத்தில் இல்லையே"

கேட்டவன் வெலவெலத்து விட்டான்... பள்ளிக்கு ஓடும் முன்னர் சோணாச்சலத்தின் காதினில் விசயத்தைப் போட்டு விட்டுப் போகலாம் என்று அங்கு ஓடினான்..

"என்னடா.. ஏன் தலை தெறிக்க ஓடி வருகிறாய்...?"

"ஐயா... அந்த டீச்சரம்மா என் கண்ணில் மண்ணைத் தூவிட்டு போயிடுச்சய்யா..."

"என்னடா சொல்றே...?"

அவன் விவரமாகக் கூறினான்.. சோணாச்சலம் அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

"எடுபட்ட நாயே... அந்தக் கிழவிதான் கஸ்தூரிடா..."

சோணாச்சலம் அவசரமாய் மற்ற இருவரின் செல் போன்களுக்கும் தொடர்பு கொண்டு அலறினார்..

"போங்கடா.. உள்ளே போய் தேடுங்கடா..."

அவர் போட்ட சத்தத்தில் ஆடிப் போனான் கிருஷ்ண வேணியைத் தொடர்ந்து சென்ற ஆள்.. அவசரமாய்

கோவிலுக்குள் சென்று சல்லடை போட்டுத் தேடினான்.. அவள் அகப்படவில்லை.. மார்க்கெட்டிற்குள் கோதண்ட ராமனைத் தேடியவனின் நிலையும் அதுதான்...

இருவரும் திரும்பி சோணாச்சலத்தின் முன் கைகட்டி நின்றனர்.. சோணாச்சலம் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு எழுந்த வேகத்தில் அவர்களை அறைந்து தள்ளினார்..

''ஒரு காரியத்தை ஒழுங்காய் செய்ய முடியவில்லை.. நீங்கள் எல்லாம் எதுக்குடா என்கிட்ட வேலைக்கு இருக்கறீங்க.. தண்டச்சோற்று தடியன்களா... அவன் எங்கேடா.. அந்தப் பள்ளிக்கூடத்து பயோடேட்டாவை கொண்டு வர்ரதாச் சொல்லி விட்டுப் போனவன்..?''

''இதோங்கய்யா...''

''நீ ஒருத்தனாவது உருப்படியாய் வேலை செய்தாயே.. சந்தோசம்..''

பயோடேட்டாவை படித்து விட்டு காரைக்குடிக்கு போன் போட்டார்.

''யாரு குப்புசாமியா? நான் சோணாச்சலம் பேசறேன்.. எனக்கு ஒரு ஆளைப் பற்றிய விவரம் வேண்டும்... அட்ரஸை குறித்துக் கொள்...''

சற்று நேரத்தில் அவருக்குப் பதில் வந்துவிட்டது.

''என்னது... அப்படி ஒரு ஆள் இல்லவே இல்லையா? நினைத்தேன்... என் சந்தேகம் சரியாகப் போய்விட்டது.. நீ போனை வை...''

சோணாச்சலம் அவசரமாய் எழுந்தார்..

''கடைசியில் ஒரு பெண் என்னை ஏமாற்றி விட்டாளே... சந்தேகமே.. வராமல் எதிர் வீட்டிலிருந்த மூவரும் தனித்தனியே கிளம்பிப் போய் விட்டார்களே.. என்ன கெட்டிக்காரத்தனம்..? அவர்கள் யார்? அவர்களுடைய நோக்கம் என்ன...?''



சோணாச்சலம் எதிர் வீட்டை நோக்கி நடந்தார்.. அடியாள்கள் பின் தொடர்ந்தனர்.

''உடைங்கடா.. பூட்டை...''

பூட்டு உடைபட்டது.. உள்ளே சென்று தேடிப் பார்த்தார்.. ஒரு வீட்டில் புழங்கப்படும் சாமான்கள்.. துணிகள்தான்.. வேறு ஆதாரம் சிக்கவில்லை.. யோசனையுடன் வெளிவந்தவர்..

''ரஞ்சன் எங்கேடா..?'' என்று கேட்டார்.

''காலையில் காரை எடுத்துக்கிட்டுப் போனாருங்க ஐயா.. இன்னும் வரவில்லை..''

''என்னது.. காரை எடுத்துக்கிட்டுப் போனானா? நீங்கள் எல்லாம் என்ன வேலையை கிழித்துக் கொண்டு இருந்தீர்கள்? யாரும் துணைக்கு போகவில்லையா?''

''அப்படியெல்லாம் விட்டு விடுவோமா ஐயா.. நீங்கள் சொன்னபடி நம்ம ரங்கன் புல்லட்டில் பாலோ பண்ணிக்கிட்டுப் போனான்...''

''அவனுக்குப் போனைப் போடு...''

சோணாச்சலம் ரங்கனிடம் போனில் பேசினார்.. மறுமுனையில் வந்த பதிலைக் கேட்டு ஆடிப் போனார்..

''என்னது.. இவ்வளவு நேரமாய் பிரண்ட் வீட்டிலிருந்து ரஞ்சன் வெளியே வரவே இல்லையா?.. ஏங்கடா... இன்னைக்கு எல்லோரும் என் உயிரை வாங்குறதுன்னு ஒரு முடிவோட இருக்கிங்களா ஓடுடா நாயே... உள்ளே போய் ரஞ்சன் இருக்கானான்னு பாரு...''

சோணாச்சலம் பதட்டமாக கத்த அந்த ஆள் ரஞ்சனின் நண்பனின் வீட்டிற்குள் ஓடினான்.. அடுத்த சில நிமிடங்களில்

"ஐயா.. ரஞ்சனய்யா கார் இங்கே நிற்குதுங்க.. அவர் தனியாக அவருடைய காதலியைப் பார்க்கப் போகனுமின்னு சொல்லி அவரோட பிரண்டோட காரை எடுத்துக்கிட்டுப் போனாராம்.."

சோணாச்சலத்தின் கையிலிருந்த போன் நழுவியது.

## 18

தோற்றுப் போய் உயிர் விட்டாயோ...?

துயருண்டு மாண்டாயோ...?

காற்றோடு கலந்தாயோ...?

கானகத்தில் மறைந்தாயோ...?

– நீங்காத என் நினைவுகள் –

மற்ற மூவரும் மறைந்தது போல் ரஞ்சனும் மறைந்திருக்கிறான் எனில் அவர்கள் மூவரும் வந்தது அவனைக் குறி வைத்தா...?

"டேய்.. அவனுடைய பிரண்டின் கார் நம்பர் என்ன.. கலர் என்ன.. அடையாளம் என்னன்னு விசாரி... அன்னவாசலில் இருந்து வெளியே போகிற எல்லாப் பாதைகளிலும் எல்லோரும் தேட ஆரம்பிங்கடா..."

அடுத்த ஒரு மணி நேரத்திற்குள்.. மலையடிவாரத்தில் கார் கண்டு பிடிக்கப்பட்டது... ரஞ்சனின் சடலமும்தான்...



அவனுடைய உடலைத் தூக்கி காரில் போட்டுக் கொண்டு சோணாச்சலத்திடம் வந்தவர்கள்.. எப்படி விசயத்தைச் சொல்வது என்று தெரியாமல் பயந்து நின்றனர்.

"என்னடா.. ரஞ்சன் எங்கே...?"

"காரில்..."

வேகமாய் சென்று கார் கதவைத் திறந்து பார்த்த சோணாச்சலம் அடிவயிற்றிலிருந்து அலறினார்.. அடுத்த கொஞ்ச நேரத்தில் அன்னவாசல் மக்கள் அங்கு திரண்டனர்.

"போலீசுக்கு தகவல் சொல்லலையா ஐயா.." ஒருவர் பணிவுடன் கேட்டார்.

"வேண்டாம்.."

சோணாச்சலம் மறுத்துவிட்டார்.. ஒரு வார காலமும் அவர் வீட்டில் உறவினர்கள் நிறைந்து இருந்தனர்.

"சந்தோஷ் பிஸினெஸ் விசயமா கனடா போய்விட்டான் அண்ணா.. அதனால்தான் அவனால் வர முடியவில்லை..."

சென்னையிலிருந்து துக்கம் விசாரிக்க வந்து அழுது புரண்டு ஓய்ந்த பின் ஜெயந்தி கூறினாள்.

"அப்படியா...?"

"அந்த மேனாமினுக்கி யார் அண்ணா..?"

"விசாரித்துக்கிட்டு இருக்கேன்..."

"உங்களுக்கு போய் யார் எதிரியாய் இருப்பாங்க.. நீங்க உத்தமராச்சே..."

ஜெயந்தி பாசத்தில் புலம்ப.. சந்தானத்தின் பார்வை சோணாச்சலத்தை துளைத்தது.

'உனக்கா எதிரி இல்லை.. நீ பண்ணிய அநியாயத்திற்கு இந்த ஜில்லா முழுவதும் உனக்கு எதிரி இருப்பாங்களே..'

உறவினர்கள் போன பின் சோணாச்சலம் வெளியே கிளம்பினார்.. அவரது கார்.. நான்கைந்து கார்கள் பின் தொடர.. வீனஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலை பள்ளி யின் தாளாளர் வீட்டிற்குள் நுழைந்தது.

சோணாச்சலம் வீட்டிற்குள் நுழைந்து சோபாவில் தோரணையாய் அமர... அவரின் அடியாள்கள் அவ ருக்குப் பின்னால் கைகட்டி நின்றார்கள்.

தாளாளர் வந்தார்.. சோணாச்சலத்தின் முன்னால் கால் மேல் கால் போட்டு அமர்ந்தார்.

''என்ன.. சோணாச்சலம்.. இந்தப் பக்கம் வந்திருக் கிறாயே... என்ன விசயம்?''

''டேய்.. ஐயாகிட்ட மரியாதையாய் பேசு...'' அடி யாள்களில் ஒருவன் குரல் கொடுத்தான்.

''எல்லாம் உங்க ஐயாவிற்கு.. இந்த மரியாதையே போதும்..''

சோணாச்சலம் பார்வையால் தன் ஆள்களை அடக் கினார். பின் தாளாளரிடம் வினவினார்.

''யார் அந்தக் கஸ்தூரி...?''

''எந்தக் கஸ்தூரி..?''

''புரியாதது போல் நடிக்காதே... நீ ஏற்பாடு பண்ணி ரஞ்சனைக் கொல்ல வைத்தாயே அந்தப் பெண்.. யார்?''

தாளாளர் கடகடவென்று சிரித்தார்..

''ரஞ்சனைக் கொல்ல நான் ஏற்பாடு பண்ணினேனா? முட்டாள்... திட்டம் தீட்டியது நானில்லை... திட்டத் திற்கு இடம் கொடுத்து உதவினேன் அவ்வளவுதான்.. அம்பை எய்தது வேறோர் இடம்...''



''எந்த இடம்?''

''சென்னை போலீஸ்...''

சோணாச்சலத்தின் முகம் மாறியது.. இதை அவர் எதிர்பார்க்கவில்லை.

''சென்னை போலீஸா?''

''ஆமாம்.. போலீஸை என்னவென்று நினைத்தாய்... என் உறவினர் வீட்டுப் பெண் ஊர் சுற்றிப் பார்க்க இந்த ஊருக்கு வந்தாள்.. உன் மகன் அவளைச் சீரழித்து விட்டான்.. நீ அதைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை... பெண் பிள்ளை விசயம்.. பெரிது பண்ண வேண்டாம் என்று என் சொந்தக்காரர்களும் சொல்லி விட்டார்கள்.. நான் விட்டு விட்டேன்.. ஆனால்.. சென்னையிலிருந்து டூரிஸ்ட் பஸ்ஸில் வந்த மாதவி என்ற பெண்ணை உன் மகன் கடத்தி.. மலையுச்சியில் அவளைக் கொன்றும் விட்டான்.. அதை விசாரிக்க சென்னையிலிருந்து வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் தனசேகரனையும் கொலை செய்து விட்டான்.. நீ கண்டு கொள்ளவே இல்லை.. சென்னைப் போலீஸ் விட்டு விடுவார்களா? உன்னைப் பற்றிய டீடெயில் ரிப்போர்ட்டை இங்கேயுள்ள போலீ ஸிடம் கேட்டார்கள்.. ரகசிய ரிப்போர்ட் உன்னைப் பற்றிப் போய் விட்டது.. சென்னை போலீஸ் உன்னையும்.. ரஞ்சனையும்.. என் கவுண்டரில் போட தீர்மானித்து விட்டது..''

''என்கவுண்டரா..?''

''ஆமாம்... என் கவுண்டர்தான்.. வேறு வழி என்ன இருக்கிறது அவர்களுக்கு... உன் தலையில் இருக்கும் முடிகளைக் கூட எண்ணி விடலாம்... ஆனால் நீயும்..

ரஞ்சனும் செய்த கொலைகளை எண்ணி விட முடியாது.. நீங்கள் இருவரும் உயிரோடு இருந்து என்ன செய்யப் போகிறீர்கள்? மற்றவர்களின் உயிரைத்தான் எடுக்கப் போகிறீர்கள்.. பூமிக்கு எதுக்குப் பாரமாய் நீங்கள் இரண்டு பேரும் இருக்க வேண்டும்.. அதுதான்.. போட்டுத் தள்ள போலீஸ் முடிவு பண்ணிவிட்டது.. சோணாச்சலம்.. ஒரு பழமொழி தெரியுமா உனக்கு.. அரசன் அன்றே கொல்வான்.. தெய்வம் நின்று கொல்லும்.. போலீஸ்.. 'தெய்வம்'.. அதுதான் நின்று நிதானித்து திட்டம் போட்டு.. உன் கோட்டைக்குள் இருந்த ரஞ்சனை வெளியே வரவைத்து.. எந்த மலையுச்சியில் தனசேகரனை அவன் கொன்றானோ... அதே மலையுச்சியில் அவனைக் கொன்றுவிட்டது...''

''அவள்.. அந்த கஸ்தூரி.. என்ற பெயரில் வந்தவள் யார்..?''

''அதைத் தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? உன்னால் அந்தப் பெண்ணிற்கு ஒரு தீங்கையும் இழைக்க முடியாது.. ஏனென்றால் அந்தப் பெண்.. சக்தி வாய்ந்தவள்.. அவள் பெயர் கஸ்தூரி இல்லை...''

''அதுதான் எனக்குத் தெரியுமே...''

''அவள் பெயர் பத்மாவதி... வெறும் பத்மாவதி இல்லை... பத்மாவதி ஐ.பி.எஸ்... சென்னை சிட்டி போலீஸ் அஸிஸ்டென்ட் கமிஷனர்.. இன்னும் ஒரு விவரம் சொல்லட்டுமா?''

''என்ன...?''

''அவள் இன்ஸ்பெக்டர் தனசேகரனின் கூடப் பிறந்த தங்கை..''



''என்ன சொல்கிறாய்..?''

''அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாய் இருக்கிறதா..? பத்மாவதி தனசேகரனின் தங்கை... எம்.எஸ்ஸி பாட்டனி படித்து விட்டு சர்வீஸ் கமிசன் பரிட்சை எழுதி ஐ.பி.எஸ் ஆகிவிட்டாள்.. அவள் டிரெயினிங்கில் இருந்தபோது தான் தனசேகரனை உன் மகன் கொன்றான்.. அவள் சென்னை சிட்டி போலீஸ் ஏஸியாக ஆன உடனேயே.. இரண்டு மூன்று என் கவுண்டர்களை வெற்றிகரமாய் செயல்படுத்தினாள்.. இறந்து போன இன்ஸ்பெக்டர் இவளுடைய உடன் பிறந்த அண்ணன் என்பதாலும்... இவள் என்கவுண்டர் ஸ்பெசலிஸ்ட் என்பதாலும்... ரஞ்சனை என்கவுன்டரில் போடும் பொறுப்பை இவளிடம் ஒப்படைத்தார்கள்.. இவள் இந்த ஊருக்கு வேறு பெயர்.. வேறு தொழிலில் வர ஒரு பொய் போர்வையை உருவாக்க என்னுடைய உதவியைக் கேட்டார்கள்.. நான் சந்தோசமாக உதவி செய்தேன்.. அதன்படி பத்மாவதி ஐ.பி.எஸ். கஸ்தூரி டீச்சராகி என் பள்ளியில் வேலைக்கு சேர்ந்தாள்.. அவளுக்காக பொய்யான செர்டிபிகேட்.. பயோடேட்டாவை உருவாக்கினோம்.. குணசீலன் என்னும் சப் இன்ஸ்பெக்டர்.. கோதண்டராமனாகி... கஸ்தூரியின் அப்பாவாக இங்கு வந்தார்... கோகிலவாணி என்னும் பெண் சப்-இன்ஸ்பெக்டர்.. கிருஷ்ணவேணியாகி... கஸ்தூரியின் அம்மாவாகி இங்கு வந்தார்கள்.. அவர்கள் மூவருமே... போலீஸ்..''

''என்ன ஒரு மாஸ்டர் பிளான்...'' சோணாச்சலம் எரிமலையாய் எழுந்து கொள்ள முயன்றபோது.. அவர் முன் துப்பாக்கியை நீட்டியபடி ஒரு போலீஸ் அதிகாரி வந்தார்.. திமு திமுவென வீட்டுக்குள்ளிருந்து போலீஸ்

பட்டாளம் வந்து சோணாச்சலத்தின் அடியாள்களை சுற்றி வளைத்தது.

சோணாச்சலத்தை போலீஸ் படை சூழ்ந்து கொள்ள தாளானர் பலமாகச் சிரித்தார்..

''என்ன பார்க்கிற சோணாச்சலம்.. உன் ஆட்டம் குளோஸ்... எப்படியும் நீ என்னை விசாரிக்க இங்கு வருவாய்ன்னு போலீஸ் எதிர்பார்த்தது.. என்கவுண்டரில் தான் ரஞ்சன் போய் விட்டான் என்ற உண்மை உனக்குத் தெரியாது... அடுத்த என்கவுண்டர் நீதான் என்பதும் உனக்குத் தெரியாது... யாரோ ஒருத்தி.. ரஞ்சனால் பாதிக்கப்பட்டவள் பழிவாங்க வந்திருக்கிறாள் என்று தான் நினைப்பாய். அதனால்.. ஓடி ஒளிந்து கொள்ளாமல் உன் வீட்டை விட்டு வெளியே வருவாய் என்று போலீஸ் கணக்குப் போட்டது.. நீ என்னைப் பார்க்க வருவது தெரிந்ததும்.. உனக்கு முன்னால் போலீஸ் படை இங்கே வந்து இறங்கிவிட்டது...''

சோணாச்சலத்தை அள்ளிப் போட்டுக் கொண்டு போலீஸ் வேன் விரைந்தது.

மறுநாள் செய்தித் தாள்களில் கொட்டை எழுத்தில் 'பிரபலமான ரௌடி சோணாச்சலம் போலீஸிடமிருந்து தப்பி ஓடிய போது சுட்டுக் கொல்லப்பட்டார்.. அவ ருடன் சென்ற மற்ற அடியாள்கள் போலீஸை துப்பாக்கி யால் சுட்டார்கள்... வேறு வழியின்றி போலீஸ் திருப்பிச் சுட்டதில் அவர்களும் குண்டடிபட்டு இறந்து போனார் கள்...'

என்ற செய்தி வெளி வந்திருந்தது. அன்னவாசல் நிம்மதிப் பெருமூச்சு விட்டது.



வீனஸ் மெட்ரிகுலேசன் பள்ளியில் இதைப் பற்றித் தான் பேச்சு.. காருண்யா.. தன்னுடன் இருந்த சக ஆசிரியை யிடம் கூறிக் கொண்டிருந்தாள்.

''இந்த டிவி புரோகிராம்களில் என்னப்பா.. எப்போது பார்த்தாலும் பேயைப் பற்றியே சொல்கிறார்கள்.. அவர்கள் ஏற்ற இறக்கத்தோடு சொல்லும் போது.. பயம் இல்லாதவர்களுக்கு கூட பயம் வந்துவிடும்..''

''அது என்னவோப்பா.. அப்படித்தான் அவர்கள் பேசுகிறார்கள்.. நேற்று நாயைப் பற்றி ஒரு புரோக்ராம்.. அதற்கும் அதேபோல்.. அமானுஷ்யமாய் பார்த்துக் கொண்டு பேசினார்கள்..''

''என்னவோ போப்பா.. இவர்கள் நாயைப் பற்றிப் பேசினால் கூட பேயைப் பற்றிப் பேசுவது போல் பய மாய் இருக்கிறது..''

''அது சரி.. நாம்தான் இப்படி பயந்தாங்குளியாய் இருக்கிறோம்.. இங்கு கஸ்தூரியென்று சொல்லிக் கொண்டு வேலை பார்த்த ஐ.பி.எஸ் ஆபிஸரைப் பார்த் தாயா? எவ்வளவு தைரியமாக சிங்கத்தின் குகைக்குள் ளேயே போய் ரஞ்சனைக் கொன்றிருக்கிறாங்க...'' என்று கூறியபடி ரமீலா அங்கு வந்தாள்.

''அவன் என்ன சிங்கமா? சுத்த அசிங்கம்.. அவனை மர்டர் பண்ண வேண்டுமென்று நிறைய முறை எனக்கு கொலைவெறி வந்திருக்கிறது...'' காருண்யா கண் சிவக்க பல் கடித்தாள்.

''ஆனால் தைரியம் வரவில்லை.. அந்த தைரியம் கஸ்தூரிக்குத்தான் இருந்திருக்கிறது...'' ரமீலா சிரித்தாள்.

''கஸ்தூரியா..? பத்மாவதி ஐ.பி.எஸ்.ன்னு சொல்லு..''

"ஆமாமாம்.."

அவர்கள் மூவரும் சிரிக்க மற்றவர்களும் கலந்து கொண்டனர்.

# 19

**ஊனின்றி போனாலும்**
**உயிர்துடிக்க நின்றாயோ...?**
**வான்வெளியில் வலம்வந்த**
**வட்டநிலவே...! நீயெங்கே போனாய்?...**
**– நீங்காத என் நினைவுகள் –**

"கஸ்தூரி ஒரு ஐ.பி.எஸ் ஆபிஸர் என்பது தெரியாமல் நம்ம மார்ட்டின் நூல் விட்டது தெரியுமா?" காருண்யா விழுந்து விழுந்து சிரித்தாள்.

"நம்ம மத்தியில் ஒரு போலீஸ் ஆபிஸர் இருந்தது தெரியாமல் நாம் பாட்டுக்கு ஜாலியாக இருந்திருக்கிறோம்..." ரமேஷ் வியப்புடன் கூறினான்.

"ச்சு.. விட்டு விட்டேன் காருண்யா.." ரமீலா கையை உதறினாள்.

"என்ன ஆச்சு ரமீலா...?"

"ஒரு முக்கியமான கம்ப்ளெயின்ட் ஒன்றைக் கொடுத்திருக்கலாம்."

"யாரிடம்...?"

"பத்மாவதி மேடத்திடம்தான்..."

"மேடம்....?"



"ம்ம்.. மேடம்தான்.. எவ்வளவு பெரிய வீரச் செயலை செய்திருக்காங்க.. அவங்க மேடமில்லையா?"

"சரி... மேடம்தான்.. அவங்ககிட்ட என்ன சொல்லியிருப்பாய் அதைச் சொல்லு முதலில்.."

"அவங்க மட்டும் போலீஸ் ஆபிஸர்ன்னு தெரிந்திருந்தால இந்த போன்காரங்க பண்ணும் டார்ச்சரைச் சொல்லி.. அவங்களை முதலில் என்கவுண்டரில் போட்டுத் தள்ளச் சொல்லியிருப்பேன்..."

"இது என்னடா.. புதுக் கதையாய் இருக்கு.."

"புதுக்கதையில்லை. பழைய கதைதான்.. ஒவ்வொரு வீட்டிலும் நடந்து கொண்டிருக்கும் கதை... நீயும் அவதிப்படுகிறாய்.. நானும் அவதிப்படுகிறேன்.."

"என்னப்பா.. நீ... கஸ்தூரியை விட பெரிய சஸ்பென்ஸாய் இருக்கிறாயே.. விசயத்தை போட்டு உடை.."

"நேற்று ஸ்கூலுக்கு பிள்ளைகளை கிளப்பி விட்டு.. சமையலை முடித்து விட்டு அரக்கப் பரக்க பாத்ரூமிற்குள் நுழைகிறேன்.. பாதி குளியலில் செல்போன் மணியடிக்கிறது.."

"அடடா.. அர்ஜன்ட் காலா..."

"ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை.. பாத்ரூம் கதவைத் தட்டி போனைக் குடுத்த என் பிள்ளைகிட்டயிருந்து போனை வாங்கி சோப்பு நுரையோடு பேசினால்.. ஒரு மியுசிக் சத்தம் கேட்குது.. இந்த மியுசிக்கை உங்கள் காலர் டியுனாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் ஸ்டாரை அழுத்துங்கள்ன்னு ஒரு கியூட் வாய்ஸ் வந்தது... எனக்கு எப்படியிருக்கும்? நீயே சொல்லு.. பாதி ராத்திரியில் போன் வருது.. எடுத்துப் பார்த்தால் இவங்க போன்.. சிக்னலுக்கு வண்டியை நிறுத்தி விட்டு நிற்கும் போது போன் அடிக்கிறது.. நம்மை இருபத்தி நான்கு

மணி நேரத்தில் எந்த நேரமும் போனில் அழைத்துப் பேசலாம் என்ற உரிமையை இவர்களுக்கு கொடுத்தது யார்? எங்கிருந்து இவர்களுக்கு இந்த தைரியம் வந்தது..? இப்படித்தான்.. மெஸேஜ் அனுப்புகிறார்கள்.. அந்தச் சமயம் பார்த்து போனும் பண்ணுகிறார்கள்.. நாம் ஒகே பட்டனை அழுத்தினால் போதும்.. அவ்வளவு தான்.. நாம் போன் பேச கட்டியிருக்கும் பணம் காலி... நம் வீட்டுப் பணத்தை திருடுவதற்கு சமமானது இல்லையா இது? இத்தோடு பதினைந்து முறை.. எனக்கே தெரியாமல்.. என் விருப்பமில்லாமல் என் போனில் பணத்தைக் கழித்துக் கொண்டு.. ஏதோ ஓர் சாங்கை இன்கமிங்களுக்கான டியுனாக போட்டு விட்டார்கள். பாட்டுக்கள் என்ன தெரியுமா? 'கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப் போகலாமா.' 'கம்மாக்கரை யிலே உம்மா கொடுக்கவா...' அப்புறம் 'கட்டிபிடி கட்டிப்பிடிடா...' ஒரு டீச்சரின் செல்போனில் இப்படிப் பாட்டுக் கேட்டால் என்னை போனில் கூப்பிட்டுப் பேச கிறவர்களுக்கு என் மேல் என்ன மரியாதை இருக்கும்?"

"நீ தண்ணீரைக் குடித்துக் குடித்து இப்படி மைச் இல்லாமல் பேசுவதிலிருந்தே நீ எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறாய் என்பது எனக்குப் புரிகிறது ரமீலா... எனக்கும் உன் நிலைமைதான்.."

"ரத்தம் கொதிக்குது காருண்யா.. என்னிடம் பேச பவர்கள் நமட்டுச் சிரிப்போடு.. என்ன மேடம்.. உங்கள் செல்லில் இப்படிப்பட்ட பாட்டு வருகிறதுன்னு கேட்பாங்க.. அலறி அடித்து இன்னொரு போனிலிருந்து என் போனுக்கு நானே போன் பண்ணி என்ன பாட்டு என்று கேட்பேன்.."



"இதுமட்டுமா.. முக்கியமான கால் பேசுவோம்.. நமது ...ர்ஜ நமக்கே தெரியாமல் கழித்து விட்டு ஜீரோ ...லன்ஸில் வைத்திருப்பார்கள் என்று தெரியாது.. ...ன் பேச முடியாது.. சார்ஜ் இல்லை என்று வரும்.. ...க்கு 'பகீர்' என்று ஆகிவிடும்.."

"நான் அவர்களுடைய கஸ்டமர் கேர் சென்டரைக் ...ப்பிட்டு பிடி.. பிடியென்று ஓர் நாள் பிடித்து விட் ...டேன்..."

"நான் கன்ஸ்யூமர் கோர்ட்டுக்கே போகப் போகிறேன் ...ன்று சொல்லி விட்டேன்."

"ச்சு... பத்மாவதி இருக்கும் போதே இதையெல்லாம் அவங்ககிட்ட சொல்லி ஒரு வழி கேட்டிருக்கலாம்.. ...ட்டு விட்டோம்.."

"இப்ப என்ன... அவங்களைத் தேடி சென்னைக்கே போய் வழி கேட்டு விட்டு வந்துவிடு."

"இந்நேரம் அவங்க துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டு ...யாரையாவது என்கவுண்டரில் போடப் போயிருப் பாங்க.."

உண்மையிலேயே அப்போது கஸ்தூரி என்று அன்ன ...வாசலில் உலா வந்த பத்மாவதி துப்பாக்கியுடன்தான் போய் கொண்டு இருந்தாள். கமிஷனர் அறைவாசலில் ...காத்திருந்து... அவரைச் சந்தித்தாள். அவர் முன் சல்யூட் அடித்து விட்டுத் துப்பாக்கியை அவரது மேஜையின் மீது வைத்தாள்.

"சார்.. இதோ.. நான் ரஞ்சனைச் சுட்ட துப்பாக்கி.."

"வெல்டன் பத்மாவதி.."

"இட்ஸ் மை டியுட்டி சார்..."

''தனசேகரன் இருந்திருந்தால் உங்களைப் பார்த்து பெருமைப்பட்டிருப்பான்.. புவர் பாய்.. அவன் வாழ்க்கை சீக்கிரமாய் முடிந்து விட்டது..''

பத்மாவதி மௌனமாக இருந்தாள்.. காக்கிச் சீருடையில் இருந்ததால் கண்ணீரைக் கட்டுக்குள் வைத்திருந்தாள்.

''உங்கள் உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.. ஆனால் நீங்கள் பகை முடித்து விட்டீர்கள்.. அதை நினைத்து நிம்மதி கொள்ள வேண்டும்..''

''ஓகே சார்..''

''சோணாச்சலம் என்கவுண்டரில் போய் விட்டார்.. அவருடைய அடியாள் படையும் அழிந்துவிட்டது... சேப்டர் குளோஸ்..''

''யெஸ் சார்..''

''உங்களுக்கு என் பாராட்டுக்கள்...''

''சார்.. இதில் என்னுடன் துணையாக இருந்த குணசீலன்.. கோகிலவாணி இருவருமே உயிரைப் பணயம் வைத்து செயல்பட்டார்கள்.. தூக்கத்தில் கூட அவர்கள் என் பெற்றோர் போலவே நடித்தார்கள்...''

''அவர்களுக்கு பிரமோஷன் கிடைக்க சிபாரிசு செய்திருக்கிறேன்..''

''தேங்க் யு சார்..''

பத்மாவதி கமிஷனருக்கு மீண்டும் ஓர் சல்யூட் வைத்துவிட்டு அவரது அறையிலிருந்து வெளியே வந்து நீண்ட வராண்டாவில் நடந்தாள்.

சந்தோஷ் விமான நிலையத்திலிருந்து வெளியே வந்து காத்திருந்த காரில் ஏறினான்.. அவன் முகத்தில்



...ட்டம் தெரிந்தது. வீட்டிற்குள் சென்றதும்.. அவசர... ஜெயந்தியை அணுகி

''என்னம்மா.. போனில் என்ன என்னவோ சொன்னீங்...'' என்று விசாரித்தான்.

அவள் பதில் பேச முடியாமல் விம்மி அழுதாள்.

''சந்தோஷ்.. வெளிநாட்டிலிருந்து இப்போதுதான் ...ந்திருக்கிறாய்.. முதலில் குளித்து விட்டுச் சாப்பிடு.. ...ற்ற விவரங்களை அப்புறமாய் பேசிக் கொள்ளலாம்...'' ...றார் சந்தானம்.

''...ன்ப்பா.. நடந்தது என்ன சாதாரண விசயமா? இப்...போதுதான் நான் அன்னவாசலில் இருந்து வந்ததுபோல் ...ருக்கிறது.. அதற்குள் மாமாவும்.. ரஞ்சனும் உயிரோடு ...இல்லை என்கிறீர்களே.. என்னப்பா.. என்ன நடந்தது...? ...மாவுக்கு உடம்பு நன்றாகத்தானே இருந்தது? ஒரு ...வேளை அவர்கள் இருவரும் ஆக்ஸிடெண்டில் மாட்டி ...இறந்து விட்டார்களா?''

சந்தானத்தின் முகம் வெறுப்பாக மாறியது.

''ஆக்ஸிடெண்டில் மாட்டவில்லை.. என்கவுண்டரில் ...மாட்டிக் கொண்டார்கள்..''

''என்கவுண்டரா..?'' அதிர்ச்சியுடன் கேட்டான் சந்தோஷ்.

''ஆமாம்பா.. இதற்கு எதற்கு அதிர்ச்சியாகிறாய்?''

''அவர்கள் அந்த அளவுக்கு பயங்கரமானவங்களா?''

''ஆமாம்ப்பா..''

''அம்மா.. இதை என்னிடம் சொல்லவேயில்லையே.. ...மாமா சட்ட விரோதமானவர் என்பது தெரியும்.. ரஞ்சன்

பெண்கள் விசயத்தில் மோசமானவன் என்பது தெரியும்.. ஆனால் அவர்கள் இருவரும் என்கவுண்டர் லிஸ்டில் இருக்கும் அளவிற்கு மோசமானவங்களா?''

ஜெயந்தி இப்போது பலமாக அழுதாள்...

''சும்மாவே உன் அப்பா என்னைக் குத்திக் காட்டிப் பேசுவார்... இப்போது நீ வேறு ஊரில் இல்லை.. என்னைப் பேசித் தீர்த்து விட்டார் சந்தோஷ்..''

''ஏன்ப்பா.. அவர்கள் தவறானவர்கள் என்றால்.. அம்மா என்ன செய்வார்கள்?''

''சும்மா அவர்களையே நினைத்து அழுதால் கோபம் வருமா.. வராதா?''

''போனவங்க மோசமானவங்க என்பதற்காக பாசம் விட்டுப் போயிடுமா சந்தோஷ்..?''

''இதுதான்... இதைத்தான்.. இவள் பிதற்றிக் கொண்டிருக்கிறாள்.. இவள் கண்ணீர் விடுகிறாளே.. இந்தக் கண்ணீரின் மதிப்பு இவளுக்கு தெரியுமா? கண்ணீர் உன்னதமானது.. அதை உன்னதமானவர்களுக்காக மட்டுமே நாம் விட வேண்டும்..''

''அம்மா.. எனக்கென்னவோ அப்பா சொல்வது சரிதான் என்று தோன்றுகிறது..''

''அவருக்கு என்னடா.. ஆண்பிள்ளை.. அப்படித்தான் சொல்லுவார்.. நான் பெண்.. எனக்கு அழுகை வந்தால் அழத்தான் செய்வேன்..''

''ஏண்டி.. நீ மட்டுமா பெண்? ரஞ்சனை என்கவுண்டரில் போட்டுத் தள்ளிய அந்த பத்மாவதியும் பெண்தானேடி.. அவள் எப்படித் தைரியமாக.. தன்னந்தனியாக..

...ரின்று பெயரை மாற்றிச் சொல்லிக் கொண்டு
...அண்ணனின் கோட்டைக்குள் நுழைந்தாள்..?''

...ந்தனம் ஜெயந்தியை கடிந்து கொள்ள... சந்தோஷிற்கு
...ள் வாரிப் போட்டது.. 'அப்பா என்ன சொல்கிறார்?'

''கஸ்தூரியா..? என்னப்பா... என்னென்னவோ
...சொல்கிறீர்கள்?''

''அட.. ஆமாம்ப்பா.. சோணாச்சலம் வீட்டிற்கு எதிர்
...ட்டில் புதிதாய் ஒரு குடும்பம் குடிவந்ததாம்.. தாய்..
...ப்பன்.. மகள் என்று மூன்றே பேர்கள் தானாம்.. அதில்
...ள் பெயர்தான் கஸ்தூரியாம்.. ஏதோ ஸ்கூல் டீச்ச
...ம்..''

''அதற்கு என்ன...?''

''அட.. அந்தப் பெண்ணின் சொந்தப் பெயர் கஸ்தூரி
...இல்லையாம்பா... பத்மாவதியாம்.. ஐ.பி.எஸ். ஆபிஸராம்..''

''என்ன..?''

அதிர்ந்து நின்று விட்டான் சந்தோஷ்..

'ரஞ்சனிடம் நான் பயப்படுகிறேனா?.. ஹ.. அவன்
...தான் என்னைக் கண்டு பயப்பட வேண்டும்..' கஸ்தூரி
...யின் வார்த்தைகள் அவனது காதுகளில் ஒலித்தன.

'இதனால்தான் சொன்னாயா கஸ்தூரி... இதற்காகத்
...தான் நீ அவனைப் பிடித்திருந்தது போல் நடித்தாயா?...
...ஆனால் உனக்கு அவனை வீழ்த்த வேறு வழி தெரிய
...வில்லையா? உன் அழகையா ஆயுதமாகப் பயன்படுத்
...தினாய்?... ஊரெல்லாம் வெறுக்கும் தீயவனைப் பார்த்து
...உன்னை விரும்புகிறேன் என்று நீ சொன்னது இதற்
...காகத்தானா? நீ அவனைக் கொன்றதில் தவறே

இல்லை.. கொல்வதற்கு நீ கடைபிடித்த வழிமுறை தான் தவறு.. உனக்கு வேறு வழியே தென்படவில்லையா...?''

சந்தோஷின் முகம் அருவெறுப்பில் சுளித்தது.

## 20

உன் விதியை எழுதியவனும்
உயிர்துடிக்க ஏன் மாளவிட்டான்?...
ஏங்கித்தான் தவிக்கின்றேன்...
எண்ணத்தில் மிதக்கின்றேன்...
– நீங்காத என் நினைவுகள் –

சந்தோஷ் அப்படியே சரிந்து அமர்ந்தான்.. அவன் சோணாச்சலத்தின் முடிவைக் கேட்டுத்தான் அப்படி அமர்ந்திருக்கிறான் என்று எண்ணிக் கொண்ட ஜெயந்தி.. இன்னும் பலமாக அழ ஆரம்பித்தாள்..

''ஏய்.. வாயை மூடுடி.. வாயை மூடுன்னு சொல்கிறேனில்லை.. ரொம்ப அழுதாயானால்.. அன்னவாசலில் பூட்டிக் கிடக்கிற உன் அண்ணனின் வீட்டுக்குள்ளே போட்டு அடைத்து வைத்து விடுவேன்... உன் அண்ணனும்.. ரஞ்சனும் ஆவியாய் அங்கே அலைவார்கள்.. நீ அவர்களோடு பாசப் பாட்டு பாடிவிட்டு வந்து சேரு..''

சந்தானம் போட்ட அதட்டலில் ஜெயந்தி வாயை இறுக மூடிக் கொண்டாள்.. சந்தானம் மகனின் பக்கம் திரும்பினார்.



''என்னப்பா சந்தோஷ்.. இடிஞ்சு போய் உட்கார்ந்து விட்டாய்... நீ இந்த அளவுக்கு வருத்தப்படும் அளவிற்கு சோணாச்சலமும்.. ரஞ்சனும் தகுதியுடையவர்கள் இல்லைப்பா...''

''அவள்.. அந்த கஸ்தூரி.. இப்போது எந்த ஊரில் வேலை பார்க்கிறாளாம்?''

''இந்தச் சென்னையில்தான் இருக்கிறாளாம்.. என்கவுண்டர் ஸ்பெசலிஸ்டாம்.. அவளுடன் கூட வந்தவர்கள் இருவருமே சப்-இன்ஸ்பெக்டர்களாம்.. அம்மா.. அப்பாவாய் நடித்திருக்கிறார்கள்..''

'நடிப்பு.. உனக்கு நடிக்கத் தெரியுமா? நடித்துக் கழுத்தை அறுக்கத் தெரியுமா? களங்கமில்லாத நிலவு முகம் என்று நான் உன் முகத்தைப் பார்த்து நினைத்தேனே.. கடைசியில் நீ பொய்யாகிப் போனாயே...'

''அப்பா.. எனக்கு நான் கனடாவுக்கு கிளம்பிப் போன நாளில் இருந்து.. இந்த நாள் வரைக்கும் உள்ள தமிழ் செய்தி பேப்பர்கள் எல்லாமே வேண்டும்..''

''எடுத்து வைக்கிறேன்.. நீ குளித்து.. சாப்பிட்டு விட்டு வா..''

சந்தோஷ் குளித்து.. சாப்பிட்டு விட்டு.. தன் அறைக்குள் போய் கதவை மூடிவிட்டு செய்தித்தாள்களை படித்தான்.

பத்மாவதியைப் பற்றி அதில் போடப்பட்டிருந்த செய்திகளை வரி விடாமல் படித்தான்.. பின் ஒரு முடிவோடு.. எழுந்து அறையை விட்டு வெளியே வந்தான்.. மாடிப்படி இறங்கினான்.

''என்னப்பா ரெஸ்ட் எடுக்கவில்லையா?''

''முக்கியமான வேலை இருக்குப்பா...''

சற்று நேரத்தில்... பத்மாவதி.. ஐ.பி.எஸ்.. அஸிஸ் டென்ட் கமிஷனர் ஆப் போலீஸ்.. என்று எழுதப்பட் டிருந்த பெயர் பலகை பொருத்தப்பட்டிருந்த அறை வாசலில் நின்றான்.. உள்ளேயிருந்து,

''யெஸ் கமின்...'' என்று குரல் வரவும் நுழைந்தான்.

தன் முன்னாலிருந்த கம்ப்யூட்டரில் எதையோ பார்த் துக் கொண்டிருந்த பத்மாவதி.. பார்வையை விலக்காமல்

''டேக் யுவர் சீட்...'' என்றாள்.

சந்தோஷ் அமர்ந்தான்.. அன்னவாசலில் அடக்க ஒடுக்கமாய் சேலைகட்டி.. பின்னல் போட்டு பெண்மை மிளிர நின்ற கஸ்தூரியையும்.. இப்போது காக்கிச் சீரு டையில் விறைப்பாய்.. நிமிர்வுடன்.. கம்பீரமாய் அமர்ந் திருக்கும் பத்மாவதியையும் ஒப்பிட்டுப் பார்த்தான்.

'அவளா.. இவள்...?'

அழகான தொங்கட்டான்கள் தொங்கிய காதுகளில் அதன் துளையை மறைக்கும் அளவே உள்ள சிறு தோடு போட்டிருந்தாள்.. முழங்கால்களைத் தொட்டப் பின் னலை மடித்து.. கொண்டையாக கட்டியிருந்தாள்.. கை கழுத்து எதிலும் நகைகள் இல்லை... வட்டப் பொட்டு... கண்களில் மை.. இவை காணப்படவில்லை.. அவளது பார்வையை தவிர்க்கும் நாணம் கொண்ட பார்வையும் இல்லை. சுளித்த புருவத்துடன் எதையோ பார்த்துக் கொண் டிருந்தவள் ''யெஸ்...'' என்றபடி அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

ஒரு கணம்.. ஒரேயொரு கணம்.. அவளது விழிகளில் மின்னல் மின்னி மறைந்தது. மறுகணம் சலனமில்லாத முகத்துடன்..

''வாட் டு யு வான்ட்?'' என்று வினவினாள்.



'நான் உயிருடன் இருந்தால் சந்திப்போம்...' என்று தன் உயிரைப் பணயம் வைத்து கடமையாற்றியவள்.. இன்று கடமையை முடித்து விட்டவளாய் அவனைப் பார்த்து கேட்கிறாள்.

''ஐ வான்ட் யுவர் ரிப்ளை..''

''எதைப் பற்றி...?''

''ஏன் இவ்வளவு தரம் தாழ்ந்தாய் என்பதைப் பற்றி...''

பத்மாவதியின் முகம் கடுமையாக மாறியது.

''ஹூ ஆர் யு மேன்... ஐ ஆம் தி போலீஸ் அஸிஸ் டென்ட் கமிஷனர்.. மைன்ட் இட்...''

''ஐ ஆம் சந்தோஷ்... யு மைன்ட் இட்...''

''என்னைக் கேள்வி கேட்க நீங்கள் யார்?''

''பொதுஜனம்.. நான் கஸ்தூரிமான் என்று ஒரு பொய் மானை நம்பி ஏமாந்து விட்டேன். எனக்குப் பதில் வேண்டும்?''

''எதைப் பற்றி...?''

''ரஞ்சனை ஏன் மயக்கினாய் என்பதைப் பற்றி...''

''அது என் சொந்த விசயம்..''

''எனக்கும் அதுதான் சொந்த விசயம்...''

பத்மாவதி சந்தோஷை முறைத்தாள்..

''இப்போது உங்களுக்கு விளக்கம் தானே தேவை.. இன்றைக்கு சாயந்திரம் ஆறு மணிக்கு மெரினா பீச்சில் வெயிட் பண்ணுங்கள்.. வந்து விளக்கம் சொல்கிறேன்... இப்போது நான் டியுட்டியில் இருக்கிறேன்.. யு ஆர் இன் னொஸென்ட்... என்ன பேசுகிறீர்கள்.. யாரிடம் பேசுகிறீர்கள் என்று தெரியாமல் பேசுவதால் உங்களை மன்னித்து விடுகிறேன்.. இனியொரு முறை போலீஸிடம் விளையாட டுப் பேச்சு பேசுவதை அவாய்ட் பண்ணுங்கள்...''

''நான் பேச வந்தது கஸ்தூரியிடம்...''

''அவள் கற்பனைப் பாத்திரம்.. பத்மாவதி தான் நிஜமானவள்.. அவள் போலீஸ் உயரதிகாரி.. அதை மனதில் வைத்துக் கொண்டு பேசிப் பழகுங்கள்..''

சந்தோஷ் முகம் கருக்க வெளியேறினான்.. அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்த பத்மாவதி ஒரு பெருமூச்சுடன்.. தோளைக் குலுக்கிக் கொண்டு வேலையில் ஆழ்ந்தாள்.

ஆழ்கடலின் நீலநிறமும்... வானத்தின் செந்நீல நிறமும் வேறு வேறாய் தோன்றும் அந்தப் பொன் அந்தி மாலைப் பொழுதில் பத்மாவதிக்காக காத்திருந்தான் சந்தோஷ்.

அருகே நிழலாட நிமிர்ந்து பார்த்தான்... ராமர் பச்சை நிறத்தில் காட்டன் சேலை அணிந்து அழகாய் பின்ன லிட்டு.. நெற்றியில் பொட்டும்.. காதுகளில் அழகான டிசைன் கம்மலும்.. கைகளில் வளையலுமாக சந்தோஷ் முதன் முதலில் பார்த்த கஸ்தூரியாக பத்மாவதி நின் றாள்.

சந்தோஷ் வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்க்க அமைதியாய் அவனருகே அமர்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு கடலை வெறித்தாள் பத்மாவதி.. அலையடித்த கடலாய் அவள் மனதில் அலையடித்துக் கொண்டிருந்த உணர்வு மாறி எல்லையில்லாத அமைதி அவள் மனதில் குடி கொண்டிருந்தது.

''கஸ்தூரி...''

''என் பெயர் பத்மாவதி...''



''ஆனால் எனக்கு கஸ்தூரியாகத் தானே உன்னைத் தெரியும்..''

''ம்ம்.. இப்போது இந்த வாக்குவாதத்தை விட்டு விடலாம்.. இங்கு நான் போலீஸ் ஆபிஸரில்லை.. சாதா ரண பத்மாவதி.. நீங்கள் கேட்க நினைக்கும் கேள்விகளை இங்கே கேளுங்கள்..''

''ஏன் நடித்தாய்...?''

''நடிக்க வேண்டிய சூழ்நிலை.. நடித்தேன்..''

''அதற்காக காதலிப்பது போல் நடிக்கலாமா?''

''நடிப்பென்று போய் விட்டால்.. அது பாசமாக இருந்தால் என்ன... காதலாக இருந்தால் என்ன..? நடிப்பு மட்டும்தான் என் வேலை.. வேறு எதைப் பற்றியும் எனக்குக் கவலை இல்லை..''

''இப்படிச் சொல்ல உனக்கு கஷ்டமாக இல்லையா?''

''எதற்கு நான் கஷ்டப்பட வேண்டும்?''

''ஒருவனைக் காதலிப்பதாய் நடித்து.. அவனை நம்ப வைத்து... அவன் அசந்திருக்கும் நேரம் கொலை செய் வது கொடூரமானது... அந்தக் கொடூரத்தை நீ செய் திருக்கிறாய்... உனக்கு மனச்சாட்சி என்பதே இல்லையா? உன் இதயத்தில் ஈரம் இல்லையா? உன் மனம் என்ன கல்லா? இல்லை இரும்பா?...''

சந்தோஷ் கோபமாய் கேட்க.. பத்மாவதிக்கு உடல் தூக்கிப் போட்டது.

''என்ன சொன்னீர்கள்?''

''உன் மனம் என்ன கல்லா? இல்லை இரும்பா?...''

பத்மாவதியின் மனம் துடித்தது.. கமலா கேட்ட கேள்வி.. தனசேகரனை உருகி.. உருகிக் காதலித்தாளே.. அவள் கேட்ட கேள்வி..

''என் மனம் இரும்புதான் மிஸ்டர் சந்தோஷ்.. உங்கள் மாமனையும்.. ரஞ்சனையும் போன்றவர்கள் என் மனதை இரும்பாக்கி விட்டார்கள்..''

''பேச்சை மாற்றாதே...''

''இல்லை சந்தோஷ்.. நான் பேச்சை மாற்றவில்லை.. இப்போது கேட்டீர்களே ஒரு கேள்வி.. இந்தக் கேள்வியை அடிக்கடி ஒரு பெண் என்னைக் கேட்பாள்.. என் வயதுதான் அவளுக்கும்... நீங்கள் என் மனம் இரும்பா என்று கேட்டீர்கள்.. அவள் என் அண்ணனின் மனம் கல்லா இல்லை இரும்பா என்று கேட்பாள்... அந்த இரும்பு மனிதன் ஒருநாள் உடலெல்லாம் சல்லடையாக துப்பாக்கிக் குண்டுகள் துளைக்கப்பட்டு உயிரற்ற உடலாகக் கிடந்தான்.. அவன் என்ன தவறு செய்தான்? மாதவியென்ற பெண்ணை ரஞ்சன் கொலை செய்தது புரூவ் ஆகிவிட்டது.. புரூப் இல்லாமல் ரஞ்சன் செய்த கொலைகள் ஏராளம்.. ஆனால் இந்தக் கொலைக்கு.. கொலையை நேரில் பார்த்த சாட்சி எங்களுக்கு கிடைத்து விட்டது.. கொலை சென்னையில் நடந்ததால் ரஞ்சனால் சாட்சியை கலைக்க முடியவில்லை.. அவன் அன்ன வாசலுக்குத் தப்பிச் சென்று விட்டான்.. இங்கேயிருந்து அவனைக் கைது பண்ண என் அண்ணன் கிளம்பிப் போனான்.. திரும்பி வந்தது.. சல்லடையான அவன் உடல்தான்.. அடுத்த ஒரு வாரத்திற்குள் அந்த சாட்சியும்



கொல்லப்பட்டு விட்டான்... எங்களுக்கு வேறு வழி என்ன இருக்கிறது? ஒருவன் அசுரனாக பிறந்து விட்டால் அவனை அழிக்க வேண்டாமா?...''

''அவனை அழிக்க நீ யார்?''

''இரண்டு வகைகளில் அவனைக் கொல்ல வேண்டிய கடமையில் இருந்தவள்.. ஒன்று.. நான் ஒரு போலீஸ்.. சட்டத்தின் மூலமாக அவனைக் கொல்ல வேண்டிய கடமையில் இருந்தேன்.. இரண்டாவது.. நான் என் அண்ணனின் தங்கை.. என் அண்ணனைக் கொன்ற கொடூரனைப் பழிவாங்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தேன்...''

''நீ ஒரு பெண் கஸ்தூரி...''

''பெண்ணுக்கு பகை முடிக்க வேண்டிய கடமையில் லையா...?''

''பெண்கள் மென்மையானவர்கள்...''

''ஆமாம் மென்மையானவர்கள்தான்... அதனால் தான்.. என் அண்ணனைக் காதலித்த கமலா.. தூக்க மாத்திரையைச் சாப்பிட்டு உயிர் விட்டாள்...''

''என்ன...?''

''கேட்கவே அதிர்ச்சியாக இருக்கிறது இல்லையா? கூட இருந்து பார்த்தவளுக்கு எப்படி இருக்கும்?''

''அதனால்... நீ செய்தது நியாயமாகி விடுமா?''

சந்தோஷ் கடுமையான கோபத்தில் இருந்தான்.. அவனால் இதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்ற சித்தாந்தத்தை வேறு யாரும் செய்யட்டும்.. கஸ்தூரி செய்ய டாது.. என்பதே அவனது கோபத்திற்கான அடிப்படைக் காரணம்.

# 21

என்றேனும் ஓர்நாளில்
உனதன்பை உணர்வேனோ...?
அன்றேனும் என் மனதின்
அனல்தான் அணைந்திடுமோ...?
– நீங்காத என் நினைவுகள் –

பத்மாவதி.. சந்தோஷையே பார்த்தாள்.. அவனது கோபம் புரிந்தது.. அதன் காரணமும் புரிந்தது.. ஆனால் அவள்தான் பகை முடிக்க வேண்டும் என்பதை அவன் புரிய மறுக்கிறானே என்ற ஆற்றாமையும் அவளுக்கு இருந்தது.

'நீ புரிந்து கொண்டால் எனக்கென்ன ஆகப் போகிறது?.. புரிந்து கொள்ளாவிட்டால் எனக்கென்ன நிற்கப் போகிறது..?' என்று விட்டு விடவும் அவளால் முடியவில்லை.

அவன் நல்லவன்.. அவளது நடிப்புத் தோற்றத்தை நிஜத் தோற்றம் என்று நம்பி ஏமாந்தவன்.. முதன் முதலாய் பத்மாவதியின் மனதில் சலனத்தை ஏற்படுத்தியவன்.. அவள் யார் என்று அறியாமலே அவளை அவளுக்காகவே நேசித்தவன்..

அவன் மனதில் இன்று முள் தைத்திருக்கிறது.. என்றால் வலிக்காமல் அவள் அதைப் பிடுங்கித்தான் ஆக வேண்டும்.

''கேளுங்கள் சந்தோஷ்.. உங்களைப் போல் தாய்.. தகப்பன் மகன் என்று குடும்பமாக நாங்கள் வளரவில்லை.. நாங்கள் வளர்ந்த விதமே வேறு...''



பத்மாவதி சொல்ல ஆரம்பித்தாள்.

''நான் உங்களிடம் சொன்னதில் எது உண்மையோ.. பொய்யோ.. என் பிறந்த ஊர் காரைக்குடி என்பது மட்டும் உண்மை.. அப்பா வியாபாரம் செய்து கொண்டிருந்தார்.. நான்.. அண்ணா.. அப்பா.. அம்மா.. என்று கலகலப்பாக வாழ்ந்தது ஒரு காலம்...''

''ஏன்.. என்ன ஆனது?''

''சொல்கிறேன் கேளுங்கள்..''

''காரைக்குடிச் சீமை பழமை வாய்ந்தது.. வீடுகள் எல்லாம் பிரம்மாண்டமாகவும்.. எல்லாமே பர்மா தேக்குடனும் அந்தக் காலத்து கலை நுணுக்கத்தோடு கட்டப்பட்டிருக்கும்.. ஒவ்வொரு வீடும்.. ஒரு அரண்மனைதான்.

அப்படிப்பட்ட அரண்மனை போன்ற வீடுகளில் ஒன்றில் வாழ்ந்தவர்தான் ரத்தினவேல்.. கமிஷன் மண்டி வைத்திருந்தார்.. கடை வியாபாரம் நன்றாகப் போய் கொண்டிருந்தது... மனைவி பிரமிளாவிடமும் பிள்ளைகள் தனசேகரன்.. பத்மாவதியிடமும் உயிராக இருந்தார்.

தானுண்டு.. தன் கடையுண்டு.. தன் பிள்ளைகளுண்டு என்று வாழ்ந்தவரின் வாழ்க்கையில் விதி விளையாடியது.. ராமேஸ்வரம் கோவிலுக்குப் போய் விட்டு திரும்பி வரும்போது.. ஒரு கொலையை அவர் பார்த்து விட்டார்.. மனைவி குழந்தைகளை நிற்கச் சொல்லி விட்டு.. இயற்கை உபாதையைத் தணித்துக் கொள்ள ஒரு சந்திற்குள் சென்றவர்.. அங்கு ஒருவனை நான்கு பேர் கத்தியால் குத்திக் கொல்வதைப் பார்த்து விட்டார்.. கொலையாளிகளின் முகம் இவருக்கு நினைவிருந்ததோ இல்லையோ.. இவரது முகம் கொலையாளிகளுக்கு மனதில் பதிந்து விட்டது. அவசரமாய் திரும்பி ஓடி வந்தவர்... மனைவியிடம்,

''பிள்ளைகளைக் கூப்பிட்டுக் கொண்டு சீக்கிரமாய் வாடி...'' என்று பரபரத்தார்.

என்ன... ஏது என்று விசாரிக்காமல் வள்ளுவரின் வாய் மொழி தட்டாத வாசுகி போல் பிரமிளா தனசேகரனை ஒரு கையிலும் பத்மாவதியை மறு கையிலும் பிடித்துக் கொண்டு முன்னால் ஓடிய கணவரின் பின்னால் தானும் ஓடினாள்.

பஸ்ஸில் ஏறி இடம் பிடித்து அமர்ந்து... பஸ்ஸும் கிளம்பிய பின்னர் ஆசுவாசப் பெருமூச்சு விட்டார் ரத்தினவேல்.

'அப்பா.. தப்பி விட்டோம்.. இனி மேல் கவலையில்லை...'

ஆனால் அந்தக் கொலையாளிகளில் ஒருவன் பஸ்ஸில் ஏறி அவர்களைப் பின் தொடர்ந்ததை ரத்தினவேல் அறியவில்லை.

விளைவு... தனசேகரனும்.. பத்மாவதியும் பள்ளியிலிருந்து வீடு திரும்பிய ஓர் நாள் மாலைப் பொழுதில்.. வீட்டில்... தாயும் தகப்பனும் பிணமாகக் கிடப்பதைக் கண்டார்கள்..''

''அப்பாவைக் கொன்றபோது அம்மாவும் ஊடே பாய்ந்திருக்க வேண்டும்.. சந்தோஷ்.. எங்களுக்கு எதுவும் விவரமாகத் தெரியவில்லை.. ஆனால்.. அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து அப்பா அம்மாவைக் கொன்றவர்கள்.. புதுக்கோட்டை பக்கமிருந்த சோணாச்சலத்தின் ஆள்கள் என்பது மட்டும் எங்களுக்குத் தெரிய வந்தது..''

''கஸ்தூரி...''



''எனக்கு எட்டு வயது சந்தோஷ்... அண்ணனுக்கு பதினொரு வயது.. நாங்கள் இருவருமே சிறு வயது.. ஏச்சுறைய குழந்தைகள்.. அநாதையாக நின்றோம்.. ஒரு பாவமும் அறியாத எங்களின் பெற்றவர்களைக் கொன்று எங்களை அநாதையாக்கியது சோணாச்சலம்..''

பத்மாவதி மேலும் சொல்ல ஆரம்பித்தாள்.

உறவினர்கள் யாரும் அண்ணன்.. தங்கையின் பொறுப்பை முழுதாக ஏற்றுக் கொள்ளத் தயங்கி நின்ற போது.. அந்த ஊரிலிருந்த உறவினர் ஒருவர் வீட்டிற்கு விருந்தாளியாக வந்த பெரியவர் ஒருவர் அந்தச் சிறுவனையும்.. சிறுமியையும் பார்த்து பரிதாபப்பட்டார்.

''அவர் வேறு யாருமில்லை சந்தோஷ்... சென்னையிலிருந்த கஸ்தூரிபா அநாதை ஆசிரமத்தின் நிர்வாகி.. அவர் எங்கள் இருவரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்து விட்டார்.. நாங்கள் இருவரும் அநாதை ஆசிரமத்தில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தோம்.. அந்த ஆசிரமத்தின் நினைவாகத்தான்.. நான் என் புனைபெயரை கஸ்தூரி என்று வைத்துக் கொண்டேன்..''

''உங்களுடைய கடையும் வீடும் என்ன ஆனது?''

''வீடு இன்றும் இருக்கிறது.. கடையை.. அரை விலை... கால் விலை போட்டு எங்கள் பெரியப்பா எடுத்துக் கொண்டார்..

அந்தப் பணத்தை ஆசிரம நிர்வாகி எங்கள் பெயரில் பேங்கில் டெபாசிட் செய்து வைத்தார்.. அண்ணன் டிகிரி முடித்தவுடன்.. எஸ்.ஐ. வேலைக்கு அப்ளை பண்ணினான். வேலை கிடைத்து விட்டது.. அவனுக்கு

வேலை கிடைத்தவுடன் அவன் ஆசிரமத்தை விட்டு வெளியேற வேண்டும்.. அது ஆசிரம விதி.. அதன்படி அவன் வெளியேறி.. தனி வீடு பார்த்துக் கொண்டு.. என்னையும் அழைத்துக் கொண்டான்.. அப்போது நான் டிகிரி முதல் வருடம் படித்துக் கொண்டிருந்தேன்.. நீண்ட நாட்களுக்குப் பிறகு.. நாங்கள்.. வீடு.. என்ற அமைப்பில் வாழ ஆரம்பித்தோம்...''

கண்கள் கசிய சொல்லிக் கொண்டிருந்தாள் பத் மாவதி.

''தனசேகரன் போலீஸ் வேலைக்குச் சேர்ந்ததற்கு அடிப்படைக் காரணமே.. அந்தச் சோணாச்சலம் யார் என்பதைக் கண்டுபிடித்து அவனைச் சட்டப்படி தண்டிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

அதன்படி அவன் சோணாச்சலத்தைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தான்.. கிடைத்த தகவல்கள் பயங்கரமாக இருந்தன... கடலோர மாவட்டங்களில் அவனுக்கென்று ஒரு ஆள் படையே இருந்தது. கடத்தல் தொழில் அவனுடைய முக்கியமான தொழில்.. அது தவிர ஆயுதங்கள் விற்பனை செய்யும் கும்பலுடன் தொடர்பு கொண்டு.. அதைக் கடத்தவும் உதவி வந்தான். ராமேஸ்வரத்தில் ஆயுதக் கடத்தலின் போது நிகழ்ந்த கைகலப்பில் ஒருவன் உயிரை எடுத்த போதுதான் ரத்தினவேலு அதைப் பார்த்திருக்கிறார்.. விளைவு அவரும்.. அவரது மனைவியும் பிணமானார்கள். அன்றிலிருந்து இன்றுவரை அவன் செய்து வரும் கொலை கடத்தல்களுக்கு அளவே இல்லை. அவ னுடைய வாரிசு எப்படி இருக்குமோ.. அப்படியே இருக் தான் ரஞ்சன்.



தற்செயலாக சென்னையைச் சேர்ந்த மாதவி என்ற பெண்ணைக் காணவில்லை என்று கொடுக்கப்பட்ட புகாரை விசாரித்த போது.. புள்ளி.. புள்ளியாக விவரங் கள் நகர்ந்து.. அவள் ரஞ்சனால் அன்னவாசலுக்கு கடத்திச் செல்லப்பட்ட விவரம் தெரிய வந்தது.''

''அண்ணன் ரொம்பவே உற்சாகப்பட்டான் சந்தோஷ்.. இத்தனை நாள்களாய் அவன் காத்திருந்ததிற்கு நல்ல பலன் கிடைத்து விட்டது என்று கூறிக் கூறிச் சந்தோசப் பட்டான்... ரஞ்சன் மாதவியை அன்னவாசலில் இருந்த மலையுச்சிக்கு கொண்டு சென்று.. அங்கு அவளைத் தீர்த்துக் கட்டியதைப் பார்த்த சாட்சி.. போலீஸிற்கு கிடைத்திருந்தது.. நான் அப்போதுதான் ஐ.பி.எஸ் பாஸ் பண்ணி டிரெயினிங்கிற்கு கிளம்பிக் கொண்டிருந்தேன்.. என்னிடம் அவ்வளவு உற்சாகமாய் பேசினான்.. என்றைக் கும் இல்லாத திருநாளாய் கமலாவின் கன்னத்தை லேசாகத் தட்டிச் சிரிக்க வேறு செய்தான்..''

''கமலா என்பது யார்...?''

''என் அண்ணனை உருகி.. உருகிக் காதலித்தவள்.. பக்கத்து வீட்டுப் பெண்... அவள் ஒரு டீச்சர் சந்தோஷ்.. இப்போது புரிகிறதா நான் ஏன் டீச்சராக அன்னவாச லுக்கு வந்தேன் என்பது..?''

''அவளை உன் அண்ணன் காதலித்தாரா?''

''காதலித்ததை ஒப்புக் கொள்ள மறுத்தான்.. அவளை.. அவள் பாராதபோது அப்படி ஓர் பார்வை பார்ப் பான்.. அவள் பார்த்து விட்டால் முகத்தை கடுகடு வென்று வைத்துக் கொள்வான்..''

''ஏன்...?''

''இதை அவளும் அண்ணனிடம் கேட்டாளே... அதற்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா?''

பத்மாவதி பழைய நினைவுகளுக்குப் போனாள்.

தனசேகரனுக்கு கமலாவை மிகவும் பிடிக்கும்.. அவள் தன்னை மிக ஆழமாய் காதலிக்கிறாள் என்பதையும் அவன் அறிவான். அடிக்கடி அவள் பத்மாவதியிடம்

''உன் அண்ணனின் மனம் என்ன கல்லா.. இல்லை இரும்பா?'' என்று கேட்பதும் அவனுக்குத் தெரியும்..

இருந்தும் அவளிடம் அகப்படாமல்.. அவளுக்குப் பிடி கொடுக்காமல் நழுவிக் கொண்டே இருந்தான்.

ஒருநாள் கமலா தனசேகரனின் வீட்டிற்கு வந்தபோது பத்மாவதி வீட்டில் இல்லை.. அவன் மட்டுமே இருந் தான்..

சோபாவில் சரிந்து அமர்ந்து எதிரேயிருந்த டீப்பாயில் கால்களைத் தூக்கிப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந் தவன்.. கமலாவைப் பார்த்ததும் ஒழுங்காக அமர்ந்து கொண்டு.. சுவரைப் பார்த்துச் சொன்னான்.

''பத்மாவதி.. வீட்டில் இல்லையே...''

''ஏன்.. அதை என்னைப் பார்த்துச் சொல்ல மாட்டீர் களா?''

''ப்ளீஸ்.. போய் விட்டு.. பத்மா வந்த பின் வாங்க..''

''ஏன்..? அவளிடம் மட்டும்தான் நான் பேச வேண் டுமா? உங்களிடம் பேசக் கூடாதா?''

''என்னிடம் பேச என்ன இருக்கிறது?''

''எவ்வளவோ இருக்கிறது.. என்னைப் பற்றி.. எனக்கு உங்கள் மேல் இருக்கும் காதலைப் பற்றி.. நம் எதிர்காலத்தைப் பற்றி.. இப்படி எவ்வளவோ பேச லாமே...''



''கமலா.. இதுபோல் என்னிடம் பேசாதே..''

''உங்களிடம் பேசாமல் வேறு யாரிடம் பேசுவேன்..''

''எனக்கு இதுபோன்ற பேச்சுக்கள் பிடிக்காது...''

அப்போதுதான் அவன் முகத்தைப் பார்த்துக் கமலா கேட்டாள்.

''உங்கள் மனம் என்ன கல்லா.. இல்லை இரும்பா?''

தனசேகரன் எழுந்தான்.. அவளருகில் வந்தான்.. கமலா நாணத்துடன் பின்வாங்கினாள். அவன் நெருங் கினான்.. அவள் சுவரோடு சுவராய் சாய்ந்து நின்றாள்.. அவளது இரு பக்கமும் கைகளை ஊன்றி அவளையே ஊடுருவும் பார்வை பார்த்தவன் கூறினான்.

''இல்லை... என் மனம் கல்லில்லை.. அதிலும் ஆசா பாசங்கள் இருக்கின்றன.. இருந்து என்ன பயன்? நான் வேட்டைக்காரன் கமலா.. இருபத்தி நான்கு மணிநேரமும் வேட்டையாடக் கடமைப்பட்டவன்.. என் வாழ்நாளெல் லாம்.. என்னுடைய பெற்றவர்களைக் கொன்ற கொலை காரனையும்.. அவனைப் போன்ற மற்றவர்களையும் வேட்டையாடப் போகிறேன்...''

## 22

வானம் பொழியவில்லை...
பூமி விளையவில்லை...
வானாதி தேவர்களின்
வரமும் கிடைக்கவில்லை...
– நீங்காத என் நினைவுகள் –

கமலாவின் கண்கள் கலங்கின.

"நீங்கள் வேட்டையாடுவதற்கு நான் தடையாய் இருக்க மாட்டேன்.."

"உன் காதல் தடையாக நிற்கும்.. நான் வேட்டையாடுவதை மட்டுமே என் வாழ்க்கை லட்சியமாய் வைத்திருக்கிறேன்.. என்னால் காதல் செய்ய முடியாது..."

"நீங்கள் என்னைக் காதலிக்காவிட்டால் என்ன? நான் உங்களைக் காதலிக்கிறேன்.. எனக்கு உங்கள் நினைவுகளே போதும்.."

"உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது.. நான் போகப் போவது கரடு முரடான பாதை என்கிறேன்.. கூட வருவேன் என்று பிடிவாதம் பிடித்தால் எப்படி?"

"நான் அப்படித்தான் பிடிவாதம் பிடிப்பேன்..."

அவள் அழுத்தம் திருத்தமாய் கூற.. அவன் முறைத்தான்.

"அப்படியே அறைந்து விடுவேன்.."

"அறையுங்கள்.. அப்படியாவது உங்கள் கை.. என் கன்னத்தில் படாதா? அதற்குத்தானே தவமிருக்கிறேன்.."

"உன்னை..."

அவன் இயலாமையில் எழுந்த கோபத்துடன்.. விலக முயன்றபோது அவன் எதிர்பாராத வகையில் கமலா.. தனசேகரனின் கழுத்தில் தன் இரு கைகளையும் மாலையாக்கி எம்பி.. அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்... அவன் திகைத்து விட்டான்.



"கமலா.. என்ன இது?.. என்ன காரியம் செய்கிறாய்?"

"வாழ்ந்தால் உங்களுடன் மட்டும் தான் நான் வாழ்வேன்.. அதை உங்களுக்குப் புரிய வைக்க.. இதைவிட வேறு வழி எனக்குத் தெரியவில்லை.."

அவள் கைகளை விலக்கி.. அவனிடமிருந்து விலகிப் போய் விட்டாள்.. அவளது செயல் வெகுநேரம் தனசேகரனைப் பாதித்துக் கொண்டிருந்தது.

"என்னண்ணா.. மந்திரித்து விட்டது போல் ஓர் மார்க்கமாய் இருக்கிறாய்..."

"ஒன்றும் இல்லையே..."

"நீ சொல்வதைப் பார்த்தால் ஏதோ இருக்கிறது என்று தெரிகிறது.. என்ன விசயம்? கமலா இங்கே வந்தாளா?"

"நீ போன காரியம் முடிந்ததா?"

"நான் கேட்பதென்ன?.. நீ சொல்லுவதென்ன? கமலா இங்கே வந்தாளா என்று கேட்டேன்.."

"வந்திருந்தாள்..."

"அதுதானே பார்த்தேன்.. ஒருநாளும் இல்லாத திருநாளாய் அண்ணாச்சி முகத்தில் அசடு குடம் குடமாய் வழிகிறதே என்று பார்த்தேன்.. இதுதானா விசயம்? அவள் என்ன சொன்னாள்?"

"என்னென்னவோ சொன்னாள்.."

"நீ என்ன பதில் சொன்னாய்...?"

"முடியாது என்றேன்..."

"அதற்கு அவள் என்ன சொன்னாள்.."

தன்னையும் அறியாமல் தனசேகரன் பேச்சின் போக்கில்,

"முத்தமிட்டு விட்டாள்.." என்று சொல்லி விட்டான்.

''என்னது..?''

பத்மாவதி விழிகளை அகற்றி விழித்துப் பார்க்க தனசேகரன் அவசரமாய் வெளியே ஓடிவிட்டான்.

இரவுச் சாப்பாட்டிற்கு அவன் வீடு திரும்பும்போது வெகு நேரமாகி விட்டது. பத்மாவதி டைனிங் டேபிளில் தலை வைத்து தூங்கி விட்டாள். தன்னிடமிருந்த சாவியைக் கொண்டு வீட்டைத் திறந்து கொண்டு வந்த தனசேகரன் தனக்காக காத்திருந்து தூங்கி விட்ட தங்கையைப் பார்த்து நெகிழ்ந்தான்.

மெல்ல அவளது தலை கோதினான்.. அவள் சட்டென்று விழித்துக் கொண்டாள்.

''என்னடா.. அண்ணனுக்காக காத்திருந்து தூங்கி விட்டாயா?''

''ஏன் இவ்வளவு நேரம்?''

''நேரமாகிருச்சுடா.. நீ சாப்பிட்டு விட்டாயா?''

''நீ சாப்பிடாமல் என்றைக்கு நான் மட்டும் சாப்பிட்டிருக்கிறேன்?''

இயல்பாய் கேட்டபடி தனசேகரனுக்கு தட்டை எடுத்து வைத்து பரிமாற ஆரம்பித்தாள் பத்மாவதி.

''நீயும் உட்கார்.. சேர்ந்து சாப்பிடலாம்..''

''ம்..'' என்றபடி அருகில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்த பத்மாவதி தனசேகரனைப் பார்த்து

''அண்ணா..'' என்றழைத்தாள்..

''என்ன..'' என்றான் அவன்.

''உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்..''



''வேண்டாம்.. நீ என்ன சொல்லப் போகிறாய் என்று க்குத் தெரியும்..''

''கமலாவுக்கு என்னண்ணா குறைச்சல்?''

''அவள் குறைவு என்று யார் சொன்னது?''

''நீதான்...''

''நானா.. நான் எப்போது அப்படிச் சொன்னேன்?''

''வாயால் சொன்னால்தானா? அவள் குறைவு என்பது ல்தானே நீ நடந்து கொள்கிறாய்?''

''அவள்தான் புரியாமல் பினாத்துகிறாள் என்றால் நீயுமா..?''

''எல்லாம் நாங்கள் புரிந்துதான் பேசுகிறோம்.. நீதான் அவள் மனதைப் புரிந்து கொள்ளாத ஜடமாக இருக்கிறாய்..''

''ஜடமா...? நானா...?''

அவன் பலமாகச் சிரித்தான். பின் எழுந்து கை கழுவி விட்டு அவனது அறைக்குள் போகப் போனான்.

''அண்ணா... எனக்கு ஒரு பதிலைச் சொல்..''

''பத்மா.. நான் ஜடமில்லை. எனக்கும் மனது இருக்கிறது.. உணர்வுகள் இருக்கிறது.. அதே சமயம் கடமையும் இருக்கிறது..''

''கடமை தவறாத காவல்காரன்தான் நீ.. அதைப் பற்றியே பெருமையாய் பீற்றிக் கொள்ள வேண்டாம்... நானும் போலீஸ்காரிதான்.. அதையும் மறந்து விடாதே...''

பத்மாவதியின் பின் தலையை செல்லமாகத் தட்டிய தனசேகரன் அவள் எதிரில் அமர்ந்தான்.

''பத்மா.. நான் இப்போது முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறேன்...''

''போலீஸிற்கு எப்போதுமே முக்கியமான வேலை இருக்கத்தான் செய்யும்..''

''இது வழக்கமான வேலையில்லை...''

''ஸ்பெசல் கேஸா..''

''ஆமாம்... மற்ற கேஸ்களில் நான் ஒரு போலீஸ்காரன் மட்டும்தான்.. இந்தக் கேஸில் நான் பாதிக்கப்பட்டவன்..''

பத்மாவதிக்கு எதுவோ புரிவது போல் இருந்தது.

''நீ சொல்வது...?''

''ஆமாம்.. நம் அம்மா அப்பாவைக் கொன்றவனைப் பிடிக்கும் முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்று விட்டேன்..''

''நீ என்ன சொல்கிறாய் அண்ணா..''

''ஆமாம் பத்மா.. ரஞ்சன் என்பவன் சென்னையில் உள்ள பெண்ணைக் கடத்திப் போய் கொலை செய்து விட்டான்.. அதைக் கண்ணால் பார்த்த சாட்சி இருக்கிறது.. அவனைக் கைது செய்ய அன்னவாசல் போகப் போகிறேன்.. அவனைப் பிடித்து விட்டால்.. அவனுடைய அப்பனைப் பிடித்தது மாதிரிதான்.. அவனும்.. அவனுடைய அப்பனும் மாட்டி விட்டால்... போலீஸ் கவனிக்கிற கவனிப்பில் அவன்கள் பண்ணிய எல்லாக் குற்றங்களையும் ஒப்புக் கொள்வார்கள். நான் அந்த நாளுக்காகத்தான் காத்திருக்கிறேன்..''

''ரஞ்சனுடைய அப்பனா? யார் அவன்..?''

''சோணாச்சலம்..''

தனசேகரன் இதைக் கூறியபோது கைகள் நடுங்க பத்மாவதி தமையனின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள். அவர்கள் மட்டுமே உணர்ந்த நினைவுகளின் கனம் தாங்காமல் அவர்களது கைகள் நடுங்கின.

''அண்ணா.. இதற்கும்.. நீ கமலாவின் காதலை நிராகரிப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?''

''நான் கமலாவின் காதலை நிராகரிக்கவில்லை.. அவள் காதலை ஏற்றுக் கொள்வதை தள்ளிப் போடுகிறேன். அவ்வளவுதான்... என்றைக்கு சோணாச்சலத்தையும்.. ரஞ்சனையும் தூக்கி உள்ளே போடுகிறேனோ... அன்றைக்குத்தான் நான் என் சொந்த வாழ்க்கையைப் பற்றி யோசிப்பேன்..''

தனசேகரன் தீர்மானமாகச் சொல்லிவிட்டான்.

அன்று தமையன் கூறியதைச் சந்தோஷிடம் சொல்லிக் கொண்டிருந்த பத்மாவதியின் விழிகளில் நீர் நிரம்பி வழிந்தது.

''அண்ணன் சொன்னதை கமலாவிடம் சொன்னேன் சந்தோஷ்.. அவள் என்னவோ.. அன்றைக்கே அவளுக்கும் அண்ணனுக்கும் கல்யாணம் ஆகிவிட்டதைப் போல் மகிழ்ந்து போனாள்.. திரும்பத்திரும்ப அண்ணன் சொன்னதை சொல்லச் சொல்லி கேட்டு மகிழ்ந்தாள்.

அவளது சந்தோசத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது சந்தோஷ்.. பாவி.. அவளது ஆசைக் கனவுகள் எல்லாம் நிறைவேறி விட்டது போல் மகிழ்ந்து போனாள்... அப்போதுதான் எனக்கு டிரெயினிங் ஆர்டர் வந்தது... நான் டிரெயினிங் கிளம்பிக் கொண்டிருந்

தேன்... கமலா எனக்கு உதவியாக எனது டிரஸ்களை எடுத்து மடித்து வைத்துக் கொண்டிருந்தாள்.. அப்போது தான் அண்ணன் படு உற்சாகமாக வீட்டுக்குள் வந் தான்...''

பத்மாவதி மீண்டும் அன்றைய நாள்களுக்குள் போனாள்... அந்த நாள்... அவள் கடைசியாக அவ ளுடைய அண்ணனைப் பார்த்த நாள்...

''வெற்றி.. வெற்றி..'' என்று சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் வந்தான் தனசேகரன்.

''என்ன அண்ணா.. பழைய சினிமாப் படத்தின் முதல் காட்சியில் வரும் வசனம் போல் பேசுகிறாயே..''

''நான் காத்திருந்த நாள் வந்துவிட்டது பத்மா.. சோணாச்சலத்தையும்.. ரஞ்சனையும் கைது பண்ணச் சொல்லி அரெஸ்ட் வாரண்ட் வந்துவிட்டது.. இன்னொரு சந்தோசமான விசயம் தெரியுமா?''

''என்ன...?''

''என்கவுன்டர் லிஸ்டில் அவர்கள் இருவரின் பெயரும் இருக்கிறது..''

''ஈஸிட்..?''

''யெஸ்.. நான் போகிறேன் பத்மா.. அன்னவாசலுக் குப் போகிறேன்..''

கமலா துணுக்குற்றாள். ''ஏன் இப்படி அச்சாணியமாய் பேசுகிறார்?''

''போய் வருகிறேன் என்று சொல்லச் சொல் பத்மா..''

தனசேகரன் சிரித்தான்.. கமலாவின் அருகே நெருங்கி அவளது கன்னத்தில செல்லமாகத் தட்டினான். கமலா



சிவந்து விட்டாள்.. அவளது விழிகள் அவனை சாப்பிட ஆரம்பிக்க அவன் அவளை காதலுடன் பார்த்தபடி கூறினான்.

''போய் வருகிறேன்.. போதுமா.. வெற்றியுடன் திரும்பி வந்து உனக்குத் தாலி கட்டுகிறேன்.. தயாராக இரு...''

கமலா தன் செவிகளை நம்ப முடியாமல் திகைத்து அவனை நோக்கினாள்.. அவளது விழிகளில் ஆயிரம் கனவுகள்.. கற்பனைகள் எதிர்பார்ப்புகள்..

## 23

**யார் குடியை நீ கெடுத்தாய்..?**

**யார் உணவை நீ பறித்தாய்..?**

**ஊழ்வினை செய்தாயோ...?**

**உற்ற வினை புரிந்தாயோ...?**

**– நீங்காத என் நினைவுகள் –**

மாலை மறைந்து இருள் கவிய ஆரம்பித்திருந்தது.. முழங்கால்களில் தலையைச் சாய்த்தவளாய் பத்மாவதி கேவி அழுதாள்.. சந்தோஷ் அவளைத் தேற்றும் வகை யறியாமல் தவித்தான்.

''வெற்றியுடன் வருகிறேன் காத்திரு என்று கமலா விடம் சொல்லி விட்டுப் போனவன் உயிரற்ற வெற்று உடலாகத்தான் திரும்பி வந்தான்... அவன் உடலெல் லாம் சல்லடையாய் துப்பாக்கிக் குண்டு துளைத்த காயங்கள்... அவன் யார் குடியைக் கெடுத்தான்.. யார் உணவைப் பறித்தான்? ஏன் அவனுக்கு இந்தக் கதி

வந்தது? நாங்கள் யாருக்கும் மனதாலும் துரோகம் நினைக்கவில்லையே.. விதி ஏன் எங்களின் வாழ்க்கையை இப்படிச் சூறையாடியது? எனக்கென்று இந்த உலகில் சொந்தமென்று சொல்லிக் கொள்ள இருந்த ஒரே ஒரு ஜீவனும் போய்விட்டது.. நான் அநாதையாக நின்றேன்.."

"அழாதே கஸ்தூரி..."

"எப்படி அழுகாமல் இருக்க முடியும்? அன்று என் அண்ணன் அடிமரமாய் வீழ்ந்து கிடந்த காட்சி.. இன்றும் என் மனக் கண்ணில் நிற்கின்றதே.. எப்படி என்னால் நிம்மதியாய் இருக்க முடியும்? அவன் காய்ச்சல் வந்தோ.. நோய் வந்தோ போயிருந்தால் கூட என் மனம் இப்படி வேகாது சந்தோஷ்.. ஆனால் அவன் ரத்தம் கொட்டி உயிர் விட்டான்.. என் மனதில் தீப் பற்றி எரிகிறது சந்தோஷ் அதன் தகிப்பில் நான் பொசுங்கித் தவிக்கிறேன்.. என் உணர்வுகளை எப்படி நான் சொல்வேன் சந்தோஷ்.. என் ஈரக்குலை பதறுகிறதே... அந்தக் கொடுமையை எப்படி நான் உங்களுக்குப் புரிய வைப்பேன்...?"

சந்தோஷ் பரிதவித்தான்.. அவள் இப்படிக் குமுறுவாள் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.

"என் பெற்றோர்கள் இறந்தபோது எனக்கு மிகவும் சிறிய வயது.. அறியாத வயது.. அநாதை ஆசிரமத்தில் வளர்ந்தாலும் என் அண்ணன் எனக்கு எல்லாமுமாக இருந்தான்... தாய்க்கு தாயாய்.. தகப்பனுக்குத் தகப்பனாய்.. எல்லாமுமாய் எனக்கு இருந்தவனை எனக்கு இல்லாமல் பண்ணி விட்டார்கள் படுபாவிகள்.. அன்று என் அண்ணனின் உயிரில்லாத உடலைக் கண்டபோது என் மனதில் பற்றியெரிந்த தீ... ரஞ்சனை நான் கொல்லும் வரை அணையவில்லை.. உன் மனதில் ஈரமிருக்



ர் என்று என்னைக் கேட்டீர்களே.. இல்லை.. என் தில் ஈரம் இல்லை... மாறாக தீ இருந்தது.. என் ரியை அழிக்கும் தீ.. என் அண்ணனின் ஆத்மாவை ர் வைக்க வேண்டுமென்ற வெறி கொண்ட தீ.. ருக்கும் இடத்தில் வெம்மைதான் இருக்கும்.. ஈரம் கே இருக்கும்?"

"கஸ்தூரி.. நீ வேதனைப்படாதே..."

"நான் வேதனைப்பட்டது ஒருபுறமிருக்கட்டும்.. அந்தக் கமலா என்ன பாவம் செய்தாள்? என் அண்ணனை மனமார நேசித்தாள்.. அவனது முடிவைத் தாங்க முடியாமல்... இரண்டே நாள்களில் தூக்க மாத்திரைகளை விழுங்கி அவள் வாழ்வை முடித்துக் கொண்டு என் அண்ணனைத் தேடிச் சென்று விட்டாள்... நானாவது என் அண்ணனின் உடன் பிறந்தவள். அவனது ரத்தம்.. அவள் யார்? என் அண்ணனுக்கும் அவளுக்கும் இருந்த சம்பந்தம் என்ன? என் அண்ணனை நேசித்தவள். அவ்வளவுதானே.. அவள் நினைத்திருந்தால்.. கொஞ்ச காலம் சென்று என் அண்ணனை மறந்து விட்டு வேறு ஓர் புதிய வாழ்க்கையை தொடங்கியிருக்கலாம்.. ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை... நீ எங்கே... நானும் அங்கே.. என்று என் அண்ணனின் பின்னாலேயே அவளும் போய் விட்டாள்..."

"என்னால் கமலாவின் உணர்வுகளை புரிந்து கொள்ள முடிகிறது கஸ்தூரி... நான் காதலித்துக் கொண்டிருப்பவன்.. அது தரும் வேதனை எனக்குப் புரியும்.."

பத்மாவதி எதிரேயிருந்த கடலை வெறித்தாள்.

"காதல்... அதற்கு எல்லாம் எனக்கு நேரம் ஏது சந்தோஷ்... நான் வேட்டையாட அன்னவாசல் வந்தவள்..

என் அண்ணன் விட்டுச் சென்ற வினையை முடிக்க வந்தேன்.. என் அண்ணனைக் கொன்றவனைக் கொன்று பகை முடிக்க அங்கு வந்தேன்.. என் நோக்கமெல்லாம் ரஞ்சனைக் கொல்ல வேண்டும் என்பது மட்டும்தான். அப்படியிருக்கையில் உங்கள் காதலை என்மனம் எப்படி நாடும்? போர்க்களமான வாழ்வில் போராடிக் கொண் டிருப்பவனுக்கு இளைப்பாற ஏது நேரம்? கண்ணதாச னின் பாடல் ஒன்றைக் கேட்டிருக்கிறீர்களா?

ஊரெல்லாம் தூங்கையிலே
விழித்திருக்கும் என் இரவு...
உலகமெல்லாம் சிரிக்கையிலே
அழுதிருக்கும் இந்த நிலவு...
பாதையிலே வெகுதூரம்...
பயணம் போகின்ற நேரம்..
காதலை யார் மனம் நாடும்?...

அதுபோல்தான் நானும்.. என் பாதை வேறு சந்தோஷ்.. என் பயணம் வேறு.. பகை முடிக்க வந்த இடத்தில் என் பகைவனின் வீட்டு விருந்தாளியாக உங்களைச் சந்தித் தேன்.. ஓர் வகையில் உங்களை நான் சந்தித்ததால்தான் ரஞ்சனை அவ்வளவு சீக்கிரமாக.. எளிதாக என்னால் சந்திக்க முடிந்தது... நீங்கள் என்னைக் காதலிப்பதாய் அவனிடம் கூறியதால்தான்.. அவன் உங்களைப் பழி வாங்குவதாய் நினைத்து என்னைக் காதலிக்க ஆரம் பித்தான்.. நான் விரித்த வலையில் சிக்கினான்... என் வேலையும் நான் நினைத்தபடி முடிந்தது.. அதற்கு உங்களுக்கு என் நன்றி சந்தோஷ்.."



"அவ்வளவுதானா கஸ்தூரி.. வேறு இல்லையா?"

"வேறு என்ன இருக்கிறது சந்தோஷ்.. எதுவுமே
லை.. நான் ஐ.பி.எஸ். முடித்து வந்தவுடன் என்
ண்டர்களில் தீவிரமாக இறங்கினேன்.. ஏன்
டியுமா? அவர்களை உயிருடன் விட்டால்.. இன்னும்
த்தனை உயிர்களைப் பறிப்பார்களோ.. எத்தனை
டும்பங்களை குலைப்பார்களோ என்ற எண்ணம்
ன்.. அப்போதுதான் சோணாச்சலத்தையும் ரஞ்சனை
ம் என்கவுண்டர் செய்யும் வேலையை என்னிடம்
ப்படைத்தார்கள்.. அவனுடைய கோட்டைக்குள்
ழைந்து அவனை என்கவுண்டரில் சாய்க்க வேண்டு
னால்.. வெளிப்படையாக நாங்கள் போக முடியாது...
வே வேசம் கட்டினோம்.. பாதிக்கப்பட்ட பெரிய
னிதரின் உதவிக் கரம் கிடைத்தது. ரஞ்சன் ஓர் பெண்
த்தன் என்று எனக்குச் சொல்லப்பட்டது..."

"அதனால் உன் பெண்மையை பணயம் வைத் தாய்..."

"அதை ஏன் இவ்வளவு வெறுப்புடன் சொல்கிறீர்கள் சந்தோஷ்.. நான் பெண்மையை பணயம் வைக்க வில்லை.. என் உயிரைப் பணயம் வைத்தேன்.. என் உயிரே போனாலும்.. ரஞ்சனின் உயிரை எடுக்காமல் திரும்பக் கூடாது என்ற வைராக்கியத்துடன்தான் நான் அன்னவாசலில் கால் வைத்தேன்..."

"கால் வைத்தவுடன் ரஞ்சனை மயக்க முயன்றாய்..."

"ஆமாம்.. ஏன் இல்லையென்று சொல்லச் சொல்கிறீர் கள்? என் அழகையும் ஓர் ஆயுதமாக நான் பயன்படுத் தினேன்.. நான் ஏற்கனவே உங்களிடம் சொல்லி விட் டேன்.. நான் இருந்தது போர்க்களம்.. அதில் சில நியாய

தர்மங்களுக்கு இடமில்லை.. கத்தியை கையில் எடுத்தால் சுழற்றாமல் இருக்க முடியாது... நான் ஒன்று கேட்கிறேன் சந்தோஷ்.. உங்களை யாராவது மயக்க முயன்றால் நீங்கள் மயங்கி விடுவீர்களா...''

சந்தோஷ் அவளையே இமை கொட்டாமல் பார்த்தான். பத்மாவதியின் விழிகள் தாழ்ந்தன.

''நீ என்னை மயக்க நினைக்கவில்லை கஸ்தூரி.. ஆனால் நான் உன்னிடம் மயங்கிப் போனது மட்டும் உண்மை...''

''வேண்டாம் சந்தோஷ்.. இப்போது இந்தப் பேச்சு வேண்டாம்..''

''சரி.. நான் பேசவில்லை...''

''ரஞ்சனை முடிப்பதை விட சோணாச்சலத்தை முடிப்பது மிகவும் கடினம்.. அதனால் முதலில் ரஞ்சனை முடித்து விடத் தீர்மானித்தோம்.. ரஞ்சனின் மரணம் சோணாச்சலத்தை பலவீனப்படுத்தும்.. அவர் சிந்திக்கும் திறனை இழப்பார்.. எங்களிடம் எளிதில் மாட்டிக் கொள்வார் என்பது எங்களின் கணிப்பு.. என்கவுண்டரில் வீழ்த்துவது என்பது மிகவும் சங்கடம் தரும் விசயம்... சோணாச்சலத்தின் வீட்டிற்குள் நுழைந்து நாங்கள் அவரைத் தீர்த்துக் கட்ட முடியாது.. வெளியே பொது இடத்தில் அவர் எங்களிடம் மாட்ட வேண்டும்.. நாங்கள் எதிர்பார்த்தது போலவே.. ரஞ்சனின் மரணத்தால் சோணாச்சலம் நொறுங்கிப் போனார்.. முன்யோசனை இல்லாமல் வீட்டை விட்டு வெளியில் வந்தார்.. கூண்டோடு கைலாசம் போய் விட்டார்...''

சந்தோஷ் மௌனமாக அமர்ந்திருந்தான்.. பத்மாவதி கைப்பையை எடுத்துக் கொண்டு எழுந்தாள்.



''அதற்குள் கிளம்பி விட்டாயே...''

''விளக்கம் சொல்ல வந்தேன்.. சொல்லி விட்டேன்...

...வந்த வேலை முடிந்து விட்டது.. கிளம்புகிறேன்..''

''வேலையை முடித்து விட்டுக் கிளம்புவதிலேயே

...யாய் இருந்தால் எப்படிக் கஸ்தூரி...''

''நான் கஸ்தூரியில்லை சந்தோஷ்..''

''எனக்கு நீ கஸ்தூரிதான்...''

''இதற்கு நான் என்ன செய்ய முடியும்?''

''நான் என்ன தவறு செய்தேன் கஸ்தூரி.. ஏன் என்னை தண்டிக்கிறாய்?''

''இது என்ன புதுப் பழி?''

''தண்டிக்கவில்லையென்றால் என் காதலை ஏற்றுக் கொள்...''

''அது சரி வராது சந்தோஷ்..''

''ஏன்..?''

''அதற்கு ஆயிரம் காரணங்கள் உள்ளன..''

''அவற்றில் ஓரிரண்டைச் சொல்லேன்.. கேட்கிறேன்..''

''சரியோ.. தவறோ.. நான் ரஞ்சனிடம் காதலித்தது போல் நடிக்க வேண்டி இருந்தது.. அது உங்களுக்கும் தெரியும்.. அது காலமெல்லாம் உங்கள் மனதில் இருக்கும்.. ஒரு நெருஞ்சி முள்ளாய் உறுத்தும்.''

''வீண் கற்பனை..''

''ஆண்களின் மனநிலை எனக்குத் தெரியும்.. அடுத்து.. சோணாச்சலமும்.. ரஞ்சனும் உங்கள் அம்மாவின்

நெருங்கிய உறவினர்கள். அவர்களைக் கொன்ற நான்... உங்கள் அம்மாவிற்கு எப்படி மருமகளாக ஆக முடியும்..?''

சந்தோஷ் திகைத்தான்.. இவள் மிகவும் புத்திசாலி என்று அந்த நிமிடத்தில் அவனுக்குத் தோன்றியது.. இது ஏன் அவனுக்குத் தோன்றாமல் போய்விட்டது..? சந்தோஷின் அம்மா ஒருநாளும் பத்மாவதியை தன் மருமகளாக ஏற்றுக் கொள்ள மாட்டாள். சந்தோஷின் உற்சாகம் வடியத் தொடங்கியது.

''இன்னும் ஒன்று இருக்கிறது.. இந்தப் போலீஸ் வேலை என் அண்ணனின் கனவு.. ஸோ.. நான் இந்த வேலையை விட முடியாது... இந்த வேலையால் என் உயிருக்கு எப்போதும் ஆபத்து காத்திருக்கும்.. இப்படி ஓர் சூழ்நிலையில் உள்ள பெண்ணை நீங்கள் திருமணம் செய்து கொள்வதை உங்கள் அப்பா விரும்ப மாட்டார்..''

## 24

**சுற்றியுள்ள மனிதரிடையே**
**தனியே என் பயணம்தான்...**
**சுற்றமெல்லாம் பெயரளவில்**
**சொந்தமென்றும் நீயேதான்...**
**– நீங்காத என் நினைவுகள் –**

சந்தோஷின் உற்சாகம் வடிந்தது. தான் கஸ்தூரியில்லை பத்மாவதி என்பதை அவனுக்குப் பிட்டு பிட்டு வைத்து தெளிவாக்கிக் கொண்டிருந்தாள் அவள்.



''சந்தோஷ்.. நீங்கள் காதலித்த கஸ்தூரி வேறு.. உங்கள் கண் முன் நிற்கும் இந்த பத்மாவதி வேறு.. கஸ்தூரி ஸ்கூல் டீச்சர்.. அம்மா.. அப்பா என்று ஒரு குடும்பத்துடன் இருந்தவள்.. பத்மாவதி அஸிஸ்டென்ட் கமிஷனர் ஆப் போலீஸ்.. உறவென்று சொல்லிக் கொள்ள யாருமேயில்லாத அநாதை.. கஸ்தூரி தினமும் புதுவிதமான நகை அணிந்து.. உங்களுக்குப் பிடித்த வண்ணங்களில் சேலை கட்டி பெண்மை மிளிர இருப்பாள்... பத்மாவதி காக்கிச் சீருடையில் கம்பீரமாய் தோற்றமளிப்பாள்.. கஸ்தூரிக்கு எதிரிகளே கிடையாது.. அவள் இனிமையானவள். பத்மாவதிக்கு எதிரிகள் ஏராளம்.. அவள் கடுமையானவள்.. கஸ்தூரிக்கு சிக்கல் இல்லாத பின்னணி உண்டு.. பத்மாவதிக்கு சிறு வயதிலேயே கொலையான பெற்றோர்... சமீபத்தில் பலியான அண்ணன்.. பகை முடிக்க அவள் துப்பாக்கியை ஏந்திய வன்மம் என்று பலமான பின்னணி உண்டு.. சந்தோஷ் நீங்கள் காதலித்த கஸ்தூரி கற்பனைத் தோற்றம்.. நான் உண்மையானவள்.. நீங்கள் காதலித்த கற்பனையானவளை நினைத்து உண்மையான என்னைத் தூரத்தாதீர்கள்...''

சந்தோஷ் கைகளை முன்புறமாய் மடித்துக் கட்டிக் கொண்டு அவள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தான்.

''மூன்றே மூன்று வார்த்தை கேட்கிறேன்.. அதற்கு மட்டும் பதில் சொல் கஸ்தூரி.. அதை நீ உண்மையாய் சொல்ல வேண்டும்.. பொய் சொல்லக் கூடாது.. அந்த பதிலைக் கேட்டபின் நான் போய் விடுகிறேன். அதன் பின் உன்னைத் துரத்த மாட்டேன்..''

''என்ன...?''

''உன் மனதில் நான் இல்லையா?''

பத்மாவதி பதில் பேசாமல் மௌனித்தாள்.. உண்மையைச் சொல் என்கிறான்.. எப்படி உண்மையைச்

சொல்வது.. 'என் மனதில் நீ மட்டும்தான் இருக்கிறாய்' என்று எப்படிச் சொல்வது?

அவன் அவளருகில் நெருங்கினான்.. அவள் பின் வாங்கி படகின் மேல் சாய்ந்து நின்றாள்.. அவன் தடை தகர்ந்த விடுதலை உணர்வுடன் அவள் கரம் பற்றி அருகே இழுத்தான்.. பத்மாவதி விடுபட முயலுமுன் அவளை இறுக தழுவி அவளது தோள் வளைவில் முகம் புதைத்தான்.. விலகி விட வேண்டும் என்று மனதின் அடியில் கேட்ட குரல் மெல்ல மெல்ல பலவீனமாகி தேய்ந்து போக பத்மாவதி சந்தோஷின் தோள்களை தன் கைகளால் சுற்றித் தழுவி அவன் அணைப்பில் இறுகப் புதைந்து கொண்டாள்.

சந்தோஷ் இப்போது சந்தோசமாக நகைத்தான்.. அவளது மனதை வெற்றி கொண்டு விட்ட மமதையுடன்... அவளது முகம் நிமிர்த்தி அவளது கன்னத்தில் இதழ் பதித்தான். அவனது சூடான மூச்சு கன்னத்தில் படிவதை உணர்ந்தும் அவள் விழி மூடிக் கிறங்கிக் கிடந்தாள். மீண்டும் அவளைத் தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண டவன் படகின் மேல் சாய்ந்து சரிந்து அமர்ந்தான்.. அவளை இழுத்து தன் கைவளைவில் சிறை வைத்து மடி மீது கிடத்திக் கொண்டான். குனிந்து அவளது நெற்றி யில் முத்தமிட்டான்.

"கஸ்தூரி..."

"ம்ம்ம்..."

"பேச மாட்டாயா..."

என்ன பேசுவது...? எப்படிப் பேசுவது? என்றோ ஓர் நாள் அன்னவாசல் மகிழம்பூ மரத்தடியில் சந்தோஷுடன்



பேசிக் கொண்டிருந்தபோது காதுகளில் நுழைந்த பாடல் இப்போது கேட்டது.

"யாரது...

சொல்லாமல் நெஞ்சள்ளிப் போவது?

தாளாத பெண்மை வாடுமே...

பாடுமே..."

தாளமாட்டாமல் அவனது மடியினியில் முகம் புதைத்துக் கொண்டாள் அவள்.. அவளது முடியினைக் கோதி சரி செய்து கொண்டவன்.. தன்னோடு அவளை இறுக்கிக் கொண்டு எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தான்.

எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தார்கள் என்று தெரியாமல் அவர்கள் காலத்தின் ஓட்டத்தை அறியாமல் உறைந்து போய் அமர்ந்திருந்தார்கள்.

முதலில் தன்னுணர்வு வரப் பெற்று விலகி எழுந்தது பத்மாவதிதான்.. அவசரமாய் அவள் கிளம்பினாள்.

"நில் கஸ்தூரி.. எதற்கு இந்த அவசரம்.."

"போதும் சந்தோஷ்.. உங்களருகில் நானிருந்தால் என் வசம் இழந்து விடுவேன்..."

"ஏய்.. ஏன் வார்த்தைகளை இஷ்டம் போல் பேசு கிறாய்? நீ என் வசம் வந்துவிட்டாய்.. அதைச் சொல்லு."

"ச்ச்.. இந்த வார்த்தை ஜாலம் வேண்டாம்.."

பத்மாவதி வேகமாக நடந்து சென்று விட்டாள்.. அவளது அபார்ட்மெண்டில் கார் பார்க்கிங் ஏரியாவில் காரை நிறுத்திவிட்டு லிப்டிற்குள் நுழைந்தாள்.. அவளது பிளாட்டைத் திறந்து உள்ளே நுழைந்து விளக்கைப் போட்டுவிட்டு கதவை தாழிட்டாள்.

என்றுமேயில்லாமல் இன்று அந்த பிளாட்டின் தனிமை அவளை அச்சுறுத்தியது.. சமையலறைக்குள் புகுந்த பார்த்தாள் சாப்பிட எதுவுமில்லை.. பிரிட்ஜைத் திறந்து தோசை மாவை எடுத்து தோசை வார்த்துக் கொண்டு இட்லிப் பொடியுடன் தொட்டுச் சாப்பிட்டாள். இரவு விளக்கை மட்டும் போட்டுவிட்டு ஏஸியை ஆன் பண்ணி விட்டுப் படுக்கையில் விருந்தவளை.. அவளது வாழ்வின் வெறுமை தாக்கியது..

தலைமாட்டிலிருந்த விளக்கைப் போட்டு விட்டு.. தனசேகரனின் போட்டோவை எடுத்துப் பார்த்தாள்.

''ஏன்.. அண்ணா.. என்னை விட்டுப் போனாய்? நீ இருக்கும் வரை இந்த வாழ்வில் நான் தனிமையாக உணரவில்லையே.. நீ போன பின்னால் தானே நான் அநாதையானேன்.. எனக்கென்று யாருமில்லையே அண்ணா..''

அப்படியே சுருண்டு படுத்துத் தூங்கி விட்டாள்.. அதிகாலையில் அழைப்பு மணி ஒலிக்க.. எழுந்து சென்று கதவைத் திறந்தவள் ஆச்சர்யமானாள்..

''நீங்களா..?''

''நான்தான்..'' என்றபடி உள்ளே வந்தான் சந்தோஷ்.

''என் வீடு எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''நேற்று இரவு உன் காரை பாலோ பண்ணினால் தெரியாமல் போய் விடுமா?''

''நேற்று இரவு நீங்கள் இங்கே வந்தீர்களா?''

''ஆமாம்.. இரவு வேளையில் தனியாய் உன்னை அனுப்பி விட்டு நான் எப்படி நிம்மதியாக வீட்டுக்குப் போவேன்.. அதனால் நீ வீட்டிற்குள் போய் கதவை அடைத்துக் கொள்ளும் வரை தொடர்ந்து வந்தேன்..''



''என்னைப் பற்றிப் பயமா?..'' கேலியாக நகைத்தாள் ...மாவதி..

''நான் யாரென்று தெரிந்த பின்னுமா இந்த பயம்? ...னே காவல்காரி.. என்னைக் காவல் காக்க தொடர்ந்து ...ந்தீர்களா? குட்ஜோக்.. என்னைப் பற்றித் தெரிந்த ...ர்கள் யாரிடமும் சொல்லி விடாதீர்கள்.. சிரித்து விடு ...வார்கள்..''

சந்தோஷ் அவளது சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை. ...லனமில்லாமல் அவளைப் பார்த்துக் கொண்டே நின் ...றான்.

''ஊருக்குத்தான் நீ ஏஸிபி. எனக்கு இல்லை.. எனக்கு நீ வெறும் கஸ்தூரி மட்டும்தான்.. ஆமாம்.. இப்போது தான் எழுந்தாயா..?''

''ம்ம்..'' என்றவாறு வாசல் கதவின் குமிழில் மாட்டப் பட்டிருந்த பாலிதின் கவரில் இருந்த பால் பாக்கெட்டை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள் பத்மாவதி.

அவள் பின்னாலேயே சென்ற சந்தோஷ்..

''நகரு.. நான் காபி போடுகிறேன்..'' என்றான்.

''ஹை.. நீங்கள் காபி போட்டால் யார் குடிப்பதாம்?''

''நீதான் குடிக்க வேண்டும்..''

''தோடா.. உங்கள் காபியை டெஸ்ட் பண்ணிப் பார்க்க நான்தான் கிடைத்தேனா?''

''ஆமாம்.. ஊரெல்லாம் சல்லடை போட்டுத் தேடி விட்டேன். நீதான் கிடைத்திருக்கிறாய்...''

சந்தோஷ் அவளை வலுக்கட்டாயமாய் நகர்த்தி விட்டுப் பாலைக் காய்ச்சினான். காபி கலந்து இரண்டு

கப்களில் ஊற்றினான். ஒன்றை அவளிடம் நீட்டி விட்டு.. இன்னொன்றைத் தான் பருக ஆரம்பித்தான்.

''பயமாய் இருக்கிறதே...'' என்று பாவனை செய்தபடி காபியைக் குடிக்க ஆரம்பித்த பத்மாவதி.. காபியின் ருசியில் தன்னை மறந்து

''வாவ்...'' என்றாள்.

''எக்ஸலென்ட் சந்தோஷ்.. எப்படி இப்படிக் காபி போடக் கற்று வைத்திருக்கிறீர்கள்..''

''ஆமாம்.. இது பெரிய பிரம்ம வித்தை பாரு.. இன்ஸ்டன்ட் காபி பொடியையும்.. ஜீனியையும் போட்டுக் கலக்கி குடிப்பதற்கு இவ்வளவு பாராட்டா?''

அவன் சுவாதீனமாய் சொல்ல.. அவள் வாத்சல்யத்துடன் அவனைப் பார்த்தாள்.

''நேற்று இரவு வீட்டு வாசல் வரை வந்தவர்.. ஏன் அப்போதே வீட்டிற்கு வராமல் போய் விட்டீர்கள்?''

சந்தோஷ் அவளை நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தான்..

''இது என்ன கேள்வி கஸ்தூரி..? இரவு நேரத்தில் நான் உன் வீட்டிற்கு வரலாமா? இதனால் உன் கண்ணியத்திற்கு ஏதும் களங்கம் வந்து விடாதா...?''

பத்மாவதி நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''ஆமாமில்லை.. அதை ஏன் நான் யோசிக்கவே இல்லை?''

சந்தோஷ் அவளைப் பார்த்துப் பரிவாக புன்னகைத்தான்.

''ஏனென்றால் நீ என்னை வேற்று ஆளாக நினைக்கவில்லை.. அதனால் இயல்பாக கேட்டு விட்டாய்..''



பத்மாவதி அவனுடைய காலி காபி கப்பையும்.. தன்னுடைய காபி கப்பையும் எடுத்து சிங்கில் போட்டாள்..

''ஒரு நிமிடம் வெயிட் பண்ணுகிறீர்களா? குளித்து விட்டு வந்து விடுகிறேன்..''

''ம்ம்.. பொறுமையாய் வா...''

பத்மாவதி அவசரமாய் குளித்து முடித்து வந்தபோது.. டைனிங் டேபிளில் ஆவி பறக்க வெண் பொங்கலும்.. சாம்பாரும் காத்திருந்தது.

''என்ன சந்தோஷ் இது? என் வீட்டிற்கு வந்து நீங்கள் சமையல் செய்ய வேண்டுமா?''

''உன் வீடு.. என் வீடு என்று ஏன் பிரித்துப் பேசுகிறாய்.. காபி மட்டும் இல்லை.. என் சமையலும் நன்றாக இருக்கும் சாப்பிட்டுப் பார்...''

அவனுடன் பேசிக் கொண்டே சாப்பிட்ட பத்மாவதிக்குள் இருந்த தனிமை உணர்வு மறைந்திருந்தது. யாருமில்லாத அந்த பிளாட்டின் வெறுமை மறைந்து.. ஓர் உயிர்ப்பு அந்த பிளாட்டிற்குள் வந்திருந்தது.

## 25

பாதைகள் பிரியும் வாழ்வினிலே...
பாவையெந்தன் பார்வையிலே...
உந்தன் அன்பைத் தேடுகின்றேன்...
உறவைச் சொல்லி பூஜிக்கிறேன்...
– நீங்காத என் நினைவுகள் –

பத்மாவதியைச் சூழ்ந்திருந்த யாருமற்ற வனாந்திரத்தில் இருப்பது போன்ற தனிமை மறைந்திருந்தது.. சந்தோஷுடன் பேசிக் கொண்டே சாப்பிட்டதில் அவளது வயிறு நிறைந்ததுடன் மனமும் நிறைந்திருந்தது.. அதை உணர்ந்தவளாய் கண் கலங்க அவனைப் பார்த்து

''தேங்க்ஸ்...'' என்றாள்.

அவன் 'எதற்கு' என்று கேட்கவில்லை.. மாறாக அவளது தலையில் லேசாகத் தட்டிச் சிரித்தான்.

''சந்தோஷ்.. நேற்று வரை எனக்கென்று யாருமில்லையென்று நினைத்திருந்தேன்..''

''இன்று அந்த நினைவு மறைந்து விட்டது.. இல்லையா?''

''ஆமாம்..''

''அதுதான் எனக்கு வேண்டும்.. சரி.. சரி.. சீக்கிரம் டிரஸ் பண்ணிக் கொண்டு கிளம்பு..''

''எங்கே..?''

''உன்னைக் கோவிலுக்கு கூப்பிட்டுக் கொண்டு போகலாம் என்று நினைத்தேன்...''

''பட்.. எனக்கு டியுட்டி இருக்கிறதே...''

''இன்றைக்கு ஒருநாள் லீவ் போடக் கூடாதா?''

''ஐ ஹேவ் சம் அர்ஜண்ட் வொர்க் சந்தோஷ்..''

''உனக்காக.. உன் வீட்டிற்கு வந்து.. காபி போட்டு.. டிபனும் பண்ணிக் கொடுத்தேனே.. எனக்காக நீ இதைக் கூடச் செய்ய மாட்டாயா?''



அவன் கேட்ட விதத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''ஓகே.. ஓகே.. நான் வருகிறேன்.. அதற்காக இப்படியெல்லாம் காமெடி பண்ணாதீர்கள்...''

கோவிலுக்கு என்பதால் அவள் 'ஆலிவ் கிரின்' எனப்படும் பாட்டில் பச்சை வண்ணத்தில் பட்டுப் புடவை உடுத்தி.. தலை முடியை தளர்வாகப் பின்னி... காதுகளில் பழையபடி ஜிமிக்கி போட்டு.. கழுத்தில் சின்ன கல் அட்டிகையும்.. கைகளில் வளையல்களுமாகக் கிளம்பினாள்.

''போகலாமா..?'' என்று எதிரே வந்து நின்று கேட்டவளை வைத்த கண் விலக்காமல் பார்த்தான் சந்தோஷ்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?''

''நீதான் எவ்வளவு அழகாக இருக்கிறாய்?''

''உலக மகா கண்டுபிடிப்புத்தான் உங்களுடையது.. வழியாமல் வாங்க.. போகலாம்..''

சந்தோஷ் காரைச் செலுத்திக் கொண்டிருந்தபோது பத்மாவதி திடீரென்று வினவினாள்..

''ஆமாம்.. எந்தக் கோவிலுக்கு நாம் போகிறோம் என்று நீங்கள் சொல்லவே இல்லையே...''

''வந்து பார்.. உனக்கே தெரியும்..''

சந்தோஷின் கார் அவனுடைய வீட்டிற்குள் நுழைந்தது.. பத்மாவதி புரியாமல் விழித்தாள்.

''கோவிலுக்குத்தானே போகிறோம் என்று சொன்னீர்கள்?''

''ஆமாம்..''

''இது வீடு மாதிரி தெரிகிறதே...''

''வீடுதான்.. எனக்கு என் வீடுதான் கோவில்..''

''இது உங்கள் வீடா?''

''ஆமாம்..''

''என்னை எதற்கு சந்தோஷ் இங்கு அழைத்துக் கொண்டு வந்தீர்கள்?''

''என் வீட்டை உனக்கு அறிமுகப்படுத்தத்தான்.. என் வீட்டிற்கு உன்னை அறிமுகப்படுத்தத்தான்...''

''இது வேண்டாத வேலை சந்தோஷ்..''

''நீயாக ஒரு வட்டத்தைப் போட்டுக் கொண்டு.. நத்தை தன் ஓட்டிற்குள் ஒடுங்கிக் கொள்வதைப் போல் ஒடுங்கிக் கொண்டு இருக்காதே.. கொஞ்சம் கூட்டை விட்டு வெளியே வா.. வெளியுலகத்தோடு கலந்து பழகு.. இப்படி வீடு.. வேலை.. ரௌடி... துப்பாக்கி... என்று இருந்தால் உனக்கு மூச்சு முட்டி விடும்.. என்னை உன் நண்பனாக நினைத்துக் கொள் கஸ்தூரி.. நான் காதல் சொல்லி உன்னை வற்புறுத்தவில்லை.. நீயாக மனம் மாறி என்னிடம் வந்து நாம் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று சொல்லும் வரை நான் காத்திருக்கிறேன்.. என்னை வெறும் நண்பனாக ஏற்றுக் கொள்வதில் உனக்கென்ன தயக்கம் வந்தது? இது உன் நண்பனின் வீடு... இங்கே நீ வந்து போகக் கூடாதா?''

பத்மாவதி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. வெறும் நண்பனாக அவனை நினைக்க முடியுமா?

அதற்குள் சந்தோஷ் வீட்டுப் படியேறி விட வேறு வழியின்றி அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

வீட்டு ஹாலில் அமர்ந்து பேப்பரைப் படித்துக் கொண் டிருந்த சந்தானம் பேப்பரை கீழே இறக்கி மகனைப் பார்த்தவர் வியப்பாக புருவத்தை உயர்த்தினார்.

''என்னப்பா.. காலையிலேயே சாப்பிடாமல் ஆபிஸில் வேலை இருக்குதுன்னு போனாயே... இப்ப வீட்டுக்கு



திரும்பி விட்டாயே.. ஏதும் பைலை மறந்து வைத்து விட்டுப் போய்விட்டாயா?''

''இல்லைப்பா.. உங்களுக்கு ஒரு பிரண்டை இன்ட்ரோடியூஸ் பண்ணலாமென்று நினைத்து வந்தேன்... அம்மா எங்கே...?''

''பூஜையறையில் இருக்கிறாள்...''

சந்தானத்தின் பேச்சு சந்தோஷின் பின்னால் வந்த பத்மாவதியைப் பார்த்ததும் நின்றது.. புருவங்கள் உயர எழுந்து நின்று பேப்பரை டீப்பாயின் மேல் போட்டார்.

கேள்வி கேட்கும் பார்வையொன்றை சந்தோஷின் மேல் வீசினார்.

''அப்பா.. இது கஸ்தூரி...''

பத்மாவதி கரம் குவித்து சந்தானத்தை வணங்கியபடி

''இல்லை அங்கிள்.. என் பெயர் பத்மாவதி..'' என்றாள்.

''என்னப்பா இது? நீ கஸ்தூரி என்கிறாய்.. இந்தப் பெண் என்னவென்றால் பத்மாவதி என்கிறது.. இந்தப் பெண்ணின் உண்மைப் பெயர்தான் எது?''

''என் பெயர் பத்மாவதிதான் அங்கிள்.. உங்கள் மகன் என்னை கஸ்தூரின்னு தான் கூப்பிடுவார்...''

சந்தானத்தின் முகம் மாறியது.. ஒரே பெண்ணிற்கு இரண்டு பெயர்கள்.. இந்த இரண்டுமே இவர் அறிந்த பெயர்கள்.

''கஸ்தூரி என்று சொல்லிக் கொண்டு அன்னவாச லில் ரஞ்சனை என்கவுண்டர் பண்ணிய போலீஸ் ஆபிஸரின் பெயர் பத்மாவதி தானே...''

''ஏம்மா.. நீ.. நீங்கள்..''

''என்னை வா.. போ.. என்றே கூப்பிடலாம் அங்கிள்...''

''நீ போலீஸ் ஏஸியா?''

''ஏன்ப்பா.. இவள் ஆள் பார்க்க சில்லென்று இருப்பதால் ஏஸின்னு நினைத்து விட்டீர்களா?''

சந்தோஷ் பேச்சை மாற்ற முயல.. பத்மாவதி சந்தானத்தைப் பார்த்து.. நிதானமாகக் கூறினாள்.

''அங்கிள்.. நான் ஏஸிபிதான்..''

''அப்போ.. ரஞ்சனை என்கவுண்டர் செய்தது...?''

''நான்தான்...''

''சந்தோஷ்.. என்னடா இது? சோணாச்சலம் குடும்பத்தை குளோஸ் பண்ணிய பெண் உனக்குப் பிரண்டா? உன் அம்மா கேட்டால் அவ்வளவுதான்.. உன்னை வெளுத்துக் கட்டி விடுவாள்.. பேசாமல் ஓடிவிடு..''

சந்தானம் பதட்டமாய் கூறிக் கொண்டிருந்தபோது.. கையில் பூஜைத் தட்டுடன் வெளியே வந்த ஜெயந்தி..

''என் பிள்ளையை எங்கே ஓடச் சொல்கிறீர்கள்? வாடா சந்தோஷ்.. கற்பூர தீபத்தை தொட்டுக் கும்பிட்டுக்கோ..'' என்றாள்.

சந்தோஷ் இயல்பாக பத்மாவதியைப் பார்க்க.. அவளும் சந்தோஷும் கற்பூர ஜோதியை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். இருவரும் அருகருகே நிற்பதைக் கவனித்த ஜெயந்தி பத்மாவதியின் அழகில் ஈர்க்கப்பட்டாள்.

''இந்தப் பெண் யாருடா?'' என்று மகனைப் பார்த்து வினவினாள்.

''என் பிரண்ட் அம்மா...''



''அப்படியா.. பொண்ணு பார்க்க ரதியாட்டம் இருக்கிளே... ஏம்மா.. உனக்கு கல்யாணம் ஆகிவிட்டதா?''

''இல்லை ஆண்ட்டி..''

''ஏம்மா.. இவளுக்கு கல்யாணம் ஆகவில்லையென்ல் மாப்பிள்ளை தேடப் போகிறீர்களா?''

''இவன் ஒருத்தன்.. என்னைக் கேலி செய்யக் காரணம் தேடிக் கொண்டிருப்பான்.. நீ படிக்கிறாயாம்மா?''

''இல்லை ஆன்ட்டி.. வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன்..''

''என்ன வேலை பார்க்கிறாய்...?''

''அது...'' என்று பத்மாவதி ஆரம்பிக்கும் போது

''ஏன் ஜெயந்தி.. வீட்டுக்கு வந்த பெண்ணிற்கு ஒரு வாய் காபி.. கூல்டிரிங்க்ன்னு எதையாவது குடுப்பதை விட்டு விட்டு வெட்டியாய் ஏன் வாய் வளர்க்கிறாய்.. உள்ளே போய் இந்தப் பெண்ணிற்கு குடிக்க எதையாவது கொண்டு வா... போ.. மசமசன்னு நிற்காதே...'' என்று பேச்சின் ஊடே புகுந்து மனைவியை அதட்டினார் சந்தானம்.

''இவருக்கு நான் மக்கள் மனுசரோடு ஒரு வார்த்தை பேசினால் பொறுக்காதே.. வீட்டுக்கு வந்த பெண்ணிடம் நின்று ஒரு வார்த்தை என்னைப் பேச விடாமல் விரட்டுவதிலேயே குறியாக இருக்கிறார்..'' என்று அலுத்துக் கொண்டே உள்ளே போகத் திரும்பினாள் ஜெயந்தி.

''எனக்கு குடிக்க எதுவும் வேண்டாம் ஆன்ட்டி.. நீங்கள் இருங்கள்.. போக வேண்டாம்..'' என்று தடுத்தாள் பத்

'இந்தப் பெண்ணுக்கு மண்டையில் மசாலாவே கிடையாதா? வலியப் போய் வம்பை விலைக்கு வாங்குதே.. இதைப் போய் புத்திசாலிப் பெண்ணுன்னு எல்லோரும் சொல்கிறாங்க.. இது என்னன்னா.. இப்படிச் சொல்வதைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்று அடம் பிடிக்கிறதே...'

எரிச்சலுடன் மகனைப் பார்த்தார் சந்தானம்.. அவனோ பதட்டமில்லாமல் நின்று கொண்டிருந்தான்.. சந்தானத்தின் எரிச்சல் இன்னும் அதிகமாகியது.

'இவன் ஒருத்தன்.. இடிச்ச புளி போல அசையாமல் நிற்கிறான்.. வினையைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து விட்டு விளையாட்டுப் பிள்ளை போல் நிற்கிறானே... இவனை என்ன செய்தால் தேவலாம்...' என்று நினைத்தபடி

''நீ கொஞ்சம் வாயை வைத்துக் கொண்டு பேசாமல் இரம்மா.. அவள் உள்ளே போகட்டும்..'' என்று பத்மாவதியை கடிந்து கொண்டார் சந்தானம்.

அப்போது வெளியேயிருந்து புயல் போல் ஒரு இளம் பெண் ஓடிவந்து சந்தோஷின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினாள். அவளைப் பார்த்த சந்தோஷும் சந்தானமும் அதிர்ச்சியாக ஜெயந்தி மகிழ்ந்து போனாள்.

## 26

**நீ போன பின்னாலே – நான்**
**இருந்தென்ன சாதித்தேன்...?**
**உன் நினைவுகளை எல்லோர்க்கும் – நான்**
**இக்கதை மூலம் சேர்ப்பித்தேன்...**
**– நீங்காத என் நினைவுகள் –**



சந்தோஷின் கழுத்தை உரிமையுடன் கட்டிக் கொண்டு அந்தப் பெண் நிற்க பத்மாவதியின் நெஞ்சம் வலித்தது.

'கடைசியில் இதைப் பார்க்கத்தானா இந்த வீட்டிற்கு அவளை அவன் அழைத்து வந்தான்..'

மனம் கசக்க விழிகளைத் திருப்பிக் கொண்டார்.. பத்மாவதியின் முகமாற்றத்தைக் கவனித்த சந்தோஷ்.. கோபத்துடன்.

''சீமா.. என்னை விடு..'' என்றான்.

''அதெல்லாம் விட முடியாது அத்தான்.. விட்டால் நீங்கள் ஓடி விடுவீர்கள்.. நான் உங்களை விடவே மாட்டேன்..'' என்றாள் அந்த சீமா.

''அப்படிச் சொல்லுடி என் தங்கக் கட்டி..'' என்று மகிழ்ந்து போனாள் ஜெயந்தி.

''போதும் ஜெயந்தி... உன் அண்ணன் மகள் பண்ணும் அட்டூழியத்தைக் கண்டு நீ மகிழ்ந்து போகாதே..'' என்று கண்டித்தார் சந்தானம்.

''மாப்பிள்ளை ஏன் கோபமாய் இருக்கிறார் ஜெயந்தி..'' என்றவாறு ஒரு மனிதர் வீட்டுக்குள் நுழைந்தார்.

''நான் என் மனைவியிடம் கோபமாய் பேசுவதை விசாரிப்பது இருக்கட்டும்.. முதலில் உன் மகளை என் மகனை விட்டு விலகி நிற்கச் சொல்லு வேதாச்சலம்..'' என்று கோபமாய் கூறினார் சந்தானம்.

அப்போதுதான் வந்திருந்த மனிதரை பத்மாவதி நன்றாகப் பார்த்தாள்.. பத்து விரல்களிலும் மோதிரங்கள் பளபளக்க கழுத்தில் தடிமனான செயினுடன் சோணாச்சலத்தின் ஜாடையில் இருந்தார் அந்த மனிதர்.

'இவன்தான் வேதாச்சலமா..?' என்று பத்மாவதி நினைத்துக் கொண்டிருக்கும் போதே.. பத்மாவதியைப் பார்த்த வேதாச்சலத்தின் புருவம் உயர்ந்தது.

''நீ.. நீ.. பத்மாவதி இல்லை.. என் அண்ணனையும் ரஞ்சனையும் கொன்ற போலீஸ்காரி நீதானே.. உனக்கு இங்கு என்ன வேலை? என்ன ஜெயந்தி.. உன் அண்ணனைக் கொன்ற கொலைகாரியுடன் உனக்கென்ன சகவாசம்?'' என்று பொரிந்தார் வேதாச்சலம்.

''என்னது.. இந்தப் பெண்தான்.. அந்தப் போலீஸ்காரியா..? எனக்குத் தெரியாது அண்ணா.. ஏய்.. நீ எங்கே இங்கு வந்தாய்? உனக்கென்ன இங்கு வேலை..?'' என்று அதட்டினாள் ஜெயந்தி.

அதற்கு மேல் பொறுக்கமாட்டாத சந்தோஷ்.. தன் மேல் தொங்கிய சீமாவை பலவந்தமாய் தள்ளி விட்டு பத்மாவதியின் அருகே வந்து நின்று அவள் தோள் மேல் கை போட்டான்.

''போனால் போகிறது என்று பார்த்தால் ரொம்பவும் ஆடுகிறாயே.. இதுதான் உனக்கு லிமிட்.. அம்மா.. இவள்தான் கஸ்தூரி என்று நான் கூப்பிடும் பத்மாவதி.. என் வருங்கால மனைவி.. உங்கள் மருமகள்.. என் வாழ்க்கையில் திருமணம் என்று ஒன்று நடப்பதாக இருந்தால் அது இவள் கூடத்தான் நடக்கும்..''

சந்தோஷின் வார்த்தைகளில் அதிர்ந்து போய் நின்றனர் அங்கிருந்தவர்கள்.. முதலில் சுதாரித்துக் கொண்டவள் சீமாதான்.

''அத்தான்.. உங்களுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது...?''

''இல்லை...''

''அப்புறம் எப்படி இவளைப் போய் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்கிறீர்கள்?''



''உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் று நான் சொல்லியிருந்தால் இப்படி ஒரு கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்கலாம்.. நான் அப்படிச் சொல்லவில்லையே.''

வேதாச்சலம் கோபத்துடன் ஜெயந்தியைப் பார்த்தார்.

''நல்லாயிருக்கும்மா உங்கள் நாடகம்... இதைப் ர்க்கத்தான் நீ எங்களை உடனே கிளம்பி வரச் சொன் யா?''

ந்தானத்திற்குள் கோபம் மூண்டது..

''ஜெயந்தி என்ன இதெல்லாம்? இதைப் பார்க்கத் ன் எங்களை உடனே கிளம்பி வரச் சொன்னாயான்னு ர் கேட்கிறாரே.. நீ இவர்களை வரச் சொன்னாயா?''

''ஆமாம்...''

''யாரைக் கேட்டு வரச்சொன்னாய்?''

''யாரைக் கேட்கணும்?''

''என்னைக் கேட்டிருக்க வேண்டும்.. சந்தோஷை கேட்டிருக்க வேண்டும்..''

''ஏன்..? இது என் வீடில்லையா? எனக்கு இங்கே உரிமையில்லையா?''

''உன் உரிமைகளை யாரும் இங்கே மறுக்கவில்லை.. அதே சமயம் என் உரிமையையும்.. என் மகனின் உரிமையையும் நீ பறிக்க நான் விட மாட்டேன். அதைத் தெரிந்து கொள்...''

''அவன் எனக்கும் மகன்...''

''உன் மனதில் அப்படியொரு நினைவிருந்தால் இப்படியொரு காரியத்தை நீ செய்வாயா?''

"அப்படி நான் என்ன தவறு செய்து விட்டேன்... பெரிய அண்ணன் போய் விட்டார்.. சின்ன அண்ணனின் மகளையாவது என் மருமகளாக்கி அழகு பார்க்க ஆசைப்படுகிறேன்.. இது தப்பா?"

"தவறுதான்.. சந்தோஷிற்கு உன் அண்ணன் மகளை கட்டிக் கொள்ள விருப்பமில்லை.. தெரியும்தானே? தெரிந்தும் ஏன் இப்படிச் செய்கிறாய்?"

"என் அண்ணன் மகளை விட்டு விட்டு வேறு யாரை அவன் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறானாம்? இதோ நிற்கிறாளே இந்தக் கொலைகாரியையா கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான்?"

சீமாவும் வேதாச்சலமும் ஜெயந்தி சொன்னதைக் கேட்டு ஏளனமாக நகைத்தபடி பத்மாவதியை வெறுப்புடன் பார்த்தார்கள். பத்மாவதி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்...

"ஆண்ட்டி... நான் போலீஸ் ஆபிஸர்.. என்னை டீஸ் பண்ணுவது போல் பேச வேண்டாம்.. என்னை என்ன வேண்டுமானாலும் பேசுங்கள்.. நான் கேட்டுக் கொள்கிறேன்.. என் வேலையைப் பற்றிப் பேசாதீர்கள்.. நான் கேட்டுக் கொள்ள மாட்டேன்..."

"என்ன செய்து விடுவாய்? என்னையும் கொலை செய்து விடுவாயா?"

"உங்களை ஏன் நான் கொலை செய்யப் போகிறேன்.. எங்கள் என்கவுண்டர் லிஸ்டில் இருப்பவர்களைத்தான் தீர்த்துக் கட்டுவேன்... நீங்கள் என்ன குற்றவாளியா?" என்றபடி வேதாச்சலத்தை ஓர் பார்வை பார்த்தாள் பத்மாவதி.



வேதாச்சலத்தின் முகம் வெளுத்துவிட்டது.. அவர் பெயரும் என்கவுண்டர் லிஸ்டில் இருக்கிறதா..?

'இவளை அநாவசியமாய் பகைத்துக் கொள்ளக் கூடாது...' என்று தீர்மானித்தவராய் சந்தானத்தைப் பார்த்தார்.

"என்ன மாப்பிள்ளை.. வந்தவர்களை உட்காரக் கூடச் சொல்லாமல் இப்படிப் பேசுகிறீர்களே.. என்ன இருந்தாலும் சொந்தம்.. சொந்தம்தானே.."

"சொந்தக்காரர்கள் என்ற முறையில் மட்டும் நீங்களும்.. உங்கள் மகளும் இங்கு வந்திருந்தால் நான் ஏன் இவ்வளவு கோபப்படப் போகிறேன். நீங்கள் அதை விட்டு விட்டு வேறு எண்ணத்தில் வந்திருப்பது போல் தெரிகிறதே.."

"அப்படித்தான் வந்தால் என்ன? என் மகளுக்கென்ன குறை? அழகு இல்லையா? படிப்பு இல்லையா? வசதி இல்லையா?"

"இதையெல்லாம் நாங்கள் எதிர்பார்க்கவில்லை.. இதை எதிர்பார்ப்பவர்கள் வீட்டிற்கு உங்கள் மகளை மருமகளாக்கி அனுப்பி வையுங்கள்..."

பத்மாவதி தான் இனியும் அவர்கள் வீட்டில் நிற்பது முறையாகாது என்று நினைத்தாள். இது அவர்கள் வீட்டு குடும்ப விவகாரம்.. அவர்கள் பேசித் தீர்த்துக் கொள்ளட்டும்.

"சந்தோஷ் நான் கிளம்புகிறேன்.. பை அங்கிள்.. பை ஆண்ட்டி"

"ரொம்ப சந்தோசம்மா.. நடையைக் கட்டு..."

"ஜெயந்தி.. இன்டீஸன்ட்டாய் பிஹேவ் பண்ணாதே.. நீ போய் வாம்மா.."

பத்மாவதி நிமிர்வுடன் அந்த வீட்டின் வாசல் படிகளில் இறங்கி... மெயின் கேட்டை நோக்கி நடந்தாள்.

வாசலில் இருந்த செக்யூரிட்டி கதவைத் திறந்து விட.. வீட்டை விட்டு வெளியேறி மெயின் ரோட்டிற்கு வந்தாள்.. சோர்வாய் நடந்தாள்.. காலையில் இருந்து மனதில் இருந்த உற்சாகம்.. இப்போது காணாமல் போயிருந்தது.

தனிமையில் அந்தச் சாலையில் நடந்தபோது 'இது தான் தன் தலைவிதி போல' என்று நினைத்துக் கொண்டாள் அவள். இனி ஒரு ஆண் மகனை மனதாலும் நினைக்க முடியுமா?

கையில் பணம் எடுத்துக் கொண்டு வரவில்லை என்பது மனதில் உறைத்தது. சந்தோஷ் கூப்பிடவும் அப்படியே கிளம்பி விட்டாள்.. பணம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றவில்லை.

ஆட்டோவை பிடித்து வீட்டுக்குச் சென்று.. அங்கே பணம் எடுத்துக் கொடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தவளாய்...

''ஆட்டோ...'' என்று கடந்து போன ஆட்டோவை கைதட்டி அழைத்தாள். ஆட்டோவிற்கு பதில் ஒரு கார் அவளருகில் வந்து 'சரக்'கென்று டயர் தேய பிரேக் அடித்து நின்றது.

கார் கதவை திறந்து விட்டவனைப் பார்த்து வியப்புடன் ''சந்தோஷ்...'' என்றாள் பத்மாவதி.

''ஏறிக்கொள்...''

''இப்போது ஏன் நீங்கள் வந்தீர்கள்...?''

''உன்னை பத்திரமாய் உன் வீட்டில் சேர்க்க...''

''நான் போய் கொள்ள மாட்டேனா...''

''நீ என்னை நம்பி என்னுடன் வந்தாய்.. நம்பி வந்தவளைப் பாதியில் விடும் பழக்கம் எனக்கு இல்லை...''

பத்மாவதி பதில் பேசாமல் காரில் ஏறிக் கொண்டாள்.

அவளது வீடு வரைக்கும் உடன் வந்து பிளாட் கதவை அவள் திறக்கும் வரை காத்திருந்து விட்டு.. அவள் கதவைத் திறந்தவுடன்.

''போய் வருகிறேன்...'' என்றான் சந்தோஷ்.

''வீட்டிற்குள் வராமலே போகிறீர்களே...''

''வரவேண்டிய சமயத்தில்.. வரவேண்டிய முறையுடன் கட்டாயம் வருவேன்...''

'இவன் என்ன சூப்பர் ஸ்டாரா?' என்ற நினைவுடன் விடை கொடுக்கும் பாவனையில் தலை அசைத்தாள் பத்மாவதி. அவன் சென்றுவிட்டான்.. வீட்டுக்குள் வந்தாள்.. யாருமில்லாத வெறுமை மீண்டும் அவளைச் சூழ... வேலைக்குப் போக மனமில்லாமல் கட்டிலில் சரிந்தாள்.

மாலையில் அழைப்பு மணி அடித்தது.. எழுந்து சென்று கதவைத் திறந்தவள் ஆச்சரியத்தை உள்வாங்கினாள்.

தலையில் கொண்டையைச் சுற்றி மல்லிகைச் சரத்தை வளைவாக வைத்து பட்டுப் புடவையுடன்... கையில் ஓர் பெரிய வெள்ளித் தாம்பாளத் தட்டில்.. பூ.. பழம்.. வெற்றிலை பாக்கு.. இவையுடன் கனத்த ஜரிகை போட்ட பட்டுப்புடவையும்.. அதன்மேல் வைர நெக்லஸ் இவற்றை வைத்து அதைக் கையில் ஏந்தியபடி நின்று கொண்டிருந்தாள் ஜெயந்தி.. அருகே பட்டு வேஷ்டி சட்டையில் சந்தானமும்.. சந்தோஷும்..

தன் கண்களையே தான் நம்ப முடியாமல் விழிகளை படபடவென்று கொட்டிய பத்மாவதி..

''ஆன்ட்டி.. அங்கிள்.. நீங்களா?'' என்றாள்.

''இவர்கள்தான் உன் கண்களுக்கு தெரிகிறார்களா? நான் தெரியவில்லையா..'' என்றபடி சந்தோஷ் உள்ளே வர மற்றவர்களும் அவனைத் தொடர்ந்து வந்தனர்.

ஜெயந்தி கையிலிருந்த தட்டை பத்மாவதியிடம் கொடுத்து...

''இதைக் கட்டிக் கொண்டு நகையை போட்டுக் கொண்டு வாம்மா.. இனி நீதான் என் மருமகள்'' என்றாள்.

''ஆன்ட்டி... இது எப்படி... உங்கள் மனம் மாறி விட்டதா?''

''எனக்கு என் மகன் வேண்டும்.. அவனுக்கு நீதான் வேண்டுமாம்.. அவனுக்காக எதை வேண்டுமானாலும் நான் செய்வேன்.. இந்தக் கல்யாணத்தை செய்து வைக்க மாட்டேனா..''

''அங்கிள்.. என் வேலை...''

''அதற்கென்னம்மா.. நீ பாடுபட்டு படித்து வாங்கிய வேலை... உன் அடையாளம் அது.. நீ கடைசி வரை போலீஸ் ஆபிஸர்தான்..''

ஓர் சுபயோக சுபநாளில் ஊரை அழைத்து சந்தோஷின் கையால் தாலி வாங்கிக் கொண்டு அவனது மனைவி யானாள் பத்மாவதி.

''கஸ்தூரி...'' முதலிரவில் அவள் கரம் தொட்டு அழைத்தான் சந்தோஷ்.. அவள் மயங்கிப் போய் அவன் கரங்களில் விழுந்தாள்.

''நான் பத்மாவதி...''

''இல்லை.. நீ என்றுமே எனக்குக் கஸ்தூரிதான்..''

பூஜையறையில் தெய்வப் படங்களுக்கு நடுவே இருந்த தனசேகரனின் புகைப்படம் மெதுவாய் சிரித்தது.. அவன் முகத்தில் தங்கையின் வாழ்வு நிறைவடைந்து விட்ட நிம்மதி தெரிந்தது.

*